வெளியீடு 03-03-2000

Issued 03-03-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 15, 1999 - தொகுதி 72 - எண் 2

Thursday, 15th April, 1999—Volume 72 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

··ive Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

D
V2;1,31'w99.
N99.72.2
221194

[Price Rs. 3.00

58/2001

15-4-1999

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **இரங்கற் குறிப்பு—**

   *முன்னாள் உறுப்பினர் மறைவு* — 183-184

2. **வினாக்கள்-விடைகள்—**

   *உடுக்குறியிட்ட வினாக்கள்* — 184-223

3. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

   *சாலைப் போக்குவரத்தை சீர்படுத்தும் திட்டத்தில் இருப்புப் பாதைக் கடவுகளில் பாலங்கள் கட்டுதல், இந்திய சாலைகள் கழக மாநாடு நடத்துதல், கடல்சார் வாரிய பயிற்சிக் கழகம் தொடங்குதல் பற்றி நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் அறிக்கை* — 223-229

4. **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்**-*தொடர்ச்சி*

   *(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு* — 229-335

   *(ஆ) கோரிக்கை எண் 34-நுகர்பொருள் வழங்கல்*

   **மாண்புமிகு திரு. கா. நா. நேரு* — 229, 235, 240, 247-249, 250-251, 257-258, 260-262, 275, 283, 285, 287, 293-294, 299-300, 306-328, 330

   **திரு. வி.கே. லட்சுமணன்* — 240-246

   *திரு. சைதை கா. கிட்டு* — 247-248, 251-255


53-87-1

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி | |
| திரு. ஐ. கணேசன் | 229, 235, 255-260, 262-263 |
| *திரு. ஆர். காந்தி | 263-267 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 234, 238, 268-273 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 273-277 |
| திரு. ஜி.எல். வெங்கடாசலம் | 277-281 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 281-289 |
| திரு. கே. சுப்பராயன் | 231, 237, 289-296 |
| திரு. ச. அழகிரி | 296-306 |
| 5. அறிவிப்பு— | |
| உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு | 240, 306 |
| 6. பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தூக்குக் கயிறை திரு. பி. ஆர். சுந்தரம் காட்டியது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு | 328-329 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 336 |


221194

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 2, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 ஏப்ரல் 15, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** :

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"

தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்து காக்கை உண்ணும். அந்த குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. நா. காசிராமன் அவர்கள் 11-04-1999 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. காசிராமன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புடன் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவு குறித்து அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும், தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 381, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**381—**

### மத்திய வரி விதிப்பில் மாநில அரசிற்குப் பங்கு

*** 8362—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

வருமான வரி, கலால் வரி, சுங்க வரி போன்றவற்றின் மூலம் கிடைக்கும் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் மாநில அரசுகளுக்குத் தர வேண்டும் என்று மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மைய அரசின் அனைத்து வரிகளின் வாயிலாகக் கிடைக்கும் மொத்த வரி வருவாயில் மூன்றில் ஒரு பகுதி மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலே மொத்த வருவாயிலே 29 சதவிகிதம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைத்திருக்கும், அந்த வாய்ப்பு வராமல் போகும் என்று மாண்புமிகு





முதலமைச்சர் அவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 540 கோடி ரூபாய் தமிழகத்திற்கு வருமானமாக வரவேண்டிய அந்த வருவாய் வராமல் போய்விடும் என்ற அச்சத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரை மத்திய அரசிடமிருந்து நமக்கு வருகின்ற வருமானம் அல்லது பங்கீடு எவ்வளவு? இப்போது வருகின்ற புதிய மசோதாவினால் பெறக்கூடிய நன்மை எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஐக்கிய முன்னணியிலே நிதியமைச்சராக இருந்த திரு. சிதம்பரம் அவர்கள் நாடாளுமன்றத்திலே அறிவித்தது, முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே, நாங்கள் எல்லாம் கோரிக்கை வைத்தபோது ஒப்புக்கொண்டு உறுதி அளித்தது, 29 சதவிகித வரிப் பகிர்வு மொத்த வருமானத்திலே மாநிலங்களுக்கு அளிக்கப்படும் என்பதாகும். அதற்கு நாடாளுமன்றத்திலே ஒரு மசோதா கொண்டு வருவதாகவும் அன்றைக்குக் கூறப்பட்டது. ஆனால், மசோதா வருகிற நேரம் பார்த்து அன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டது. அதனால் மசோதா வரவில்லை. இப்போதும் அந்த மசோதா நாடாளுமன்றத்திலே இருக்கிறது. வருமா, வராதா என்ற சந்தேகத்திலே இப்போது இருக்கிறது. மசோதா இப்போது நிறைவேறினால் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு நான் தருகின்ற விளக்கம் 539 கோடி ரூபாய் கூடுதலாக உடனடியாக இந்த அரசுக்குக் கிடைக்கும். இப்போதுள்ள பற்றாக்குறை சூழ்நிலையில் அது ஒரு பெரிய வருவாயாக தமிழ்நாட்டிற்கு இருக்கும். தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்ல, பல மாநிலங்களுக்குக் கிடைக்கும். அது மாத்திரமல்ல, ஏற்கெனவே திரு. சிதம்பரம் 1996 முதல், அந்த நிலுவையையும் சேர்த்து வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார். அதையும் சேர்த்தால் 539 கோடி ரூபாயோடு 491 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும்.

தலைவர் அவர்களே, இப்போது எவ்வளவு வருகிறது என்று கேட்டிருக்கின்றார்கள். இப்போது வருவது 2,655 கோடி ரூபாய் வரிகளின் சவுத் தொகையாக நமக்குக் கிடைக்கிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள இந்த வரிகளையெல்லாம் முழுமையாக

வசூலிப்பதற்கு மத்திய அரசுக்கு முழுமையாக ஒத்துழைக்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் நிரந்தரமாக இந்தப் பங்கை நம்முடைய மாநில அரசு பெறும் வகையில் இந்த மன்றத்தின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்களே தீர்மானம் நிறைவேற்றி, சட்டமாகக் கொண்டுவர சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள் நாடாளுமன்றத்தில். எனவே, இப்போது தனியாகத் தீர்மானம் தேவையில்லை. அந்தச் சட்டமுன்வடிவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலிருந்து ஏற்றுமதியை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசு விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 5 (3)-ன் கீழ் ஏற்றுமதிக்காக தமிழகத்திலே வாங்கப்படுகின்ற அல்லது விற்கப்படுகின்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஏற்றுமதியை உற்சாகப்படுத்துவதற்காக இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. இதனால் மாநில அரசுக்கு வரக்கூடிய வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. ஏற்றுமதியை உற்சாகப்படுத்துவதற்காக மத்திய அரசினுடைய சட்டப்படி நடந்து கொள்ளக்கூடிய காரணத்தினால் ஏற்படக்கூடிய இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசு அந்தத் தொகையை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு குறிப்பை மாநில அரசு மத்திய அரசிடம் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது நல்ல யோசனை. அதுபற்றி அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த வரி வருவாய் மத்திய அரசுக்கு முழுமையாகச் செல்கிறது? அதில் எத்தனை சதவிகிதம் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போதைய சூழ்நிலையில் வருமான வரி, மத்திய ஆயத் தீர்வை, கூடுதல் ஆயத் தீர்வை



இவற்றில் கிடைக்கக்கூடிய வரிவருவாய்தான் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. எந்த அடிப்படையில் என்றால், பொதுவாக வருமான வரியில் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கக்கூடிய நிதித் தொகுப்பில் சேரக்கூடிய 77.5 சதவிகிதத்தில் 20 சதவிகிதம், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலும், 60 சதவிகிதம் நபர்வாரி வருமானம் அடிப்படையிலும், 5 சதவிகிதம் கட்டமைப்பு வசதி குறியீடு அடிப்படையிலும், 5 சதவிகிதம் மாநிலத்தின் பரப்பளவின் அடிப்படையிலும், 10 சதவிகிதம் வரியீட்டு முயற்சியின் அடிப்படையிலும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இப்படிப் பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பு நிதியிலிருந்து, தமிழ்நாட்டினுடைய பங்கு 6.637 சதவிகிதம் ஆகும். மத்திய ஆயத் தீர்வையிலிருந்து பற்றாக்குறை மாநிலங்களுக்கென 7.5 சதவிகிதமும், மற்ற மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய நிதித் தொகுப்புக்கு 40 சதவிகிதமும் அளிக்கப்படுகின்றது. இத்தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு மேற்சொன்ன அதே அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பகிர்ந்தளிக்கக்கூடிய நிதித் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டுக்கு 6.637 சதவிகிதம் பகிர்ந்தளிக்கப்படுகிறது கூடுதல் ஆயத் தீர்வையின் மொத்த வசூலில் மத்திய அரசினுடைய நேரடி ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற புதுவை, கோவா, டெல்லி போன்ற யூனியன் பிரதேசங்களுக்கு 2.203 சதவிகிதம் போக, மீதி நிகர வசூல் மாநிலங்களுக்கு பின்வரும் கூறுகளின் அடிப்படையிலே வழங்கப்படுகின்றது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 50 சதவிகிதம்; 1987-88 முதல் 1989-90 வரையிலான 3 வருடங்களுக்கான மாநிலத்தின் மொத்த வருமானத்தின் மதிப்பீட்டில் 40 சதவிகிதம்; 1990-91 முதல் 1992-93 வரை 3 வருடங்களுக்கான மாநில விற்பனை வரியின் சராசரி வருமானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான விற்பனை வரி நீங்கலாக மேற்கண்ட 10 சதவிகிதம்; மேற்கண்ட அடிப்படையின்படி கூடுதல் ஆயத் தீர்வையில் தமிழ்நாட்டினுடைய பங்கு 7.669 சதவிகிதமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட வரி விகிதத்தை மாநில அரசுக்குக் கொடுப்பதைப் போன்று மாநில அரசு வசூல் செய்கின்ற விற்பனை வரி, நில வரி போன்றவற்றில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசுக்குத் தருவதுபோன்ற விகிதாச்சாரத்தை, பஞ்சாயத்துக்களுக்குத் தரப்படுமா என்ற வினாவை நண்பர் எழுப்பியிருக்கின்றார். அண்மையிலே இந்தக் கூட்டத்தொடரில் நான் படித்த நிதி நிலை அறிக்கையினை அவர் ஒருமுறை படித்துப் பார்த்தால் அதில் எல்லா விபரமும் இருக்கின்றது. அப்படி வழங்கப்படுகின்றது.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *382*, திரு. அ.வ. அப்துல் நாசர் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**382—**

**தலைமைச் செயலகத்தில் தரமான சிற்றுண்டி விடுதி**

***9409—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலக வளாகத்தில் தரமான சிற்றுண்டி விடுதி அமைக்க அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைமைச் செயலக வளாகத்தில் தரமான உணவகம் அமைக்கப்பட்டு *6-8-1998* முதல் இயங்கி வருகிறது.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பிறகு தரமான உணவகம் அமைக்கப்பட்டு, சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அமர்வதற்கு தனியாக அறை கிடையாது. எப்போதும் நல்ல சிற்றுண்டி வழங்கும்போது கும்பல் அதிகமாக இருக்கிறது. எனவே, அங்கே தனியாக அறை ஒதுக்கப்படுமா என்று கேட்டுக் கொள்வதோடு, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கக்கூடிய உணவகத்தில் சிற்றுண்டி மிகவும்



1999 ஏப்ரல் 15]

தரம் குறைந்ததாகவும், ருசி குறைந்ததாகவும் இருக்கிறது. இதனால் நாங்கள் வெளியில் சென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுக்கு முதலமைச்சர் பொறுப்பு. விடுதி என் பொறுப்பு. அதுபற்றி தனியாக என்னிடம் கேட்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இருக்கலாம், தலைவர் அவர்களே. நாங்கள் வெளியில் சென்று இருந்தாலும், வயிறு சம்பந்தப்பட்ட விஷயம். சாப்பிட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதில் தவறு இல்லை. அந்தக் கோரிக்கையை என்னுடைய அறையில் வந்து வைக்கவேண்டும் (சிரிப்பு)

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** சரி. அதையும் நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனி 'அறை' வேண்டுமென்று கேட்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எங்கே? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே நாடாளுமன்ற மையத்திலே M.P.-களுக்கு என்று வழங்கப்படும் உணவிற்கு subsidy வழங்கப்படுகிறது. அதுபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் உணவிற்கு subsidy வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல, சட்டமன்ற வளாகத்திற்குப் பக்கத்திலே Central Hall ஒன்று ஏற்படுத்தி அங்கு உணவு அளிக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு இதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *383*, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1999 ஏப்ரல் 15

383—

## சுரங்கப் பொறியியல் துறை

***16367—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் சுரங்கப் பொறியியல் துறை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கனிம வளங்கள் நிறைந்த பகுதி. சுரங்கப் பொறியியல் துறையிலே பட்டம் பெற்றால், சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நல்ல வேலைக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட துறையிலேயே அதிகமான அளவு பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பதைவிட, இதுபோன்ற துறைகளைப் புகுத்தி, வேலைவாய்ப்புக்கும், நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகப் பாடத் திட்டங்கள் அந்தப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினால்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே 27 துறைகளைக் கொண்ட 8 பள்ளிகள் (schools) தொடங்க அரசு ஆணை வழங்கியது. அந்த 27 துறைகளில் கனிமப் பொருள் மற்றும் அது தொடர்பான பயிற்சிப் பள்ளி அதன் சார்புடைய புவி அமைப்பியல் துறையில் அடங்கும். மேலே கூறிய துறை நடைமுறைக்கு வந்தபின் சுரங்கப் பொறியியல் துறை தொடங்க வல்லுநர் குழு நியமித்து, ஆய்வு செய்து, பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் வைத்து, அனுமதி பெற்றபின் இத்துறை குறித்துப் பரிசீலிக்கப்படும்.



1999 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 384, திரு இ. புகழேந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

384—

## தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள்

***14231—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் புற்றுநோய், சிறுநீரக நோய், நரம்பியல் நோய், இதய நோய் ஆகியவற்றுக்காக புதிய நவீன கருவிகளுடன் தனிப் பிரிவுகள் அமைத்திட அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் அரசு மருத்துவமனை வளாகத்திலே புற்றுநோய், சிறுநீரக நோய், நரம்பியல் நோய், இதய நோய் ஆகியவற்றுக்காக புதிய நவீன கருவிகளுடன் தனிப் பிரிவுகள் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

புற்றுநோய், சிறுநீரக நோய், நரம்பியல் நோய், இதய நோய் ஆகியவற்றுக்கான சிறப்புப் பிரிவுகள் தற்போது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கான சிறப்பு மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே உள்ளனர். எனினும், மாவட்டத்திற்கேற்ப அளவான நவீன கருவிகள் ஒவ்வோர் ஆண்டும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் நிதி நிலைக்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கடலூர் தலைமை மருத்துவமனையை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். அதைப்போல, மாதத்திற்கொருமுறை அல்லது இரு முறைக்கு மேலாக நானும் சென்று பார்த்து வருகிறேன். ஏராளமான மக்கள் அங்கே வருகின்ற காரணத்தினால், கடலூர் மட்டுமல்ல, கடலூர் மாவட்டம், இன்னும் பக்கத்திலே இருக்கிற மாவட்டங்களிலே இருந்துகூட கடலூர் தலைமை

மருத்துவமனைக்கு மக்கள் வருகின்றார்கள். அவர்களுடைய குறைகளைக் கேட்டு இந்த ஆண்டு தீப்புண் சிகிச்சைப் பிரிவு கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளேன். இந்த நிலையில் கண் சிகிச்சைக்காக 4.5 இலட்சம் ரூபாயிலும், சளி ஆய்வு மையம் 15 இலட்சம் ரூபாயிலும், குழந்தைகளுக்கான தனி வார்டு 10 இலட்சம் ரூபாயிலும் இப்போது உருவாக்கப்பட்டு வருகிறது. ஓரிரு மாதங்களில் சி.டி. ஸ்கேன் வசதியும் கடலூர் தலைமை மருத்துவமனையில் அமைக்கப்படவிருக்கிறது. ஆக, இவ்வளவு வசதிகளும் வருகிற காரணத்தால் ஏராளமான மக்கள் இதய சிகிச்சைப் பிரிவிற்கும், சிறுநீரகம், நரம்பியல், புற்றுநோய் ஆகிய பிரிவுகளுக்கும் தனியாக சிகிச்சை பெறுவதற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு மீண்டும் அதை மறுபரிசீலனை செய்து கடலூர் தலைமை மருத்துவமனைக்கு அந்தச் சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்த வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல நாளொன்றுக்கு சராசரியாக 3,647 பேர் புற நோயாளிகளாக வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அங்கு ஏற்கெனவே பல் பிரிவு, தோல் பிரிவு, காது, மூக்கு, தொண்டைப் பிரிவு, கண் பிரிவு, மனநோய் பிரிவு, எலும்பு சிகிச்சைப் பிரிவு, Cancer பிரிவு, இருதய நோய் பிரிவு போன்ற அத்தனைப் பிரிவுகளும் இருக்கின்றன. இருந்தாலும், புற்றுநோய், சிறுநீரக நோய், நரம்பியல் நோய், இதய நோய் போன்றவற்றிற்கு மாணவர்கள் படிக்கின்ற மருத்துவக் கல்லூரிகளிலேதான் இப்போது அந்த வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலே கடலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரி வரக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால்—ஏனென்றால் அங்கே படுக்கைகள் ஏற்கெனவே 432 இருக்கின்றன. மருத்துவக் கல்லூரி ஆவதற்கான தகுதியும் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட ஒரு நிலை வருகிறபோது இந்தப் பிரிவுகள் எல்லாம் அங்கே இயற்கையாகவே வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனை மேட்டூரில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இதய நோய் சிகிச்சைப் பிரிவு விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. கண் சிகிச்சைப் பிரிவிற்காக கட்டடம் கட்ட





tender கோரப்பட்டு, நிதி வசதி இல்லாத காரணத்தால் அந்த tender நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மத்திய அரசாங்கத்திடமிருந்து உலக வங்கி மூலம் இந்த ஆண்டு 10 மருத்துவமனைகளுக்கு நிதி கிடைத்திருக்கிறது. அடுத்த ஆண்டிலேயே இந்தப் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவெல்லாம் இருக்கிறது. ஆனால் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லை. அதை உடனடியாக அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கோடி ரூபாய் நிதியைத் திரட்டி அரசிடம் செலுத்தியிருக்கிறார்கள். அரசாங்கம் இந்த ஆண்டு 2 அல்லது 3 கோடி ரூபாயைத் தந்து அந்த மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்தவும், எல்லாப் பிரிவுகளையும் ஏற்படுத்தவும், முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

(உறுப்பினர்கள் சிலர் கைகளை உயர்த்திக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பலமுறை சொல்லி விட்டேன். உறுப்பினர்கள் மூலவினாவை ஒட்டி கேட்பதாக இருந்தால்தான் துணைக் கேள்வி கேட்க அனுமதிப்பேன். அப்படி இல்லாமல் அவரவர்களுடைய தொகுதியைப் பற்றி கேட்பதாக இருந்தால் நான் அனுமதி கொடுக்க மாட்டேன். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான தகுதி இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்

சொல்லியதைப்போல அடுத்த ஆண்டு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு வேலூரிலும் அதற்குப் பிறகு, விழுப்புரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலேயும் மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்று இந்த அரசு ஏற்கெனவே திட்டமிட்டிருக்கிறது. கடலூரில் ஒரு மருத்துவக் கல்லூரியை தொடங்குவதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் தனியாருக்கு மருத்துவக் கல்லூரியை தொடங்குவதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்ற ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. எனவே அரசு, தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுக்காத ஒரு சூழ்நிலையில் அரசே மருத்துவக் கல்லூரிகளை நடத்த வேண்டுமென்று நினைக்கிறபோது ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலேயும் எதிர்காலத்தில் இப்படி நடத்துவதற்கு இந்த அரசுக்கு ஓர் எண்ணம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 385, திரு. ச.க. வெங்கடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**385—**

**பிரேத பரிசோதனைக்குத் தனியார் மருத்துவர்கள்**

***14878—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவர்கள் தவிர, தனியாகத் தொழில் செய்யும் திறமையான மருத்துவர்களும், கடுமையான கட்டுப்பாடுகளுடன் பிரேதப் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியாகத் தொழில் செய்யும் மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.



முற்பகல் 9.50

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மருவத்தூரிலிருந்து மாமண்டூர் வரை தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் நடப்பதால், மதுராந்தகம் நகர மருத்துவமனையில் மேலும் கூடுதலாக மருத்துவர்களையாவது அரசு நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 386, திரு. குத்தாலம் பி. கல்யாணம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**386—**

**ஊராட்சிகளைப் பிரித்தல்**

***5946—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதியில் இரண்டு வருவாய்த் துறை வட்டங்களை உள்ளடக்கிய பெரிய ஊராட்சிகளை வருவாய்த் துறைப் பகுதிகள் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள குத்தாலம் தொகுதியில் இரண்டு வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய பெரிய ஊராட்சிகள் ஏதுமில்லை. எனவே, இது சம்பந்தப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதி நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்

[1999 ஏப்ரல் 15

துறை அமைச்சர் அவர்களுடைய சொந்தத் தொகுதி. அனைத்து ஊராட்சிகளைப் பற்றியும் அவர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக கோமல், அதம்பார் என்ற ஊராட்சிகள், 11 குக்கிராமங்கள் அடங்கிய பெரிய ஊராட்சிகளாக இருக்கின்றன. அதம்பாரைப் பொறுத்த அளவில்கூட, 'அதம்பார் ஆயிரம் வேலி' என்ற பெயர் அதற்கு உண்டு. எனவே, பெரிய ஊராட்சிகளை நிர்வகிக்க சிரமமாக இருக்கிற காரணத்தால் எதிர்காலத்தில் இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதம்பார் என்பது இரண்டு வருவாய் கிராமங்களை உள்ளடக்கியது இல்லை என்றாலும், மக்கள் தொகையும், நிலப்பரப்பும் ஏராளமாக இருக்கிற பகுதி என்பதை நான் அறிவேன். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல குக்கிராமங்கள் ஏராளமாக அடங்கிய பகுதி என்பதும் எனக்குத் தெரியும். அதுபோல அசிக்காடு என்ற ஊராட்சியும், அதுபோல கோனேரிராஜபுரம், கோமல், கடகம், மகராநல்லூர், வழுவூர், கிளியனூர் போன்ற இடங்களில் இரண்டு வருவாய் வட்டங்களே அதிலே அடங்கி இருக்கின்றன. அப்படி கணக்கிட்டுப் பார்க்கும்போது அசிக்காடு, செம்மங்குடி இரண்டு வருவாய் கிராமங்களும், கோனேரிராஜபுரம்-1, மற்றும் 2 என்ற இரண்டு வருவாய் கிராமங்களும், கோமல் நச்சினார்குடி என்ற இரண்டு வருவாய் கிராமங்களும், கடக்கம், மகராநல்லூர் என்ற இரண்டு வருவாய் கிராமங்களும், வழுவூர், திருநால்கொண்டச்சேரி என்ற இரண்டு வருவாய் கிராமங்களும், அகரவல்லம், கிளியனூர் என்ற இரண்டு வருவாய் கிராமங்களும் இதிலே அடங்கி இருக்கின்றன. இவற்றையும் சேர்த்துப் பிரிப்பதற்கு தகுதி இருக்கிறது. அதற்கான மக்கள் தொகையும் இருக்கிறது. ஆனால், உறுப்பினர் அவர்கள் கேட்டபடி இந்தக் கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 387, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**387—**

### கிராமங்களுக்குக் குடிநீர் வசதி

***8102—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 15]

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி ஒன்றியம் வரதம்பட்டி, வள்ளிநாயகிபுரம், காட்டுராமன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டி ஒன்றியம், வரதன்பட்டி, வள்ளிநாயகிபுரம் காட்டுராமன்பட்டி ஆகிய மூன்று கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீராதாரம் ஏற்படுத்தப்பட்டு 1999 ஆம் ஆண்டுக்குள் மக்கள் பயனுக்குக் கொண்டு வரும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. லி. அய்யலுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீராதாரம் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கான கட்டுவேலை சம்பந்தமாக எதுவும் நடைபெறவில்லை. சீக்கிரமாக அந்த வேலையை முடித்து அந்த மக்களுக்கு குடிநீர் வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பொறுத்தவரையில் ஆறு மாத காலத்திற்குள் ஒருசில மாற்றங்களைச் செய்திருக்கிறோம். குறிப்பாக 10,000 லிட்டர் கொள்ளளவுக்குதான் சாதாரணமாக இதுபோன்ற குக்கிராமங்களுக்குக் கட்டப்பட்டு வந்தது. ஆனால், எதிர்காலத்தில் மக்கள் தொகையைக் கணக்கிட்டு குடிநீருக்கு, உச்சபட்ச மக்கள் தொகையைக் கணக்கிடுகின்ற வகையில், இப்போது புதிதாகக் கட்டப்படுவதும், அதிலே ஏதாவது விஸ்தரிப்பு தேவையிருந்தாலும் அந்த அடிப்படையிலே செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்ட காரணத்தினால் 3 மாத காலம் அதிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக 1999 டிசம்பருக்குள் இந்தப் பணி முடித்து விடப்படும்; மக்களுடைய பயனுக்கு கொண்டு வரமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 388, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**388—**

**விவசாயப் பயிர்களுக்கு Insurance**

***14649—திரு. க. மணிவர்மா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விவசாயப் பயிர்களுக்கு Insurance திட்டத்தை அரசே ஏற்றுச் செயல்படுத்துமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பாக இருப்பது விவசாயம். ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு உடைந்துவிட்டால் அந்த மனிதனுடைய நிலைமை எந்த அளவிற்கு இருக்குமோ' அந்த அளவுக்கு இப்போது விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். வெங்காயம், தக்காளி, வாழைத் தார்கள் போன்றவற்றை எல்லாம் விவசாயிகள் சாலையில் கொட்டி அல்லல்படுகிற இந்த நேரத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டம் Insurance திட்டம். இயற்கைச் சீற்றங்களால் மழை காலங்களில் நெல் மூழ்கிவிடுகிறது, தீ ஏற்பட்டால் கரும்புகள் அழிந்துவிடுகின்றன. புயல் காற்று அடித்தால் வாழை நாசமாகிவிடுகிறது. எனவே, இவற்றைப் பாதுகாத்து, விவசாயிகளைப் பாதுகாப்பதற்குரிய Insurance திட்டத்தை அரசே ஏற்று நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை, 1985-86 முதல் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தை மாநில அரசின் சார்பில் பொதுக் காப்பீட்டுக் கழகம் (General Insurance Corporation) செயல்படுத்துகிறது. தமிழக அரசின் சார்பில் மாநில பயிர் ஈட்டுறுதி





நிதிக் குழு (State Crop Insurance Fund Committee) செயல்படுத்துகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் தலா ஒரு கோடி ரூபாய் வழங்கி தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதியை ஏற்படுத்தியுள்ளன. நெல், சோளம், கம்பு, ராகி, மணிலா, எள், சூரியகாந்தி மற்றும் பயறு வகை ஈட்டுறுதி செய்யப்படுகிறது. இந்த ஈட்டுறுதித் திட்டம் கிராம வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளில் பயிர்ச் சாகுபடிக் கடன் வாங்கும் விவசாயிகளுக்கு மட்டும் தற்போது செயற்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சபையிலே நீண்ட நாட்களாக Crop Insurance வேண்டுமென்றுகூட கூறிக்கொண்டிருக்கிறேன். திராட்சை, தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் எல்லாம்-இப்போது இந்த திராட்சையிலே ஏதோ ஒரு சீக்கு வருகிறது. மருந்து அடித்துக்கொண்டே இருந்தால்கூட வால் முளைத்த அந்தப் பூச்சி விழுந்துவிடுகிறது. விவசாயிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே திராட்சை கிலோ 4 ரூபாய், 3 ரூபாய் என்று கொடுக்கிறோம். ஆனால், இங்கே அதே பழம் 28 ரூபாய், 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல, தென்னையில் அந்தக் குரும்பை பிடித்திருக்கும்போதே அது கீழே விழுந்துவிடுகிறது. அதற்கு ஏதோ ஒரு சீக்கு வந்ததாகச் சொல்கிறார்கள். ஆகையினால் அதுமாதிரியான சீக்குகள் வந்தால் விவசாயிகளை நஷ்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கு இந்த Crop Insurance திட்டத்தை அமல் நடத்தினால், ஒரு ஏக்கருக்கு எவ்வளவு Insurance பிரிமியத் தொகை கட்ட வேண்டுமென்பதை அறிவித்தால்கூட, எங்களைப் போன்றவர்கள் அதையெல்லாம் கட்டி எங்களையே பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படுமே என்பதை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டதைப்போல நெல், சோளம், கம்பு, ராகி போன்ற பல பயிர்களுக்கு இந்த Insurance திட்டம் இருக்கிறது. திராட்சையையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து...

[1999 ஏப்ரல் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராட்சை, வாழை தென்னை என்று பலவற்றைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் மாநில அரசு அந்த Premium கட்டுவதிலே எத்தனை சதவீதத்தினை ஏற்றுக்கொள்வது என்று நிதிநிலைக்கேற்ப நாம் முடிவு எடுக்க இயலும். இதிலே மத்தியில் ஐக்கிய முன்னணி அரசு பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்குப் பயனளிக்கும்வண்ணம் பயிர்க் கடன் பெறாத சிறு மற்றும் மிகச் சிறு— இப்போது பயிர்க் கடன் வாங்கியவர்களுக்குத்தான் இருக்கிறது.—அதனால் கடன் பெறாத சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளும் பயன்பெறும் வகையில் ஒரு திட்டத்தை, 'பரிசோதனை முறை பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்' என்ற அடிப்படையிலே, இந்திய அளவிலே அவர்கள் கொண்டுவந்து, அது நம்முடைய மாநிலத்திலே நாகை, திருவாரூர் மாவட்டங்களிலே எடுத்துக்கொண்டு, 'பரிசோதனை முறைப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்' என்ற திட்டத்தை 1997-98 ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் மற்றும் ஈட்டுறுதித் தொகைகளை மத்திய, மாநில அரசுகள் 8:2 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் நூறு சதம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 2,30,496 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.23.68 கோடி காப்பு நிதித் தொகை வழங்க, இதில் மத்திய அரசால் ரூ.18.95 கோடியும், மாநில அரசால் ரூ.4.73 கோடியும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

(முற்பகல் 10-00

இந்தத் திட்டம் தற்போது மத்தியில் அமைந்த புதிய அரசால் 1.4.1998 முதல் நிறுத்தப்பட்டு "மாற்றி அமைக்கப்பட்ட விரிவான பயிர் பாதுகாப்பு திட்டம்" (Modified Crop Insurance Scheme) என்று தற்போது 1.4.1999 முதல் விரிவான பயிர் பாதுகாப்பு திட்டத்தினை மேம்படுத்தி, "மாற்றி அமைக்கப்பட்ட விரிவான பயிர் பாதுகாப்பு திட்டம்" ஒன்றினை செயல்படுத்த மத்திய அரசு அறிவித்து உள்ளது. இத்திட்டம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பகுதியிலுள்ள கடன் மற்றும் கடன் பெறாத விவசாயிகளும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் நெல், சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற உணவுப் பயிர்களும், கரும்பு, உருளைக்கிழங்கு, பருத்தி,



1999 ஏப்ரல் 15]

மிளகாய் போன்ற பயிர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் சொன்னதைப் போல திராட்சை மற்றும் வாழையையும் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வேண்டுமானால் இந்த அரசாங்கம் எடுத்துச் சொல்ல இருக்கிறது. இத்திட்டத்தில் 50 சதவீதம் காப்பீட்டுத் தொகை மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, இம்மானியத் தொகைகள் செலவினம் மத்திய, மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும் என்று தற்போது அறிவித்து இருக்கிறார்கள். மத்திய அரசு அறிவித்துள்ளபடி 1999 ரபி பருவம் முதல் செயல்படுத்தலாமா எனத் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. பயிர் ஈட்டுறுதித் திட்டம் மத்திய அரசு திட்டமாகும். விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை முழு அளவில் மாநில அரசு ஏற்று செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, இன்னொரு கருத்தையும் சொல்லிவிடுகிறேன். இது ஏற்கெனவே கடன் வாங்கக்கூடியவர்களுக்கு நட்டம், பயிர்ச் சேதம் ஏற்பட்டால் அறிவிக்கப்பட்ட, அந்த Insurance திட்டத்திலே சேர்க்கப்பட்ட பயிர்களுக்கு 1985-86 ஆவது ஆண்டு முதல் 1997-98 ஆவது ஆண்டு வரை 49 கோடி 25 இலட்சத்து 36 ஆயிரத்து 743 ரூபாய் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. இதிலே பயன்பெற்ற விவசாயிகள் 3 இலட்சத்து 66 ஆயிரத்து 931 பேர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 389, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**389—**

## நகரப் பேருந்து வசதி

*** 15550—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டையிலிருந்து அதம்பை-பாதரங்கோட்டை வழியாக திருவோணத்திற்குப் புதிய நகரப் பேருந்து வழித்தடம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையிலிருந்து அதம்பை, பாதரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், காட்டாத்தி வழியாக ஊரணிபுரம் வரை நகரப் பேருந்து தடம் எண் 23 மூலம் தினசரி 7 நடைகள் ஏப்ரல் 1998 முதல் இயக்கப்படுகின்றன. ஊரணிபுரம்-திருவோணம் பகுதியில் பட்டுக் கோட்டையிலிருந்து ஏனாதி, நம்பிவயல், காட்டாத்தி வழியாக நேர் வழியில் போதிய அளவு நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் இயங்குகின்றன. எனவே, கோரியுள்ளவாறு புதிய வழித்தடம் ஏற்படுத்த செயற்குறிப்பு இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, அதம்பை, பாதரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், கொள்ளுக்காடு பகுதிகளிலே வசிக்கின்ற பொதுமக்கள் திருவோணத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் செல்லவும், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்கள் பட்டுக்கோட்டையில் இருக்கிற கல்லூரிக்குச் செல்வதற்கும் தற்போது 23 எண் உள்ள நகரப் பேருந்து மட்டுமே இயங்குவதால், மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதிகளில் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிக் கொண்டு இருக்கிற பேருந்துகளிலே நகரப் பேருந்துகளில் 50 சதவீதமும் புறநகரப் பேருந்துகளில் 75 சதவீதமும்தான் மக்கள் பயன்பாடு இருக்கிறது. ஆகவே, அங்கே அந்தப் பயன்பாடு அதிகரிக்குமானால் அதுகுறித்து வருங்காலத்தில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 390, திரு. கோ. தளபதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**390—**

**தேசிய நெடுஞ்சாலையில் மாற்று வழி**

***13899—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மதுரை பழங்காநத்தத்தில் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மாற்று வழி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை நகரைச் சுற்றி, திருச்சி-மதுரை சாலை மற்றும் மதுரை-கன்னியாகுமரி சாலை ஆகியவற்றை இணைக்கும் சுற்றுச் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இந்தச் சாலை அமைக்கப்பட்டால் மதுரை-பழங்காநத்தம் சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் கணிசமான அளவு குறையும்.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பழங்காநத்தத்திலே ஒரு வெளியூர் பேருந்து நிலையம் இருக்கிறது. அந்த நிலையத்திலிருந்து வெளியே வரக்கூடிய பேருந்துகள் சாலையைக் கடக்கும்போது அங்குள்ள நகரப் பேருந்துகள் மூலமாக சில தடங்கல்கள் ஏற்படுவதால் தற்சமயம் அந்தச் சாலையிலுள்ள, மின் கம்பங்களை அகற்றிவிட்டு சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலை-7 ஆகும். தற்போது திருச்சி, மேலூர், மதுரை வழியாக இருக்கக்கூடிய அந்தச் சாலையையும் தேசிய நெடுஞ்சாலை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மேலூரிலிருந்து வரக்கூடிய அந்தச் சாலையிலிருந்து இந்தச் சுற்றுச் சாலை பிரிந்து, தேசிய நெடுஞ்சாலை-7, கன்னியாகுமரி சாலையிலே போய், மதுரையைத் தாண்டி கப்பலூருக்கு அருகே சேர்கிறது. ஆகவே, திருச்சியிலிருந்து வரக்கூடிய வாகனங்கள் மதுரை நகருக்குள் வராமல் சுற்றுச் சாலை வழியாகச் சென்று, தேசிய நெடுஞ்சாலை-7-ல் சேர்கிறபோது, கணிசமான அளவுக்கு மதுரை நகரத்திற்குள்ளும், அதைப்போல பழங்காநத்தம் பகுதியிலேயும் நெரிசல் குறையக்கூடிய வாய்ப்பிருக்கிறது. தற்போது இருக்கக்கூடிய இந்த தேசிய நெடுஞ்சாலை-7, பழங்காநத்தம் பகுதியை அகலப்படுத்துகிற முயற்சி

[1999 ஏப்ரல் 15

எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *391*, திரு. ப. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**391—**

### பட்டுக்கோட்டையில் புறவழிச் சாலை

***15713—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பட்டுக்கோட்டையில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* பட்டுக்கோட்டையில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரம் ஒரு நெரிசல் மிகுந்த நகரம். பல பகுதிகளிலிருந்தும் வாகனங்கள் அங்கே வந்து கொண்டிருக்கின்றன. அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புறவழிச் சாலை அமைக்க அனுமதித்தால், அதற்காக நிலம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் பட்டுக்கோட்டை நகரைச் சுற்றி இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, இந்தப் புறவழிச் சாலையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இந்தப் புறவழிச் சாலை அவசியமானது என்பதை துறை உணர்கிறது. மதுக்கூர்-பட்டுக்கோட்டை சாலை, மன்னார்குடி-பட்டுக்கோட்டை சாலை,



1999 ஏப்ரல் 15]

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலை, அறந்தாங்கி-பட்டுக்கோட்டை சாலை, பட்டுக்கோட்டை-சேதுபாவாசத்திரம் சாலை ஆகிய இத்தனை சாலைகளையும் கடந்து, இந்தப் புறவழிச் சாலை அமைக்கப்படும்போது, இந்த *5* சாலைகளுக்கும் நல்ல போக்குவரத்து வசதி கிடைக்கும் என்பதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், இந்தச் சாலையை அமைப்பதற்குத் தோராயமாக *220* இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் எதிலும் மேற்படி பணி இடம் பெறவில்லை. இனி வருங்காலத்தில் அரசின் நிதிநிலையைப் பொறுத்து, தனியார் நிதியுதவி அளிக்கும் திட்டங்களில் எதிலேயாவது சேர்த்து, மேற்படி பணியைச் செயலாக்குவதற்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு உள்ளதா என்பதை அரசு பரிசிலிக்கும். துறை பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் வளர்ந்து வரும் தொழில் நகரமாகும். அங்கே புறவழிச் சாலை வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல முறை மனு தந்திருக்கிறேன் மரியாதைக்குரிய நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் அவர்கள் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது இராஜபாளையம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த வேண்டுகோளை ஏற்று, இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதி ஆதாரத்தினைப் பொறுத்துத்தான் இந்தப் பணிகளை எல்லாம் மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *392*, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 15

**392—**

**பழங்காலச் சிற்பங்களைப் புதுப்பித்தல்**

***14836—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தில் உள்ள பிரசித்தி வாய்ந்த பழங்கால சிற்பங்களைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைலாசநாதர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. பழங்கால கலை நயத்துடன்கூடிய சிற்பங்கள் ஏராளமாக அங்கே இருக்கின்றன. மகாசிவராத்திரியின்போது, அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று சூரிய ஒளி இயற்கையாகவே அங்குள்ள சிவலிங்கத்தின் மீது விழுமாறு அமைக்கப்பட்ட கோயில் அது. கடந்த காலத்திலே அங்கே காவலாளியைக் கொலைச் செய்துவிட்டு, அங்கேயுள்ள சிற்பங்களையெல்லாம் கடத்தி வெளிநாட்டுக்கு விற்பனைச் செய்த வரலாறுகள் எல்லாம் உண்டு. ஆகவே, எஞ்சியுள்ள சிற்பங்களையாவது புதுப்பித்து, பாதுகாப்பு தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலில் 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட



1999 ஏப்ரல் 15]

பழமையான சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. எனினும் அச்சிற்பங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. எனவே, புதுப்பிக்கின்ற திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயில் சிறப்பு வாய்ந்த ஒரு கோயில் ஆகும். கொத்தனார் advance வாங்குகிற நேரத்திலேகூட, 'தாரமங்கலத்தையும் தாடிக்கொம்பையும் தள்ளிப் பேசு' என்று சொல்லி நடக்கக்கூடிய ஒரு சிறப்பான கோயில் ஆகும். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சிறப்புக்குரிய அந்தக் கோயிலிலே உள்ள அந்தப் பழங்காலச் சிற்பங்களைப் பாதுகாக்கின்றவகையிலே ஏற்பாடு செய்ய, மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன். சிற்பங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனினும், பேணிக் காக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 393, திரு. கே சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**393—**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

***15933—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் நிரந்தரப் பணியாளர்களா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 41 பேர்கள்.

(ஆ) நிரந்தரப் பணியாளர்கள் 31 பேர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீதி 10 பேர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். ஒரே ஒரு வேலைதான் அதிலே நமக்கு இருக்கிறது அடுத்து, அவர்களுக்கு pension வழங்கப்படுவதில்லை. அதாவது 41 பேர்தான் இருக்கிறார்கள். உலகத் தமிழாராய்ச்சி என்பது முடிவற்ற ஒரு தொடர் பயணம். அதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிற அந்த ஊழியர்களுக்கு pension வழங்கப்படும் என்று கடந்த 3-1-1997இல் தஞ்சையிலே சுவடிகள் கருத்தரங்கம் நடந்தபொழுது நம்முடைய பண்பாட்டுத் துறைச் செயலாளர் அவர்களே உறுதிமொழி அளித்துள்ளார்கள். எனவே, மாநில அரசு அந்த 41 ஊழியர்களுக்கும் pension வழங்குவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது தொடர்பான கோப்பு மேலே வரைக்கும் சென்று திரும்பி வந்திருக்கிறது. காரணம், மற்ற நிறுவனங்களைப்போல, ஓவிய நுண்கலை போன்று முறையான அரசு அமைப்பாக இது இல்லை. நம்முடைய கூட்டுறவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இது இருக்கிறது. எனவே, இது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலுவையில் இருப்பதனாலே இதை உறுதியாகச் செய்வதற்கு இன்னும் இயலவில்லை. எனினும், முயல்வோம்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை அரசு கொஞ்சம் serious ஆகக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், முதியோர் வாழ்வதே ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிற காலம் இந்தக் காலம். முதுமையில் சமூகத்தில் வாழ்வதே ஒரு சுமை என்று முதியோர்களால் பெற்று எடுக்கப்பட்டவர்கள் கருதுகிற காலம். எனவே, முதியவர்கள் தங்கள் சொந்தக் காலில் நின்றுகொள்ள வேண்டிய அவசியம் இன்றைய சமூகத் தேவையாக இருக்கிற காரணத்தால், மாநில அரசு தன்னுடைய கூர்மையான புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி, எத்தகைய வழிமுறைகளின் மூலம் pension வழங்க இயலும் என்பதைக் கண்டறிந்து, அவற்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாநில அரசுக்கு ஏது புத்திசாலித்தனம்? தனிப்பட்டவர்களுக்குத்தான் உண்டு (சிரிப்பு)

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அந்தத் துணிச்சல் உணர்வோடு அவருடைய சிறந்த அந்தப் புத்திசாலித்தனத்தோடு இந்த வினாவைத் தொடுத்திருக்கிறார்கள். (சிரிப்பு) அரசும் அதற்குரிய அறிவோடு செயல்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 394, திரு. செங்கை சிவம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**394—**

**குடிசைமாற்று வாரிய விடுகளின் நிர்ணய விலையைக் குறைத்தல்**

***14411—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரம்பூர் மேல்பட்டி பொன்னப்பமுதலி தெருவில் குடிசைமாற்று வாரியத்தால் குறைந்த வருமானம் உள்ள நடுத்தர மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை அதிகம் என்ற காரணத்தால் அதன் விலையைக் குறைக்கும் எண்ணம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால், மேல்பட்டி பொன்னப்பமுதலி தெருவில் கட்டப்பட்டுள்ள எம்ஐஜி. 60 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விலை, கீழ்தளம் 4,40,000 ரூபாயாகவும், மேல்தளம் ரூ. 4,65,000 ரூபாயாகவும் முதலில் நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் பிப்ரவரி 1998இல் கீழ்தளம் 3,76,000 ரூபாயாகவும், மேல்தளம் 3,98,000 ரூபாயாகவும் குறைக்கப்பட்டதில் 60 வீடுகளில் 58 வீடுகள் விற்பனை ஆகிவிட்டன.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலை நிர்ணயம் செய்து என்னுடைய கோரிக்கையை ஏற்றதற்கு அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதெல்லாம் முதலமைச்சராக வருகிறார்களோ அப்பொழுது இந்தத் துறை புத்துணர்வு பெறுகிறது. அந்த வகையில் கடந்த காலத்தில் சென்னையிலே ஏராளமாக குடிசைமாற்று வாரிய வீடுகள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *58 வீடுகள் விற்றாகிவிட்டன. அப்புறம் ஏன் இன்னும் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள்?*

**திரு. செங்கை சிவம்:** அதையொட்டித்தான் கேட்கிறேன். ஏராளமான நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. எனவே, அவற்றையெல்லாம் மீண்டும் இந்தத் துறை ஏற்று, இப்படிப்பட்ட குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிதியாதாரத்தைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சைதை கா. கிட்டு.

முற்பகல் 10.15

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வீடு இல்லாத ஏழைகளுக்கு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வருடா வருடம் இரண்டாயிரத்திலிருந்து மூன்றாயிரம் வீடுகள் கட்டுவது வழக்கம். இந்த ஆண்டும் கட்டுவதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு அண்ணாநகரில்கூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இந்தத் துறையின் மானியத்திலாவது அதுபற்றி அறிவிக்கப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசித்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில், வாடகை அடிப்படையிலும், Hire Purchase என்ற முறையிலும் பணம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். இருதரப்பினருக்குமே ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே, Hire Purchase என்ற முறையில் பணம் செலுத்துபவர்களுக்கு விலையைக் குறைத்து நிர்ணயம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்ன கேட்கிறார் என்பது குறித்து என்னிடத்தில் விவரம் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வில்லிவாக்கம் தொகுதி, 64-ஆவது வட்டத்தில் இருக்கிற N.V.N. நகரில், குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில், சிறு மழை பெய்தால்கூட 3 அடிக்கு தண்ணீர் வந்து விடுகிறது. அதேபோல், மேல் மாடிகள் எல்லாம் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒருவர் காயம் அடைந்து, காவல் நிலையத்தில் கூட புகார் கொடுத்திருக்கிறார். ஆகவே, அங்கே இருக்கின்ற வீடுகளை எல்லாம் புதுப்பித்துத் தர குடிசை மாற்று வாரியம் முன்வருமா என்றும் அங்கே தாழ்வான பகுதியில் உள்ள Ground Floor வீடுகளை உயர்த்தித் தருவதற்கு முயற்சி எடுத்துப்பார்களா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள சுமார் 60 ஆயிரம் வீடுகளில் 48 ஆயிரம் வீடுகள் பழுதடைந்துள்ளன. அந்த 48 ஆயிரம் வீடுகளுக்காக நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 14½ கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து 35 ஆயிரம் வீடுகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை இந்த நிதியாண்டில் பழுது பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த, விலை நிர்ணயித்திருந்ததை

மறு பரிசீலனை செய்து பெரம்பூருக்கு மட்டும்தானா? அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற குடியிருப்புகளுக்கும் அது பொருந்துமா என்பதைத் தங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூருக்கு மட்டுமல்ல, விசாலாட்சியம்மன் தோட்டம், கொரட்டூர், ஜாபர்கான்பேட்டை, திருமங்கலம் ஆகிய இடங்களில்கூட விலை மறு நிர்ணயம் செய்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 395, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**395—**

**வேலையில்லா இளைஞர்களுக்கு நிவாரணம்**

***19377—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாத இளைஞர்களுக்கு கடந்த அரசு நிறுத்திய வேலையில்லா கால நிவாரணம் மீண்டும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலை இல்லா பட்டதாரிகள்/இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு நிறுத்தப்பட்ட நிவாரணம் மீண்டும் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்ற இன்றைய நிலையில் நம்முடைய வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து நீண்டகாலமாக வேலை கிடைக்காமல், அவர்களுடைய வயதும் வரம்பைத் தாண்டியதற்கு பின்னால், வேறு வழியில்லாமல்





இருக்கின்ற அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, pension அல்லது ஒருவேளை சாப்பாட்டிற்காக உள்ள அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு உண்டான அந்தக் கொள்கையை அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் அதை அமல் நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலையற்றோருக்கான நிவாரணத் திட்டம் வேலை வாய்ப்புத் துறையின் மூலம் 15-9-1984 முதல் 8-6-1993 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. ஆனாலும், பார்வையற்றோருக்கு அந்தத் திட்டம் பயன்படுத்தப்படுகிறது. S.S.L.C.யும் அதற்கு மேலும் pass செய்தவர்களுக்கு 150 ரூபாயும், +2 pass செய்தவர்களுக்கு 200 ரூபாயும், பட்டப் படிப்புக்கு 250 ரூபாயும் கொடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு வேலை இல்லாத காலங்களில் நிவாரணம் வழங்கப்படுகிறது. அதைப்போல இந்த இளைஞர்களுக்கு நிறுத்தப்பட்ட நிவாரணத் தொகையை வழங்குவதற்கு உண்டான முயற்சிகளை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதோடு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாக் காலங்களில் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை கோலப்பன் குழுவிடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பரிசீலனையின் அடிப்படையிலே அதை அறிவிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் இருப்பவர்களில், வேலையில்லாமல் இருக்கும் அத்தனை பேருக்கும், அரசு பரிசீலித்து, நிதி நிவாரணம் வழங்க முடியுமா என்பது உறுப்பினர் அவர்களுடைய கேள்வி. இது கொள்கை சம்பந்தப்பட்ட, நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

[1999 ஏப்ரல் 15

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்திலே பரிதவித்து வருகின்ற, படித்து பட்டம் பெற்ற மாணவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு நீண்டகாலம் காத்துக்கிடக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தேடுகின்ற அளவிற்காவது, இந்த உதவித் தொகை உதவியாக இருக்கும் என்பதனாலேதான் இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே, வேலைவாய்ப்பு கேட்டு பதிவு செய்திருக்கிற பட்டதாரி இளைஞர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கு, வேலையில்லாக் கால நிவாரணம் வழங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா? உடனடியாக வழங்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இந்தத் திட்டம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையைத் திரும்பத் திரும்ப எழுப்புகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு செல்லலாம். இப்போது உங்களுடைய பிரச்சினை அரசின் கவனத்தில் இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், துணை வினாவெல்லாம் பின் வரிசையிலே இருப்பவர்களுக்குத்தான். எல்லா வாய்ப்பும் உங்களுக்குத்தான் வருகிறது. நீங்கள் இதிலும் கேட்டுக் கொண்டிருந்தீர்களென்றால் என்ன செய்வது? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்க அரசு 17,000 பேர் பயனடைகின்ற முறையிலே, வேலை தேடுகின்ற அந்த இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசு அறியுமா? அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மாநிலத்திலும் ஒரு திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தத் திட்டத்தை விளக்கமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுகுறித்து, நிதிநிலையையொட்டிப் பரிசீலிக்கலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் சில புதுமையான, சிறப்பான திட்டங்கள் இருக்கக்கூடும். குறிப்பாக, Plantation Labour-ஐப் பொறுத்தமட்டிலும், பீடித் தொழிலாளர்களைப்



1999 ஏப்ரல் 15]

பொறுத்தமட்டிலும், குறைந்தபட்சக் கூலி நாம்தான் தருகிறோம் என்பதை உறுப்பினருக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 396, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**396—**

## குடும்ப நீதிமன்றங்கள்

***24291—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று குடும்பத்தில் ஏற்படக்கூடிய கணவன் மனைவிக்கு இடையேயுள்ள பிரச்சினை, குழந்தைகளை வளர்ப்பதற்கான பிரச்சினை, ஜீவனாம்சம் பெறுவதற்கான பிரச்சினை போன்றவற்றிற்கு சென்னை மாநகரிலே மூன்று குடும்ப நீதிமன்றங்களும், சேலம், கோவை, மதுரை போன்ற நகரங்களிலே மூன்று நீதிமன்றங்களும் இருக்கக்கூடிய சூழ்நிலையில், மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலே வாரம் இரண்டு நாட்களுக்காவது இந்தக் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அளவில், Part-time shop என்பது போல, பகுதி நேர நீதிமன்றங்களையாவது மாவட்டத் தலைநகரங்களிலே அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்ற சட்டத்தின் பிரிவு

3-இன்படி, பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கும் நகரங்களில் குடும்ப நீதிமன்றங்களை அமைக்க வேண்டுமென்று அந்தச் சட்டம் கூறுகின்றது. அந்த அடிப்படையிலேதான் சென்னையில் மூன்று நீதிமன்றங்களும், சேலம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் இந்த நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்று பிற நகரங்களில் நீதிமன்றங்கள் தேவை என்று சொன்னால், உயர்நீதிமன்றத்திலேயிருந்து பரிந்துரை வந்த பிறகு, இங்குள்ள நிதிநிலைக்கு ஏற்ப அரசு அனுமதி அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடும்பச் சூழ்நிலையைப் பொறுத்தவரை, மண முறிவு - Divorce - இப்படிப்பட்ட வழக்குகள் ஏராளம் தேங்கியிருக்கின்றன. அதைப்போல, ஜீவனாம்சம் - Maintenance - கேட்ட வழக்குகள், Dowry complaints இவையெல்லாம் ஏராளமாக பல்வேறு நீதிமன்றங்களில் தேங்கியிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, Sub Judge cadre-லே ஒரு நீதிபதியை மாவட்டத்திற்கு நியமித்து, குடும்ப வழக்குகளையெல்லாம் விசாரிக்கின்ற அளவிற்கு அரசு ஒரு கொள்கை முடிவை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொள்கை முடிவின் அடிப்படையிலேதான் அந்த நீதிமன்றச் சட்டமே 1984-லே மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இது தொடர்புடைய வழக்குகள் எத்தனை இருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் அந்த நீதிமன்றங்களைத் தொடங்க முடியும். மற்றபடி, இதுபோன்ற பிரச்சினைகளுக்கு, உரிமையியல் நீதிமன்றங்களிலே வழக்கு தொடரலாம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நன்கு அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 397, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.



**397—**

**மன்னர் தொண்டமான் திருவுருவச் சிலை**

***11357—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முகப்பில், மன்னர் இராஜகோபாலத் தொண்டமான் அவர்களின் திருவுருவச் சிலையை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு 27-3-1999 அன்று பதிலளித்து உரையாற்றுகையில்,

'புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முகப்பில் மன்னர் இராஜகோபாலத் தொண்டமான் அவர்களுடைய சிலை விரைவில் வைக்கப்படும்' என்று அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் சிலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 398, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**398—**

**படப் பிடிப்புகளுக்குத் தடை**

***17309—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், "டாப்சிலிப்"-இல் அமைந்துள்ள இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயத்தில் சினிமா படப்பிடிப்புகள்

நடைபெறுவதால் வன விலங்குகள், பறவைகளின் நடமாட்டத்திற்குத் தொந்தரவு அளிப்பதுடன் படப்பிடிப்புப் பொருட்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதால் படப்பிடிப்புகள் தடை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

7-10-1993 நாளிட்ட செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் அரசு ஆணை எண் 276-ன்படி வன உயிரினப் பகுதிகளில் சினிமா படப்பிடிப்பு நடத்துவதற்குத் தலைமை வன உயிரினக் காப்பாளரிடம் 'தடையின்மைச் சான்றிதழ்' பெற்று செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரால், படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. இந்திராகாந்தி வன உயிரின உய்விட வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 'டாப்சிலிப்' பகுதியில் திரைப்பட படப்பிடிப்பு அனுமதித்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே 'டாப்சிலிப்' பகுதியில் தற்போது சுற்றுச்சூழல் பாதிப்போ, வன உயிரினங்களுக்கு இடையூறோ ஏற்பட வாய்ப்பு இல்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டாப்சிலிப்' பகுதியிலே இப்போது படப்பிடிப்புகள் தடை செய்யப்பட்டிருப்பது குறித்து நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய அதேநேரத்தில், எந்தெந்த இடங்களில் எல்லாம் அரசு அதுபோல தடை விதித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன். மேலும், குறிப்பாக இரயில்வே துறையைப் பொறுத்தமட்டில் அவர்களுக்குச் சொந்தமான இடங்களிலே படப்பிடிப்பு நடத்துவதற்கு மிகக் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதுவும் உண்மையா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படப்பிடிப்பு தடை செய்யப்படும் இடங்களாக ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், சென்னை, சோழவரம் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடம். தற்காலிகமாக படப்பிடிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ள இடங்கள்: இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயம், 'டாப்சிலிப்'; உதகமண்டலம், தமிழக அரசு விருந்தினர் மாளிகை ஏப்ரல், மே மாதங்களில்; உதகமண்டலம் பொட்டானிக்கல் கார்டன் ஏப்ரல், மே மாதங்களில், அதுபோல, பவானிசாகர், நீர் நிரம்பியுள்ள பருவ காலங்களில் படிப்பிடிப்பு நடத்துவதற்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது.





அதேபோல, இரயில்வே துறையைப் பொறுத்தவரையில் அது மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று நடத்த வேண்டிய ஒன்று. இரயில்வே நிர்வாகத்தின்கீழ் ஒரு படப்பிடிப்பு நடத்தப்பட வேண்டுமானால் படப்பிடிப்பு மேற்கொள்ள 10 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பம் செய்ய வேண்டும். கீழ்க்கண்ட இனங்களுக்கு காப்பீடு செய்ய வேண்டும். இரயில்வே துறைக்குச் சொந்தமான அசையும், அசையா சொத்துக்கள் மற்றும் பயன்படுத்த உத்தேசித்துள்ள இருப்புகளையும் சேர்த்து காப்பீடு செய்யப்படவேண்டும். ரூபாய் 15 இலட்சத்திற்கு பெயர் குறிப்பிடாமல் 15 பணியாளர்களுக்கு காப்பீடு செய்யப்பட வேண்டும். ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் வெளிப்புற படப்பிடிப்பு இரயில்வே வளாகத்திலுள்ள நபர்களுக்கு மாற்று நபர் காப்பீடு செய்யப்பட வேண்டும். படப்பிடிப்புத் தொடங்கும் முன்பு படப்பிடிப்பின்போது ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், விபத்துகளுக்கும் பொறுப்பு ஏற்பதாக உறுதிகூறி இரயில்வே நிர்வாகத்துடன் ஈட்டுறுதி பிணை முறிவு பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும். மேலும் ரூபாய் 5 இலட்சத்திற்கு வங்கி உத்தரவாதம் அளித்தும், படப்பிடிப்பிற்கான அனைத்து நிபந்தனைகளையும் மீறாமல் இருப்பதற்கு ஒரு ஒப்பந்த பிணையப் பத்திரம் குறித்த படிவத்தில் தயார் செய்துகொள்ள வேண்டும். இரயில்வே நிலையத்தில் படப்பிடிப்பு நடத்த ஒரு நாளைக்கு ரூபாய் 2,000-மும், இரயில்வே பெட்டியில் படப்பிடிப்பு நடத்த ஒரு நாளைக்கு ரூபாய் 3,000 என்றும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. படப்பிடிப்புக் கட்டணம் தனி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 399, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**399—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

***15824—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அரசு கலைக் கல்லூரி ஆதிதிராவிட மாண்வர் விடுதிக்குப் புதியக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. இது எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள அரசுக் கலைக் கல்லூரி ஆதிதிராவிட மாணவர்களுக்கு நகரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே விடுதி அமைப்பதற்கான கட்டடங்கள் தனியாரிடமிருந்து கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது. அப்படி தனியார் கட்டடங்கள் கிடைத்தாலும் அதிலே மாணவர்களுக்கு வேண்டிய வசதிகள் இருப்பதில்லை. எனவே, அடிக்கடி அந்த மாணவர்கள் போராட்டம் செய்து வருகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சென்றதற்குப் பின்னால், சென்ற வருடம் அவர்கள் இதற்கு உடனடியாக இடம் பார்த்தால் உங்களுக்குக் கட்டடம் கட்டித் தருகிறேன் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், வருவாய்த் துறை மூலம் இடத்தையும் தேர்வு செய்து கொடுத்திருக்கிறோம். எனவே, முன்னுரிமை அடிப்படையில், அங்கு இருக்கின்ற எங்களுடைய கஷ்ட நிலையை உணர்ந்து, மாணவர்களுடைய நிலையையும் உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் ஆண்டில், நிச்சயம் கட்டடம் கட்டித்தர ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே. இடம் இருந்தால் மடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதாக கடந்த ஆண்டு சொன்னதாகச் சொல்கிறார். இல்லை என்று இப்போதும் சொல்லவில்லை. இருப்பதைப் பொதுவில் ஆக்கி, எல்லோருக்கும் கட்டிக் கொடுப்பதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கான பணத்தைத் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது கட்டிக் கொடுக்க முடியுமா அல்லது எதிர்காலத்திலாவது கட்டிக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பும் மாண்புமிகு உறுப்பினர்



அவர்களுக்கு நிதியாதாரம்தான் எல்லாவற்றுக்கும் மூலாதாரம் என்பது தெரியாததல்ல. ஆகவே, எதிர்காலத்தில் அவருக்கு, சேதாரம் இல்லாமல் அவருடைய பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 400, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**400—**

## இணையம் மூலம் சுற்றுலா இடங்கள்

***13483—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சுற்றுலா இடங்களைப் பற்றி இணையம் மூலம் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக சுற்றுலா இடங்களைப் பற்றி இணையம் மூலம் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுத்து, அவை தற்பொழுது உபயோகத்தில் உள்ளன.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையம் மூலம் பிரச்சாரம் செய்யப்படும் திட்டத்தை எந்தத் தேதியிலிருந்து அரசு அமல் செய்கிறது? இதனால், ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு எவ்வளவு செலவாகும்? இதன்மூலம் இப்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையம் மூலமாக, 1998 பிப்ரவரி மாதம் முதல் தேதி, முதல் ஆரம்பிக்கப்பட்டு, இதன் மூலமாக சுமார் 2,500 நபர்கள் தொடர்பு கொண்டு பயன்பெற்று வருகிறார்கள். அறநிலையத் துறைக்குட்பட்ட 11 கோயில்களும் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக,

தமிழகத்திற்கு வருகிற சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி என்ற ஒரு மலை இருக்கிறது. அதைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்க வேண்டும். அந்த ஏலகிரி மலை, கோடை வாசஸ்தலமாக, நிறைய பயணிகள் அங்கு வருவதால், தமிழகத்திலே இருக்கின்ற சுற்றுலாத் தலங்களிலே ஒன்றாக அதை அரசு அறிவித்தால், ஏழைகள் சென்று பயனடையக்கூடிய ஒரு கோடை வாசஸ்தலமாக அது இருக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏலகிரி மலை, உங்களுடைய தொகுதியில் இருக்கிறதா?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** இல்லை. அதை ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று அரசு அறிவிப்பதில்லை. ஏலகிரி மலையைப் பொறுத்தமட்டில், அங்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக இருந்தால், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன? ஆண்டுக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் சுமார் 2 கோடிக்கு மேல் வருகை தருகிறார்கள். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுமார் 6 முதல் 7 இலட்சம் பேர் தமிழகத்திற்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். சுற்றுலாத் தலத்தைப் பொறுத்தமட்டில், எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று தமிழக





அரசு அறிவிக்காத காரணத்தினால், அதுகுறித்து தனிக் கேள்வி போட்டால், அதற்கான விடையைத் தருவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### சாலைப் போக்குவரத்தை சீர்படுத்தும் திட்டத்தில் இருப்புப் பாதைக் கடவுகளில் பாலங்கள் கட்டுதல், இந்திய சாலைகள் கழக மாநாடு நடத்துதல், கடல்சார் வாரிய பயிற்சிக் கழகம் தொடங்குதல் பற்றி நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், ஓர் அறிக்கையை அவையில் வைப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைத் தெரிவிப்பதற்கு முன்பு, ஒரு விளக்கத்தை நான் தெரிவிக்கவிரும்புகிறேன்.

என்னுடைய மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுகிறபோது, ஒரு புதுக் கவிதையைச் சொன்னேன். அந்தக் கவிதையைப் பாடியது நான்தான். ஆனால், எழுதியது இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் அண்ணன் திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள். அமைச்சர் பாடினார் என்று பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது. பாடியது உண்மை; ஆனால், எழுதியது அண்ணன் திரு. தென்னரசு அவர்கள். 1975-லே எழுதப்பட்ட கவிதை அது என்பதை இங்கே தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு. நீங்கள் அளிக்கவிருப்பது போன்ற நீண்ட அறிக்கைகளாக இருந்தால், பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு நகல் கொடுத்தாக வேண்டும். இனிமேல் இதைப் பின்பற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பின்பற்றி விடுகிறேன்.

இருப்புப்பாதைக் கடவுகள்:

சாலைப் போக்குவரத்தினைச் சீர்படுத்தும் திட்டத்தில் இருப்புப் பாதைக் கடவுகளில் மேம்பாலம், கீழ்ப்பாலம் அமைக்கும் திட்டம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு, நிதி ஒதுக்கீடுகள் செய்துள்ளார்கள்; செய்ய முன்வந்துள்ளார்கள்.

முற்பகல் 10.35

அரக்கோணத்தில் மேம்பாலம் ரூ. 10.175 கோடி, தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது.

திருவாரூர் நகரில் கீழ்ப்பாலம் ரூ. 5.00 கோடி, வரும் நிதியாண்டில் முடிவடையும்.

திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலை-66-ல் ஒரு இரயில்வே மேம்பாலம், மற்றும் அதே இடத்தில் தேசிய நெடுஞ்சாலை-45-ல் ஒரு பரிமாற்ற மேம்பாலம் ரூ. 19.89 கோடியில் நடைபெறுகிறது. 60 சதவீதம் பணி முடிவுற்றுள்ளது. வரும் ஆண்டில் முழுவதும் முடிக்கப்படும்.

விழுப்புரம்-கீழ்ப்பெரும்பாக்கம் இரயில்வே கீழ்ப்பாலம் ரூ. 6.50 கோடியில் 50 சதவீதம் பணி முடிவடைந்துள்ளது.

மதுரை மாநகரில், மதுரை மில் அருகில் இரயில்வே மேம்பாலம் ரூ. 6.5 கோடியில் இவ்வாண்டு பணிகள் முடிவடையும்.

சென்னை மாநகரில், கிண்டி மேம்பாலம் ரூ. 6.07 கோடியில் பணி நடைபெறுகிறது. ஜூன் மாதத்தில் பணிகள் முடிவடையும்.

இராயபுரம் மேம்பாலம் ரூ. 11.55 கோடியில்; இந்தப் பணியும் வரும் ஜூன் மாதத்திற்குள் முடித்திட வகை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர, வரும் நிதியாண்டில், சென்னை தொழில் நுட்பக் கல்லூரி (M.I.T.) இரயில்வே கடவு மற்றும் தாமபரம் சாலையில் உள்ள இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, பணிகள் தொடங்கப்பட்டு சிலபல காரணங்களால் நின்றுபோயுள்ள செயிண்ட் தாமஸ் மலை மற்றும் தில்லைகங்கா நகர் இரயில்வே கீழ்ப்பாலங்கள் மீண்டும் தொடங்கப்பட்டு வரும் ஆண்டில் கட்டி முடிக்கப்படும். இதற்காக ரூ. 2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது





கடலூர்-திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே நிலையம் அருகில் மேம்பாலம் அமைக்க நிலம் கையகப்படுத்த ரூ. 1.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் இரயில்வே மேம்பாலம் ரூ. 7.40 கோடியில் கட்டும் பணி அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நிதீஷ் குமார் அவர்களும், நானும் அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொண்டோம்.

சிதம்பரம் இரயில்வே நிலையத்தருகில் இரயில்வே மேம்பாலம் கட்ட ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கரூர்-இரயில்வே மேம்பாலம் கட்ட ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதுரை புறவழிச்சாலையில், மதுரை-இராமேஸ்வரம் இரயில் பாதைக் கடவிலும், மதுரை-விருதுநகர் இரயில் பாதைக் கடவிலும், இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்ட, முறையே ரூ. 6 கோடி மற்றும் ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

திருச்சி-கரூர் சாலையில் ஒரு இரயில்வே மேம்பாலம் ரூ. 9 கோடியில் கட்டப்பட இருக்கிறது.

திருச்சி மாநகரில், பாலக்கரை, திருவரங்கம், மற்றும் திருச்சி Town இரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் 3 இரயில்வே பாலங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

மதுரை மாநகரில் பெரியார் பேருந்து நிலையம் அருகில் தேசிய நெடுஞ்சாலை-49 விரிவுச் சாலையில் எல்லிஸ் நகர் செல்லுமிடத்தில் ஒரு இரயில்வே மேம்பாலம் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் அதியமான்கோட்டையில் ஒரு இரயில்வே மேம்பாலம் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு மேம்பாலங்களுக்கும் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகம், நிதி உதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

இவை தவிர மேலும் 24 இரயில்வே மேம்பாலங்கள் கட்ட இரயில்வே துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான அனுமதியை மத்திய இரயில்வே துறை உடனடியாக வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*மத்திய சாலை நிதி:*

"There has been a considerable growth in higher category roads (State Highways and M.D.R.) in almost all States whereas it is stagnant in Tamil Nadu. Therefore, it was proposed to upgrade such roads carrying heavy vehicle traffic from lower category to higher, based on the traffic volume".

This is an extract from IX Five Year Plan Document.

நிதி நெருக்கடி காரணமாகவே இந்த நிலை உள்ளது. எனினும், சென்ற ஆண்டு 3,199 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஏறத்தாழ 3,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மாநில சாலைகளாகவும், 10,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மாவட்ட பெரிய சாலைகளாகவும் (M.D.R.) அறிவிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அமைதி காக்க வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** திரு. ரங்கநாதன் அவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காக நீங்கள் mike-லே பேசுகின்ற மாதிரி mike-இல்லாமல் பேச வேண்டிய அவசியம் கிடையாது.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** இந்த ஆண்டு டீசல் லிட்டர் ஒன்றுக்கு ஒரு பைசா cess விதிக்க மத்திய அரசு முடிவெடுத்து அறிவித்துள்ளது. இதில 50 சதவீதம் கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும். மீதி உள்ளதில் 30 சதவீதம் மத்திய சாலை நிதியிலும் வரவு வைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன்படி பார்த்தாலும், தமிழ்நாட்டுக்கு ஏறத்தாழ ஆண்டொன்றுக்கு ரூ. 180 கோடி வரை மத்திய அரசு ஒதுக்கீடு கிடைக்க வாய்ப்புள்ளது. மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன்பிறகு, தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் மத்திய சாலை நிதியின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு,





மேற்குறிப்பிட்டுள்ள சாலைகள் தளம் தரம் உயர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

*நெடுஞ்சாலைத் துறை நிலங்களைப் பாதுகாத்தல்:*

தமிழ்நாட்டில் தற்போது தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட 60,212 கிலோ மீட்டர் நீள சாலைகள் உள்ளன. இவை தவிர நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள், காலி இடங்கள் என ஏராளமான சொத்துக்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து, பராமரிக்கவும், அவற்றை survey செய்து வரைபடங்கள், புள்ளி விவரங்கள் தயார் செய்யவும், அவற்றைத் தற்கால அறிவியல் முன்னேற்றத்திற்கேற்ப கணிப்பொறியில் இணைத்திடவும், துறை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

சில நேரங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் வருவாய்த் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பு அத்தியாவசியம் ஆகின்றது. அதில் சில இடர்ப்பாடுகளும் துறைக்கு ஏற்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பணிகளைச் சிரமமின்றி நெடுஞ்சாலைத் துறை செயல்படுத்திட தலைமைச் செயலாளர் மூலம் தகுந்த ஆணையினை வருவாய்த் துறைக்கும், நில அளவைத் துறைக்கும் வழங்கி, இப்பணிகளை ஒரு காலவரையறைக்குள் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள். இதன்படி, survey முடிக்கப்பட்டு, அனைத்துப் புள்ளி விவரங்களோடும் கணிப்பொறியில் ஓராண்டு காலத்திற்குள்ளாக இடம் பெறச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

*இந்திய சாலை காங்கிரஸ் மாநாடு:*

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் இந்தியன் ரோடு காங்கிரஸ் மாநாடு இந்தியாவின் ஏதாவது ஒரு மாநிலத்தில் நடைபெறும். எந்த மாநிலத்தில் அடுத்த மாநாடு நடைபெறவுள்ளது என்பதை முதலாண்டில் நடைபெறும் மாநாட்டிலேயே முடிவு செய்துவிடுவார்கள். அதன்படி சென்ற ஜனவரி மாதம் ஆந்திர மாநிலம் ஹைதராபாத் நகரத்தில் நடைபெற்ற இந்தியன் ரோடு காங்கிரஸ் மாநாட்டில், அடுத்த மாநாடு தமிழ்நாட்டில் மதுரையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மாநாட்டில் அகில இந்தியாவிலும் உள்ள அனைத்து மாநில அரசுப் பிரதிநிதிகளும் மத்திய அரசுப் பிரதிநிதிகளும், உலகத்தின் பல்வேறு நாடுகளின் அரசுப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். இதுவரை இந்த

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1999 ஏப்ரல் 15

மாநாடு மாநிலத் தலைநகரங்களிலேதான் நடைபெற்று வந்துள்ளது. மாநிலத் தலைநகரம் அல்லாத மதுரையில் இந்த மாநாடு நடைபெறுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் தர வேண்டும் என இந்தியன் ரோடு காங்கிரஸ் கேட்டுக் கொண்டுள்ளதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு வரும் 2000 ஆண்டு ஜனவரியில் இந்த மாநாடு மதுரையிலே நடைபெறுவதற்கு ஒப்புதல் வழங்கி, அதற்காக ரூ. 25 இலட்சம் நிதியும் வழங்கியுள்ளதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நெடுஞ்சாலைத் துறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த மாநாடு நடைபெறுவதன் மூலம் மதுரை மாநகர் புதிய பொலிவு பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*கடல்சார் வாரியம்:*

கடல்சார் வாரியம் இதுவரை தமிழக அரசின் நிதி ஆதாரத்தைப் பெற்றுதான் இயங்கி வருகின்றது. கடல்சார் வாரியத்தின் வருமானத்தைப் பெருக்கும் முயற்சியில் இத்துறை ஈடுபட்டு, ஆண்டுதோறும் அதன் வளர்ச்சியும், வருவாயும் கணிசமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. அடுத்த ஆண்டு முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியம் அரசின் நிதியுதவியைப் பெறாமலேயே தன்னிறைவு பெற்ற வாரியமாக மாறி மேலும் இலாபத்தை ஈட்டக்கூடிய ஒரு வாரியமாக மாறும் என்பதையும், வருமானத்தைப் பெருக்குவதற்கு சிறு துறைமுகங்களைச் சீர்செய்யும் பணியும், அவற்றில் பல சிறு துறைமுகங்களைத் தனியார் துறைமுகங்களாக அறிவிக்கும் பணியையும் மேற்கொள்ளவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர், நாகப்பட்டினம், குளச்சல் ஆகிய துறைமுகங்களை விரிவுபடுத்தவும், புதிய ஜெட்டிகள் அமைக்கவும் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான தனியார் நிதியாதாரங்களைப் பெறுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையை ஏற்று கடல்சார் வாரியத்தின் சார்பில் கடல்சார் வாரிய பயிற்சிக் கழகங்கள் தூத்துக்குடியிலும், கடலூரிலும் தொடங்கப்படும் என சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது நான் அறிவித்தேன். அதன்படி தூத்துக்குடியில் கடல்சார் வாரிய பயிற்சிக் கழகம் தொடங்கப்பட்டு, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற 16-9-1998 ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள். 40 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு,



1999 ஏப்ரல் 15] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

தற்போது அவர்கள் அனைவரும் சிறந்த பயிற்சியைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

வரும் நிதியாண்டில் கடலூரில் மேலும் ஒரு கடல்சார் வாரிய பயிற்சிக் கழகம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999-2000* ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *23* - கூட்டுறவு. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய *23* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. *51,14,50,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1946*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் சட்டமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய *23* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. *51,14,50,000*-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3082*, திரு. நா. பெரியசாமி.

[1999 ஏப்ரல் 15

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3288, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 4026, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3598, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை, திருவாரூர், தஞ்சை விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களின் மீதான கூடுதல் வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1485, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநகராட்சிகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் மகளிருக்கு சிறு வணிகக் கடன் வழங்குவதைப்போல் பேரூராட்சி, ஊராட்சிகளில் உள்ளவர்களுக்கும் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1999 ஏப்ரல் 15] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2951, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்ற தொகுதி, ஆதனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 515, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவை, சிந்தாமணி கூட்டுறவு அங்காடி கிளைகளுக்கு வழங்கும் பொருட்கள் முறையாக வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3871, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

[1999 ஏப்ரல் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2592, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களுக்கு, போதுமான நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3649, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir,

"To discuss Policy", I move—

"That the sum of Rs. 51,14,50,000 allocated under Demand No.23—Co-operation, be reduced by Rs.100-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2796, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் கிராம விவசாய, கூட்டுறவு வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்டி, கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4194, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு ஊராட்சி, பெரிய தெற்கு, காட்டில் பகுதி நேர அங்காடி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம்



1999 ஏப்ரல் 15] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3775, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரில் தொடக்க வேளாண்மை, கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4600, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவண்ணாமலை ஒன்றியம், அண்டம்பள்ளம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை, கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2650, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் ஆடு, கறவை மாடுகளுக்கான கடன் தொகையை, வெளிச்சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2322, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவுச் சங்கங்களில் மாதிரி கூட்டுறவுச் சங்க விதிகளைத் தமிழக அரசு அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4097, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவில்பட்டி தொகுதி லிங்கம்பட்டி கிராமத்தைச் சார்ந்த சமத்துவபுரத்தில் நியாயவிலைக் கடை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2720, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,14,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 34 — நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள் வழங்கல்பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11.67,54,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2053, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி தொகுதியில் இன்னும் புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் கிடைக்கப்பெறாத அனைவருக்கும் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4348, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள்—நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் மேலும் சில அத்தியாவசியப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54.47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4035, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3604, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கீழையூர் ஒன்றியம், கவுண்டர்காடு பகுதியில் தனியாக ஒரு பகுதிநேர அங்காடி தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4415, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2887, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் கணபதி அக்கிரகாரத்தில் ஒரு நேரடிக் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2220, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அத்தியாவசியப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் நியாய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3894, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் புதியதாக விண்ணப்பித்த அனைவருக்கும் குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4529, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir,

"To discuss the need to start part-time ration shops in the following areas where the people come forward to give rent free buildings in Hosur Taluk:

(1) Narasipuram, Attimugam Panchayat (2) Pullarisi, Maradanapall Panchayat (3) Berikai, Berikai Panchayat (4) Murugalapalli, Chennapall Panchayat (5) D.B. Barandur, Mugalur Panchayat (6) Alagabattanur Chinnattur Panchayat (7) N.G.O. Colony, Basthi Avalapalli Panchaya and (8) Sathyamangalam, Thumanapalli Panchayat", I move—

"That the sum of Rs.1167,54,47,000 allocated under Demand No.34–Civil Supplies" be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3954*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், மேல்பனையூர் ஊராட்சியிலுள்ள கிராம அங்காடியைப் பிரித்து மேலமருதூரில் புதிய அங்காடி அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4201*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி தொகுதி, செங்காதரபுரம் ஊராட்சி, பாலச்சேரிக்காட்டில் பகுதிநேர அங்காடி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2385*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சியில் மேலும் 5 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2725*, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வடக்கு பேயன் குழியில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடையை உடன் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3725*, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தென்காசி நகராட்சி ஆசாத் நகர், சிந்தாமணி பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1269*, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் *2588*, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படாமல் விடுபட்டுப்போன குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய *34* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1167,54,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

[1999 ஏப்ரல் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர்கள் இதிலே பேச இருக்கின்றார்கள். நேரம் கருதி, தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு மதிய உணவு தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். என்னுடைய செயலக ஊழியர்களுக்குக் கண்டிப்பான ஓர் உத்தரவு. மாண்புமிகு உறுப்பினர்கள் உணவு அருந்துகிறவரை வேறு யாரையும் அங்கே உள்ளே அனுமதிக்கக் கூடாது என்ற உத்தரவைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ...

இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்து, திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் பேசுவார்கள்.

@ 337 முதல் 474 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



1999 ஏப்ரல் 15]

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றும் இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது. கிராமங்களில் அடிப்படை ஜனநாயக அமைப்புகளாகக் கூட்டுறவும், உள்ளாட்சி அமைப்புகளும் உள்ளன. 73-வது 74-வது சமைப்புச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கவில்லை என்றால் இன்னமும்கூட பல மாநிலங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று இருக்காது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இன்றைக்கு உள்ள நிலையில் அடுத்த 5-வது ஆண்டில் உள்ளாட்சித் தேர்தல் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அந்தச் சட்டத் திருத்தங்கள்தான் காரணம். அதைப்போல கூட்டுறவிற்கும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த அரசு முன்வர வேண்டும். அதற்காக தனியாக ஒரு தேர்தல் ஆணையத்தை நிறுவ வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தக் கூட்டுறவுப் பதவிக் காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்துவதற்குரிய சட்டத் திருத்தத்தையும் அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-50*

தமிழ்நாட்டிலே, 'புகழெனில் உயிரும் கொடுப்பர், பழியெனில் உலகொடு பெறினும் கொளலர்' என்ற தமிழ் மறைக்கிணங்க கூட்டுறவாளர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் தத்துவத்தை வளர்த்திருக்கிறார்கள். எங்களுடைய நிறுவனத்தில் ஒருமுறை முன்னாள் பதிவாளர் திரு. சுயம்பிரகாசம் அவர்கள் பேசும்போது

"You have all grown not because of us, but, inspite of us"

என்று சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அளவுக்கு கூட்டுறவுத் தலைமை போற்றுகிற ஒரு அலுவலர் இருந்தார் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அண்மைக் காலத்திலே, இந்தத் தேர்தல் நடைபெறும் வரை, ஏறத்தாழ 20 ஆண்டுகாலமாகக் கூட்டுறவிலே தேர்தல் நடைபெறாததன் காரணமாக ஒரு சீரிய தலைமை உருவாகவில்லை. ஆனந்துக்கு ஒரு குரியன் கிடைத்தது போல, குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய பகுதியிலே சிறப்பாகக் கூட்டுறவுப் பணிகளை நடத்தி வந்தார்கள். ஆனால், அகில இந்திய அளவிலே நம்முடைய கூட்டுறவு இயக்கமானது, தலைமை ஏற்கிற அளவுக்கு வளரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

[திரு. வி.கே. லட்சுமணன்] [1999 ஏப்ரல் 15

IFFCO-விலோ அல்லது KRIBCO-விலோ நம்முடைய தலைமை வரும் என்று நாம் கனவுகூடக் காண முடியாத அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. அதனுடைய விளைவு என்ன என்று சொன்னால் IFFCO-வைப் பொறுத்தமட்டிலே கலோலிலே, காண்ட்லாவிலே யூரியா தொழிற்சாலைகளை நிறுவியிருக்கிறார்கள். ஆனால், நம்மைப் பொறுத்தமட்டிலே நரிமணத்திலே நிலவாயு கிடைப்பதாக நாம் பேசுகிறோம். ஆனால், நரிமணத்திலே IFFCO-மூலமாக ஒரு உரத் தொழிற்சாலை தொடங்கலாம் என்ற ஒரு முயற்சி ஏதாவது இதுவரை மேற்கொள்ளப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். 1995 ஆம் ஆண்டு Functional Registrars என்று ஒரு முறை வந்ததிலேயிருந்து கூட்டுறவு இயக்கம் ஓரளவுக்குத் தளர்ந்துபோய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்—தத்துவார்த்த ரீதியாக.

மற்றொரு காரணம், அண்மையிலே ஏற்பட்டிருக்கிற தேர்தல் முறை. ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே ஒருவர் 'ஏ'-கிளாஸ் உறுப்பினராக ஆக வேண்டும் என்று சொன்னால், யார் வேண்டுமானாலும் ஆகிக்கொள்ளலாம். அதற்கு ஒரு விதியே கிடையாது. சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலே குடியானவர்கள்கூட 'ஏ'-கிளாஸ் உறுப்பினராக முடியும். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே அதேபோல சம்பந்தம் இல்லாதவர்கள் உறுப்பினர்களாக முடியும் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்காத வரையில் கூட்டுறவுத் தேர்தலிலே ஆள் மாறாட்டத்தைத் தவிர்க்க முடியாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசு அதற்கு, அடுத்தத் தேர்தலுக்குள் விரைவாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவிலே அரசியல் கூடாது என்று நாம் பேசினாலும்கூட இன்றைக்கு அரசியல் ரீதியாக இட ஒதுக்கீடு எப்படியோ வந்துவிட்டது என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் கூட்டுறவுச் சட்டங்களை நல்ல முறையிலே நாம் பரிசீலித்து புதிய சட்டங்களை உருவாக்குகின்றபோது, அரசியலுக்கு இடம் இல்லாமல் அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போதிருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய பதவிக் காலம் 30-11-1999 அன்றோடு முடிந்துவிடும்.



1999 ஏப்ரல் 15] [திரு. வி.கே. லட்சுமணன்]

அந்தச் சங்கங்களிலே தலைவராக இருப்பதன் மூலமாக, அதற்கு மேலேயிருக்கிற APEX சங்கங்களிலே இயக்குநர்களாக இருக்கின்றவர்களுக்கு, அவர்களுடைய பதவிக்காலமும் போய்விடும். ஆகவே, இந்த 3 ஆண்டுகள் என்பதைத் திருத்தி 5 ஆண்டாக நாம் செய்யவில்லை என்று சொன்னால், சில பேர், Apex Body-யிலே 2 மாதம்தான் பதவியிலே இருப்பார்கள். அதற்கு மேலே இருக்க முடியாது. ஆகவே, அதற்குரிய சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, எல்லா கிராம கூட்டுறவுச் சங்கங்களிலும், சென்னை வரையில், ஏராளமான வைப்பு நிதி கோடிக்கணக்கிலே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் இந்த NBFC ( Non Banking Finance Companies) எல்லாம் மோசடி நிறுவனங்களாகப் போய்விட்ட காரணத்தினாலே, ஏராளமான வைப்புத் தொகை தேங்கிக் கிடக்கிறது. ஆனால், அதனுடைய தலைவர்களுக்கு அந்த வைப்புத் தொகையை எப்படி முதலீடு செய்வது என்று தெரிந்தாலும்கூட, அதற்கு அதிகாரம் இல்லை. அதனால் நிறைய வட்டி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த வைப்புத் தொகையை (Fixed Deposit) இலாபகரமாக முதலீடு செய்வதற்கு அரசு யோசனை சொல்ல வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.55

நான் அதே சமயத்திலே ஒன்றைச் சொல்ல வேண்டும். கிராமப்புற கூட்டுறவுச் சங்கத்திலே இந்த வைப்புத் தொகைக்குப் பாதுகாப்பு இல்லாததன் காரணமாக அந்த வங்கியினுடைய செயலாளர்கள் அந்தப் பணத்தைத் திருடிக் கொண்டு போகிறார்கள். உதாரணமாக, பொள்ளாச்சியிலே காளியண்ணன்புதூர் என்ற ஊர், அந்த ஊரினுடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே வைப்புத் தொகை போட்ட பல பேர் அவற்றை இழந்துவிட்டார்கள். காரணம், அதனுடைய செயலாளர் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையினாலே அதற்குத் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல், பொதுவாக படித்த அரசு அலுவலர்களுக்கு—அரசியல்வாதிகள் என்று சொன்னால் கொஞ்சம் தவறு செய்வார்கள் என்ற எண்ணம் சாதாரணமாக இருந்துகொண்டிருக்கிறது, ஆனால், அந்த

[திரு. வி.கே. லட்சுமணன்] [1999 ஏப்ரல் 15

அதிகாரிகளுக்கு எல்லாம்—ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவர்களாகவே கூட்டுறவுச் சங்கத்தை நடத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. சான்றாக, கோவை சிந்தாமணியை எடுத்துக்கொள்வோம். கோவை சிந்தாமணியில் 1973 ஆம் ஆண்டு கடைசி இயக்குநர்க் குழு கலைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, தொடர்ந்து தனி அலுவலர்தான். அந்த இயக்குநர்க் குழு முடிகிறபோது 11 இலட்சம் ரூபாய் இலாபம். ஆனால், இப்போது 22 கோடி ரூபாய் நஷ்டம். தனி அதிகாரி கையிலே ஒரு நிறுவனம் இருந்தது. அதை முன்மாதிரியாக அவர்கள் செயல்படுத்திக் காட்டியிருந்தால் அந்த 11 இலட்சத்தை 110 இலட்சமாக ஆக்கி காட்டியிருக்க முடியும். அதற்கு நேர்மாறாக இப்போது அந்தத் தனி அதிகாரியாக இருந்து கொண்டிருக்கின்றவர் நிர்வாக இயக்குநராக மாறியிருக்கின்றாரேயொழிய அந்த அணுகுமுறை மாறியதாகச் சொல்ல முடியாது. அங்கே, இப்போது நஷ்டம் 22 கோடி ரூபாய். ஆக, அரசுத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் பொறுப்பிலே இதுபோன்ற பெரிய நிர்வாகம் வருகிறபோது முன்மாதிரியாக நடந்து காட்டி, குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு முன்மாதிரியாக நடந்து காட்டி இலாபகரமாக நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள். அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே கரும்புச் சக்கை இருக்கிறது. அதை எரிபொருளாகப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாம். செய்யாறு கூட்டுறவு அந்த வகையில் சர்க்கரை ஆலை ஒன்றிலேதான்—Captive unit ஆக மட்டுமல்லாமல் நம்முடைய மின்சார வாரியத்திற்குகூட உபரி மின்சாரத்தைக் கொடுக்கின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற மற்ற சர்க்கரை ஆலைகளிலே அதைப் பயன்படுத்தி அவர்கள் மின்சாரம் தயாரிப்பதாகத் தெரியவில்லை. அப்படித் தயாரித்தால் அவர்களுக்கு NCDC (National Co-operative Development Council) ஏராளமாகக் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், அவர்கள் அதைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டு நிறைய நாள் ஆகிவிட்டது. அதனால், வளர்ந்து வருகிற நவீன காலத்திற்கேற்ப சட்டத்தை நாம் மாற்றியாக வேண்டும். அண்டை மாநிலங்களிலே இந்தச் சட்டமானது பல முறை திருத்தப்பட்டிருக்கிறது. புதிய சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஆந்திராவிலே Mutually Aided Co-operative Societies Act என்ற ஒரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது).



1999 ஏப்ரல் 15] [திரு. வி.கே. லட்சுமணன்]

அதேபோல் Model Co-operative Act என்ற ஒரு சட்டம் இருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு மைய அரசு Multi State Co-operative Societies Act-ஐ அங்கீகரித்திருக்கிறது. ஆனால், இதிலே எல்லாம் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்தி ஒரு கருத்தரங்கம் நடத்தி இதை ஆய்வதற்கு நாம் முன்வராததினால் அதுபற்றிய விவரங்கள் தெரியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களிலே இலாபம் ஈட்டுகின்ற சங்கங்களும் இருக்கின்றன. அந்தச் சங்கங்களிலே பொது நல நிதியிலிருந்து Common Good Fund—எவ்வளவு இலாபம் வந்தாலும் 2 ஆயிரம் ரூபாய்தான் பொது நலத்திற்காகக் கொடுக்கலாம். இவற்றையெல்லாம் மாற்றி ரூ. 10 ஆயிரம் ரூபாயாவது கொடுப்பதற்குச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அது மட்டுமல்லாமல், 5 கோடி ரூபாய் வரை நிலையான வைப்பு உள்ள சங்கங்களை கணினிமயமாக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சங்கங்களிலே அந்தக் கணினிகளை இயக்குவதற்குப் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்ற பொறுப்பினை சங்கத்திற்கே நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் எவ்வளவுதான் இலாபம் ஈட்டினாலும், இலாபத்திலே பிரிவு என்று வருகின்றபோது 14 சதவீதத்திற்கு மேல் ஈவு கொடுக்க முடியாத நிலை இப்போது இருக்கின்றது. ஆக நல்ல சங்கங்களில் நிறைய இலாபம் வருகிறபோது அந்த இலாபத்தைப் பிரிக்கின்ற அதிகாரத்தை அந்தப் பொதுக் குழுவிற்கே நீங்கள் கொடுக்க வேண்டும். அதற்குரிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதைப்போல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம். பல சங்கங்களில் அதனுடைய பணி காரணமாக இணைப் பதிவாளர்கள், நிர்வாக இயக்குநர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும்கூட அவர்கள் அந்த மாவட்டத்திலே இருக்கிற துணைப் பதிவாளர்களைக் கேட்டுத்தான் எதையும் செய்ய வேண்டும். இவர் வேண்டுமானால் இணைப் பதிவாளராக இருக்கலாம். இருந்தாலும்கூட துணைப் பதிவாளர் அனுமதியைக் கேட்டுத்தான் அவர் காரியம் செய்ய வேண்டும் என்ற நிலை இருப்பதால், பல காரியங்களில் காலதாமதமாகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குத் தலைவராக வந்திருக்கிறார்.

அவருக்குப் பாராட்டுதல்கள். கூட்டுறவாளர்களுக்கு கொஞ்சநாள் முன்பு வரை சென்னை தீவுத் திடல் எதிரில் ஒரு விடுதி இருந்தது. அந்த விடுதியை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டோம். அதனால், வருகின்ற கூட்டுறவாளர்கள் எங்கே போய்த் தங்குவது? புதிய தலைவர் அவர்கள் கூட்டுறவாளர்களுக்கு மிகப் பெரிய அளவிலே நவீன வசதியோடு ஒரு விடுதி கட்ட ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோயம்புத்தூரில் Ramalingam Chettiar Institute for Co-operative Training இருக்கிறது. அதற்கு இயக்குநர் தேர்வு நடந்துவிட்டது. ஆனால் தலைவர் தேர்தல் நடைபெறவில்லை. ஆகவே, தலைவர் தேர்தல் நடத்துவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல கோயம்புத்தூரில் பேரூர்செட்டிப்பாளையம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே நகைக் கடன் கொடுப்பதிலே பெரிய மோசடி நடைபெற்றிருக்கிறது. அதை நான் அமைச்சருடைய பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் கூட்டுறவுப் பணியாளர்களுக்குத் தனியாக ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொன்னால் அது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நுகர்பொருளைப் பொறுத்தவரையில், எங்களுடைய கட்சியினுடைய தீர்மானமே, அரிசி, கோதுமை போன்ற பொருட்களை பாலிதீன் பைகளில் அடைத்துக் கொடுத்தால் எடைக்குறைவு என்ற பிரச்சினையே வராது என்பதுதான். ஆகையினாலே கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிற நுகர்பொருட்களை பாலிதீன் பைகளில் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல பகுதிகளிலே பழைய குடும்ப அட்டைக்கும் உணவுப் பொருட்கள் வழங்குவது இல்லை. புதிய அட்டையும் வழங்கப்படவில்லை. ஆகவே, புதிய அட்டை வழங்கப்படும் வரையிலாவது பழைய அட்டைக்கு உணவுப்பொருள் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. சைதை கா. கிட்டு.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்தில் எனக்குப் பேச வாய்ப்பை அளித்த தங்களுக்கும், பேசுகின்ற தகுதியை உண்டாக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய சர்க்கார் அரிசி விலையை உயர்த்தியவுடன் மற்ற மாநிலங்களில் எல்லாம் உடனடியாக அரிசி விலை உயர்த்தப்பட்டது. ஏழை எளியவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற வரலாற்றுத் தலைவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே இந்தத் துறைக்கு 1,000 கோடி ரூபாய் மானியம் தந்தாலும், இப்போது சுமார் 130 கோடி மானியம் தந்து அரிசி விலையை உயர்த்தாததை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது இளஞ்சிவப்பு அட்டைக்கு யூனிட்டில் கணக்கெடுத்து குறைந்தபட்சம் 12 கிலோ அரிசியும், அதிகபட்சமாக 20 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.

நான் தெளிவாக இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்தபட்சம் 12 கிலோ அரிசி வழங்குகிறபோது 20 கிலோ அரிசி வாங்குகிறவர்களுக்கும் 12 கிலோ அரிசி சில பகுதிகளில் வழங்கப்படுகிறது. ஆகவே, குறைந்தபட்சம் 12 கிலோ என்பதை, இளஞ்சிவப்பு அட்டை தாரர்கள் அனைவருக்கும் 20 கிலோ என்று வழங்கினால் நலமாக இருக்கும். அப்படி 20 கிலோ வாங்கத் தகுதி உள்ளவர்களுக்கு 12 கிலோ அரிசி வழங்குகிறார்கள் என்ற தவறான ஒன்றிரண்டு குறைபாடுகளை இன்று காலை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொண்டு, தயவுசெய்து இளஞ்சிவப்பு அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் 20 கிலோ அரிசி வழங்கினால் நல்லது......

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. கா.நா நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளஞ்சிவப்பு, மஞ்சள் அட்டை என்ற பாகுபாடே இல்லை. முழுமையாக குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும், ஒரு நபர் இருந்தால் 12 கிலோ; ஒரு நபருக்கு மேற்பட்டு ஒருவர் இருந்தால் 16 கிலோ; 2 1/2 யூனிட் என்ற கணக்கு வந்தால் 18 கிலோ; 3 பேர் இருந்தால் 20 கிலோ கொடுக்க வேண்டுமென்பது அரசு ஆணை. கொடுக்கப்பட்டிருக்கின்ற அத்தனை அட்டைகளுக்கும் இந்த உரிமை

உண்டு. அவர்களாகவே, தங்களுக்கு அரிசி தேவையில்லை என்று சொன்னால், சர்க்கரையோ அல்லது மண்ணெண்ணெயோ கூடுதலாகப் பெற்றுக்கொள்ளலாம். அப்படி இல்லாதவர்களுக்கு முழுமையாக 20 கிலோ அரிசி வழங்கப்பட வேண்டும். கடைகளிலே குறைத்து வழங்கினால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம். காலையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னவுடன், அதை உடனடியாக ஆய்வு செய்து, அந்தக் கடையிலே பணியாற்றிய நபர்மீது நடவடிக்கை எடுத்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுக் கடைகளில் இருக்கிறவர்கள் அத்தியாவசியப் பொருட்கள், 20 பொருட்கள் வேண்டுமென்றால், 5 பொருட்களை விற்றுவிட்டுத்தான், அந்தப் பணத்தைக் கொண்டு நியாய விலைக் கடைகளிலிருந்து பொருட்களை வாங்கிக் கொண்டு வருகின்றார்கள். இப்படி விற்றுவிட்டு, விற்றுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டுபோய் பொருட்களை வாங்குகின்றபோது, அனைத்துப் பொருட்களும் ஒரே நேரத்தில் கடைகளில் இருப்பதில்லை. அப்படி விற்றுவிட்டுப் போகும்போது rotation ஆகப் பணம் வந்து கொண்டிருப்பதால், அவர்களிடம் பணம் இல்லாததால் எல்லாப் பொருட்களையும் வாங்க முடியவில்லை. ஆகவே, கூட்டுறவுக் கடைகளுக்கு இரண்டு மாத முன்பணமாகவோ அல்லது கடனோ கொடுத்தால், ஒட்டுமொத்தப் பொருட்களையும் அவர்கள் போய் வாங்கிக் கொண்டு வந்து பொதுமக்களுக்கு எல்லாப் பொருள்களையும் ஒரே நேரத்தில் விநியோகிப்பதற்கு முடியும். ஆகவே, கடனாகவோ, முன்பணமாகவோ வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளம் உயர்வு. ஆனால், கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளம் குறைவு. இரண்டு பேர்களும் ஒரே பணியைத்தான் செய்கிறார்கள். அதனால், கூட்டுறவுத் துறையிலே ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்கும் அதிகமான சம்பளத்தை வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கையொலி எழுப்புகின்ற பொதுவுடைமை இயக்கத்



தோழர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றைச் சொல்கிறேன். நுகர்பொருள் வாணிபக் கழகம் என்பது அரசு சார்பு நிறுவனம். அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்கள் அரசு சார்பு பணியாளர்கள். கூட்டுறவுத் துறை என்பது அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து முதல் போட்டு நடத்துகின்ற நிறுவனம். அதிலே இலாபம் அதிகமாக வருமானால், அவர்களே சம்பளத்தை நிர்ணயம் செய்து கொள்ளக்கூடிய உரிமை பெற்றவர்கள் ஆவார்கள். இதிலே, நம் மாநிலத்திலே இருக்கின்ற மூத்த அதிகாரிகள், I.A.S. அதிகாரிகளுடைய சம்பளம் 25,000 ரூபாய் என்றால், கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற செயலாளருடைய சம்பளம் 30,000 ரூபாய், 35,000 ரூபாய் என்று பெறுகின்ற நிலையில் இருக்கிறார்கள். எனவே, கூட்டுறவுத் துறை என்பது, அதில் வருகின்ற இலாபத்தைப் பொறுத்து சம்பளம் நிர்ணயிக்கின்றபடியால்தான் இருக்கும். அதற்கும் வித்தியாசம் இருக்கிறது. உணவுத் துறை ஊழியர்களைவிட கூடுதலாகப் பெறுகின்ற கூட்டுறவுத் துறை ஊழியர்களும் இருக்கின்றார்கள். அதனால், இரண்டையும் ஒன்றாகக் கருத இயலாது.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், கூட்டுறவுத் துறை இலாபத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் அந்தச் சங்கங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார். ஆனால், அப்படிப்பட்ட அனுமதி பதிவாளரால் வழங்கப்படவில்லை. பல குறைபாடுகள் இன்றும் இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் பொதுவான உத்தரவை, அப்படி எடுத்துக் கொள்ளலாம், உரிமை வழங்கலாம் என்று சங்கங்களுக்கு அல்லது அந்தத் துறைக்கு உத்தரவிடுவாரா என்று வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-10*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் பணியாளர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்பதனுடைய அடிப்படையில் கோவை சிந்தாமணியில் எடுத்துக் கொண்டதனுடைய விளைவாகத்தான் ஒட்டுமொத்த சம்பளத்தில் 15% ஆக இருக்க வேண்டிய அளவு, 55% ஆகிவிட்டது. ஒரு I.A.S. officerஐ விட அதிகமாக 30,000 ரூபாய் சம்பளம் எடுப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும், அது சரியா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். அடிமட்ட பணியாளர்கள் எல்லோருக்கும் சமமான ஊதியம் கொடுப்பதற்குத்தான் முயற்சி செய்யப்பட வேண்டுமே தவிர, எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வது என்பது முறையானது அல்ல.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கு சொன்னார். கூட்டுறவுத் துறை சட்டம் அது போல இருக்கிறது. அந்தக் கூட்டுறவுத் துறையில், ஏற்கெனவே சட்டம் இயற்றுகிறபோது, அதிலே இலாபம் வருமானால் அவர்களுடைய நிர்வாகக் குழு கூடி சம்பளத்தை நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதனால்தான் இப்போது பல சங்கங்கள் நிதி குறைந்து செயல்பாடுகள் இல்லாமல் விழுந்துவிட்ட காரணத்தால் அரசின் சார்பாக ஒரு புதிய முடிவு எடுக்கப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகின்ற, நடத்துகின்ற தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் அழைத்து வைத்து, இதிலே மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர்களையும் அழைத்து வைத்து, திருச்சியிலே ஒரு கூட்டம்போட்டு அவர்களையும் அழைத்துப் பேசி அரசாங்கமே சம்பளத்தை இப்போது நிர்ணயம் செய்திருக்கிறது, விரைவில் அதற்கான ஆணை வெளியிட இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் அவர்கள் சொல்கிறபோது எவ்வளவு வேண்டுமானாலும் சம்பளம் எடுத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் சொல்கிறார், அதை ஆணையாக வெளியிடுவாரா என்று கேட்கிறார். அரசின் சார்பாக 2%-க்கு மிகாமல் அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயம் செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே சட்டம் இருந்தாலும்கூட, பலபேர் அதை மீறி 4%, 5% என்று இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை சட்டபூர்வமாக கடந்த கால ஆட்சியிலே எடுத்திருக்கிறார்கள். சட்டபூர்வமான தவறு. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணைப் பெற்றிருக்கிறார்கள். அதனால்தான் அரசின் சார்பாகச் சொல்லப்படுவது, 2%-க்கு மிகாமல் அவர்களே சம்பளத்தை நிர்ணயம் செய்து கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. தொடர்ந்து இதுபோல அரசாணை வெளியிடப்படுமா என்றால், இனி அப்படி வெளியிட முடியாது. அரசே சம்பளத்தை — மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக இருக்கின்ற நிலைமையைப் பின்பற்றி அரசாணை வெளியிட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை சிந்தாமணி பற்றிச் சொன்னார். 2% என்று சொன்னால் 10%-ஐ அவர்கள் சம்பளமாக எடுத்திருக்கிறார்கள். ஒரு மாதத்தினுடைய வருவாய் ரூ. 11 இலட்சம் என்றால், சம்பளச் செலவு ரூ. 45 இலட்சம் என்று இருக்கிற காரணத்தினால்தான் சிந்தாமணியினுடைய நிலை இப்படியிருக்கிறது. இதெல்லாம் இந்த ஆட்சியில் இல்லை, கடந்தகால





ஆட்சியில் நடைபெற்றது என்பதைக் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சைதை கா. கிட்டு:** ஏற்கெனவே அரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியவற்றிற்கு ஒரு கொள்கை முடிவு எடுத்திருந்தோம். பாலிதீன் பையில் pack செய்து கொடுப்பதாகச் சொன்னோம்; கொள்கை முடிவு ஏற்கெனவே எடுக்கப்பட்டது. இன்னும் அதைக் கொடுக்கவில்லை. உடனடியாக அதை pack செய்து வழங்கினால்தான் அதிலுள்ள ஊழல்களை உடனே அகற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்களுக்கு கூட்டுறவுத் துறை மூலம் சிறு வணிகக் கடன் கொடுக்கிறோம். காலையிலே பார்த்தீர்களென்றால் ஆண்கள் திரண்டு வருகிறார்கள். பெண்களுக்கு மட்டும் சிறு வணிகக் கடன் கொடுக்கிறபோது ஆண்களுக்கும் கொடுங்கள் என்று எங்களையெல்லாம் தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து ஆண்களுக்கும் சிறு வணிகக் கடனை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல துறைகளின் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிறோம். அரசினுடைய கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது இல்லை. அவர்களும் 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெறும்போது, அவர்களுக்கு ஓய்வூதியம் இல்லையென்றால் அவர்களுடைய வாழ்க்கை மிகவும் மோசமாகப் போய்விடும். ஆகவே, அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கக்கூடிய ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் நிதி நிறுவனங்கள் பல மோசடிகளை செய்ததினால் depositதாரர்கள் நம்முடைய கூட்டுறவு வங்கிக்குப் படை எடுக்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டில 10,000 கோடி ரூபாய்க்கு மேல் கூட்டுறவுத் வங்கிகளிலே deposit செய்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை மற்றவர்களுக்கு வட்டிக்குக் கொடுப்பதில் பணம் தேங்கியிருக்கிறது. ஆகவே, இந்தத் தொகையை அரசின் நலத் திட்டங்களுக்கும் கடனாகப் பெற்று அதன் மூலம் வட்டி விகிதத்தை உயர்த்தினால், depositதாரர்களுக்கு அதிக வட்டியை கொடுத்தோம் என்றால் இன்னும் நிறைய deposit வரும் என்பதோடு அரசின் நலத் திட்டங்களுக்கு உதவும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சைதை கா. கிட்டு] [1999 ஏப்ரல் 15

நேற்று காலையில் ஒரு ஓட்டலுக்குச் சாப்பிடப் போனேன். இரண்டு இட்லி, வடை கொடுங்கள் என்று சொன்னேன்; 12 ரூபாய் என்று சொன்னார்கள். அங்கே கவர்ச்சிகரமாக ஒரு வார்த்தையை எழுதியிருந்தார்கள், paper roast என்று. paper roast என்று இருக்கிறதே, அதைக் கொஞ்சம் கொடுங்கள் என்று சொன்னேன். அது 17 ரூபாய் என்று சொன்னார்கள். அதை பேப்பரோடு சுற்றி கொண்டு வந்தார்கள். ஒரு paper roast விலை 17 ரூபாய். ஒவ்வொரு ரூபாயாகப் பிரித்து வைத்தாலும் அவ்வளவு அகலம் வராது. சிறிய தோசையாக இருந்தது.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது சிறப்பு தோசை (சிரிப்பு).

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏனென்று சொன்னால், இன்றைக்கு வியாபாரிகளுக்குப் பல்வேறு வரிச் சலுகைகளை நம்முடைய வரலாற்றுத் தலைவர் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு விலைவாசி கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. தக்காளி விலை, வெங்காயம் விலை எல்லாம் இறங்கி இருக்கிறது. போன வருடம் உளுத்தம் பருப்பு விலை ஒரு கிலோ 50 ரூபாய், இந்த ஆண்டு 30 ரூபாய்தான். அப்படி நம்முடைய சர்க்கார் வியாபாரிகளுக்குப் பல்வேறு வகையில் உதவி செய்தும்கூட ஓட்டல் அதிபர்கள் உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். அதிலே ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இட்டிலியினுடைய எடை எவ்வளவு கிராம் இருக்க வேண்டும், தோசையினுடைய எடை எவ்வளவு இருக்க வேண்டும் என்று எடையை நிர்ணயம் செய்து அரசே விலையையும் நிர்ணயம் செய்து ஏழை எளியவர்கள் சிரமம் இல்லாமல் சாப்பிடுகிற சூழ்நிலையைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது உள்ளாட்சித் தலைவர்கள், தேர்தலில் வெற்றி பெற்ற தலைவர்கள் எல்லாம் ஐந்தாண்டு காலம் பதவியில் இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் வழிமொழிகிறேன். ஊராட்சி மன்றத் தலைவர்களின் பதவிக்



1999 ஏப்ரல் 15] [திரு. சைதை கா. கிட்டு]

காலம் 5 ஆண்டு காலம். ஆனால், கூட்டுறவுத் துறையில் வெற்றி பெற்ற தலைவர்கள், வங்கியினுடைய உறுப்பினர்கள் மூலமாகத்தான் ஜனநாயக முறைப்படி வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய பதவிக் காலத்தையும் 5 ஆண்டு காலமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). திரு. சுந்தரம் அவர்களுக்கு மட்டும் ரொம்ப நேரம் கொடுக்கிறீர்கள். எனக்கு மட்டும் குறைத்துவிடுகிறீர்கள். இப்போதுதான் நான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

உணவுத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சில இடங்களில் புதிய அட்டைகள் மக்களுக்குப் போய் சேரவில்லை. தயவுசெய்து அப்படி வருகிற மனுக்களை உடனடியாகப் பரிசீலித்து—மனுக்கள் வந்தவுடன் அட்டைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை, இப்போதே அட்டைகள் கூடுதலாக இருப்பதாகச் சொல்கிறீர்கள்—மனு செய்தவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டிய வகையில், அதிகாரிகள் சென்று விசாரித்து புதிய அட்டைகளை காலதாமதம் இல்லாமல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது உணவுத் துறைக்கு என்று தனியாக புதிய துறைகள் இல்லை. புதிய துறை ஏன் வேண்டுமென்று சொன்னால், வெவ்வேறு துறை அதிகாரிகள் deputation-ல் உணவுத் துறையில், பணியாற்றுகிறவர்கள் உணவுத் துறை அமைச்சருக்கோ, உணவுத் துறை அதிகாரிகளுக்கோ கட்டுப்பட்டவர்களாக இருப்பதில்லை. ஆதலால், உணவுத் துறையைச் சிறப்பாக செய்வதற்கு, பணிகளை ஆற்றுவதற்கு இப்போது இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே, உணவுத் துறைக்கு புதிய துறைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டில் வரலாற்றுத் தலைவர்—ஒரு பஞ்சாயத்துத் தலைவராக இருந்தாலும், ஊராட்சித் தலைவராக இருந்தாலும், நேரிடையாகத் தெரிந்த ஒரே தலைவர், வரலாற்றுத் தலைவர்தான் முதலமைச்சராக தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார். இதை நான் இந்த அவையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும், பண்போடும் பாசத்தோடும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஐயா, இப்போதுதானே subject-க்கு வருகிறேன்.

தமிழ்நாட்டு அரசியலில் பல்வேறு வந்தேறிகள் தமிழ்நாட்டுடைய மானத்தையும், மரியாதையையும், கலாச்சாரத்தையும் அசிங்கப்படுத்துகின்ற வகையில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வந்தேறிகளுடைய ஆதிக்கத்தை விரட்டி அடித்திட தமிழ்நாட்டுடைய மானத்தை, கலாச்சாரத்தை அசிங்கப்படுத்துகிற அந்த வந்தேறிகளை அரசியலிலிருந்து விரட்டியடிக்க - இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தால் தமிழ்நாட்டில் இருக்கிற அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இருப்பதுபோல தெரிகிறது. ஆகவே, நமக்கு இருக்கிற பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, நமக்கு இருக்கிற motiveகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரு நேர்தலையாவது ஒற்றுமையாக இருந்து சந்தித்து, வந்தேறிகளுடைய ஆதிக்கத்தை விரட்டியடித்தால்தான், எத்தனையோ அரசியல் தலைவர்கள் வாழ்ந்த இந்தத் தமிழகத்தில், இன்றைக்கு அரசியல் வரலாறு இல்லாதவர்கள் எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையை விரட்டியடித்திட நம்முடைய பேரவையில் இருக்கிற அனைத்து கட்சித் தலைவர்களுக்கும், வெளியிலே இருக்கிறவர்களுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், நான் பாசத்தோடு......

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சைதை. கா. கிட்டு அவர்கள் பேசுகின்றபோது வந்தேறிகள் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்றும் அனைவரும் ஒன்றாக தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றும் சொன்னார்கள். அந்த வந்தேறிகள் யார் என்பதை உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 11-20*

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாறுகளை 1912-ஆவது ஆண்டிலிருந்து முழுமையாகப் படித்தால் அந்த வந்தேறிகள் யார் என்பதற்கு உங்களுக்கு முழு விளக்கம் கிடைத்துவிடும்

**திரு. சைதை கா. கிட்டு:** வந்தேறிகள் யார் என்பது மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சூட்கேஸ்



கலாசாரத்தை உருவாக்குபவர்கள்தான் வந்தேறிகள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன அநியாயம்? 48 சூட்கேசுகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள் நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. சைதை. கா. கிட்டு:** 812 கிலோ எடையுள்ள சூட்கேசுகள். ஒரு நாளைக்கு 38 ஆயிரம் ரூபாய் வாடகை. இவர்கள் என்ன மக்களுக்காகப் பணியாற்றுகிற தலைவர்களா? கக்கன்ஜி வாழ்ந்த தமிழகத்தில், எத்தனையோ ஏழை எளியவர்கள் இந்த நாட்டுக்காக உழைத்தத் தலைவர்கள் வாழ்ந்த தமிழகத்தில், இப்படியொரு அரசியல் கலாச்சாரம் தேவையா என்பதை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது. உட்காருங்கள். திரு. ஐ. கணேசன்.

**திரு. சைதை. கா. கிட்டு:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்

**திரு. சைதை. கா. கிட்டு:** ஒரு ஊரிலிருந்து ஒரு ஊருக்குப் போவதற்கு பாலம் அமைக்கப்படுகிறது. அந்தப் பாலத்திலே எத்தனையோ பேர் நடந்து செல்கிறார்கள். பாலத்தைக் கட்டியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில்லை. இன்று தமிழகத்திலே வரலாற்றுத் தலைவர், கலைஞர் அவர்கள் அரசுக்கும் மக்களுக்கும் பாலம் அமைத்து, பல்வேறு திட்டங்கள் இந்த நாட்டிலே நடைபெறுகின்ற காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பாலத்தைக் கட்டிய தலைவருக்கு நன்றி தெரிவிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை, அந்தப் பாலத்தை இடித்து சுக்குநூறாக நொறுக்குகிற வந்தேறிகளை தமிழ்நாட்டில் ஆதரிக்காதீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது பேச அழைத்த துணைத் தலைவருக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் சொல்லிக்கொள்கிறேன். கூட்டுறவு என்பது கூடி பெருமைபட வாழ்தல் என்பதாகும். கூட்டுறவு என்பது பலம் என்பதற்கு அடையாளச் சின்னமாக

இங்கே விளங்கிக்கொண்டிருக்கின்ற இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது நான் சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், தொடர்ந்து மூன்று, நான்கு முறை, மூன்றாவது முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து பேசி இந்த மன்றத்திலே வாதாடிக் கொண்டிருப்பது ஒன்றே ஒன்றுதான்

எங்களுடைய எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம் ஒரு மாபெரும் கூட்டுறவுச் சங்கத்தைக் கொண்டது. அந்தச் சங்கம் நாமக்கல் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்செங்கோட்டிலே செயல்பட்டு வருகிறது என்பதனை நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்செங்கோட்டை தலைமையிடமாகக் கொண்டுள்ள இந்தச் சங்கம். மல்லசமுத்திரம் கிளையோடு-14 ஆயிரம் உறுப்பினர்கள் மட்டும்தான் அந்தச் சங்கத்திலேயிருக்கிறார்கள். ஆனால், கிளைச் சங்கமாகிய கொங்கணாபுரத்திலே கிட்டத்தட்ட 46 ஆயிரம் உறுப்பினர்களுக்கு மேல் இருக்கிறார்கள். கொங்கணாபுரம் சங்கத்திற்கு ஒரு வாரத்திற்கு குறைந்தது 40 ஆயிரம், 50 ஆயிரம் மூட்டைகள் பருத்தி, கடலை, எள் ஆகியவை வருடம் பூராவும் வருகின்றன. மழைக் காலத்திலே பருத்தி நனைந்துவிட்டால், 5 கிலோ அளவிற்குக் குறைக்கிறேன் என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்கள், இதற்கு முன்பாக இருந்த தங்கமான மாமனிதர் அமைச்சர் தங்கபாண்டியன் அவர்கள் 23-8-1996 அன்று, நான் கேட்ட கேள்விக்கு கொங்கணாபுரத்தினுடைய உண்மை நிலையை புரிந்து அந்தச் சங்கம் நிச்சயமாகப் பிரிக்கப்படும் என்று இந்த அவையிலே உறுதியளித்திருந்தார்

(பு.ரா.கள் 11-25

அதற்கடுத்து 26-7-1997 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் துறை மானியக் கோரிக்கை நேரத்திலே, அவர் டில்லி சென்றதன் காரணமாக, கல்வி அமைச்சர் அவர்கள் துறை விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது கணேசனுடைய நியாயமான கோரிக்கையைப் பரிசீலித்து அது நிச்சயமாகப் பிரிக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இத்தனை இருந்தும், இந்தச் சங்கத்தைப் பிரிக்க யார் இடையூறாக இருக்கிறார்கள்?



27-3-1997 அன்று சிறப்புப் பேரவைக் கூட்டம் கொங்கணாபுரம் கிளையில் நடத்தி, அந்த மகா சபையிலே கொங்கணாபுரத்தை பிரிக்க வேண்டுமென்று மகா சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்ற ஆண்டு இதுபற்றி நான் பேசும்போது நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு தீர்மானம் இருந்தால், ஒரே நாளில் பிரித்துக் கொடுக்கிறேன் என்று வீராவேசத்தோடு கொப்பளித்தார்கள். ஆனால், ஏன் அது பிரிக்கப்படவில்லை? கீழே இருக்கக்கூடிய ஓர் அலுவலகத்திலிருந்து அமைச்சர் வரை இந்த நிலைமையை நான் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் மற்ற அமைச்சர்களிடத்திலும், உணவு அமைச்சர் அவர்களிடத்திலும் பலமுறை வேண்டி இருக்கிறேன். இவர்கள் ஏன் இதைச் செய்ய தவறுகிறார்கள்? இதனால் இவர்களுக்கு என்ன நட்டம் ஏற்பட்டுவிடும்? விவசாயிகள் பல தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி, 120 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறக்கூடிய அந்தச் சங்கத்தை இவ்வளவு அநாவசியமாக நினைக்கக்கூடியது வரலாறு காணாத ஒரு மோசமான நடவடிக்கை என்பதைச் சொல்லி, இந்த அவையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் மிக உன்னிப்பாக, இந்த கணேசன் என்ன பேசுகிறான் என்பதனை ஒரு காதிலே வாங்கிக் கொண்டு இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவரைப் பூரணமாக நம்புகிறேன். முதல்வர் அவர்களே, நியாயத்தின் அடிப்படையிலே கேட்கிறேன், விவசாயிகளுக்கு நீங்கள் நல்லது செய்ய வேண்டுமானால், உள்ளபடியே சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த கொங்கணாபுரத்தை 46 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கின்ற அந்த கொங்கணாபுரம் சங்கத்தை, இந்த ஆண்டு நீங்கள் பிரித்துக் கொடுக்க வேண்டும்; இதுதான் எங்களுடைய உண்மையான கோரிக்கை என்பதனைச் சொல்லி 4 முறை இந்த சபையிலே பேசிவிட்டேன்; இந்தக் கதவுகளுக்கு எல்லாம் வாய் இருந்தால், இந்தக் கணேசனைப் பார்த்து.........

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கணேசன் தொடர்ந்து ஆண்டாண்டு காலம் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருவதை அரசு ஆராய்ந்து, அப்படி ஆராய்ந்ததின் காரணமாக, தனி அலுவலர் ஒருவரை அனுப்பி திருச்செங்கோட்டிலே இருக்கின்ற மொத்த விற்பனைச் சங்கத்தை இரண்டாகப் பிரித்து, திருச்செங்கோட்டிற்குத் தனியாகவும், கொங்கணாபுரத்திற்கு தனியாகவும் அமைக்க வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டபோது—கொங்கணாபுரம் பகுதியை இணைக்கும் அந்த

திருச்செங்கோடு சங்கம்தான் முதன் முதலிலே விற்பனைச் சங்கமாக தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்டது; அதிலே இரண்டு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்துகொண்டு, ஒரு பக்கம் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும், மற்றொரு பக்கம் இன்னொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இருந்து தனியாக வேண்டும் என்று கேட்கின்றபோது, சரி, பிரித்துத் தந்துவிடலாம் என்று கணக்கு எடுக்கச் சொல்லப்பட்டது. பிரித்துத் தருகின்றபோது, கொங்கணாபுரம் பகுதிக்குப் புதிய கட்டடம் என்று எந்த வசதியும் இல்லை. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்; புதிய கட்டடம் அதற்கு இல்லை. அதனுடைய சொத்து முழுவதும் திருச்செங்கோட்டிலே இருக்கிறது. திருச்செங்கோட்டிலே இருக்கிற சொத்தை இரண்டுப் பகுதிகளாகப் பிரிக்க வேண்டுமென்றால், தனி அலுவலர் ஒருவரை நியமித்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்து, இரண்டு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். இப்போது இரண்டும் ஒரே சங்கம்; மிகச் சிறப்பாக நடக்கக்கூடிய சங்கம்; இரண்டாகப் பிரித்தால் அதனுடைய நிதிநிலைமை என்ன ஆகும்? அதனுடைய வியாபாரம் என்ன ஆகும் என்று ஆய்வு செய்து, அதை அதிகாரிகள் யோசித்து செய்ய வேண்டுமென்று சொல்லி, தாமதப்படுத்தினார்கள். பிறகு அதிகாரிகளே ஒரு ஆய்வு செய்து, அதை இணையமாக மாற்றி, அங்கு இருக்கின்ற அத்தனை விற்பனை நிலையங்களையும், வேளாண்மை விற்பனை நிலையங்களையும் இணைத்து இணையமாக மாற்றலாம் என்ற ஒரு யோசனையைத் தெரிவித்து இருக்கிறார்கள். வெகு விரைவில்—மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, ஏதோ நாங்கள் எல்லாம் ஆண்டாண்டு காலம் எடுத்துச் சொல்கிறோம், இந்த அரசு காதிலே போட்டுக்கொள்ளவில்லை என்ற எண்ணம் வேண்டாம்; அந்த முயற்சியில் இருக்கிறோம்; நல்லதொரு முடிவை உங்களுக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களே அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரு விஷயத்தைத்தான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிறார். நிச்சயமாக நடக்கும் என்று முழு மனதோடு நம்புகிறேன்.



அடுத்தது கொங்கணாபுரத்தில் இருக்கக்கூடிய பண்டகசாலை, 18-1-1943ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்தப் பண்டகசாலை இப்போது மிக மிக நலிந்து, உறுப்பினர்களுடைய வைப்புத் தொகையிலிருந்து உணவுப் பொருள்கள் எல்லாம் வாங்கி, கிட்டத்தட்ட 8,400 குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. மாதத்திலே 20 நாட்களுக்கு மேலே உணவுப் பொருள்கள் அங்கு சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. அதை இந்த அரசு கவனித்து, அந்த 11 நியாய விலைக் கடைகளையும், அதிலே பணியாற்றக்கூடிய 17 தொழிலாளர்களையும் கொங்கணாபுரத்தில் இருக்கக்கூடிய அந்தச் சங்கத்தோடு இணைத்து, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தது இந்த அவையிலே சென்ற ஆண்டு சொன்னதுதான். கசப்பான பல உண்மைகள். இருப்பினும் நம்முடைய முதல்வர் அவர்கள் தவறு நடந்தால் அதைச் சுட்டிக்காட்டுங்கள் என்று சொன்ன இந்த இலக்கணத்திற்கு ஏற்ப, எடப்பாடியிலுள்ள எஸ்-230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே காசாளராக இருந்த ஒரு நபர், சுமார் 8 இலட்சம் ரூபாய் வரை கிராம நிர்வாக அதிகாரியினுடைய கையொப்பத்தினை அவரே போட்டு மோசடி செய்திருக்கிறார். அதைப்போல நகை மதிப்பாளராக இருந்து, ரசீது எண் 2126 மற்றும் ரசீது எண் 2127-ன்படி நகை வைக்காமலேயே 35 ஆயிரம் ரூபாய், 42 ஆயிரம் ரூபாய் மோசடி செய்திருக்கிறார். அந்த நபர் காசாளராக இருந்தபோது, சுப்பிரமணியன், தங்கவேலு என்ற பெயர்களிலே ரூபாய் 50,000 மற்றும் ரூபாய் 80,000 வரை மோசடி செய்திருக்கிறார். இது அரசு அதிகாரிகளுக்குத் தெரிந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் காலிச் சாக்குகள் பட்டும் 1½ இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்து, அது சம்பந்தமாகவும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) இப்பொழுதுதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இதை இந்த அவையிலே சொன்னபோது, இதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று சென்ற ஆண்டு மின்சாரத் துறை அமைச்சர் என்னிடத்திலே கேட்டார். ஒருவர் கொடுத்த ஆதாரத்தை அவரிடத்திலே கொடுத்தேன். அந்த ஆதாரத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று

சொன்னார். யார் திருடினாரோ அவரே கைப்பட எழுதிய ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது. தேவையெனில் வாங்கிக்கொள்ளலாம்.

நம்முடைய முதலமைச்சர் சிறு, குறு விவசாயிகளிடத்திலே ஜப்தி செய்ய வேண்டாமென்று இந்த மாமன்றத்திலே மிகத் தெளிவாக அறிவித்திருந்தும்கூட, எடப்பாடி பகுதியிலே சுமார் 4,500 ரூபாய் கடன் வாங்கிய குப்புசாமி என்பவரிடத்திலே—2,500 ரூபாய் கட்டிவிட்டார். I.R.D.P. Loan 11,000 ரூபாய் வாங்கியதில் 9,000 ரூபாய் கட்டிவிட்டார். அப்படி இருக்க அவருடைய வீட்டிலிருந்து motor சைக்கிள் மற்றும் பீரோ ஆகியவற்றை ஜப்தி செய்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் இதைவிட ஒரு வேடிக்கை துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது. அடுத்தது திரு. ஆர். காந்தி (குறுக்கீடு) இங்கே வாருங்கள், எவ்வளவு நேரம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள் என்று காட்டுகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியிலே கடன் வாங்காதவர்கள் வீட்டிலே, 20 அதிகாரிகள் போலீஸ் உள்பட உள்ளே சென்று, அங்கிருந்த பெண்மணியை தகாத வார்த்தைகளால் திட்டி, அவர் வீட்டிலிருந்த ஒரு பீரோ, 2 மூட்டை நெல், tape recorder ஆகிய அனைத்தையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இது குறித்து போலீஸில் புகார் செய்ய...

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். சிறு விவசாயிகள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கக் கூடாது; அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்யக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் 5 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிற விவசாயிகள், விவசாயத்தோடு வேறு தொழில் புரிபவர்கள், அத்தோடு அரசுப் பணியில் இருப்பவர்கள், மற்ற இடங்களில் பணி புரிபவர்கள், அவர்கள் நீண்டகாலமாகக் கட்டாமல் இருக்கிற கடனைக் கேட்கலாம் என்று உறுதி சொல்லி, அப்படித்தான் கேட்கப்படுகிறது.



முற்பகல் 11-35

உதாரணத்திற்கு ஒரு மாவட்டம், எந்த மாவட்டம் என்று நான் சொல்ல விரும்பவில்லை. விவசாயினுடைய பெயரையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு மாவட்டத்திலே, அவர் பெயரில் 50 ஆயிரம் ரூபாயும், அவர் துணைவியார் பெயரில் 37 ஆயிரம் ரூபாயும் கடன் வாங்கியிருக்கிறார். கடன் வாங்கி ஏழு ஆண்டுகள் ஆகின்றன. ஒரு ரூபாய்கூட திருப்பிக் கட்டவில்லை. ஆனால், அவர் பிற தொழில் செய்கிறார். சைக்கிள் கடை வைத்திருக்கிறார், இன்னும் பிற தொழிலைச் செய்கிறார். அவர்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று Court மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நேரடியாக அங்கு அதிகாரிகள் சென்றார்கள். அதிகாரிகள் செல்லும்போது, அவர்களுக்கே ஒரு அச்ச உணர்வு ஏற்படுகிறது. இந்தக் கிராமத்திற்குச் செல்கிறோமே, விவசாயிகள் சங்கம் நிறைய இருக்கிற பகுதி என்று நினைத்துப் போகும்போது, காவல் துறையினரையும் சேர்த்து அழைத்துப் போகிறார்கள். அங்கு போய் கடனைப் பற்றி கேட்டபோது அதிகாரிகளையும், காவல் துறை அதிகாரிகளையும் சேர்த்து உள்ளே வைத்து பூட்டிவிட்டு, அங்கிருக்கிற விவசாயிகள் சங்கத்தினர், கடன் கட்ட மாட்டோம் என்று சொல்லி, அதிகாரிகளை மாலை வரை வைத்துவிட்டு, பிறகு விடுவித்தார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அந்த விவசாயி மறு நாள் கடன் தொகையைக் கட்டுவதற்கு வங்கிக்கு வருகிறபோது, அங்கிருக்கிற விவசாயிகள் சங்கத்தினர், நீ இந்தக் கடனைக் கட்டக் கூடாது, இந்த அரசாங்கம் தள்ளுபடி செய்யும் என்று சொல்லி, கடன் கட்ட வந்தவரையும் விவசாயிகள் சங்கம் கட்ட அனுமதிக்கவில்லை.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அவர்கள் கடன் பெற்றது, கூட்டுறவு வங்கியிலே. ஆனால், அவர் பணம் போட்டிருப்பது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலே. 4 இலட்சம் ரூபாய் அவர் பெயரிலே பணம் இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே ஒவ்வோர் ஆண்டும் NABARD வங்கி மூலம் 5% க்கு குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற அந்த நிறுவனத்தை அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் போற்றிப் பாதுகாத்தால்தான் அந்த நிறுவனம் நன்றாக இருக்க முடியும். கடன் பெறுவது இங்கும், பணம் போடுவது அங்கும் என்ற நிலையை உருவாக்கினால், கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கு மேலானவர்கள் பணியாற்றுகின்ற இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட முடியாது. பொதுமக்கள் நிறைய deposit செய்திருக்கிறார்கள். அது பொதுமக்களுடைய பணம். இப்படி இருக்கிற நிலையை உறுதி செய்துதான், நம்முடைய

முதல்வர் அவர்கள், பணம் கட்டுகின்றவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கலாம் என்று முடிவு செய்து, NABARD நிறுவனத்துடன் பேசி, முழுமையாகப் பணம் கட்டுகின்றவர்களுக்கு 6¼ சதவீத வட்டியிலே தள்ளுபடி என்று ஊக்கத் தொகையாக வழங்குவோம். அப்படி வழங்குகிறபோதுகூட இன்னும் எளிய முறையிலே, எவ்வளவு தொகை என்று தெரிந்தால் அதையே வரவு வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு இந்தப் புதிய திட்டம் வந்திருக்கிறது. விவசாயிகள் கூட்டுறவுத் துறையிலே வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தினால்தான் மீண்டும், செலுத்தியவர்களுக்குக் குறைந்த வட்டியிலே பணம் தர இயலும். பணம் வாங்கியவர்கள் திரும்பக் கட்டுவதில்லை என்று முடிவு செய்தால், எப்படி இந்தக் கூட்டுறவுத் துறையை நடத்துவது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், நீங்கள் ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொன்னீர்கள். அதற்கு அமைச்சர் போதுமான அளவுக்கு விளக்கத்தைச் சொல்லி விட்டார். நீங்கள் உட்காருங்கள். திரு. ஆர். காந்தி. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. இன்னும் நிறைய பேர் பேசவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கிருக்கிறார்கள். அவர் நல்ல மனதோடு இந்த நாட்டுக்கு நிறைய செய்யவேண்டுமென்று செயல்படுகிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், விரலை கொஞ்சம் மடக்கிக் கொண்டு பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடம் கொடுங்கள். ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக முதல்வர் இந்த மாமன்றத்தில் உறுதி அளித்திருக்கிறார். நம்முடைய அமைச்சர் deposit வைத்திருப்பவர்களைப் பற்றிப் பேசுகிறார். நான் பேசுவது வெறும் 2 ஆயிரம் ரூபாய்க்காக அண்டா, குண்டாவையெல்லாம் எடுத்துச் சென்று ஜப்தி நடத்தியதைப் பற்றி முதல்வர் அவர்களுடைய உள்ளத்திற்கும், நாட்டினுடைய நிலைமைக்கும் எவ்வளவு மாறுபாடு இருக்கிறது? அதுவும் நான் சொல்லக்கூடிய அந்த குப்புசாமி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் கிட்டத்தட்ட 50 ஆண்டு காலம், 60 ஆண்டு காலம் முதல்வரோடு பணியாற்றுகிறவர். அவர் என்னிடம் மனு கொடுக்கும்போது, தலையில் அடித்துக் கொண்டு, முதல்வர் அவர்களுக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்படுகிறது. கணேசா, முதல்வரை நீ தினசரி பார்க்கிறாயே. இதை அவரிடத்திலே



சொல்லமாட்டாயா என்று பெயரிட்டு என்னிடம் உரிமையோடு கூறுகிறார். இதுபோல அமைச்சர்கள் பணக்காரர்களுக்காகப் பதில் சொல்வதால் அந்த அதிகாரிகள் தங்களுடைய இஷ்டம்போல நாட்டிலே பல கொள்ளைகளுக்கு ஆட்படுகிறார்கள்...........

அதுபோல என்னுடைய பகுதியிலே வழங்கப்படக்கூடிய அரிசி மோசமாக இருக்கிறது. அதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். காந்தி.

***திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராக எனக்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு கூட்டுறவு மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றுகூறி, இப்பேரவையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-40*

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் 1996-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் 7,842-ல் 7,831 சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தியும், 121 மத்திய சங்கங்களில் 116 சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தியும், தற்போது 4 தலைமைச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தியும் முடித்திருக்கிறார்கள். இது ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் இமாலய சாதனையாகும்.

மத்திய அரசு அவ்வப்போது அரிசியின் விலையை உயர்த்தியபோதும் நமது கழக அரசு மாநிலத்தில் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தாதது பாராட்டுக்குரியதாகும். குடும்ப அட்டைகளை எடுத்துக் கொண்டால், நமது மாநிலத்தில் 149 இலட்சம் குடும்ப அட்டைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன. மீதி இருக்கின்ற தகுதியுடைய குடும்பதாரர்களுக்கு அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய சாதனையாகும். இதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

[திரு. ஆர். காந்தி] [1999 ஏப்ரல் 15

மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம். தலைவர் கலைஞர் அவர்களின புதிய முயற்சியால் உருவான இந்தத் திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதைக் கூட்டுறவு வங்கிகள் வெற்றிகரமாகச் செய்ய முடியும். ஆனால், கூட்டுறவு வங்கிகள் சரியாகக் கடனை வசூல் செய்வதில்லை. எனவே, கடன் தொகையை வசூலிப்பதற்காக Field Staff-ஐ நியமித்தால் இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தலைவர் அவர்கள் 22 ஆண்டுகளுக்கு பிறகு இந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கான தேர்தலை நடத்தி எங்களைத் தலைவராக்கிவிட்டார்கள். அதற்கு முன்பு நாங்கள் போய் பார்த்தால் S.O. இருந்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் அங்கே சென்ற பிறகு S.O. Managing Director-ஆகிவிட்டார். அதுதான் நடந்ததே தவிர, அங்கே வேறு ஒன்றும் நடக்கவில்லை

இப்போது நாங்கள் அங்கே சென்று extra ஒரு seat போட்டு உட்காருகிறோம். தேர்தல் நடந்து என்ன செய்தோம் என்றால் ஒன்றுமில்லை. இப்போது நமக்கு ஒரு பதவி வந்தது அவ்வளவுதான். அந்தப் பதவியால் என்ன கௌரவம் என்றால ஒன்றும் கிடையாது. 1976 இல் கூட்டுறவுத் தேர்தல் நடந்தபோது இருந்த அதிகாரங்கள் இப்போது இல்லை. அதிகாரங்கள் அனைத்தும் அதிகாரிகளிடம்தான் இருக்கின்றன. அதற்காக நாம் தேர்தல் நடத்தியிருக்கத் தேவையில்லை. கூட்டுறவு வங்கிகள் இப்போது இலாபத்தில் இயங்கவில்லை. எங்களுடைய மத்தியக் கூட்டுறவு வங்கியில் சென்ற வருடம் இரண்டு கோடியே 85 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இது ஒரு extra நஷ்டம். நாங்கள் சென்று உட்கார்ந்து, எங்களுக்கு ஒரு sitting fees எங்களுக்கு ஓர் அறை. எங்களுக்கு ஒரு கார் என்று கூடுதல் நஷ்டம் ஏற்படுகிறது. 22 வருடங்களாக அந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள், இந்தத் துறை என்ன செய்தது என்பது ஒரு கேள்வி. அவர்கள் அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு நல்லபடி செய்திருந்தால் நிச்சயமாக அவர்கள் வசமே கொடுத்துவிடலாம். ஆனால், இப்போது அது முடிச்சுவிழுந்துவிட்டது. அதைத் தீர்க்க வேண்டுமென்றால், கலைஞர் அவர்கள் இன்னும் 5 ஆண்டுகாலம் ஆட்சி செய்தால்தான் தீர்க்கமுடியும். அதனால்தான், நிச்சயமாக 1983-க்கு முன்பு இருந்த அதிகாரத்தைச் சொல்லுகிறபோது, இப்போது அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், நமது மத்திய அரசு தந்த Model Act-ம்.........



1999 ஏப்ரல் 15]

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய நேரமும் வீணாகிவிடக் கூடாது என்பதற்காக ஒன்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் காந்தி அவர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய வங்கியினுடைய தலைவர்களும் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ஏற்கெனவே மனு கொடுத்திருக்கிறார்கள். அதை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி முதல்வர் அவர்களும் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எனவே, வேறு கருத்திற்குச் செல்லும்படி உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி அதுமாதிரியே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாங்கள் தலைவர்களாகி 6 மாதங்கள் ஆகிவிட்டன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர்களின் பதவிக் காலம் இப்போது அக்டோபரில் முடியப்போகிறது. அவர்கள் இருந்தால்தான் நாங்கள் இந்தப் பதவியில் இருக்க முடியும். இல்லையென்றால் 6 மாதங்களில் இந்தப் பதவி போய்விடும். ஆகையினால், அவர்களுக்கு 3 வருடங்களுக்குப் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோல இன்னொன்று, Wholesale Stores. எங்களுக்கு Karpagam Wholesale Stores இருக்கிறது. அதற்கு நாங்கள் Finance பண்ணுகிறோம். நாங்கள் கற்பகத்திற்கு மூன்று கோடி ரூபாயும், P.D.S.-க்கு ஒரு கோடி ரூபாயும், ஆக மொத்தம் நான்கு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். அந்த Karpagam Wholesale Stores-லே என்ன நடக்கிறது என்றால், மூன்று கோடி ரூபாய் கொடுத்த பின்பு, Stock Verification என்று சொல்வார்கள்; 22 ஆண்டு காலமாக, எந்த அதிகாரியாவது இதுவரை பண்ணியிருக்கிறார்களா என்றால், பண்ணவில்லை. எந்தவொரு வங்கியிலேயிருந்து கடன் பெற்றிருந்தாலும், 3 கோடி ரூபாய் கொடுத்திருந்தால் 3½ கோடி ரூபாய்க்கு அங்கே பொருள் இருக்க வேண்டும். ஆனால், அப்படி அங்கே இருக்கிறதா என்றால், இல்லை. சிந்தாமணி ஆகட்டும், கற்பகம் ஆகட்டும்; அவர்கள் எங்களைக் கேட்கிறார்கள்; 25 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று. அப்படிக் கொடுத்தால்கூட பலன் இல்லை. முழுமையாக அவர்களால் அதைத் தீர்க்க முடியாது. அதற்கு ஒரு தீர்வு

காண வேண்டும் இல்லையென்றால், அந்த Stores நடக்காது. ஆகவே, அதற்கும் தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மத்தியக் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, உறுப்பினர் சைதை கிட்டு அவர்கள் சொன்னதைப்போல, ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நகரக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு 1996 முதல் வழங்க வேண்டும். அது தற்போது அரசின் ஆய்வில் உள்ளது. அதையும் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, என் தொகுதியிலே D.R. அலுவலகம் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. ஆனால், இப்போது அது இல்லை. அதை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேமாதிரி, ஆற்காடு ஒன்றியம், மேலக்குப்பம் பஞ்சாயத்தில் நத்தம் என்று ஒரு கிராமம் மலை மேலே இருக்கிறது. அங்கே ஏறக்குறைய 450 பேர் இருக்கிறார்கள். அந்த இடத்திற்குச் செல்வதற்கு சாலை கிடையாது. அவர்கள் எதற்கானாலும் நடந்துதான் வரவேண்டும்; கீழே இறங்கி வரவேண்டும். நாம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அவர்களுக்கு மின்வசதி செய்து கொடுத்திருக்கிறோம். எனவே, சாலை வசதி செய்துகொடுப்பதற்கும் தலைவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய தொகுதியில் நவ்லாக் பஞ்சாயத்தை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு எடுத்திருக்கிறார்கள். இந்த நவ்லாக் பஞ்சாயத்து பெரிய பஞ்சாயத்து. ஏறத்தாழ 35,000 பேர் இருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்கும்போது, எப்படி funds வருகிறது என்று கேட்டால் 1991 Censusபடி எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறதோ அந்த ஜனத்தொகையில், ஒரு நபருக்கு 682 ரூபாய் என்ற அடிப்படையில் ஒதுக்குகிறோம் என்று சொல்கிறார்கள். 1991-இல் 11,000 பேர் இருந்தார்கள். ஆனால், இப்போது இருப்பது 35,000 பேர். எனவே, அதற்குத் தகுந்த நிதியை அந்த நவ்லாக் பஞ்சாயத்திற்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமக்கு நாமே திட்டம், தலைவர் அவர்களது நல்ல திட்டம். எங்கு பார்த்தாலும் வரவேற்கிறார்கள். ஆனால், பட்ஜெட்டிலே நாம் கொடுத்திருப்பது 10 கோடி ரூபாய்தான். இது போதாது. யார் நமக்கு நாமே திட்டத்திற்குப் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, ஆந்திராவிலே பாருங்கள். ஜென்ம பூமிக்கு விளம்பரம் கொடுக்கிறார்கள். ஒரு விளம்பரத்திற்கு எக்கச்சக்கமாகச் செலவு பண்ணுகிறார்கள். ஆகையினாலே, அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேல்விஷாரம் பேரூராட்சிக்குத் தண்ணீர் வேண்டுமென்று அண்ணன் கோ.சி. மணி அவர்களிடம் நான் சென்ற ஆண்டே கேட்டிருந்தேன். M.L.A. Fundலேயிருந்து M.P. Fundலேயிருந்து ஐந்து, ஐந்து இலட்சத்தில் ஒரு Water tank கட்டினோம். Tank கட்டி விட்டோம். ஆனால், இணைப்பு கொடுக்கப்படவில்லை. அதற்கு அங்கே fund இல்லை. அதற்கு 35 இலட்சம் ரூபாய் வேண்டும். பேரூராட்சியிடம் கேட்கிறபோது அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். சென்ற வருடமே கேட்டிருக்கிறோம். இன்னும் அதற்கு fund கிடைக்கவில்லை. எனவே, நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேல்பாடி தரைப்பாலம் பொன்னையாற்றில், கட்டித் தரவேண்டும்.

அதேபோல, பி.சி.குப்பம் ஏரியில் உடனடியாக வேலையை எடுக்க வேண்டும் என்று நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணன் ஆற்காட்டார் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி நான் கேட்டிருக்கிறேன். எனது தொகுதி ஒரு Industrial area. அங்கே திருவலத்தில் ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. அங்கே கருவி ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதாவது, மின் அழுத்தம் குறைந்தால் உடனடியாக அது off ஆகிவிடும், 10 நிமிடத்திற்கு ஒருமுறை cut ஆகிவிடும். அதை எடுத்துவிட்டால் எங்கள் பகுதியிலே current cut இருக்காது. நான் அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். அதையும் உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

[1999 ஏப்ரல் 15

முற்பகல் 11-50

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைபற்றியும், பொது விநியோகத் துறைபற்றியும் பேசக்கூடிய வாய்ப்பு கொடுத்தமைக்காக எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து எனக்கு தெரிந்த சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெள்ளத் தெளிவாக கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்பட்டதேயானால், மக்களுடைய எண்ணங்கள் முழுமையாக நிறைவேறக்கூடிய அளவிலே செயல்பட்டதேயானால் அதைவிடச் சிறந்த வேறு துறை இருக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்) தலைமை]

அதுபோல ஏற்றத் தாழ்வு இல்லாமல் சமச் சீராக எல்லோரும் பகிர்ந்துண்டு வாழக்கூடிய அளவில் இருக்கக்கூடிய துறைதான் இந்தக் கூட்டுறவுத் துறை என்பதையும், பொது விநியோகத் துறை என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே கூறியிருக்கிறார்கள். இதை நான் இங்கே கூறுவதற்குக் காரணம், நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடியது கிராமம் என்பதை உணர்ந்து இந்த அரசு ஆரம்பிக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும் மாநகராட்சியிலிருந்து கிராமத்திற்கு வரக்கூடிய நிலையை எதிர்காலத்திலே மாற்றியமைத்து, கிராமத்திலிருந்து மாநகராட்சிக்கு வரக்கூடிய நிலைமையை எதிர்காலத்தலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், இந்த நாட்டில் இருக்கக்கூடிய, 65 விழுக்காட்டிற்கும் மேலான மக்கள் கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் கிராமப் பகுதியை முன்னிறுத்தி நகராட்சி, பேரூராட்சி, மாநகரம் என்ற அளவிலே வரவேண்டுமேயொழிய வேறு அல்ல. சற்று முன்புகூட மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை கா. கிட்டு அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய பகுதியிலே பணியாற்றக்கூடிய பெண்களுக்கு மாநகராட்சியிலிருந்து கடனுதவி கொடுக்கிறார்கள் என்றும், அதை அந்த மாநகராட்சிப் பகுதியிலே உள்ள ஆண்களுக்கும் விஸ்தரிப்பு செய்து கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்கள். நாங்கள் அப்படி அல்ல. கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து யாருக்கு வேண்டுமானாலும், கிராமத்திலே



1999 ஏப்ரல் 15] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

இருக்கக்கூடிய ஏழை எளியவர்கள் அனைவருக்கும் கடனுதவி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமம், நகரம், மாநகரம் என்று இல்லாமல் கிராமத்திலே இருக்கக்கூடிய, மாநகரத்திலே இருக்கக்கூடிய, நகரத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் சீமை எண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களை ஒரே சீராக வழங்கவேண்டும் என்பதை இந்த அரசுக்கு அன்போடு, வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் செயல்படுத்தினால்தான், உண்மையிலேயே கிராமப் பகுதி மக்களுக்கு உண்மையாக நாம் சேவை செய்கிறோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கிராம மக்கள் நமக்கு ஆதரவாக இருப்பார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஆளுநர் உரையிலே பேசுகின்றபோதும், இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேருமே அட்டைகள் முழுமையாக மக்களுக்குக் கிடைக்கவில்லை, அப்படியே கிடைத்தாலுமகூட முழுமையாக சீமை எண்ணெயோ அல்லது சர்க்கரையோ கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்ற நேரத்திலே பூதாகரமாக அத்தனை பேரும் பேசுகிறபோது தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை ஆங்காங்கே ஏதோ சில இடங்களில் இருக்கும் என்று கூறினார்கள். இந்த அரசு நல்ல பெயர் எடுக்க வேண்டும், நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே எங்களைப் போன்றவர்கள் பேசுகிறபோது சொல்லக்கூடிய குற்றங்களை, குறைகளை எடுத்து, அதை நிவர்த்தி செய்து அரசுக்கு நல்ல பெயர் ஏற்படுத்த வேண்டும். இன்றும் முழுமையாக பழைய அட்டைதாரர்களுக்கு, புதிய அட்டை கொடுக்கப்படுகின்ற வரை அத்தியாவசியப் பொருட்களைக் கொடுக்க வேண்டும். அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், ஏழை எளியவர்களுக்கு, கீழ்த்தட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள், அவர்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பழைய அட்டைதாரர்களுக்கு இன்றும் முழுமையாக எதுவும் கிடைக்கவில்லை. கேட்கின்றபோதெல்லாம் அட்டைகள் வருகின்றன, வருகின்றன என்று சொல்லுகிறார்கள். அச்சிலே இருக்கின்றன என்று சொல்லுகிறார்களேயொழிய முழுமையாக அதை நிவர்த்தி செய்யவில்லை. ஆகவே, அதை உடனடியாகக் களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே நபர் அட்டை வைத்துள்ள அத்தனை பேருக்கும் திடீரென்று நான்காவது மாதத்திலிருந்து விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டதாகப் புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. அதை உடனடியாகப் பரிசீலித்து,

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1999 ஏப்ரல் 15

ஆய்வு செய்து ஒரு நபர் அட்டைதாரர்களுக்கு, நியாயமானவர்களுக்கு, உண்மையானவர்களுக்கு நீங்கள் உடனே பொருட்களை வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய கணேசன் அவர்கள் பேசியதைப்போல என்னுடைய தொகுதியிலுள்ள கவுந்தப்பாடியிலே கவுந்தப்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே அடிப்படை உறுப்பினர்கள் 45,000 பேர் இருக்கிறார்கள். சளங்கப்பாளையம் பேரூராட்சியிலே 16,000 பேர் இருக்கிறார்கள். மேட்டுப்பாளையத்திலே 12,000 பேர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு சளங்கப்பாளையத்திலே 8,000 பேர் இருக்கக்கூடிய 'ஏ' கிராமத்திலே, அந்தப் பகுதியிலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியையும், 'பி', 'சி' கிராமத்திலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியையும் அமைக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று அந்தத் தொகுதி மக்கள் சார்பாக, அந்தப் பகுதி மக்கள் சார்பாக அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

குறிப்பாக, உண்மையாக யார் வரவு, செலவு செய்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களை வைத்துத்தான் எதிர்காலத்திலே தேர்தலே இருக்க வேண்டும். கூட்டுறவு என்பது, அந்தக் கூட்டுறவிலே உண்மையாக அக்கறை உள்ளவர்கள், நேர்மை உள்ளவர்கள், நாணயம் உள்ளவர்கள், மக்களுக்காக சேவை செய்யக்கூடிய எண்ணம் உள்ளவர்கள், முழுக்க அதிலே ஈடுபாடு கொண்டுள்ள உறுப்பினர்கள் ஆகியோரை வைத்துத்தான் எதிர்காலத்திலே, அப்படிப்பட்ட உறுப்பினர்கள்தான் பொறுப்புக்கு வரக்கூடிய அளவுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு மாதிரிச் சட்டங்களைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும். கூட்டுறவு மாதிரிச் சட்டங்களை அமல்படுத்தினால்தான், நியாயத்தின் அடிப்படையிலே, உண்மையின் அடிப்படையிலே அது வெற்றியடையக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதலாக சீமை எண்ணெய், சர்க்கரை வழங்குவதாக அறிவித்துள்ளீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இங்கே பேசுகின்றபோது, 77 ஆயிரம் கிலோ லிட்டர் சீமை எண்ணெய்தான்



1999 ஏப்ரல் 15] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

கொடுக்கிறார்கள்; ஆனால் நமக்குத் தேவை 82 ஆயிரம் லிட்டர் என்றிருக்கிறது; ஆகவே, கொடுப்பதற்குச் சிரமமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். நான் அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இருக்கக்கூடிய 77 ஆயிரம் கிலோ லிட்டரை வைத்துக் கொண்டு, சீராக (மணியடிக்கப்பெற்றது) நான் இரண்டு நிமிடங்கள்தான் பேசினேன்.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இருக்கிற 77 ஆயிரம் கிலோ லிட்டரை வைத்துக்கொண்டு, எதிர்காலத்திலே சீராக, ஏன் எல்லா பகுதிகளிலும் கொடுக்கக்கூடாது என்பதை அன்போடு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் மூலமாக விநியோகம் செய்யக்கூடிய சீமை எண்ணெய் வியாபாரிகள் எல்லாம் ஒழுங்காக விநியோகம் செய்வதில்லை. விடுமுறை நாட்கள் போக இதர நாட்களுக்கும் ஒழுங்காக, சீராக சீமை எண்ணெய், சர்க்கரை கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, அந்தப் பகுதி நேரக் கடைகளில் எல்லாம் அவற்றை ஒழுங்காகக் கொடுப்பதில்லை. எதிர்காலத்தில் அதைக் கண்காணித்து, விடுமுறை நாட்கள் போக, வேலை நாட்களிலே முழுக்க, முழுக்க அத்தனை நாட்களிலும் காலை 9-00 மணியிலிருந்து மாலை 6-00 மணி வரை கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும்.

இன்றுகூட, காலைப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. சேலம், சூரமங்கலத்திலே செல்லப்பன் என்பவர் நியாய விலைக் கடையிலே பணியாற்றியவர், அங்கே அரிசியை வெளியிலே விற்றார் என்பதற்காக காவல் துறை கைது செய்து, அதனால் அங்கே 200 நியாயவிலைக் கடைகள் மூடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நியாயத்தின் அடிப்படையில், ஏழை எளியவர்களுக்காக பணியாற்ற வேண்டிய சூழ்நிலையில், தொழிலாளர்கள் இவ்வாறு தவறு செய்துவிட்டு, கூட்டமாக சேர்ந்து குரல் கொடுக்கிறார்கள் என்பதற்காக அப்படிப்பட்டவர்களை மன்னிக்காமல், நியாயத்தின் அடிப்படையிலே, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில விவசாயிகள், மீது ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கூறுகிறார்கள். தஞ்சாவூர் விவசாயிகளிடமிருந்து முழுவதுமாக நெல்

கொள்முதல் செய்கிறோம். ஊக்கத் தொகையாக அவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கவேண்டும். காரணம், அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த நெல் முழுவதையும் Civil Supplies Corporation-க்குக் கொடுக்கின்ற சூழ்நிலையில், வெளியிலே விற்க முடியாத சூழ்நிலையின் காரணமாக, குறைந்தது ஊக்கத் தொகையாக ரூ.100 கொடுக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பொது விநியோகத் திட்டம் வெற்றி பெற்றால்தான அரசுக்கு முழுமையாக வெற்றி கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கும். குறிப்பாக, கடந்த 1997 ஆம் ஆண்டிலே நான் கும்பகோணம் பகுதிக்குச் சென்ற நேரத்தில், சாலை ஓரங்களிலே ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த மூட்டைகளில் நெற்பயிர்கள் எல்லாம் துளிர்த்துக் கொண்டிருந்தன. ஆகவே, எதிர்காலத்தில் திட்டமிட்டு கொள்முதல செய்யபபட்டு, அவ்வாறு பாதிக்கக்கூடிய இடங்களில் எல்லாம் தார்ப்பாய்களையும் மற்றவற்றையும் அமைத்து கொள்முதல் செய்ய வேண்டுமென்றும், உணவுப் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்)** : டாக்டர் க. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் என்று கேட்டு மூன்று நிமிடங்கள் ஆகிவிட்டன. கடைசியாகச் சொல்லி, முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** எதிர்காலத்திலே கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு முழுமையான அதிகாரம் கொடுத்தாக வேண்டும். அங்கே இருக்கக்கூடிய செயலாளர்களோ, மற்றவர்களோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சொன்னாலுங்கூட, உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்கக்கூடிய அளவிலே எதிர்காலத்திலே இருக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் என்னைப் பார்த்து 'பேசிக்கொள்கிறேன்' என்று சொல்கிறார்கள். தனியாக விவாதத்திற்கு வேண்டுமானால் நான் தயாராக இருக்கிறேன். இந்தச் சூழ்நிலையில், தமிழகம் முழுவதும் சீராக எல்லா பொருள்களும் கொண்டு செல்வதற்கு ஏற்றவகையிலே அனுமதி கொடுத்தாக வேண்டும். ஒருபுறத்திலே அதிகமான



விலை இருக்கும்; இன்னொரு புறத்திலே குறைவான விலை இருக்கும் என்ற சூழ்நிலையிலே, மாநிலத்திற்குள்ளாக, அது நெல்லாக இருந்தாலும், அரிசியாக இருந்தாலும், அவற்றைக் கொண்டு செல்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லாமல் அனுமதித்தால், சீரான விலை இருக்கும் என்பதைச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, புதிய தமிழகம் கட்சியின் கருத்துக்களைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

தமிழகத்தில் புதிய குடும்ப அட்டைகளைக் கொடுப்பதற்காக, கடந்த மூன்று ஆண்டு காலமாக முயற்சி செய்தும்கூட இன்னும் 20 சதவீத மக்களுக்கு புதிய அட்டைகள் கிடைக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அட்டை கிடைத்தவர்களும் கடையிலே முழுமையாக பொருள்களை, அதாவது ஏற்கெனவே நிர்ணயித்திருக்கின்ற அளவுபடி அரிசி 12 கிலோ, 16 கிலோ, 18 கிலோ மற்றும் 20 கிலோ என்ற இருக்கக்கூடிய அளவுகளைக்கூட பெரும்பாலான கடைகளில் பெறமுடியாமல் மக்கள் திரும்புகிறார்கள். நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நீங்கள் ஒரு நபருக்கு 12 கிலோ என்று வைத்திருக்கிறீர்கள். ஒரு நபருக்கு மேலாக இருந்தால் 16 கிலோ என்று வைத்திருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய கோரிக்கை, குறைந்தபட்சமே 20 கிலோ என்று இருக்க வேண்டும். மூன்று பேருக்கு மேலாக இருக்கக்கூடிய குடும்பங்களுக்கு 30 கிலோ கொடுக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக இன்று தமிழ்நாட்டில் அதிகமாக வறுமையிலே வாழக்கூடியவர்கள் யாராக இருக்கின்றார்கள் என்றால் ஒட்டுமொத்தமாக விவசாய தொழிலாளர்கள்தான் வறுமையினுடைய எல்லையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயத் தொழிலாளர்கள் யாராக இருந்தாலும், அந்தக் குடும்பங்களுக்கு 30 கிலோ அரிசி கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் சர்க்கரையையும் வழக்கமாகக் கொடுப்பதில்கூட அந்த அளவுகளில் தவறு செய்கிறார்கள்— அதாவது, ஒரு கிலோ கொடுக்கவேண்டுமென்றால் முக்கால் கிலோவாக, குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. எனவே, இவை எல்லாம் சீரமைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 4,582 கூட்டுறவு வங்கிகள், 7,842 சங்கங்கள், 181 நிலவள வங்கிகள், 126 Urban வங்கிகள், 23 கூட்டுறவு மத்திய வங்கிகள் மற்றும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் இருக்கின்றன. சமீபத்தில் இவற்றிற்கு எல்லாம் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் பஞ்சாயத்துத் தேர்தல் முதல் சட்டமன்றம், நாடாளுமன்றம் வரையிலே இட ஒதுக்கீடு இருக்கின்றது. கூட்டுறவுத் துறையில் இட ஒதுக்கீடு இல்லாதது வேதனைக்குரிய விஷயம். எனவே, இந்த வங்கிகளிலேயும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் மற்றும் அதேபோல பிற்படுத்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்துதான் அடுத்த முறை தேர்தல் நடத்த வேண்டும். அதற்குத் தக்கபடி சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது கூட்டுறவுத் துறையில் ஏறக்குறைய இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் பணிபுரிகிறார்கள். இப்படி இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்களுடைய பங்கீடு சட்டப்படி இருக்க வேண்டிய—18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடி மக்களுக்கு ஒரு சதவிகிதம், மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகிதம், அதுபோல பிற்படுத்தப்பட்டவர்களுக்குரிய பங்கீடு என்பது எல்லாம் முறையாக இல்லாமல் இருக்கிறது. நான் ஏற்கெனவே பலமுறை இதுபற்றி இந்த மாமன்றத்திலே கேட்டிருக்கிறேன். இங்கே நிலவள வங்கிகள் 5,000 இருக்கின்றன. அதிலே தலைவர்களாக வந்திருக்கக்கூடியவர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இல்லை. அதே போல மிகமிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இல்லை. மேலும், அந்தத் தலைவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் அங்கே வேலைகளைக் கொடுக்கிறார்களே தவிர, எந்தவிதமான இட ஒதுக்கீடு முறையும் கையாளப்படாமல், தங்கள் விருப்பம் போல செய்கின்ற





காரணத்தால், அங்கே தாழ்த்தப்பட்டவர்கள் பணி நியமனம் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்...

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. பொதுப்படையாக, தொடக்க வேளாண்மை வங்கிகளை உருவாக்குகின்றபோது, அதில் உறுப்பினர்கள் சேர்ந்து, அந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தலைவர் கூட்டுறவுச் சட்டப் பிரகாரம், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களை வேலையிலே அமர்த்திக்கொள்ளலாம் என்று இருந்த காரணத்தால், உறுப்பினர்களில் அதிகம்பேர் யாரைச் சொல்கிறார்களோ அவர்களைப் பணியில் நியமித்தார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இட ஒதுக்கீடு முறை கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டுமென்று எங்களுக்குச் சொல்லி, இப்போது Ration கடைகளில் கிட்டத்தட்ட 2,000 பேர் புதிதாக பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் 18 சதவிகிதம் அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. புதிதாக எங்கெங்கு எல்லாம் ஆட்களை எடுக்கிறார்களோ, அங்கெல்லாம் இட ஒதுக்கீடு கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டுமென்று துறையிலே சரிபார்க்கப்பட்டுதான் அமர்த்தப்படுகிறார்கள்.

பிற்பகல் 12-05

இதிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர், ஆதிதிராவிடர் நலத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களின் தலைமையிலே ஒரு குழுவைக் கூட்டி, அந்தக் குழு ஒவ்வொரு துறையாக அழைத்துப் பேசியபோது, அந்தத் துறையினுடைய செயலாளர், ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய செயலாளர், ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு துறைகளிலே இந்த இட ஒதுக்கீடு முறையை சிறப்பாகக் கடைப்பிடித்திருப்பது கூட்டுறவுத் துறை என்று அவர்களே சொல்கின்ற அளவுக்கு இந்தத் துறையிலே செயல்படுத்தியிருக்கிறோம். இட ஒதுக்கீட்டு முறையை கூட்டுறவுத் துறையில், பழங்காலத்தில் பின்பற்றாமல் இருந்திருக்கலாம். ஆனால், இப்போது முறையாகப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் மற்ற துறைகளைக் காட்டிலும் இட ஒதுக்கீடு அதிகமாக அமலாக்கப்படுகிறது என்பதை நானும் அறிவேன்.

அதற்காக நான் பாராட்டுச் சொல்கின்றேன். ஆனால், ஆரம்ப நிலவள வங்கிகளில், அவற்றின் தலைவர்களும் உறுப்பினர்களும் சேர்ந்துகொண்டு, தங்களுக்கு விருப்பமானவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற காரணத்தால் அந்த இட ஒதுக்கீடு அமலாக்கப்படவில்லை என்பதையும் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். எனவே, ஒட்டுமொத்தமாக, தமிழகத்திலே இப்போது இருக்கக்கூடிய 26,000 சங்கங்கள், அது போக 5,000 வங்கிகள் உட்பட, எந்த வேலை வாய்ப்புகளாக இருந்தாலும் அதற்கு ஒரு centralised pool என இருந்தால்—தனித்தனியாக அவர்களுக்கே உரிமை கொடுத்திருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இட ஒதுக்கீட்டை அமலாக்க முடியாது. எனவே—ஒட்டுமொத்தமாக அதற்கு ஒரு ஆணையம் நிறுவி, அல்லது அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்து, இட ஒதுக்கீடு இல்லாமல் எந்த இடத்திலேயும் ஒரு பணியிடம்கூட நிரப்பப்படக்கூடாது என்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த மன்றத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நிலவள வங்கிகளில், இப்போது I.R.D.P. loan கொடுக்கிறார்கள். ஏன் இந்த I.R.D.P. loan வாங்கிக் கட்ட முடியாமல் பலபேர் இருக்கிறார்கள் என்றால், அப்படி loan வாங்குகிறபோதே கட்டுவதற்கு இல்லை என்கிறது மாதிரி, நிலைமைகள் உருவாகின்றன. 10,000 ரூபாய், 12,000 ரூபாய் loan வாங்கினால், 3,000 ரூபாய் அவர்கள் முதலிலேயே இடைத் தரகர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலையை உருவாக்கி வைக்கிறார்கள். அதனாலே assets create ஆவதே இல்லை. அதனாலே loan கொடுக்கிறபோது assets create ஆகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதுபோல, தாராளமாக நிதியும், கடன் வசதியும் கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக, ஒட்டுமொத்தமான அபராத வட்டியினால் விவசாயிகள், கடன்களைத் திருப்பிக் கட்ட முடியவில்லை என்று இப்போது பல பேர்கள் கடன்காரர்களாகிவிட்டார்கள். அதற்கு இரண்டு reasons. ஒன்று, வட்டி விகிதங்கள் அதிகமாக இருக்கின்றன. இரண்டாவது, அதாவது இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, வறட்சியின் காரணமாக, வட்டியையோ முதலையோ திருப்பிக் கொடுக்க முடியாதபோது அவர்களுக்கு அபராத வட்டி என்று போடப்படுகிறது. இந்த அபராத வட்டிதான் அதிகமான சுமையைச் சுமத்துகிறது. எனவே, அபராத வட்டியே இல்லாமல் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட வேண்டும்.





அடுத்தது, single digit-ல, 10 சதவிகிதத்திற்கு உள்ளாக வட்டிவைத்து விவசாயிகளுக்கு என்றைக்கு நாம் கடன் கொடுக்கிறோமோ அன்றைக்குத்தான் நிலைமை முன்னேற முடியும். இந்தத் துறையும் ஒரு நல்ல நிலைக்கு வந்து இலாபகரமாக செயல்பட முடியும் என்று நான் கருதுகிறேன்.

அதுபோக, இந்தக் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு— அவர்களுடைய தகுதிக்கு ஏற்றாற்போல, அரசு ஊழியர்களைப்போல சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இந்தக் கூட்டுறவுத் துறையிலே பட்டயம், அதாவது, Diploma படித்தவர்கள் 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் B.Com. முடித்துவிட்டு, M.Com. முடித்துவிட்டு பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதாவது, இவர்களுக்கெல்லாம் பதிவு மூப்பு அடிப்படையிலே வேலை கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். எனவே, அவர்களுக்கு seniority அடிப்படையிலே வேலை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு கருத்துகளைப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கும் அன்புத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1904 ஆம் ஆண்டில் தோன்றிய இவ்வியக்கத்தில் நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் எனும் இடத்தில் முதன்முதலாக கூட்டுறவுச் சங்கமானது துவக்கப்பட்டு பின்பு படிப்படியாக அந்தச் சங்கம் வளர்ச்சியடைந்து, இன்றைக்கு, 'ஆல் போல தழைத்து அருகுபோல் வேரூன்றி' பல்லாயிரம் சங்கங்களாக உருப்பெற்றிருக்கின்றது என்பதனை நமது துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இருந்தபோதிலும் கடந்த கால ஆட்சியிலே இதற்கு முறையாக தேர்தல் நடைபெறாமல் இருந்த நிலையை மாற்றி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தாரக மந்திரத்தைத் தன்னகத்தே கொண்டு, அனைத்து

[திரு. ஜி.எல். வெங்கடாசலம்] [1999 ஏப்ரல் 15

சங்கங்களுக்கும் முறையாகத் தேர்தல் நடைபெற்று, அதன் மூலமாக நல்ல ஒரு ஜனநாயக மரபை இன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று ஏதோ கீழ் மட்டத்திலே இருக்கின்றச் சங்கங்களுக்கு மட்டும் தேர்தல் நடைபெறாமல் அனைத்து சங்கங்களுக்கும், குறிப்பாக 7,842 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் 7,831 தொடக்க சங்கங்களுக்கும், அதேபோல், 121 மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களில் 116 சங்கங்களுக்கும், அதேபோல், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 ஆகிய அனைத்திற்கும் தேர்தலை நடத்தி அதன் மூலமாக மக்களின் பிரதிநிதிகள் அங்கே தலைவர்களாகவும், நிர்வாக இயக்குநர்களாகவும் அமர்ந்திருக்கின்றார்கள். இதனை பொதுமக்கள், அனைவரும் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-10

அதேபோல், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இவற்றுக்கு நன்றி கூறிக்கொண்டிருக்கின்ற வகையில் அனைத்துத் தேர்தல்களிலும் நம்முடைய கழகத்தவர்களே வெற்றி பெற்று இருக்கின்ற நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை நல்ல முறையிலே வளப்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு 'தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி' என்ற ஒன்றினை ஆரம்பித்து அதன் மூலமாக அந்தத் தொடக்கச் சங்கங்கள் வலுப்பெற வேண்டும் என்பதனை அறிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், 1998 ஆம் ஆண்டு நமது வங்கியானது மாநில அளவில் 15 கோடியே 7 இலட்சத்தை இலாபமாக ஈட் டியிருக்கின்றது என்பதை, நல்ல வளர்ச்சியை சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இதனை மனதார அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், கடன் வழங்குவதைப் பொறுத்தவரையில், குறுகிய காலக் கடனாக இருந்தாலும், மத்திய காலக் கடனாக இருந்தாலும், கடந்த கால ஆட்சியிலே தொய்வுற்றிருந்த நிலையை மாற்றி விவசாயிகள் நன்மை பெறுகின்ற வகையிலே ஏராளமான கடன்களை வழங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டில் 386 கோடி ரூபாயும், அதேபோல் 1993-94 ஆம் ஆண்டில் 492 கோடி ரூபாயும், அதேபோல், 1994-95 ஆம் ஆண்டில் 623 கோடி ரூபாயும், 1995-96 ஆம் ஆண்டில் 626 கோடி ரூபாயும்தான் கடந்த



1999 ஏப்ரல் 15] [திரு. ஜி.எல். வெங்கடாசலம்]

ஆட்சியிலே வழங்கப்பட்டது. அந்த நிலையையெல்லாம் மாற்றி விவசாயிகள் நலனை விரும்புகிற ஆட்சியாகவும், அதேபோல், விவசாயிகளுக்கு என்னனென்ன வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துச்சொல்லுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியிலே அமர்ந்துள்ளபடியால் 1996-97 ஆம் ஆண்டில் 658.77 கோடி ரூபாயும், 1997-98 ஆம் ஆண்டில் 798.73 கோடி ரூபாயும், கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. அதேபோல், வருகிற ஆண்டில், 1999-2000 ஆம் ஆண்டில் 1,150 கோடி ரூபாயும் மத்திய கால, குறுகிய காலக் கடனாகவும் வழங்குவோம் என்று அறிவித்திருப்பதை மக்கள் எல்லாம் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், நம்முடைய தருமபுரி நில வள வங்கியானது, தருமபுரி, பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டங்களைச் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிற ஒரு வங்கியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய பாலக்கோடு வட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் 60 கிலோ மீட்டர், 70 கிலோ மீட்டர் தொலைவிலே கிராமங்களிலேயிருந்து மக்கள் தருமபுரிக்குச் சென்றுதான் அங்கே நிலவள வங்கியிலே கடன் பெறுவதற்கும், அவர்களுடைய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் கடக்க வேண்டிய ஒரு சூழ்நிலை, அவர்கள் ஒரு நாள் முழுவதும் பயணம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடத்திலே எங்களுடைய பாலக்கோடு வட்டத்திற்குத் தனியாக ஒரு பிரதம நிலவள வங்கி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை நீங்கள், மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது நிறைவேற்றித் தருமாறு அந்த மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்று சொன்னால், நமது தருமபுரி நிலவள வங்கியிலே கிட்டத்தட்ட 13,850 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஆனால், பாலக்கோடு வட்டத்தில் மட்டும், 6,236 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதேபோல், 184 வருவாய் கிராமங்கள் இருந்தாலும், 80 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாக பாலக்கோடு வட்டம் இருந்துகொண்டிருக்கின்றது. அதேபோல் கடன் வழங்குதல், கடன் நிலுவை, கடன் கேட்பு, கடன் வசூல் போனறவற்றில் கிட்டத்தட்ட 40 சதவீதப் பங்கினை நம்முடைய பாலக்கோடு வட்டத்திலே இருக்கின்ற மக்கள்தான் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகையினால், எங்களுடைய பாலக்கோடு வட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற பிரதம நிலவள வங்கியை பாலக்கோட்டில் அமைத்துத்

[திரு. ஜி.எல். வெங்கடாசலம்] [1999 ஏப்ரல் 15

தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து, அதன் மூலமாக அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல், எங்களுடைய மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு பிரதம நிலவள வங்கியையும், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, ஓசூர் நகரங்களில் நகர வங்கிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், நம்முடைய தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களை ஒன்றாக இணைத்துத்தான் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் கடந்த காலத்திலே இருந்தது. நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றவுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியோடு, நம்முடைய துறை அமைச்சர் அவர்களும் அதேபோல், எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களும் முயற்சி எடுத்ததன் அடிப்படையில் எங்களுக்குத் தனியாக மொரப்பூரிலே ஒரு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போது கீற்றுக் கொட்டகையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை மாற்றி நல்ல கட்டடங்களை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, அதை உருவாக்கித் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று கல்வி பயிலுகிற மாணவர்களுக்கு Education Loan, கல்விக் கடன் என்ற அடிப்படையிலும் அதேபோன்று, தொலைக்காட்சி போன்ற பொருட்களை வாங்குவதற்கு கன்ஸ்யூமர் கடன் என்ற முறையிலும், அதேபோன்று, வீடு கட்டுபவர்களுக்கு வீட்டுக் கடன் என்ற அடிப்படையிலும் 5 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டம் இருக்கின்ற வங்கிகளில்தான் கடன் தரப்படும் என்று சொல்லி அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை மாற்றி ஒரு கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டம் இருந்தாலும் அந்தச் சங்கங்களும் அதற்குக் கடனாக வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 6¼ சதவீதம் ஊக்கத் தொகை குறித்த நேரத்தில் ஒழுங்காகக் கட்டுபவர்களுக்கு, திருப்பிச் செலுத்துகிறவர்களுக்கு வழங்கப்படும் என்று அனுமதி அளித்து இருக்கிறீர்கள். அதனை மாற்றி அனைத்து விவசாயிகளுக்கும், குறித்த நேரத்தில் கடனை உடனடியாகத் திருப்பிச் செலுத்துகிறவர்களுக்கும் அந்த



1999 ஏப்ரல் 15] [திரு. ஜி.எல். வெங்கடாசலம்]

வாய்ப்பும் அளிக்கப்படவேண்டும். 6¼ சதவீதம் ஊக்கத் தொகையை அளிக்கவேண்டுமென்று மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-15

அதேபோன்று பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான கடைகளை, குறிப்பாக 961 முழுநேரக் கடைகளும் 1,164 பகுதி நேரக் கடைகளும் உருவாக்கியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் இந்த வாய்ப்பு எல்லாம் அளிக்கப்படாமல் இருந்த நிலையை மாற்றி, 200 அட்டைகள் இருந்தாலும் போதும், பகுதி நேரக் கடை; அதேபோன்று 500 அட்டைகள் இருந்தாலும் போதும் முழுநேரக் கடை என்று அறிவித்து அதன்மூலமாகக் கிராம மக்களுக்கு அன்றாட வாழ்க்கையிலே உதவிட வழி செய்திருக்கிறார்கள். ஆனாலும் 200 அட்டைகள் இருந்தால்தான் தரப்படும் என்ற நிலைமையை மாற்றி ஆறு அல்லது மலைப்பிரதேசங்களில் கண்டிப்பாக 200 அட்டைக்குக் குறைவாக இருந்தாலும் அவர்களுக்கும் அந்த பகுதிநேர ration கடைகள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த அனுமதியை வழங்காமல் இன்றும் அரசிடம் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கிறார்கள். அதையும் கவனித்து உடனடியாக நம்முடைய துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்து அந்தக் கடைகளைத் திறந்திட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அருமையான வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கூட்டுறவு என்பது மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தொடங்கப்படும் ஓர் இயக்கம். 'அனைவருக்காகவும் ஒருவர் ஒருவருக்காக அனைவரும்' என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்றைக்குக் கூட்டுறவு இயக்கம் தன்னுடைய குறிக்கோளை அடைந்திருக்கின்றதா என்று நினைத்துப் பார்த்தால், உண்மையிலேயே இல்லை என்றுதான் சொல்லமுடியும். மேலை நாடுகளில் இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில்—கூட்டுறவு இயக்கங்கள் உறுப்பினர்களால் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே அரசாங்கம் அமைத்து, அதற்குப் பிறகுதான் கூட்டுறவு இயக்கம் அமைக்கப்படுகின்றது. அதுவும் இங்கே அரசியல் தலையீடு இருக்கின்ற

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1999 ஏப்ரல் 15

காரணத்தால் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் நாம் நினைத்த குறிக்கோளை அடைந்தோமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இன்று ஒருசில கருத்துக்களை மட்டும் கூட்டுறவுத் துறை பற்றி சொல்லலாம் என்று இருக்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்தப் பயிர்க் கடன்களைப் பொறுத்தவரையில், கடன்களைக் கொடுக்கும்போது, உரம் பகுதியாகவும், ரொக்கம் பகுதியாகவும் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது அந்த உரமானது அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தந்தப் பயிர்களுக்கு ஏற்ப அந்தச் சங்கங்களில் கிடைப்பது இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, விவசாயிகள் என்னென்ன பயிர்களை எந்தெந்தச் சமயத்தில் பயிரிடுகிறார்களோ அதற்கேற்ப அந்தந்த உரங்களைக் கொடுப்பதற்குக் கூட்டுறவு நிறுவனங்கள் உதவ வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில வள வங்கிகளைப் பொறுத்தவரையில் நில வள வங்கிகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் நில வள வங்கிகளில் கொடுக்கப்படுகின்ற நீண்டகாலக் கடன்களைப் பொறுத்தவரையில் அங்கே அவர்களுக்குப் பலவிதமான விதிமுறைகள் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு டிராக்டர் வாங்கவேண்டுமானால் கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலம், 20 ஏக்கர் நிலம் என்று அதிகப்படியான சொத்து மதிப்பு கேட்கிறார்கள். மேலும் Share Capital பத்து சதவீதம் கட்டப்படவேண்டும் என்று இருக்கிற காரணத்தால் விவசாயிகள் நீண்டகாலக் கடனை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நில வள வங்கிகளைப் பொறுத்தவரையில் depositகளை வசூல் செய்யலாம் என்று Reserve வங்கி ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உத்தரவிட்டும் இன்னும் அதைப் பின்பற்ற முடியாத காரணத்தால்தான் நில வள வங்கிகள் சரியான முறையில் செயல்பட முடியவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, நில வள வங்கிகளில் கொடுக்கப்படுகிற கடன்கள், அதாவது கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிற கடன்களைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீர் கீழே சென்று விட்ட காரணத்தால் ஆழ்துளைக் கிணறுகள்தான் எங்கள் சேலம் மாவட்டத்தில் அதிகமாக



1999 ஏப்ரல் 15] [திரு. பி.ஆர். சுந்தரம்]

போடவேண்டியிருக்கின்றன. ஆகவே, நில வள வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்களை ஆழ்துளைக் கிணறுகளுக்கு கொடுப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-20

நுகர்வோர் கூட்டுறவு அமைப்பைப் பொறுத்தவரையில், கூட்டுறவுகளில் நுகர்பொருட்களின் விற்பனை என்று பட்டியல் கொடுத்திருக்கிறீர்கள். அதில், 1994-95 ஆம் நிதியாண்டில் சுமார் 398 கோடி ரூபாய்க்கு நுகர்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1996-97-ல் 382 கோடி ரூபாய்க்குத்தான் நுகர்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய் விற்பனை குறைந்துள்ளது. இதற்குக் காரணம், பொதுமக்கள் கூட்டுறவு அங்காடிகளில் சரியாகப் பொருட்களை வாங்காததுதான். அங்கே தரமற்ற பொருட்களும், எடையில் குறைவும் இருந்ததால்தான்...

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நில வள வங்கியைப் பற்றிக் குறிப்பிட்டார். நில வள வங்கியிலே 7 ஏக்கர் நிலம் இருந்தால் Tractor தரலாம். அவர்கள் சொல்வதுபோல 20 ஏக்கர் நிலம் கேட்பதில்லை.

அதுபோல, கிணறு பொய்த்துப்போய்விட்டால் அதற்கு நில வள வங்கியிலே தள்ளுபடி செய்து கொண்டிருக்கிறோம்.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலே 1994-95 ஆம் ஆண்டு 398 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்திருக்கிறது. ஆனால், கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு விற்பனை 16 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது என்று சொன்னார். 1994-95-லே விற்காத பொருட்களை முழுமையாக வாங்கி அடுக்கிய காரணத்தினால்தான் 36 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலே பெரும்பகுதியாக 80 சதவீதம் முழுமையாக நஷ்டமானது அவர்களுடைய காலத்தில்தான். எந்தப் பொருளுக்கு Commission அதிகமாக் கிடைக்கிறதோ, அந்தப் பொருள்களை விற்காமல், அவர்கள் Commission கொடுத்தால்போதும், எந்தப் பொருளை வேண்டுமானாலும் வாங்கி அடுக்கலாம். அப்படி இருந்த காரணத்தினால்தான் 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது 3 கோடி ரூபாய் அரசுப் பணத்தைத் தந்து, சம்பளம் தரக்கூடிய நிலைமைக்கு ஆளாக்கியது உங்களுடைய காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, வேளாண்மை விளைபொருட்களின் விற்பனை குறித்த பட்டியல் ஒன்றைக் கொடுத்திருக்கிறீர்கள். அதில், 1995-96-இல் ரூ.728 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக 1997-98 ஆம் நிதியாண்டில் ரூ.410 கோடிக்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கூறி இருக்கிறீர்கள். இந்த குறை மாற வேண்டுமானால், விலை குறைவான சமயத்தில் கூட்டுறவு விற்பனை நிலையம் மூலமாக விவசாயிகள் கொண்டு வருகின்ற பொருட்களை நீங்கள் விலை நிர்ணயம் செய்து வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நகைக் கடன். நகைக் கடனைப் பொறுத்தவரையில், நீங்கள் எல்லாம் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள், குறிப்பாக, என்னுடைய தொகுதியில், மல்லூர் மற்றும் வேட்டம்பாடி ஆகிய பகுதிகளிலே நகைகள் திருட்டுப் போயிருக்கின்றன. கூட்டுறவுத் துறை மூலம் நீங்கள் உடனடியாக அனைத்துக் கூட்டுறவு வங்கிகளிலும் Safety locker அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, Siren- ஒலி அமைப்பான் அமைப்பதற்கும் நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். தேர்தலைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாக, ஒழுங்காக நடந்தது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், எந்த மத்தியக் கூட்டுறவு வங்கியிலேயும் ஒழுங்காகத் தேர்தல் நடைபெறவில்லை. எங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் ஆளும் கட்சியினருக்குத்தான் வேட்பு மனுக்கள் கொடுக்கப்பட்டன. அதற்கு நான் சாட்சி. சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலே, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சருடைய மகனை அந்த வங்கியினுடைய தலைவராக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலே வேட்பு மனுக்கள் கொடுக்கப்படவில்லை. காலை 5 மணிக்கு கிட்டத்தட்ட 5,000 பேர்களை அங்கே நிறுத்திவிட்டு, நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக வேட்பு மனு தாக்கல் செய்ய முற்பட்டபோது நாங்கள் எல்லாம் அடித்துத் துரத்தப்பட்டோம். நானும் அடி வாங்கினேன். அவர்கள் அடித்து, என்னுடைய மூன்று பற்கள் கொட்டிவிட்டன. அதை நான் சபாநாயகர் அவர்களிடம் எடுத்துக் கூறினேன். சபாநாயகர், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புக் கொடுப்பார் என்று





நினைத்தேன். என்னை அவர் கண்டுகொள்ளவேயில்லை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய சபாநாயகர், என்ன, ஏது என்று கூட என்னைக் கண்டு கொள்ளவேயில்லை. ஆகவே, எப்படி நீங்கள் நேர்மையான முறையில் தேர்தல் நடைபெற்றது என்று சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் ஏற்கெனவே இந்தச் சபையிலே இந்தப் பிரச்சினையைப்பற்றி பேசி, அதற்குச் சரியான பதிலையும் நாங்கள் தந்திருக்கிறோம். மத்திய வங்கிகளிலே வெற்றி பெற வேண்டுமென்றால், தொடக்க வங்கிகளிலே வெற்றி பெற்றால்தான் மத்திய வங்கிகளிலே வெற்றி பெற முடியும். தொடக்க காலத்திலே நீங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பங்கு பெறாத காரணத்தினால், மத்திய வங்கியிலே உங்களால் பங்கு பெற இயலாது. அதிலே தேர்ந்தெடுக்கப்பட, உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று விருப்பம் இருப்பவர்கள் அங்கே சென்றிருந்தால் பரவாயில்லை. கூட்டுறவிலே சம்பந்தப்படாத நபர்களை அழைத்துச் சென்று வேண்டுமென்றே அங்கே பிரச்சினையை உருவாக்கியது நீங்கள்தான் என்று அன்றைக்கே நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

*பிற்பகல் 12-25*

அதற்குப்பிறகு, இதற்கு மறுபடியும் தேர்தல் வந்தது, மத்திய வங்கித் தேர்தல் முடிந்தது. மறுபடியும் பால் வளச் சங்கத்திற்குத் தேர்தல் வந்தது. அதே சேலத்தில் நீங்கள் சென்று, R.D.O. மூலமும், D.R.O. மூலமும் சொல்லி தேர்தல் நாள் குறிப்பிட்டு, 10 நிர்வாக உறுப்பினர்களுக்கு, 10 இடத்திற்கு தேர்தல் என்று வேட்பு மனு தாக்கல் செய்தீர்களே, அதிலாவது உங்களால் வெற்றி பெற முடிந்ததா? தோல்வி அடைந்த காரணத்தால், ஏதோ வேண்டுமென்று ஒரு பொய்யான காரணத்தைச் சொல்லி, தொடர்ந்து இதையே மீண்டும் மீண்டும் சொல்வதால் அது உண்மையாக ஆகிவிடாது. தமிழ்நாடு முழுவதும் நேர்மையான முறையிலே நடத்தவேண்டுமென்று முதலமைச்சர் சொன்னார். அப்படி நடத்திய காரணத்தினால்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே எங்கள் கட்சியைச் சேராத வேறொருவர் அங்கு தலைவராக வந்திருக்கிறார். இதற்கு அதுவே சாட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே தலைவராக இருந்தவர்கள் சென்றார்களா என்று கேட்கிறார்கள். நான் உங்களைக் கேட்கிறேன், அங்கே வந்த 5,000 நபர்களும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்த தலைவர்களா? இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் அங்கே இருந்தவர்கள் மொத்தமே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே வெற்றி பெற்றிருந்தால்தான் மத்தியக் கூட்டுறவு வங்கியிலே போட்டியிட முடியும் என்ற தெளிவான காரணத்தை அவர் சொல்லிவிட்டார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அங்கே வந்த 5,000 நபர்களும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களா? நான் கேட்கிறேன் அங்கே மொத்தமாக கிட்டத்தட்ட 500, 600 பேர்தான் உறுப்பினர்கள். 500, 600 பேர்தான் உறுப்பினர்கள். அவர்களுக்கு ஓட்டு போடுவதற்கு உரிமையிருக்கிறது. அங்கே 5,000 பேர் எங்கிருந்து வந்தார்கள். அதைத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 500-க்குப் பக்கத்தில் ஒரு பூஜ்யம் போட்டால் அதற்கு யார் பொறுப்பு? நீங்கள் அடுத்த பொருளுக்குப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இப்போது விவசாய விளைபொருள்களுடைய விலையெல்லாம் குறைந்துவிட்டது. இப்போது தக்காளி 25 பைசாவிற்கு விற்கிறது. வெங்காயம் அதே விலைக்குத்தான் விற்கிறது. ஆகவே விவசாயிகளுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. விவசாயிகள் அனைவருமே இதற்கு என்ன செய்ய முடியும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எதற்குக் கூறுகிறேன் என்பதைக் கேட்டுவிட்டு நீங்கள் முணுமுணுத்தால் நன்றாக இருக்கும். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்காத காரணத்தால் இப்போது அவர்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வாங்கிய கடனை ஒழுங்காகக் கட்ட முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய கடனை, கட்ட முடியாத சூழ்நிலையில் விவசாயிகள் இருக்கின்றார்கள். ஆனால், நீங்கள் ஜப்தி செய்ய மாட்டோம் என்று கூறிவிட்டு ஜப்தி செய்கிறீர்கள். நீங்கள் ஜப்தி செய்த காரணத்தால்



கிட்டத்தட்ட நிறைய பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆலங்குடியைச் சேர்ந்த சபீதா பேகம் என்ற பெண்மணி தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். திருபுவனத்தைச் சேர்ந்த சரோஜா என்ற பெண்மணி தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோல இவர்கள் பத்திரிகையிலே சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். வேறு ஒரு காரணத்திற்காக அவர்கள் இறந்திருக்கிறார்கள், ஜப்தி செய்யப்படவில்லை என்று. அதற்குப்பிறகுதான் கடுமையான முறையிலே சட்டமன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், சிறு விவசாயிகளிடம் கடன் வசூல் செய்யக்கூடாது என்று. மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம் பொதுவிலே சொல்லக்கூடாது. குறிப்பிட்டுச் சொன்னால் கண்டிப்பாக அந்த அதிகாரிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். 5 categoryகளுக்கு என்று தனியாகப் பிரித்து வசதியுள்ள விவசாயிகளிடம் கடனைத் திருப்பிக் கேட்கிறோம். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோமேதவிர பொதுவாக இறந்தவர்கள் எல்லாம் கூட்டுறவுக் கடனால் இறந்தார்கள் என்று சொன்னால் அதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பு ஏற்கமுடியும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு இந்த ஜப்தி நடவடிக்கையைக் கண்டித்து, திருச்சி மாவட்டத்திலேகூட விவசாயிகள் தூக்குக் கயிறு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சருக்கு இந்த தூக்குக் கயிறைப் பற்றி தெரியாது என்று நினைக்கிறேன். இந்தத் தூக்குக் கயிறை இவர்கள் எல்லாம் . . .

*(திரு. பி.ஆர். சுந்தரம் தூக்குக் கயிறு வடிவிலே இருந்த தாம்புக் கயிற்றினைக் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சுந்தரம் அருள்கூர்ந்து உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையை ஏதோ ஒரு விளையாட்டுக் கூடமாக அ.தி.மு.க. உறுப்பினர் சுந்தரம் ஆக்குவது முறை அல்ல. ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு பொருளை இங்கே கொண்டு வந்து காட்டிக் கொண்டிருக்கிறார். இது பேரவையின் நடவடிக்கைகளை மாசுபடுத்துகின்ற காரியமாகும். பேரவைத் துணைத் தலைவராக இருக்கின்ற தாங்கள் கடந்த காலத்திலே, 5 ஆண்டு காலம் நடைபெற்ற அந்த ஆட்சியில், இதுபோல நீங்களோ

அல்லது மற்றுமுள்ள இன்றைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினரோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியினரோ, இவர்களில் யாராவது ஒரு பொருளை இப்படிக் காட்டியிருந்தால் அவர்கள் என்ன ஆகியிருப்பார்கள் என்பதும், என்ன ஆனார்கள் என்பதும் பழைய கால வரலாறு. அந்த வரலாறு திரும்பாது. நிச்சயமாக. ஆனால், தூக்குக் கயிறை எதற்காக தயார் செய்தாரோ, சுந்தரம் நமக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அது யாருக்குப் பயன்படுமோ அதுவும் எனக்குத் தெரியாது. எப்போது பயன்படுமோ அதையும் நான் சொல்லத் தயாரக இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. பி.ஆர்.சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

*பிற்பகல் 12-30*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order. ஒரு பொருளைக் காட்ட வேண்டுமானால் அல்லது பத்திரிகையில் வரும் ஒரு செய்தியைப் படித்துக் காட்ட வேண்டுமானால்கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் இந்தக் கயிறைக் காட்டுவதற்கு முன்னால் உங்களிடம் அனுமதி பெற்று இருக்கிறார்களா? அப்படிப் பெறாவிட்டால் அதன்மீது, பேரவைத் துணைத் தலைவர் எடுக்கின்ற நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சுந்தரம் இந்தமாதிரி கயிறு போன்ற பொருட்களை அவையில் காட்டுவதற்கு முன்பு, என்னிடம் அல்லது பேரவைத் தலைவர் அவர்களிடம் அதைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதற்கான அனுமதியைப் பெற்றபிறகுதான் காட்டியிருக்க வேண்டும். வழக்கமாக நீங்கள் எந்த அனுமதியும் பெறாமல் ஒவ்வொரு முறையும் இந்த மாதிரி சபையில், அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுகிற வகையில் நடந்துகொள்கிறீர்கள். தயவுசெய்து அந்தப் போக்கை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பெருந்தன்மையோடு சொல்லிக்கொள்கிறேன். அடுத்த பொருளுக்கு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேசி, இறுதியாக



அரசியல் பேசிய சைதை கிட்டு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் பண்டாரங்கள், பரதேசிகள், தமிழகத்தில் நுழையவிடமாட்டோம் என்று கூறிவிட்டு இப்போது இக்கட்டில் மாட்டிக் கொண்டிருப்பவர்கள் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது மட்டும் பேச வேண்டும். உறுப்பினர் திரு. கிட்டு அவர்கள் பொதுவான கருத்தைத்தான் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, I am rising a point of order. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டு அவர்கள் பேசுகின்றபோது சுந்தரத்தைப் பற்றியோ அல்லது சுந்தரத்தினுடைய இயக்கத்தைப்பற்றியோ அல்லது அவருடைய தலைவரைப் பற்றியோ அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக தமிழ்நாட்டில் வந்தேறிகளுடைய அட்டகாசம் அதிகமாகிவிட்டது. அதற்கு கட்சி வித்தியாசம் இல்லாமல் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்றும், இந்த நிலை நாட்டில் நடைபெறக் கூடாது என்றும் பொதுவாகச் சொன்னார்கள். அதன்மீது நீங்கள் என்ன கருத்துச் சொல்கிறீர்கள்? அவர்களுக்குப் பதில் சொல்கிறேன் என்கிற காரணத்தால்தான், அதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? வந்தேறிகள் கூட்டம் நீங்களா? அல்லது வந்தேறிகளுக்கு நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்களா அல்லது பொதுவாகப் பேசுகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள், நேரம் அதிகமாக இல்லை. அடுத்து, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, நுகர்பொருள் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் தொடக்கத்தில், "கூட்டுறவு முயற்சியில் நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படுமேயானால் எண்ணியது எண்ணியாங்கு எய்த அதைவிட வேறு சிறந்த சாதனம் எதுவும் இருக்கமுடியாது" என்ற பொருள் பொதிந்த கலைஞர் அவர்களின் மேற்கோளோடு இந்த கொள்கை விளக்கக் குறிப்பு தொடங்குகிறது. கொள்கை விளக்கக் குறிப்பில் அந்த 4 வரிகளுக்குள்ளே பல்வேறு அர்த்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டிருக்கிற அந்த விஷயங்களை நடைமுறையில் வெற்றிகரமாக

நிறைவேற்றுவதற்குரிய உத்திகள் என்ன என்பதைத்தான் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையிலும் அதனுடைய ஜனன நோக்கம் நடைமுறை அனுபவத்திலே சிதைக்கப்பட்டுவிட்டது என்றுதான் உணரமுடிகிறது. இதே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1974-ஆம் ஆண்டு வரையிலும் இலாபகரமாக நடந்து வந்த மொத்த கூட்டுறவுப் பண்டகசாலைகள்கூட 1974-க்குப் பின் தனி அதிகாரிகளின் ஆட்சியில் மிகக் கடுமையான முறைகேடுகளுக்கும், ஊழலுக்கும் ஆளாக்கப்பட்டன என்பதை இன்றுவரையில் நாம் பார்த்து வருகிறோம்.

கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில் அதனுடைய பாத்திரம் என்ன என்பதை நான் விரிவாகச் சொல்ல நேரம் இல்லை. ஆனால், இந்தக் கூட்டுறவுத் துறை பொது மக்கள் விலைவாசி ஏற்றத்தால் அவதியுறாமல் பாதுகாப்பதற்கான ஒரு பொருத்தமான கருவியாக நடைமுறையில் பயன்படுத்தப்பட்டது. விலைகளை ஏற்றுகிற வர்த்தக சூதாடிகளின் தாக்குதல்களிலிருந்து பொது மக்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு பொருத்தமான கருவி என்ற முறையில் இன்று கூட்டுறவுத் துறைபயன்படுத்தப்பட்டு வந்தது. இனிமேலும் பயன்படவேண்டும். ஆனால் இதில் விசித்திரம் என்னவென்றால், விளங்கவே முடியாத ஒரு புதுமை என்னவென்றால், தனிப்பட்டவர்கள் ஒரு பொருளை வாங்கி விற்கிறபோது இலாபம் கிடைக்கிறது. ஆனால், கூட்டுறவுத் துறையில் ஒரு பொருளை வாங்கி விற்கிறபோது குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்றாலும் நட்டம் வருகிறது என்றால் இது மனிதச் செயலா அல்லது வேறுவகைப்பட்ட இடையூறுகளா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-35*

திட்டமிட்ட மனித நடவடிக்கைகளால்தான் இந்தக் கூட்டுறவு துறையில் நஷ்டம் ஏற்படுகிறது, ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கு ஒரு முடிவு வேண்டும். இதில் நான் குறிப்பிட விரும்புவது, 1974 வரையிலும் இலாபகரமாக நடைபெறுகிறது இந்த மொத்த பண்டக சாலைகளிலேகூட 1974-க்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு கலைக்கப்பட்டு, தனி அதிகாரிகளின் ஆட்சியிலேதான் இந்தக் கூட்டுறவுத் துறை நார் நாராகக் கிழிக்கப்பட்டு, அதனுடைய உள்ளடக்கம் சிதைக்கப்பட்டு, ஒருபோதும் அது பொருந்தாது என்ற அளவிற்கு ஒரு அவநம்பிக்கை ஏற்படுகிற நிலையில் அது சுருங்கி உள்ளடக்கப் பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமானால்,



உண்மையிலேயே சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இதே கூட்டுறவுத் துறை தமிழ்நாட்டில் எப்போது சிதைக்கப்பட்டது? அரசியல் தலையீடு என்று சொல்கிறார்கள்; அதிகாரிகளின் ஆதிக்கம் என்று சொல்கிறார்கள். இந்த இரண்டும் கடந்த 25 ஆண்டு காலமாக நடைபெற்றன. 1974-க்குப் பின்னர் தொடர்ந்து நடைபெற்றன. இந்த அதிகாரிகளின் ஆட்சியிலேயும், அரசியல் தலையீடுகளிலேயும்தான் இந்தக் கூட்டுறவினுடைய நோக்கமே சிதைந்துவிட்டது. எனவே, மாநில அரசுக்கு நான் தெரிவிக்க விரும்புவது - நம்முடைய Policy Note-லேகூட கடைசியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், சட்டம் மாற்றப்படும் என்று. நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது—மாதிரி கூட்டுறவுச் சட்டம்தான் பொருத்தமானது. மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத்தான் நடைமுறையில் அமலாக்க வேண்டும். அப்படி அமலாக்கும்போதுதான் உறுப்பினர்கள் மட்டுமே அதில் செயல்படுவதற்குரிய வாய்ப்பு கிடைக்கும். மற்ற தலையீடுகளிலிருந்து அது காப்பாற்றப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு தமிழ்நாட்டில் 4,582 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. இதில் என்ன நடக்கிறதென்றால், பங்குத் தொகையையும், மத்திய வங்கியிடமிருந்து வாங்கிய கடனையும் வைத்துத்தான் இந்தக் கூட்டுறவு வங்கிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் கிட்டத்தட்ட 40 சதவீதம் உயிரோடு, ஆனால் செத்த நிலையை அடைந்திருக்கிறது. உயிரோடு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர, அவை உயிரோடு இல்லை. ஒரு சதமான வங்கிகள் அந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது இங்கு மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே 92,600 தொடக்க வங்கிகள் இருக்கின்றன. இந்த வங்கிகளில் ஏறத்தாழ 60 சதவீதம் பாதிக்கப்பட்டிருப்பதற்காகத்தான் மத்திய அரசு கடந்த நாடாளுமன்ற கூட்டத்திலேகூட 6,200 கோடி ரூபாயை ஒரு மறுமுதலீட்டுக்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஒதுக்குவதாக ஒப்புக்கொண்டு அறிவித்தது. ஆனால், அந்த அறிவிப்போடு சரி, இன்றைய நாடாளுமன்ற நிலையிலே மீண்டும் அது அறிவிக்கப்படவில்லை. கடந்த பட்ஜெட்டிலேகூட அதுபற்றி எந்தத் தெளிவும் சொல்லப்படவில்லை. நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய தலைமை கூட்டுறவு வங்கிகளின் தலைவர் கூட டெல்லி சென்று நிதி அமைச்சரைச் சந்தித்து, அறிவிக்கப்பட்டபடி இந்த 6,200 கோடி ரூபாயில் தமிழ்நாட்டுக்குக்

[திரு. கே. சுப்பராயன்] [1999 ஏப்ரல் 15

கிடைக்க வேண்டிய பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். NABARD, மற்றும் RBI, மத்திய நிதி அமைச்சகம், வேளாண்மை அமைச்சகம் இவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு Task Force அமைக்கப்படும் என்று நிதி அமைச்சரும் உறுதி அளித்திருக்கிறார். ஆனால், அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மாநில அரசு அதுகுறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மாநில அரசு மத்திய அரசுக்கு இத்தகைய நிர்பந்தத்தை ஏற்படுத்துகிறபோது நமக்கு அதிலே ஏறத்தாழ 380 கோடி ரூபாய் கிடைக்கக் கூடும். அது வந்தால்தான் இந்த தொடக்க வேளாண்மை வங்கிகள் ஓரளவிற்கு வாழ முடியும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நகர கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 1-7-1996-லேயே ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும். ஆனால், அதிலிருந்து அளிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள், ஊதியக் குழு பரிந்துரைகள் வந்ததற்குப் பின்னாலும் இல்லை. எனவே, மாநில அமைச்சர் அவர்கள் 1-7-1996 முதல் ஊதிய உயர்வு வழங்கப்படாமல் இருக்கின்ற நகர வங்கி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க பொருத்தமான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறை வங்கிகளிலே வழங்கப்படுவதுபோல Pension இந்த கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று முருகராஜ் குழு பரிந்துரை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரையை வழங்கி மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. அந்தப் பரிந்துரை மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, அந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வழங்க வேண்டும்.

நான் காலையிலேகூட ஒரு கேள்வியிலே குறிப்பிட்டேன். உண்மையிலேயே pension மீது அதிக அக்கறை செலுத்த வேண்டும். இனிமேல், முதிய நிலை அடைந்தாலே சமூகத்தில் வாழ முடியாது என்ற ஒரு நிலை. முதியவர்கள் சமூகத்தின் சுமையாக, வாழ லாயக்கற்றவர்களாக, ஒரு சமூகப் பிரச்சினை எதிர்மறையாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்களைக் காப்பாற்றுவதற்காக pension அளிக்க முதல் உரிமை வழங்கப்பட வேண்டும். எனவே, முருகராஜ் குழு பரிந்துரையின்படி pension வழங்க உடனடியாக அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 15] [திரு. கே. சுப்பராயன்]

இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை கூட்டுறவு வங்கியிலே சொல்ல முடியாத அளவுக்கு ஊழல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த மதுரை கூட்டுறவு வங்கியிலே 39 பேர் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்குத் தேவையான இன்னும் 50 பேர் எடுக்கலாம், 89 பேர் பணியாற்றலாம். ஆனால் மதுரை கூட்டுறவு வங்கியிலே 200 பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். 200 பேர் புதியதாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இது எப்படி நடந்தது என்று எனக்குப் புரியவில்லை. இதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொருத்தமான ஆணை இட்டிருந்தார்கள். அந்த ஆணையையும் மீறி, 200 பேர்கள் எடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அதில் கிட்டத்தட்ட 92 பேர்கள்தான் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் எடுக்கப்பட்டு இருக்கிறார்கள். 36 பேர்களுக்குக் கூட்டுறவு பயிற்சியே கிடையாது. இது தவிர, 70 பேர்கள் அடிப்படைப் பணியாளர்களாக எடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40

இதில் என்ன விசித்திரம் என்றால், அதனுடைய deposit தொகை 16 கோடி; அதனுடைய இலாபம் 20 இலட்சம். ஆனால், 4 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்ட ஊதியத் தொகைக்கு இனிமேல் எவ்வளவு செலவழிக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 110 இலட்சம் ரூபாய் ஊதியத்திற்காக செலவழிக்க வேண்டும். 4.57 இலட்சம் ரூபாயாக இருந்த சம்பளச் செலவு என்பது, இந்த நிர்வாகத்தின்கீழ் இனிமேல் 110 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டுமென்றால், அது உயிரோடு இருக்குமா? அந்த மதுரை நகர வங்கியை நடைமுறையிலேயே சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இதுதான் மிகச் சிறந்த உதாரணம். இது எப்படி நடந்தது? இன்னும் எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. இப்போது எடுக்கப்பட்ட 200 பேர்களையும் மீண்டும் அப்படியே பணியில் அமர்த்திக்கொள்வதற்கு சில முறைகேடான முயற்சிகள் under-dealing நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த under-dealing வெற்றி பெறுமானால், கூட்டுறவுத் துறைக்கு மிக மோசமான நிலை ஏற்பட்டுவிடும். மதுரை நகர வங்கி இயங்குவதே கேள்விக்குறியாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அதன் மீது துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதனுடைய செயலாளர் மீது விசாரணை

நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, *200* பேர்கள் அல்ல; *50* பேர்களுக்கும் குறைவாக எடுத்து இருக்கிறார்கள். இப்படி பல நகர வங்கிகளில் எடுத்ததன் காரணத்தால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொதுப்படை யான நிலைமையை கூட்டுறவிலே கொண்டுவந்தார்கள். இனி வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து மூப்பு அடிப்படையில்தான் எடுக்கப்பட வேண்டும்; interview நடத்தக்கூடாது என்று ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்து, அதை எதிர்த்து ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்ற காரணத்தால், கடந்த ஓராண்டுக் காலமாக அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது; ஏற்கெனவே *2, 3* வங்கிகளில் இதுபோன்று நடைபெற்று, அந்தத் தவறான நடவடிக்கை, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே விஷயத்திலே நான் சொல்ல விரும்புவது, அதே வங்கியில் சுய தொழில் நடத்தாதவர்களே சுய தொழிலுக்குப் பணம் கடன் வாங்கி இருக்கிறார்கள். அதற்குரிய ஆதாரங்கள் முழுவதையும் சேகரித்து வங்கி ஊழியர் சங்கம் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு record பூர்வமான புகார்களை மாநில அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அதன்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு முன்னர் R.C.S. ஒருவர் இருந்தார். அவருக்கு இந்த விஷயம் தெரியும். அவரும் நேரடியாகப் போய் inspection நடத்தி இருக்கிறார். inspectionக்கு போனவர், inspection நடத்திவிட்டு—அப்போது ஏதேதோ நடந்துவிடுகிறது; inspectionஐ நடத்திவிட்டு—வந்துவிடுகிறார். அவர் உண்மையிலே inspection செய்தாரா? அல்லது அதைச் செய்யாமல் இருப்பதற்கு ஏதாவது வேலை நடந்ததா என்றெல்லாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே, முன்னால் பொறுப்பில் இருந்த R.C.S. மீதும் விசாரணை வைக்க வேண்டும். அவருக்குத் தெரிந்துதான் இந்த விஷயங்கள் நடந்து இருக்கின்றன. இதிலே கொடுமை என்ன தெரியுமா? ஆண்டறிக்கையையே தவறான புள்ளிவிவரங்களோடு திட்டமிட்டுத் தயாரித்து இருக்கிறார்கள். எனவே, மாநில அரசை நான் கேட்டுக்கொள்கிறேன், நேர்மையான அதிகாரிகளை வைத்து தீவிர விசாரணை நடத்தி, இதற்கு யார் யார்—மேலே இருந்து கீழ்வரை; R.C.S.-லிருந்து கீழே வரை யார்—காரணமோ அவர்கள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு. ஆசிரியர் மற்றும் பிற துறை ஊழியர்களுக்கு எப்படி Fifth Pay Commission மற்றும் ஒரு நபர் குழு மூலம் ஊதியங்கள் உயர்த்தி வழங்கப்பட்டனவோ, அதுபோல இவர்களுக்கும் ஊதிய விகிதங்களை உயர்த்தி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில், அவைபற்றி அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதாவது, அமுதம் அங்காடியில் ஒருவிதமான சம்பளமும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் விநியோகம் செய்கிறவர்களுக்கு ஒருவிதமான சம்பள அளவும் இருப்பது நல்லதல்ல. ஆனால், அதற்காக இவர்களுக்கும் இதே அளவைக் கொடுக்க முடியும் என்று நான் வலியுறுத்தவில்லை; நியாயமான சில மாற்றங்களை நாம் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்குச் செய்ய வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு அவர்களுடைய சம்பளம் எதுவும் குறைவதில்லை; அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை; அவர்கள் எல்லாவகையான வசதிகளோடும் இருந்து கொள்கிறார்கள். ஆனால், பாதிக்கப்படுகிற அடிமட்ட ஊழியர்களை அவர்கள் பலியிடுகிறார்கள். எனவே, இந்த விஷயத்திலே நீங்கள் கவனத்தோடு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அரசுத் தரப்பில் ஒரு தவறு நடக்கிறது. *1989* ஆம் ஆண்டு ஒரு தொழிலாளி *2* ஆண்டுகளில் தொடர்ந்து *480* நாட்கள் வேலை செய்திருந்தால் அந்தத் தொழிலாளி நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று அரசு சட்டம் இயற்றி இருக்கிறது. அந்தச் சட்டத்தை அரசாங்கமே மீறிவிடுகிறது; இது விபரீதமாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நாம் போட்டிருக்கிற சட்டத்தை நாம் முதலில் honour செய்ய வேண்டும்; அப்போதுதான் மற்றவர்கள் honour செய்வார்கள். எனவே, தயவுசெய்து, இரண்டு ஆண்டுகளில் *480* நாட்கள் வேலை செய்கின்ற எல்லா ஊழியர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

T.N.C.S.C.யில் *85* பெண் தொழிலாளர்கள், பெண்கள் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பெண் தொழிலாளர்கள் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால்தான் நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். T.N.C.S.C.யில். வேறு காரணமே இல்லை. நெல்

[திரு. கே. சுப்பராயன்] [1999 ஏப்ரல் 15

கொள்முதல் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த 85 பெண்களும் பெண்கள் என்பதால் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்களைப் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று அவர்களுடைய பிரச்சினை குறித்து, அவர்களை நேரடியாக அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும் என்பதையும் நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறை நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரும் இருக்கிறார். நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தொடர்ந்து நாம் மானியத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த மானியத்தைக் குறைப்பதற்கும், அங்கே இலாபகரமான முறையில் சில தொழில்களை நடத்தினால் நம்முடைய மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்து அதிகபட்ச மானியத்தைக் கொடுப்பதைக் குறைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கையாக அது அமையும். எனவே, இலாபகரமாக அவை நடைபெறுவதற்கு மதுபானக் கடைகளைக் கட்டாயமாக—இந்த நஷ்டத்தில் இயங்குகிற அந்த கூட்டுறவுத் துறைகளை ஓரளவிற்கு உயர்த்துவதற்காக மதுபானக் கடைகளை—எல்லா இடங்களிலும் அவற்றிற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்திலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். நாங்கள் பேச நினைத்த கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கிட்டு அவர்களும், காந்தி அவர்களும் முழுமையாக இங்கே பேசியிருக்கிறார்கள். எனவே, இதிலே மேற்கொண்டு சொல்வதற்கு என்ன இருக்கிறது என்றே எனக்கு தெரியவில்லை. ஆனாலும் ஒரு சில கருத்துகளை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

உதாரணமாக, குடும்ப அட்டைகள் விநியோகம் செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கணிசமான அளவிற்குப் போலி அட்டைகள் இன்னும் நடைமுறையிலே இருக்கின்றன. இதுவரை 1 கோடியே 45 இலட்சம் அட்டைகளை நாம் வழங்கியிருக்கிறோம். மேலும் 15 இலட்சம் அட்டைகள் வழங்க வேண்டியிருக்கிறது. இந்தக் காலதாமதத்திற்கு காரணம் என்ன என்பதை நான் துறையிலிருந்து அறிய



1999 ஏப்ரல் 15] [திரு. ச. அழகிரி]

விரும்புகிறேன். அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு பேட்டியின்போது கிட்டத்தட்ட 2.5 இலட்சம் போலி அட்டைகள் இருப்பதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 600 ரூபாய் அளவிற்குப் பொருள்கள் வாங்குவதற்கான வாய்ப்பிருக்கிறது. 2.5 இலட்சம் போலி அட்டைகள் இருக்குமேயானால் மாதம் ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் அளவிற்கு அதிலே ஊழல் நடைபெற வாய்ப்பிருக்கிறது. எனவே, போலி அட்டைகளை எவ்வளவு விரைவில் நீக்க முடியுமோ, அந்த வகையில் அதற்கான ஏற்பட்டைச் செய்ய வேண்டும். ஆனால் துறையிலே என்ன செய்கிறார்கள் என்றால் ஒரு கடைக்கு 200 அட்டைகள் வீதம் நீங்கள் உடனடியாக நீக்க வேண்டுமென்று பொதுவான ஓர் உத்தரவு வழங்குவதன் மூலமாக, தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதிகளிலே அவர்கள் பகல் நேரங்களிலே வேலைக்குச் செல்கிறபோது, அவர்களுடைய வீட்டைச் சோதனையிட்டுப் பார்த்து 'ஆட்கள் இல்லை' என்று காரணம் காட்டி அந்த அட்டைகளை நீக்கி விடுகிறார்கள். இதனால் விவசாயக் கூலிகள், ஆலைத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். போலி அட்டை என்பது முழுக்க முழுக்க துறையின் மூலமாக விநியோகிக்கப்படுகிற ஒன்றுதானே தவிர, வேறு எந்த வகையிலும் போலி அட்டைகள் வருவதற்கான வாய்ப்பே கிடையாது. கீழ்நிலை அதிகாரிகள் அல்லது மேல் அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடுதான், இந்தப் போலி அட்டைகள் விநியோகத்தில் இருக்கின்றன. எனவே, துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அமைச்சர் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே மேலும் ஒரு பிரச்சினை இருக்கிறது. உதாரணமாக, வீடுகளுக்கு கதவிலக்கம் இடுவதிலே நாம் முறையாகக் கவனம் செலுத்தவில்லை. பல வீடுகளுக்கு இலக்கங்களே கிடையாது; கதவிலக்க எண் போடுவது கிடையாது. ஒரு வீட்டிலே 2 குடும்பங்கள் இருக்கின்றன என்றால், ஒரு குடித்தனத்தை மட்டும் ஆய்வு செய்கிறார்களே தவிர, வீட்டின் பின்புறம் உள்ள இன்னொரு குடித்தனத்திற்கு அவர்கள் இலக்கம் போடுவது கிடையாது. எனவே, இதைப்போன்ற நடைமுறைகளையும் அரசு சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, இந்தியா முழுவதும் பொதுவிநியோக முறையிலே நடைபெறுகின்ற தவறுகளை 'Tata Consultancy' நிறுவனத்தார் ஓர் ஆய்வு செய்திருக்கிறார்கள். எந்தெந்த மாநிலத்திலே பொது விநியோக முறையிலே எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று பார்க்கிறபோது, தமிழ்நாட்டிலே

மட்டும் 30 சதவீதம் அதிலே முறைகேடுகள் நடந்திருப்பதாக ஒரு தகவல் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

30 சதவீதம் என்று சொன்னால் ஏறக்குறைய 350-லிருந்து 400 கோடி ரூபாய் வரை பொருள்கள் விரயமாகின்றன அல்லது களவு போகின்றன, அல்லது ஊழல் நடைபெறுகின்றது என்றுதான் அந்த ஆய்வினுடைய அறிக்கையில் இருக்கிறது. எனவே, அதைப்பற்றிய விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். ஆனால், துறையின் மூலமாக அளிக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சரி என்பது எனக்குத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, விநியோகிக்கப்படுகிற பொருள்கள் 100 சதவீதம் வழங்கப்படுவதில்லை. துறையினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக 100 சதவீத பொருள்களை வழங்குவது கிடையாது. 80 சதவீதம்தான் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதனால் கிராமப்புறங்களில் இருக்கிற கடைகளில் பொருள்கள் விநியோகிக்கப்படுகிறபொழுது ஏழை மக்களுக்கு முழுமையாக அவை போய்ச் சேருவது கிடையாது. எனவே 100 சதவீதப் பொருட்களை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பழுப்பு நிற அரிசி, துறையின் மூலமாக ஏலம் விடப்பட்டிருக்கின்றது. 30 ஆயிரம் டன் பழுப்பு நிற அரிசி அல்லது நிறம் மாறிய அரிசி சென்ற ஆண்டு துறையின் மூலமாக ஏலம் விடப்பட்டிருக்கின்றது. அந்த அரிசியினுடைய உற்பத்திச் செலவு கிலோவிற்கு 10 ரூபாய். ஆனால் 5 ரூபாய்க்கும் குறைவாகத்தான் அவை ஏலம் போய் இருக்கின்றன. எனவே, இவை மூலமாக துறைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும். எனவே, தரமான அரிசியை உற்பத்தி செய்வதற்கு துறைக்கு நல்ல ஆலோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



ஒன்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். வயல்களிலே அருமையான நெல் விளைகிறது. அவை கிராமங்களிலே அரிசியாக மாற்றப்படுகிறபொழுது, நல்ல தூய்மையான, வெண்மையான, நறுமணமுள்ள அரிசியாக அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், அதே நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்து, நாற்றம் எடுக்கிற, பழுப்பு நிறமுள்ள, சகிக்கமுடியாத அளவிற்கு மோசமான அரிசியை நுகர்பொருள் வாணிபக் கழகம் உற்பத்தி செய்கிறது என்று சொன்னால் அந்தத் தொழில்நுட்பத்தை இந்த அதிகாரிகள் எங்கிருந்து கற்று வந்திருக்கிறார்கள் என்பதை அறிய நான் ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அனைத்தும் அறிவார்கள், ஆனால், ஏதோ வேண்டுமென்றே எங்களிடம் இருக்கிற ஆலைகளிலே அந்த நெல்லை அரைக்கிறபோது அதிலே நாற்றம் வந்துவிடுவதைப் போல அவர் பேசுவது வியப்பாக இருக்கிறது.

தமிழ்நாட்டிலே அளவுக்கு அதிகமாக மழை பெய்கிறபோது, குறுவை நெல் உற்பத்தியில் கடந்தகாலத்திலே, வியாபாரிகள் முழுமையாக வாங்கவில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை அரசாங்கம் வாங்கவேண்டும் என்று குரல் கொடுக்கிறீர்கள். அரசாங்கம் வாங்குகிறபோது ஊக்கத்தொகை தரவேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படி கொள்முதல் செய்த நெல்லை - ஒரே நேரத்திலே 8 இலட்சம் டன்களுக்கும் மேலாக குறுவையில் கொள்முதல் செய்கிறோம். ஆனால், நமக்கு இருக்கிற கொடவுன் வசதிகள், தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 6 இலட்சம்; Warehousing Corporation-க்கு 6 இலட்சம்; ஆக, 12 இலட்சம் டன்களுக்குத்தான் கொடவுன் வசதி இருக்கிறது. ஆனால் 90 நாட்களுக்குள்ளாக 8 இலட்சம் டன்களை மழைக்காலத்தில் கொள்முதல் செய்து, அதை விநியோகம் செய்கிறபொழுது, அந்த ஈர நெல்லை அரைக்கின்றபோது ஏற்படுகின்ற அந்த இழப்புதான் கருப்பு அரிசியாக வருகிறது. அந்தக் கருப்பு அரிசியைக்கூட மக்களுக்கு வழங்கக் கூடாது; அது வெளி இடத்திலே விற்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அது ஏலம் விடப்பட்டது. ஏலம் விட்டபோது, கடைகளில் விற்றால் மக்களுக்குத் தருகிறபோது 3¾ ரூபாய்; கருப்பு அரிசியை ஏலம் விடுகிறபோது 5 ரூபாய், 5½ ரூபாய் என்று ஏலம் விடப்பட்டிருக்கிறது. அதுதான் கருப்பு அரிசியே தவிர, வேறொன்றுமில்லை. தனியார்கள் வாங்குகிறபொழுது நல்ல நெல்லை மட்டுமே வாங்குகிறார்கள்; தரமான நெல்லை வாங்குகிறார்கள். 10 ரூபாய்,

20 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால், விவசாயிகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கிறபோது, அதிலே எல்லா நெல்லையும் ஒன்றாகக் கலந்து, இருக்கிறதை அப்படியே அள்ளி கட்டிக் கொண்டு வந்து விற்கிறார்கள். அதுதான் தரத்திலே ஏற்படுகிற வேறுபாடு. அதுதானே தவிர, வேறொன்றும் இல்லை. ஏற்கெனவே விற்கப்பட்ட அரிசி, கருப்பு அரிசியை மக்களுக்குத் தரக்கூடாது என்று முதலமைச்சர் சொல்லி அது வெளியிலே ஏலம் விடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்வதிலே ஓர் உண்மை இருக்கிறது. ஆனால், அதுமட்டுமே முழுமையான உண்மை அல்ல. அது உங்களுடைய துறை உங்களுக்குச் சொல்லியிருக்கிற ஒரு பகுதி உண்மைதான் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். குறுவை '98-ல் நீங்கள் கொள்முதல் செய்திருக்கிற மொத்த நெல் 44,550 டன்கள்தான் என்று உங்களுடைய அறிக்கையிலே கொடுத்திருக்கிறீர்கள். பக்கம் 41-ல் குறுவை '98-ல் 44,550 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே, 44,550• டன்கள் வீணாகப் போன நெல் என்று வைத்துக்கொண்டாலும் . . . .

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஏகபோகக் கொள்முதல் 9,77,426 டன்கள். 1997 குறுவை Parallel Procurement - அதாவது இணைக் கொள்முதல் மூலமாக 7,04,766 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் கொடுத்திருப்பதை வைத்துதான் நான் பேசுகிறேன். குறுவை '98-ல் 44,550 டன்கள்தான். அவ்வளவுதான் குறுவையிலே நீங்கள் கொள்முதல் செய்ய முடியும்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** கருப்பு அரிசி என்பது ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட ஈர நெல்தான். 1998-லே கொள்முதல் செய்யப்பட்ட, இணைக் கொள்முதலில் வந்த குறுவை நெல் அல்ல அது.



*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. ச. அழகிரி:** அதற்கு இன்னொரு காரணம், நாம் இரண்டு முறை, அதாவது நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே இருக்கிற அரைவை ஆலைகள், அரிசியினுடைய அளவு அதிகமாக வரவேண்டும் என்பதற்காக நெல்லை இரண்டு முறை ஊற வைக்கிறார்கள். இரண்டு முறை ஊற வைக்கின்ற காரணத்தாலே அவை மோசமாக நாற்றம் அடிக்கின்றன. உதாரணமாக, ஒரு முறை அந்த நெல்லை ஊற வைத்தால் 100 கிலோவிற்கு 60 கிலோ அரிசி கிடைக்கும். நீங்கள் இரண்டு முறை ஊற வைக்கின்ற காரணத்தால் 68 கிலோ கிடைக்கிறது. அந்த 8 கிலோ அரிசிக்காக அரசாங்கம் ஆசைப்பட்டு, ஏறக்குறைய 20, 30 இலட்சம் ஏழை மக்கள் நாற்றம் எடுத்த அரிசியை உண்ண வேண்டுமென்ற ஒரு கோட்பாட்டை வைத்திருப்பது நியாயம்தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். கலைஞர் அரசு இதில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். பல்வேறு மாற்றங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். சாதாரண ஏழை மக்கள் இரண்டு ரூபாய் கொடுத்து அந்த அரிசியை வாங்கி அந்த உணவை உண்ண முடியுமா? எனவே, அந்த 8 கிலோ அரிசியை நாம் இழந்தால் தவறில்லை. எனவே, ஒரு முறை வேக வைத்து அல்லது ஒரு முறை ஊறவைத்து, அதிலிருந்து எடுக்கின்ற அந்த 60 கிலோ அரிசியை நீங்கள் கொடுப்பீர்களானால், நல்ல நறுமணம் உள்ள, வெள்ளையான, தூய்மையான அரிசியை வழங்க முடியும். குறுவையில், மழைக்காலத்தில் நெல் கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தால் கருப்பரிசி வருகிறது என்பது ஒரு உண்மை. ஆனால் அது மட்டுமே முழு உண்மை அல்ல. நாற்றம் எடுக்கின்ற அரிசிக்குக் காரணம், இருமுறை அதனை ஊறவைப்பதுதான் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்ததாக, நாம் விவசாயத் துறையிலே தன்னிறைவு அடைந்து இருப்பதாக ஒவ்வொரு முறையும் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், கணக்குப் பார்க்கிறபோது ஆண்டொன்றுக்கு சராசரியாக இரண்டு இலட்சத்திலிருந்து 3 இலட்சம் டன்கள் வரை அரிசியை ஆந்திராவிலிருந்தோ அல்லது பஞ்சாபிலிருந்தோ நாம் விலைக்கு வாங்குகிறோம். ஏன், அரசாங்கம் கவனம் செலுத்தி தமிழகத்திலேயே உணவு உற்பத்தியிலே தன்னிறைவை அடையக்கூடாது என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெளி மாநிலங்களிலிருந்து நாம் அரிசியை வாங்குகின்றபோது தரமான அரிசியும் கிடைப்பதில்லை, விலையும் சற்று கூடுதலாக இருக்கிறது, அதிலே ஊழல் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

V211,31'N99 N99.722 221194

எனவே, அரசாங்கம் வருங்காலங்களிலே உணவு உற்பத்தியிலே தன்னிறைவை அடையவேண்டும், அதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேமிப்புக் கிடங்குகளிலே முறையான, விஞ்ஞானபூர்வமான சேமிப்பு முறை இல்லாத காரணத்தால் 7 முதல் 16 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட இழப்பு என்பது 2 சதவீதம்தான். ஆனால், இன்றைக்கு 7 முதல் 16 சதவீதம் வரை பல்வேறு உணவுக் கழகங்களிலே, உணவு குடோன்களிலே இழப்பு ஏற்படுவதை அரசாங்கம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

அதேபோல மண்ணெண்ணெய் வழங்கப்படுவதைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களுக்கு 3 லிட்டர்கள்தான் வழங்குகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை சொன்னார்கள். நகர்ப்புறங்களில் விறகு கிடையாது. கிராமப்புறங்களில் விறகு இருக்கின்ற காரணத்தால் 3 லிட்டர் வழங்குகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு கிராமப்புறங்களிலும் விறகு கிடைப்பதில்லை. நகர்ப்புறங்களுக்கு ஒரு நீதி என்றும், கிராமப்புறங்களுக்கு ஒரு நீதி என்றும் அரசாங்கமே வழிவகை செய்யக்கூடாது, பிரித்துப் பார்க்கக் கூடாது. எனவே, கிராமப்புறங்களுக்கும் 5 லிட்டர்கள் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு ரூபாய் விலையிலான அரிசி கடந்த 3 மாதங்களாக வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய 3 மாதங்களில் இரண்டு ரூபாய் விலையிலான 3 கிலோ அரிசி பெரும்பாலான நியாயவிலைக் கடைகளில் கிடைக்கவில்லை. இதுபற்றி ஏராளமான புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எங்களுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. ஜி.கே.எம். அவர்கள் கிராமச் சுற்றுப் பயணம் சென்றபோது பல்வேறு கிராமங்களில் இதற்கான புகார் மனுக்களை அளித்தார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல கிராமப்புறங்களுக்கு புழுங்கல் அரிசி தேவைப்படுகிறது. அங்கே இருக்கிற மக்கள் பச்சை அரிசியை விரும்புவது கிடையாது. ஆனால், நீங்கள் கிராமப்புறங்களுக்கு பச்சை அரிசியைத்தான் அனுப்புகிறீர்கள். புழுங்கல் அரிசி கிடைப்பதில்லை. உதாரணமாக, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் புழுங்கல் அரிசி இல்லாமல் பல்வேறு



கடைகளில் பச்சை அரிசிதான் வழங்கப்பட்டுள்ளது. அதையும் மாற்றிட வேண்டுமென்று நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குச் சில சலுகைகளை அளிக்கலாம். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கும் இரண்டு ரூபாய் விலைக்கான மூன்று கிலோ அரிசியை வழங்குகிறோம். வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களுக்கும் அதனையே வழங்குகிறோம். அதனை மாற்றி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு 10 கிலோ அரிசி தரவேண்டுமென்று இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இதிலே நடைபெறுகிற ஊழல்களை ஓரளவிற்குக் களைய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள்

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். உதாரணமாக, பொது விநியோகக் கடையிலே 365 ரூபாய்க்கு ஒரு மூட்டை அரிசியைத் திருட்டுத்தனமாக வாங்க முடிகிறது. இதனை வாங்கி பாலிஷ் செய்து ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறார்கள். இது பெரும் அளவிலே, அமைப்பு ரீதியாக நடைபெறுகிறது. டாட்டா கன்சல்டன்சியினுடைய அறிக்கையின் பிரகாரம், ஒரு அமைப்பு ரீதியாக இவர்கள் இயங்குகிறார்கள். அப்படி இயங்குகிறபோது, ஒரு மூட்டையை 365 ரூபாய்க்கு வாங்கி ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால், ஏன் அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி அவர்களைக் கைது செய்யவில்லை; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பாமாலின் ஆயில். வெளி மார்க்கெட்டிலே 30 ரூபாய்க்கு பாமாலின் ஆயில் கிடைக்கிறது. எஸ்.வி.எஸ். பிராண்ட் ஆயில். ஆனால், நம்முடைய பொது அங்காடிகளிலே ரூ. 34.50. ரூ. 4.50 அதிகமாக இருந்தால் பொதுமக்கள் எப்படி வாங்குவார்கள்? என்ன காரணத்தினால் இவ்வளவு பாமாலின் ஆயில் வாங்கிச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல, சமீப காலங்களிலே ரேஷன் கடைகளிலே பொருட்களுடைய விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆரணி அருகே

வடுகசாத்து என்ற கிராமத்திலே 7.00 ரூபாய் என்று கோதுமை விற்கப்பட்டிருக்கிறது. சென்னை, திருவல்லிக்கேணி அமுதம் அங்காடியில் 7.00 ரூபாய்க்கு கோதுமை விற்கப்பட்டிருக்கிறது. சர்க்கரையினுடைய பழைய விலை ரூ. 11.40. ஆனால், ரேஷன் கடைகளிலே 12.00 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மைதா, ரவை, இதற்கான இரசீதுகளெல்லாம் தரப்பட்டிருக்கின்றன. அந்த இரசீதுகள் என்னிடம் இருக்கின்றன. எனவே, அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தி, என்ன காரணத்திற்காக நாம் அறிவிக்கப்பட்ட விலையைவிட ரேஷன் கடைகளிலே அதிகமான விலைக்கு விற்கிறார்கள் என்பதனை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொள்ளாச்சியிலே சமீபத்திலே, மூன்று மாதமாக பொது விநியோக முறையிலே கிடங்குகளிலிருந்து அனுப்பப்பட்ட அரிசி முறையாகச் சென்றிருக்கிறதா என்று ஆய்வு செய்தபோது, மூன்று மாத காலத்தில் மட்டும் ஆயிரம் மூட்டைகள் திருடுபோயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நவம்பர் 1998 முதல் ஜனவரி 1999 வரை துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, ஆயிரம் மூட்டை அரிசி மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இன்னும் கொஞ்சம் கடந்த காலத்திற்குச் சென்று, 1996 முதல் 1998 வரை ஆய்வு செய்வோமேயானால், ஏறக்குறைய ஒரு இலட்சம் அளவிற்கு அரிசி மூட்டைகள் களவாடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படும். எனவே, அரசாங்கம் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ரெட்ஹில்ஸ் பகுதியில் செம்புலிவலம்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள் என்று சொல்லி 3 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, செம்புலிவலத்தில் 95 மூட்டைகள் திருடு போயிருக்கின்றன. எனவே, இதுபோன்ற விஷயங்களில் துறை சார்ந்த அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

லாரிகளிலிருந்து கிடங்குகளுக்கு வருகின்ற பொருட்கள் குறைவான அளவுகளிலே வருகின்றன. அங்கே கிடங்குகளிலே இருக்கின்ற அதிகாரிகள்



இரசீதில் என்ன போடப்பட்டிருக்கிறதோ அதனைப் பெற்றுக்கொண்டு, அதே அளவிற்கு இரசீது தர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. 90 கிலோ வந்தால் 100 கிலோ என்று இரசீது போடவேண்டிய ஒரு அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. இப்பொழுதெல்லாம் விஞ்ஞானத்தில் பல கம்ப்யூட்டர் தராசுகள் வந்திருக்கின்றன. எனவே, பொருட்களை வெளியே அனுப்புகிறபோது, கம்ப்யூட்டர் தராசுகளிலே எடைபோட்டு, 100 கிலோ என்றால் 100 கிலோ, 90 கிலோ என்றால் 90 கிலோ என்று சரியாக எடைபோட்டு அனுப்பினால், கிராமப்புறங்களிலே இருக்கிற கடைகளில் எடைக்குறைவு ஏற்படாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கூட்டுறவு விவசாய வங்கிகளிலே நகைக் கடனுக்கு 16 சதவீதம் வட்டி வாங்குகிறார்கள். இதற்கு என்ன கூட்டுறவு என்று பெயர்? ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே விவசாயக் கடன் என்றால் 12 சதவீதம். ஆனால், கூட்டுறவு வங்கிகளில் மட்டும் 16 சதவீதம் என்று சொன்னால் கிராமப்புற விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் என்ன நன்மை செய்திருப்பதாக நாம் கருதமுடியும்? எனவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைப் போலவே கூட்டுறவு வங்கிகளிலும் நகைக் கடனுக்கு 12 சதவீத வட்டியை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் 11 அம்ச கோரிக்கையை.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் நல்ல சிறந்த பேச்சாளர். ஆனால், பேரவைத் தலைவர் நேரத்தைச் சொன்னால் அதற்குள் உங்கள் கருத்தைச் சொல்கிறமாதிரி நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** 11 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி 17-12-1998-லே அவர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கினார்கள். அது ஒரு முறையான வேலை நிறுத்தம். தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற ஒரு தத்துவம் அது. ஆனால், அந்த ஊழியர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டபோது அவர்கள் வேலை நிறுத்தம் செய்யும் காலத்திற்கு சம்பளம் தர வேண்டிய அவசியம் இல்லை

[திரு. ச. அழகிரி] [1999 ஏப்ரல் 15

என்று சட்டமும் இருக்கிறது. அதனையும் அந்தத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அதனையும் மீறி துறையைச் சார்ந்த அதிகாரிகள் அந்த ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுப்பதும், அவர்களை வேறு ஊர்களுக்கு மாற்றுவதும் நியாயம் இல்லை என்பதனையும், 1974 ஆம் ஆண்டினுடைய தொழில் சட்டத்திற்கு அது புறம்பானது என்பதனையும் அந்தத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய முதலாளித்துவ மனப்பான்மைக்கு அதைவிட ஒரு சிறந்த சான்று இருக்கமுடியாது என்பதையும் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்பு—தொடர்ச்சி

### உறுப்பினர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உணவருந்த போகிறபோது மற்றவர்களும் போகிறார்கள் என்று அதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். பத்திரிகை நிருபர்கள் கேன்டீனுக்குப் போகும்போது யாரும் தடுக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பதிலுரை.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் சார்பாக நான்காவது முறையாக இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கைக்குப் பதில் அளிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அன்புத் தலைவரை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன்.



1999 ஏப்ரல் 15] [திரு. கா.நா. நேரு]

13-5-1996 அன்று முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கையிலே இருந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய இருப்பு 2.5 இலட்சம் டன்கள். ஆனால், தேர்தலிலே வெற்றிபெற வேண்டுமென்பதற்காக எந்த ஒதுக்கீடும் இல்லாமல், கையிலே அரிசி இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி பார்க்காமல், 3 மாத காலத்திற்கு முன்பு 12 கிலோ என்பதை 20 கிலோ என்று உயர்த்திய காரணத்தால், ஒவ்வொரு மாதமும் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக 2 இலட்சத்து 20 ஆயிரம் டன்களை வழங்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் வெறும் 2½ இலட்சம் டன் அரிசியை வைத்துக்கொண்டு, தொடர்ந்து அதை வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் சொல்லி, நல்ல பல அறிவுரைகளை வழங்கிய காரணத்தினால், இன்றளவும் இல்லை என்று சொல்லாத அளவுக்கு இந்த நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசியை வழங்கிக் கொண்டு வருகிறது. அதிலே ஒவ்வொரு மாதமும் அரிசி நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 2 இலட்சம் டன்கள் வழங்கப்படுகிறது கோதுமை 30,000 டன்கள் வழங்கப்படுகிறது. சர்க்கரை 28,000 டன்கள் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய் 77 ஆயிரம் கிலோ லிட்டரிலிருந்து 82 ஆயிரம் கிலோ லிட்டர்வரை மத்திய அரசின் ஒதுக்கீட்டிற்குத் தகுந்தபடி வழங்கப்பட்டு வருகிறது. இதிலே மாதம் 2 இலட்சம் டன் அரிசி வழங்குகிறபோது மத்தியத் தொகுப்பிலிருந்து நமக்குத் தருகிற அளவு 84 ஆயிரம் டன்கள்தான். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரடியாக டெல்லி சென்றிருந்தபோது தந்த வேண்டுகோளை ஏற்று இப்போது ஒரு இலட்சத்து 9 ஆயிரம் டன்கள் அரிசி மாதந்தோறும் மத்திய ஒதுக்கீட்டிலிருந்து வருகிறது. நமது மாநிலத் தொகுப்பிலிருந்து மாதந்தோறும் கிட்டத்தட்ட 90 ஆயிரம் டன்னிலிருந்து 1 இலட்சம் டன்வரை நாம் வழங்க வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். மற்ற பொருட்கள் கோதுமை, அதேபோல சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்றவற்றிலே எல்லாம் மத்திய அரசின் ஒதுக்கீடு பிரகாரமே நாம் இங்கே வழங்கிக் கொண்டு வருகிறோம். இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் 10, 11 பேர் இங்கே தெரிவித்து இருக்கிறீர்கள். உங்களுடைய நல்ல கருத்துக்களை, என்னுடைய துறைக்கு உரமாக எடுத்துக்கொண்டு வருங்காலத்திலே இந்தக் குறைகள்கூட இல்லாத அளவிற்கு நாங்கள் சிறப்பாகச் செயல்படுவோம் என்ற உறுதியை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கிருக்கின்ற பல்வேறு பணிகளுக்கிடையே எங்களுடைய துறை அதிகாரிகளை 100-க்கும் மேற்பட்ட முறை அழைத்துப் பேசி அவர் தந்த அறிவுரையின் காரணமாகத்தான்

தொடர்ந்து இந்தத் துறை ஓரளவிற்கு நல்லமுறையிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதிலே பல நடவடிக்கைகளை எடுக்கச் சொன்னார்கள். முதலிலே ஆங்காங்கே நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்தித் தரவேண்டும்; ஏனென்றால் வேலைக்குச் செல்கின்ற விவசாயிகள், தாய்மார்கள் வருகின்ற நேரத்திலே அருகிலேயே பொருட்களை வாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அப்படிச் சொன்னார்கள்.

*பிற்பகல் 1-10*

ஒருகாலத்திலே, ரேஷன் கடைகள் திறக்க வேண்டுமென்றால், அரசாங்கம்வரை வந்து தாமதப்படுத்தியதை உணர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அந்த அதிகாரத்தைத் தந்து, 23,275 ரேஷன் கடைகள் இருந்ததை, இன்றைக்கு 26 ஆயிரம் கடைகளாக மாற்றி, அதிகப்படுத்தித் தந்ததன் காரணமாக, இன்றைக்குப் பல கிராமங்களிலே, ஏழைத் தாய்மார்கள் உடனடியாகப் பொருள்களை வாங்கக்கூடிய திட்டத்தை முதலமைச்சர் தந்தார்கள். ஒருகாலத்திலே அரிசி தரப்பட வேண்டுமென்றால், 3 ஆம் தேதியிலிருந்து 16 ஆம் தேதிவரை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இப்போது 9 ஆம் தேதிக்குள்ளாக மாவட்ட வழங்கல் அலுவலர் அந்த ஒதுக்கீட்டைத் தரவேண்டும். 26 ஆம் தேதியிலிருந்து 1 ஆம் தேதிக்குள்ளாக 65 சதவிகிதத்தை ஒதுக்கீடு பெறும் முன்பே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள்கள் 15 ஆம் தேதிக்குள் முழுமையாக எடுத்து மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தைத் தந்து, இப்போது அதுபோல பொருள்கள் சென்றுகொண்டிருக்கின்றன.

பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரிசி கருப்பாக இருக்கிறது; சில இடங்களிலே அளவு குறைவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே 26 ஆயிரம் கடைகளில், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பணியாளர்களை வைத்துக் கொண்டு, நானூறுக்கும் மேற்பட்ட இடங்களில் தினமும் 5 ஆயிரம் வண்டிகளில் இந்தப் பணி தொடர்ந்து விடுமுறை நாட்களைத் தவிர, மற்ற நாட்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துறையினுடைய அதிகாரிகள் — பல துறைகளினுடைய அதிகாரிகள் — ஆய்வு செய்தபோதும், சில சில இடங்களிலே தவறு நடைபெறத்தான் செய்கிறது. அதைத் தொடர்ந்து நடவடிக்கையின் மூலமாகக் களைந்து கொண்டிருக்கிறோம். தொடர்ந்து இன்னமும் எங்களுடைய நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.



இப்படி வழங்கப்படுகிற பொருள்கள், ஓரளவுக்கு கிராமப்புறங்களிலே சிறப்பாக வழங்கப்படுகிறதா என்பதை நாங்களும் பல இடங்களிலே விசாரித்து வருகிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எங்களுடைய துறையின் செயலாளர் அவர்களும், கடந்த வாரம் ஒருநாள் திருச்சியிலிருந்து சென்னைக்கு வருகின்றபோது, எங்களுடைய துறையினுடைய செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துப் பேசியபோது, உங்களுடைய துறை, அந்தக் காலத்தில் இருந்ததைப்போல இல்லாமல், இப்போது சிறப்பாக இருக்கிறது; அதற்கு என்னுடைய பாராட்டுதல்கள் என்று சொன்னார்கள். அதுவே எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன்.

அதேபோல், மனுக்கள் குழு; சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மனுக்கள் குழு, நேரடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, நம்முடைய மாண்புமிகு கொறடா திரு. முபாரக் அவர்களுடைய தலைமையிலே, பல கட்சி உறுப்பினர்களுடைய குழு சென்று, மனுக்களை ஆராய்ந்தபோது, அங்கே ஒரு பெண் வருகிறார். இங்கே 'கொடவுன்'களில் வழங்கப்படுகிற அரிசி 94 கிலோதான் இருக்கிறது; இதை உடனடியாக நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்கிறார். உடனடியாக திரு. முபாரக் அவர்களும், அரசு அதிகாரிகளும், அங்கே இருக்கின்ற எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் கொடவுனுக்குச் சென்று எடை போட்டுப் பார்த்தபோது, 100 கிலோ 800 கிராம் இருந்திருக்கிறது. உடனடியாக அந்தப் பெண் சொன்னார், இது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடைய தராசு; இது பொய்யாக இருக்கும்; அதை வெளியிலே எடுத்துக் கொண்டு வந்து எடைபோட வேண்டும் என்று சொல்கிறார். வெளியிலே வந்து எடைபோட்டபோதும் அது 100 கிலோ 800 கிராம் இருந்தது. இதில் அரிசியினுடைய எடை 100 கிலோ, சாக்கினுடைய எடை 800 கிராம். சாக்கினுடைய எடை 1 கிலோ இருந்திருக்க வேண்டும். 800 கிராம் என்பது, இரண்டு முறை அந்தச் சாக்கைப பயன்படுத்தியதால், 100 கிராம் அல்லது 200 கிராம் வித்தியாசம் வருகிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம், நாங்கள் செய்கின்ற பணி, எங்களுக்கே ஓரளவுக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்கின்ற அந்தச் செயலைத்தான் நான் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது மாதம் 2 இலட்சம் டன் அரிசியை நாம் தொடர்ந்து வழங்குவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னார்கள்; விவசாயத்திலே தன்னிறைவு பெற்றிருக்கிறோம்; ஏன்

வெளி மாநிலங்களிலே அரிசியை வாங்க வேண்டும் என்று சொன்னார். அந்தக் காலகட்டம் அதைப்போல. நாம் 13-5-1996-லே பொறுப்பு ஏற்கிறோம். கையிலே இருப்பு 2½ இலட்சம் டன். அந்த 2½ இலட்சம் டன் என்று இருக்கிற அந்த அரிசியை இருக்கின்ற 20 ஆயிரம் அல்லது 25 ஆயிரம் கடைகளுக்கு முறையாக வழங்க வேண்டுமென்றால், 5 இலட்சம் டன் என்ற அளவு இருந்தால்தான் முறையாக அதை வழங்க முடியும். ஏனென்றால் ஓரிடத்தில் 800 டன் இருக்கும். ஓர் இடத்திலே 200 டன் இருக்கும். தேவைக்குத் தகுந்தாற்போல் மாறி மாறி அனுப்புவதற்கேற்ப 5 இலட்சம் டன்களாவது இருக்க வேண்டும். உடனடியாக இதிலே எந்தவிதமான கெட்ட பெயரும் வரக்கூடாது என்பதற்காக ஆந்திர மாநிலத்திலே ஒரே ஒரு முறை 3 இலட்சம் டன் அரிசியை நாங்கள் வாங்கினோம். அப்படி ஆந்திர மாநிலத்திலே இருந்து வாங்கப்பட்டபோதுகூட, இதுவரை நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இல்லாத அளவுக்கு 1,100 டன் — 3 இலட்சம் டன்னுக்கு 1,100 டன் excess-ஆக அரிசியை வாங்கித் தந்திருக்கிறோம். அதிலே தவறு ஏதும் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை. அதையும் நுகர் பொருள் வாணிபக் கழகத்திலே நாங்கள் வரவு வைத்திருக்கிறோம்.

முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், 1972 ஆம் ஆண்டு நுகர் பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டது. இதிலே ஒவ்வோராண்டும் அரசு அறிவித்திருக்கிற பட்ஜெட்டுக்கு அதிகமாகத்தான் பணம் வழங்கியிருப்பதாகச் சரித்திரமே தவிர, குறைத்து வழங்கியதாகச் சரித்திரமே இல்லை. ஆயிரம் கோடி என்று ஒதுக்கினால், 1,050 கோடி, 1,100 கோடி என்று இருக்கும். முதலமைச்சர் ஒவ்வொரு முறையும் உணவுத் துறையிலே கவனமாக எங்களுக்கு வழிகாட்டியதன் காரணத்தினால், 1972-லேயிருந்து இதுவரை 25 ஆண்டு காலத்திலே 800 கோடிக்கும் அதிகமாகப் பெற்றிருந்ததை இந்த ஒரே ஆண்டில் நாம் 500 கோடியை அரசாங்கத்திற்குத் திருப்பித் தந்திருக்கிறோம்.

பிற்பகல் 1-15

அந்த நேர்மையான செயல்பாட்டின் காரணமாக, நாம் வெளி மாநிலங்களில் வாங்கக்கூடாது, நாம் ஏகபோகக் கொள்முதல் திட்டத்தை உண்டாக்க வேண்டும் என்று சொன்னபோது, நெல் வாங்கும்போது விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையை வழங்கினார்கள். அப்படி 35 ரூபாய் ஊக்கத் தொகையைத் தந்து முதல் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டது. அப்போது மீண்டும் விவசாயிகள் கேட்டார்கள், எங்களுக்கு ஊக்கத்



தொகையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். அப்போதும் 50 ரூபாயாக ஊக்கத் தொகையினை உயர்த்தித் தந்து, இந்த ஆண்டு 10 இலட்சத்து 10 ஆயிரம் டன் இதுவரை, அதாவது இந்த ஆண்டு 50 ரூபாய் ஊக்கத் தொகை விவசாயிகளுக்குத் தந்து வாங்கப்பட்டிருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாய் என்றால், 10 இலட்சத்து 10 ஆயிரம் டன்னுக்கு 50 கோடியே 50 இலட்சம் ரூபாயை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக மட்டும், இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதை நான் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெல்லைப் பற்றிச் சொன்னார்கள், சரியான நெல்லாக அரைக்க வேண்டும் என்று. ஒரு காலத்திலே கிராமப்புறங்களில் பச்சரிசி வழங்கியது உண்மைதான். இப்போது மத்திய தொகுப்பிலேயிருந்து வருவதைத் தவிர, மாநில அரசு அரைக்கின்ற அத்தனை அரிசியுமே, புழுங்கல் அரிசியாகத்தான் அரைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு புழுங்கல் அரிசியாகத்தான் வழங்கப்படுகிறது. சென்னை மற்றும் தர்மபுரி மாவட்டங்களைத் தவிர, மற்ற இடங்களிலே அவர்களுக்குத் தேவையான புழுங்கல் அரிசியை நாங்கள் வழங்கிக்கொண்டு வருகிறோம். அப்படி அரிசி வழங்குகின்றபோது - இங்கே தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்திற்கு 23 இடங்களிலே அரிசி ஆலைகள் இருக்கின்றன. ஒரு காலத்திலே அந்த நுகர்வோர் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலைகள், அதனுடைய குறியீட்டிலே 50 சதவீதத்தை அரைத்தாலே பெரிய காரியமாக இருந்தது. இந்த ஆட்சி ஏற்பட்ட மூன்று ஆண்டு காலத்திலே அந்த மில்களைச் சரியான முறையிலே பராமரித்த காரணத்தினால், கிட்டத்தட்ட 80 சதவீதம் அளவிற்கு அத்தனை மில்களிலும் அரைக்கக்கூடிய அளவிற்கு நாங்கள், அந்த மில்களினுடைய தரத்தை உயர்த்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் அதிலே குறைபாடுகள் இருக்குமேயானால், அவற்றைக் களைவதற்கும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறோம்.

குடும்ப அட்டைகளைப் பற்றி இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே தமிழ்நாட்டில் 1 கோடியே 49 இலட்சம் குடும்ப அட்டைகள் இருந்தன. அதிலே போலி அட்டைகள் என்று வருகின்றபோது, கிட்டத்தட்ட 15 இலட்சம் போலி அட்டைகள் இருக்கும் என்று கணக்கிடப்பட்டது. புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையும் படத்துடன் கூடிய அடையாள அட்டையாக வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அது மூன்று கலர்களாக

வழங்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. பிறகு அது இரண்டு கலர்களாக இருக்கலாம் என்று சொல்லி, வறுமைக் கோட்டிற்குக் கீழே என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே என்றும் உயர்தர வகுப்பினர் என்றும் மூன்று பகுதிகளாக இருந்ததை மாற்றி வறுமைக் கோட்டிற்குக் கீழே என்றும் அதற்கு மேலே என்றும் பிரித்தார்கள். அப்படிப் பிரித்தபோது, தமிழ்நாட்டிலே மொத்தமாக புதிய அட்டை வேண்டுமென்று எங்களுக்கு வந்த மனுக்களினுடைய எண்ணிக்கை 1 கோடியே 54 இலட்சத்து 65 ஆயிரத்து 397 ஆகும். அவை ஆய்வு செய்யப்பட்டன. அதிலே ஆய்வு செய்யப்பட்டு முதல் கட்டமாக அட்டைகள் வழங்கப்பட்டது 1 கோடியே 41 இலட்சத்து 19 ஆயிரத்து 678 அட்டைகள். ஆனால், மீண்டும் புதிய அட்டைகள் வேண்டுமென்று எங்களுக்கு வந்த மனுக்களினுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 23 இலட்சத்து 54 ஆயிரத்து 916 அட்டைகள் புதிதாக வேண்டுமென்று வந்தன. அவைகளும் ஆய்வு செய்யப்பட்டன. அதிலேயும் 8 இலட்சத்து 94 ஆயிரத்து 921 அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பழைய அட்டை இருக்கிறது, புதிய அட்டை கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். தினந்தோறும் இந்தப் பணிகள் செய்யப்பட்டும்கூட, ஒரு மாவட்டத்திற்கு 100 முதல் 200 அட்டைகள் வேண்டுமென்று தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பவானி தொகுதியிலே, உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன பிறகு ஆணையர் அவர்கள் நேற்றைக்கு விசாரித்திருக்கிறார்கள்.

மேலும், இங்கு மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு 46,000 அட்டைகளை நிறுத்தி விட்டார்கள் என்று. அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி உண்மையாக அட்டைகள் கொடுக்கப்பட வேண்டுமானால் நிச்சயமாக அந்த அட்டைகளை எல்லாம் இந்த அரசு வழங்கும்.

இங்கு எதிரே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னார்கள்; என்னுடைய தெருவிலே 200 வீடுகள் இருக்கின்றன; ஒரே வீட்டிலே 7 பேர் இருக்கிறார்கள், அதில் ஒருவருக்கு மட்டும் திருமணம் நடந்திருக்கிறது. ஆனால், அவர்கள் 7 அட்டைகளை வைத்திருக்கிறார்கள் என்றும், அதை நீங்கள் வந்து கண்டுபிடியுங்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். இப்படி சிலசில அதிகாரிகள் செய்கின்ற தவறினால் இப்போதும் போலி அட்டைகள் தொடர்ந்து வந்து



கொண்டிருக்கின்றன. அதையும் கண்டுபிடிக்கும் வகையில் பணிகளை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம். மேலும் சொன்னார்கள், அரிசியைக் கடத்துகிறார்கள், உங்களுக்கு எதற்கு செக்-போஸ்ட் என்று சொன்னார்கள். அது குறித்தும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். 1972 ஆம் ஆண்டு தரப்பட்ட கோட்டா கார்டு சிஸ்டம்படி, கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் தினமும் 10 குவிண்டால் அரிசியை -கேரளாவிற்குக் கொண்டு செல்லலாம் என்றிருந்த அந்த சிஸ்டத்தை முழுமையாக இப்போது ஒழித்திருக்கிறோம். அதிலே நடவடிக்கை இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. அதுபோல நமது தமிழ்நாடு எல்லையிலே கிடங்குகள் இருக்கின்றன. அங்கிருந்து ஒரு அடி எட்டினால் கேரளா வரும். அந்தக் கிடங்குகளில் 4,000, 5,000 மூட்டைகள் என்று அரிசியை வைத்துக்கொண்டு ஹோல்சேல் வியாபாரத்தை லைசன்ஸ் பெற்றுக்கொண்டு கடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அது குறித்தும் 4 பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தொடர்ந்து அந்த மாதிரியான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

அடுத்து, நியாய விலைக் கடைகள் புதிதாக நாம் திறந்தாலும் அதற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நிதிச்சுமை காரணமாக இன்றைக்கு ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட் மூலம், ஊரகத் தொழில் துறை மூலமாக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திலே கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 4,500 கடைகள் புதியதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 2,000 கடைகளை நம்முடைய முதலமைச்சர் கட்டித்தரச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். கடையும் அங்கு திறக்கப்பட்டிருக்கிறது. குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 1-20

தொடர்ந்து இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், சில சில இடங்களிலே சில பிரச்சினைகள். ஊழியர் பிரச்சினை என்று சொன்னார்கள். ஒரு பக்கம் ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் அதிகச் சுமை இருக்கின்ற காரணத்தால் சங்கங்கள் நலிந்து போகின்றன என்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் செயலாளர்கள் தவறு செய்கிறார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு பக்கம் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும், உடனடியாக அவர்களுக்குக் கடன் வழங்குகிற அதிகாரத்தைத் தர வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், மறுபக்கம் பார்த்தால், அதிகாரிகளுக்கு மாறாக

இந்த இடத்தில் தலைவர்கள் தவறாக நடந்த காரணத்தால் இந்தச் சங்கங்கள் பழுதுபட்டிருக்கின்றன, மோசமாகி விட்டன, இதைக் கண்டிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நல்லதும் நடக்கிறது, கெட்டதும் நடக்கிறது. ஆனால், தொடர்ந்து அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மதுரை நகர வங்கியிலே நடந்ததைப் பற்றிச் சொன்னார்கள். மதுரை நகர வங்கியைப்போல 3 வங்கிகளிலே அதேபோல தவறுகள் நடைபெற்று, உடனடியாக துறையின் சார்பாக ஆய்வுகள் செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே பல்வேறு உறுப்பினர்கள், செயலாளர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இதிலே ஒரு சங்கடம், கூட்டுறவுச் சட்டம், செயலாளர்களை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் பிரிவு 81-இல் என்கொயரி செய்து அதிலே 6 மாத காலம் கடந்து, மீண்டும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், வழக்கு மன்றத்திற்கு, நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால், நடவடிக்கை 4 வருடம், 5 வருடம் என்று தாமதமாகிறது. அதைத்தான் சட்டபூர்வமாக எடுக்க முடியும். உடனடியாக என்ன நடவடிக்கை நாங்கள் எடுக்க முடியும்? அரசின் சார்பாக இதுதான் செய்ய முடியும். இதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் சொன்னதைப்போல, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல் இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளை இங்கே சொன்னார்கள். நீங்கள் 'Food Cell' வைத்திருக்கிறீர்களே, நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? இதுபோல் தவறுகள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். அதிலே ஒரு கணக்கைப் பார்ப்பீர்களேயானால், 1996 ஆம் ஆண்டில் 853 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1997 ஆம் ஆண்டில் 1,463 பேரைக் கைது செய்திருக்கிறோம். 988 பேரைக் கைது செய்திருக்கிறோம். 1998-லே குற்றம் வாரியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதிலே துறைவாரியாக, ஒவ்வொரு அந்த நடவடிக்கை என்பதை நிறுத்தாமல் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஒவ்வொரு முறையும் கருத்துக்களை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே இன்னும் பல சீரிய இந்த உணவுத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை ஏற்று, சிறப்பாக

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், 2 ரூபாய் அரிசியை நீங்கள் வழங்கவேயில்லை என்று. 2 ரூபாய் அரிசியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், கிட்டத்தட்ட



இப்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்யபபட்டிருக்கின்ற அத்தனை நெல்லும் சம்பா நெல். சம்பா நெல் கொள்முதல் செய்யப்பட்ட காரணத்தால் 2 ரூபாய் அரிசியை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதையும் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து கேட்டிருக்கிறோம், எங்களுக்கு அந்தக் குறைந்த விலையிலே இருக்கின்ற அரிசியைத் தாருங்கள் என்று. விரைவிலே அந்த அரிசி வருமேயானால், தொடர்ந்து அந்தத் திட்டத்தை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம். கோதுமை 7 ரூபாய், அதேபோல் ரவை, மைதா எல்லாம் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலமைச்சர் சொல்கின்றபோது, மத்திய அரசு அரிசிக்கு விலையை ஏற்றினாலும், மாநில அரசு அதே விலைக்குத்தான் நாங்கள் விற்போம். ஆனால் மற்ற பொருட்களைப் பற்றி கோதுமை விலை 5 ரூபாய் என்பதை 2 ரூபாய் மத்திய அரசு நிர்ணயித்த விலையிலேயே விற்கிறோமே தவிர அதிகப்படுத்தி விற்கவில்லை. சர்க்கரையும் அதேபோல் மத்திய அரசு நிர்ணயித்த விலையிலேயே விற்கிறோம். அரிசிக்கு மட்டும் மானியம் தருகிற வகையிலே இந்த ஆண்டு மத்திய அரசு ஏற்றி, மாநில அரசு அதே விலையில் விற்கின்ற காரணத்தால், கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய் வரிச் சுமையை, நிதிச் சுமையை இந்த அரசு ஏற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் திரு. அழகிரி அவர்கள் பொள்ளாச்சியிலே கிட்டத்தட்ட ஆயிரம் மூட்டை அரிசி திருடு போயிருக்கிறது என்று சொன்னார்கள். 7 பேர் - சத்துணவிற்கு மட்டும் வழங்கப்படுகிறபோது 7 துறைகள் இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்றன. பி.டி.ஓ. வருகிறார். இ.ஓ.சி. வருகிறார். அதிலே நமது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் இப்படி 7 பேர் வருகிறபோது எவ்வளவு ஒதுக்கீடு என்று பி.டி.ஓ. தருகிறார். அதை நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கொடவுனிலிருந்து தருகிறோம். அந்தப் பணம் பெறுகின்றபோது, அதை சேங்ஷன் செய்கின்றவர், அனுமதி தருகின்றவர் மாவட்ட ஆட்சித் தலைவர். இதிலே தவறு ஏற்பட்டு, யாரும் பார்ப்பதற்கு முன்பு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் கண்டறியப்பட்டு 3 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது இந்தத் துறையினுடைய அதிகாரிகள் நேரிடையாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி இதில் 7 இலாகாக்கள் இருக்கின்ற காரணத்தால் நேரிடையாக நீங்களே விசாரணை நடத்தி, யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று, அதுவும் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-25

அதனால்தான் இனி சத்துணவுப் பொருட்கள் லாரிகள் மூலமாக நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்து நேரடியாக வழங்குவதை மாற்றி, இனி அந்தந்தக் கடைகளிலேயே, ரேஷன் கடைகளிலேயே அவர்கள் அந்தந்த ஒதுக்கீட்டைப் பெற்று நேரடியாகப் பொருட்களை அந்தந்த சத்துணவுக் கூடங்கள், அந்தந்த கிராமங்களில் இருக்கின்ற ரேஷன் கடைகளிலேயே அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவற்றை வரும் மாதத்திலிருந்து வழங்கலாம் என்று இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முறையை நிச்சயமாக நாங்கள் பின்பற்றுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தேதி 15. கூட்டுறவு மானியம். நம்முடைய முதலமைச்சரவர்கள் வந்து கூட்டுறவிலே தேர்தல் நடத்தி, அப்படி தேர்தல் நடத்தி முடிவுற்றது இன்றுதான்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளையிலிருந்து கூட்டுறவுக்குப் போவதற்கு முன்பு நம்முடைய 'Procurement' அதாவது கொள்முதல் செய்கின்ற ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பதாக நம்முடைய அரசு அறிவித்தது, ரூ. 1,000 என்று. அதைக் கொஞ்சம் பேருக்கு கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு எல்லாம் கொடுக்கவில்லை என்ற மிகப் பெரிய குறைபாடாக தஞ்சை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலே பேசுகிறார்கள். தயவுசெய்து அந்தக் கொள்முதல் செய்த ஊழியர்களுக்கு முழுமையாக போனஸ் வழங்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனஸ் என்பது நிரந்தர ஊழியர்களுக்கு மட்டும்தான் நுகர் பொருள் வாணிபக் கழகத்திலே வழங்கப்படுகிறது. ஆனால், 25 ஆண்டுகாலமாகி இருக்கிறது; ஒரு சிறப்பு போனசாக இதிலே பணியாற்றுகின்ற தற்காலிகப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று தொழிற்சங்கத்தினர் ஒரு கோரிக்கை வைத்து, அந்தக் கோரிக்கையைப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்டு, இன்று வழங்கப்பட்டிருக்கிறது. நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. விரைவில் இவர்களுக்கும் அந்த போனஸ் வழங்குவதற்குரிய முயற்சி நிச்சயமாக எடுக்கப்படும், விரைவிலே வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



முதலமைச்சரவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு கூட்டுறவுத் துறைக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். தேர்தலை நடத்த ஆரம்பித்து, இன்றைக்கு கூட்டுறவு மானியம் நடைபெறுகிறது, இன்றுதான் முழுமையாக கடைசி தேர்தலும் நடைபெற்று, அதனுடைய தலைவராக ரங்கநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். முழுமையாக தமிழ்நாட்டிலே அத்தனை இடங்களுக்கும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பல்வேறு கடன்கள் இன்று கொடுக்கிறோம். 4500-க்கு மேற்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. 181 நில வள வங்கிகள் இருக்கின்றன. 120-க்கு மேற்பட்ட நகர வங்கிகள் இருக்கின்றன. 23-க்கும் மேற்பட்ட மத்திய வங்கிகள் இருக்கின்றன, தலைமை வங்கிகள் இருக்கின்றன. 'டான்பெட்' நிறுவனம் இருக்கிறது. நுகர்வோர் விற்பனை அமைப்பு இருக்கிறது. 36 இடங்களில் மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இருக்கின்றன. 181 இடங்களில் வேளாண் உற்பத்தியாளர் விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. இவ்வளவு கூட்டுறவு அமைப்பிலேயும் ஒரு இலட்சம் பணியாளர்களுக்கு மேலாக வைத்து, இந்தப் பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே தொடர்ந்து இன்றைக்கு அந்த ஊழியர்கள் எங்களிடம் கேட்டு, அதையும் முதலமைச்சரவர்கள் பரிசீலித்து, அதற்காக அவர்களது சம்பள உயர்வு ஆணையும் விரைவிலே வழங்கப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே கடந்த காலத்திலே சொல்கின்றபோது, இதிலே அதிகமான அளவிற்கு வைப்பு நிதி இருக்கிறது. அதில் தலைவருக்கு அதிக அதிகாரம் தந்து, அதிகக் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் சொல்லி, பல சலுகைகள் தலைவருக்குத் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது இருந்த வைப்பு நிதி ரூ. 4,850 கோடியே, 36 இலட்சம். இன்றைக்கு. இன்றைய தேதியில் 28-2-1999-லே ரூ. 10,844 கோடியே 94 இலட்சம் வைப்பு நிதியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே மட்டும் கிட்டத்தட்ட உயர்ந்திருக்கிறது.

இந்த நிதியை முறையானபடி செலவு செய்ய வேண்டுமென்பதற்காக முறையானபடி மக்களுக்கு வழங்கி, அந்த வட்டியை வசூல் செய்து, அதை உறுப்பினர்களுக்கு ஒழுங்காக வழங்க வேண்டுமென்பதற்காக, துறையின் சார்பாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சில தலைவர்கள்

சொல்கிறார்கள், அதிக அதிகாரம் இல்லை என்கிறார்கள். சில தலைவர்கள் சொல்கிறார்கள், எம்.டி. வந்த பிறகு எங்களுக்கு அங்கே என்ன அதிகாரம் இருக்கிறது என்று. கூட்டுறவுச் சட்டத்திலேயே எம்.டி. இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் மூலமாகத்தான் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை அப்படியே இன்றைக்குப் பின்பற்றியிருக்கிறோம். தொடர்ந்து அவர்களுடைய ஊதிய உயர்வை நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுடைய ஊதிய உயர்வையும் பரிசீலித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது நகர வங்கிகளுடைய ஊழியர்களுடைய ஊதிய உயர்வு என்னவாயிற்று என்று கேட்டார்கள். அது நிதித் துறையிலே இருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களிலே அவர்களுக்கும் வழங்கப்பட்டுவிடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவிலே விவசாயத்திற்குக் கடன் தருகிறோம். நீண்ட காலக் கடன் தருகிறோம். கட்டடம் கட்டுவதற்குப் பல்வேறு கடன்களைத் தந்தாலும், புதிய திட்டமாக ஒன்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே அறிவித்தார்கள். மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டத்தை சென்னையிலே அறிவித்துக் கொடுத்தார்கள். அதிலே சென்னை மாநகரத்திலே 2,344 நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; ரூ. 25,72,000 வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல சேலத்திலே 1,102 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது; ரூ. 5,89,000 வழங்கப்பட்டிருக்கிறது. கோவையிலே 1,141 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது; ரூ. 7,06,000 வழங்கப்பட்டிருக்கிறது. மதுரையிலே 869 பேருக்கு 4 இலட்சத்து 42,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சியிலே....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** திருச்சியிலே 501 பேருக்கு 2 இலட்சத்து 51,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியிலே 627 பேருக்கு 3 இலட்சத்து 22,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 48 இலட்சத்து 82,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. Group guarantee ஒருவருக்கொருவர் துணை என்ற அளவிலே வழங்கப்பட்ட கடனிலே திரும்ப வசூல் 92 விழுக்காடு, முழுமையாக, தமிழ்நாடு முழுவதும் வசூலாகியிருக்கிறது.



(மேசையைத் தட்டும் ஒலி) அந்த 8 விழுக்காடுகூட ஆரம்பத்தில் ஏற்பட்ட தவறின் காரணமாக அந்த 8 விழுக்காடு நின்றது. அதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

இதை கிராமங்கள்தோறும் கொண்டு செல்ல வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி, வருகின்ற மே மாதம் 2 ஆம் தேதி நகராட்சிப் பகுதி முழுவதும், பேரூராட்சிப் பகுதிகளுக்கும் - நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் நகரத்திலே அந்தத் திட்டத்தை நகரப்பகுதி, கிராமப் பகுதிகளுக்கும் வழங்க இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) முழு மனதோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கூட்டுறவுக் கடனிலே, குறுகிய காலக் கடனாக (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் நகரிலே மே 2 ஆம் தேதி தொடங்கி வைக்கின்றபோது, இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள், அந்தந்த மாவட்டத்திலே அதே நாளிலே தமிழ்நாடு முழுவதும், அந்தப் பயனாளிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களை வழங்குவார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய காலக் கடனாக ஆட்சி ஏற்பட்டபோது 561 கோடி ரூபாய் வழங்கினோம். அது, 1998-99-லே ரூபாய் 592 கோடியாக உயர்ந்தது. ஆனால், இந்த ஆண்டு எங்களுடைய குறியீடு, விவசாயிகளுக்குத் தருகின்றபோது, அது ரூ. 1,050 கோடியை குறியீடாக இன்றைக்கு வைத்திருக்கின்றோம். விவசாயிகளுக்கு ரூ. 1,050 கோடி குறுகிய காலக் கடனாகவும், மத்திய காலக் கடனாக இந்த ஆண்டு ரூ. 100 கோடியும், நீண்டகாலக் கடனாக ரூ. 273 கோடியும், பண்ணை சாரா non-farm sector பண்ணை சாராக் கடன்கள் ரூ. 150 கோடியும், நகைக் கடன் ரூபாய் 3,900 கோடியும், தொழில் புரிவோருக்கு இந்த ஆண்டு ரூ. 130 கோடியும் இந்த ஆண்டு எங்களுடைய கூட்டுறவுத் துறையின் சார்பாக குறியீடு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே சொன்னார், உரங்களெல்லாம் சரியாக விற்கவில்லை, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயிருந்து பொருள்கள் சரியான முறையிலே நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என்றும் சொன்னார்கள். 1998-99-ல் டான்ஃபெட் நிறுவனத்தின் மூலமாக உர விற்பனை 212 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, எங்களுடைய நிர்ணயம் 320 கோடி ரூபாய் அளவிற்கு உரம் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், நுகர்பொருள் மொத்த விற்பனைப் பண்டகசாலை மூலமாகக் கிட்டத்தட்ட 2,140 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு விற்பனை செய்யப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இங்கே சொன்னார்கள், நிலவள வங்கியெல்லாம் சரியாக நடைபெறவில்லை, நிலவள வங்கிகளில் நிறைய, 180 சங்கங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று. உண்மைதான். எப்படி நஷ்டம் ஏற்பட்டது? அண்ணா தி.மு.க. ஆட்சியிலே திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவள வங்கியிலே எந்தவிதமான கையெழுத்தும் இல்லாமல், எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் கிட்டத்தட்ட 4, 5 கோடி ரூபாயை வேண்டியவர்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டு, அப்படிக் கொடுத்த கணக்கை மாற்றி (குறுக்கீடு) கொடுத்ததாக எழுதிவிட்டு முழுமையாக அதை எடுத்துவிட்டார்கள். நிலவள வங்கியிலே நஷ்டம் ஏற்பட்டதற்கு அதுவும் ஒரு காரணம். ஆனால், எங்களுடைய காலத்திலே, இந்த மூன்று ஆண்டு காலத்திலே சொல்கிறேன், இந்த ஆட்சி, அரசாங்கத்திலேயிருந்து நிலவள வங்கி பெற்ற கடன் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய். இந்த 3 ஆண்டு காலத்திலே அரசாங்கத்திலிருந்து பெற்ற கடன், கடந்த 12 ஆண்டுகளாகத் திருப்பித் தரப்படாத கடனை இந்த 3 ஆண்டு காலத்தில் ஒழுங்காக நடத்தி, 25 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நாங்கள் திருப்பிச் செலுத்தியிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). அப்படி, ஏற்கெனவே தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. பணமே தராமல் அப்படி அவர்களே எடுத்துக்கொண்டு பணத்தை 100 சதவீதம் வசூல் செய்துவிட்டோம் என்று சொல்லி, அவர்களாகவே தங்க மோதிரம் செய்து போட்டுக்கொண்டார்கள். இது இந்த நிலவள வங்கியிலேயிருந்த கதை. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது கடந்த கால வரலாறு.

அதேபோல, இங்கே சொன்னார்கள், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் எல்லாம் நஷ்டத்திலே இருக்கிறது என்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட Sugar Mill-களுக்கு 100 கோடி ரூபாய் இன்றைக்கு புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக, கூட்டுறவுத் துறையிலே கடன் தரச் சொல்லி— இருக்கிறார்கள். அதேபோல Spinning மில்களுக்கு ரூ. 100 கோடி தரச் சொல்லியிருக்கிறார்கள். 6 மில்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. தொடர்ந்து அந்தப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற 36 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலே பணியாற்றுகின்ற 11,000 தொழிலாளர்களுக்கு



சம்பளம்கூடக் கொடுக்க முடியவில்லையே, சரியாக வியாபாரம் செய்ய முடியவில்லையே என்று அதற்கு ஒரு புனரமைப்புத் திட்டத்தை உருவாக்கி அந்தத் திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட 66 கோடி ரூபாய் அதற்காக பணம் சேர்க்கப்பட்டு அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவிலே அத்தனை சங்கங்களுக்கும் அவர்களுடைய கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றி, குறைந்த வட்டிக்கு அவர்களுக்கு அந்தப் பணத்தை வழங்கவிருக்கிறோம். அதன் மூலமாகத்தான் மொத்த விற்பனை பண்டகசாலைகளும் இனி சிறப்பாகச் செயல்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

அதேபோல் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியில் ஆண்டுதோறும் 8 ஆயிரம் மாணவர்களைச் சேர்க்கிறோம். கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களிலே நேரிடையாக 8 ஆயிரம் மாணவர்களையும், அஞ்சல் வழி மூலமாக 4 ஆயிரம் மாணவர்களையும் உருவாக்கியிருக்கிறோம். இப்படி தொடர்ந்து இந்தப் பணி கூட்டுறவின் மூலம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆரம்பிக்கப்பட்ட புதிய மாவட்டங்கள் அத்தனையிலும் கூட்டுறவு மேலாண்மை நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. கூட்டுறவு அச்சகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மொத்த விற்பனைப் பண்டகசாலை மூன்று இடங்களைத் தவிர மற்ற இடங்களில் முழுமையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், நுகர்வோர் அமைப்பும் அத்தனை மாவட்டங்களிலும் புதியதாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் சம்பளம், பணிநிலை மற்றும் இது இதுபோன்ற சலுகைகள் வழங்குவது குறித்துப் பரிசீலிக்க அமைக்கப்பட்ட இரண்டாவது சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொண்ட சலுகைகள் குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டன. இவற்றில் 12 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிவரும் மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் உயர்நிலை - higher grade stage - அமைத்து அதற்கேற்றாற்போல் சம்பளம் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும், இதுகுறித்த அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நகரக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் சம்பளம், பணிநிலை மற்றும் இதர சலுகைகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன. அப்பரிந்துரைகள்மீது விரைவில் அரசாணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிப் பணியாளர்கள் சம்பளம், பணிநிலை ஆகியவை திருத்தியமைக்கப்பட கோரிக்கை வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் இந்த வங்கிகளின் பணியாளர்கள் சம்பளம் மற்றும் இதர படிகள் திருத்தியமைப்பது குறித்து தகுந்த பரிந்துரைகள் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (கடன்) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தற்போது இந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிந்துரைகள்மீது விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைப் பணியாளர்களின் ஊதிய விகிதம் நிர்ணயித்து வழங்குவது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 10-3-1997 நாளிட்ட அரசாணை எண் 63-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பள விகிதங்கள் 1-10-1994 முதல் 30-9-1999 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இங்கே சொன்னார்கள். பேசிய அத்தனை பேரும் அரசு ஊழியர்களைப்போல அவர்களுக்கெல்லாம் பென்ஷன் வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். பல ஆண்டுகளாக இருந்துவரும் இந்தக் கோரிக்கை, இதிலே மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய நிதிநிலை பாதிக்காத அளவிற்கு Insurance Corporation-னோடு பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு தொடர்ந்து பேசி அதிலே, ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால், வேலையே செயயாத Southern Structurals-க்கு மாதம் 18 கோடி ரூபாய் சம்பளமாகத் தருகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதிலே முதலமைச்சர் அவர்கள் கண்ணும்கருத்துமாக இருக்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கையையும் நல்லமுறையிலே அரசு பரிசீலித்து, நல்லதொரு முடிவினை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



தொடர்ந்து இந்தத் துறையின் சார்பாக இருக்கின்ற அறிவிப்புகளை வெளியிடலாம் என்று கருதுகின்றேன். இங்கே உணவுத் துறையின் சார்பாக குடும்ப அட்டைகள் முழுமையாக அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றாலும், தொடர்ந்து அதை வெளியிலே சென்று டெண்டர் விட்டு செய்வதற்குப் பதிலாக நமது ஆணையர் அலுவலகத்திலேயே இதற்கு என்று ஒரு தனிப் பிரிவு 25 இலட்சம் ரூபாய் செலவிலே அமைத்து முழுமையாகக் குடும்ப அட்டைகள் அரசாங்கத்திலே எடுக்கப்பட்டு அது அச்சடிப்பதற்கான முயற்சி இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டையே கணினிமயமாக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட 1,500 இடங்களிலே கம்ப்யூட்டர் சென்டர் உருவாக்குகின்ற இந்தக் காலக்கட்டத்தில் நாம் பொது விநியோக முறையும் கம்ப்யூட்டர் செய்யப்பட வேண்டும்; உதாரணத்திற்கு, முதலிலே சென்னை நகரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்காக 3 கோடி ரூபாய் செலவாகும் என்றாலும்கூட, இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று இப்போது சென்னை நகரத்தையும், அதேபோல் விழுப்புரம் மாவட்டத்தையும் முதல் தவணையாக கம்ப்யூட்டர் செய்யப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொருட்கள் எல்லாம் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே புதிய அரிசி ஆலைகள் 800 டன் தினமும் உற்பத்தி செய்கின்ற அரிசி ஆலைகள் அமைக்கப்படும் என்று சொன்னோம். அதிலே இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, பரிந்துரைகள் எல்லாம் அரசின் சார்பாக, தகுந்த பரிந்துரைகள் வந்து டெண்டர் விடக்கூடிய நிலையிலே இருக்கிறது. முதல் ஆலை புதுக்கோட்டையிலே புனக்குளம் என்ற இடத்திலே, 400 டன் அரிசி ஆலை, இந்த ஆண்டு அமைக்கப்படும். தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தில் முதலிலே இடம் தேர்வு செய்யப்பட்டபோது அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தால் வேறு இடத்தைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். விரைவிலே, அந்த அரிசி ஆலையும் இந்த ஆண்டு தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதையெல்லாம் விட, நமது மாண்புமிகு உறுப்பினர் கிட்டு அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இந்தத் துறை, வருவாய்த் துறை ஊழியர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற துறை. இதற்கென்று ஒரு

தனித் துறை இருந்தால் இது சிறப்பாக இருக்கும் என்று சொன்னதற்கு ஏற்ப, அதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். அருகில் இருக்கின்ற கேரள மாநிலம்போல், ஆந்திராவில் இருப்பதைப்போல், கர்நாடகத்திலே இருப்பதைப்போல் ஒரு புதிய துறையை அமைப்பதற்கான பரிசீலனையில் இந்த அரசு இருக்கிறது. இந்த ஆண்டே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

இங்கே இதற்கென்று இந்தத் துறைக்கு என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கட்டடம் இந்த ஆண்டு கட்டப்படும். அதற்கான தொடக்க நாள் விரைவிலே வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நுகர்வோர் அமைப்பு 24 மாவட்டங்களில் மட்டும்தான் இருந்தது. இப்போது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தேனி, பெரம்பலூர், திருவள்ளூர், திருவாரூர், கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்குப் புதிதாக நுகர்வோர் தீர்ப்பு மன்றம் அமைக்கப்படும். அதைப்போல் நுகர்வோர், கிராமப்புறங்களில் நுகர்வோர் கல்வி பயில இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்பதையும். நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் சார்பாக நம் மாநிலத்திலே தற்போது 850 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பண்ணைசாராக் கடன்களை வழங்கி வருகின்றன. அதிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிற சங்கங்கள் மேலும் 250 சங்கங்களுக்குப் பண்ணைசாராக் கடன்களை வழங்குகிற தகுதியை அதிகப்படுத்தித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 50 கட்டடம், நிலவள வங்கிகளுக்கு 50 கட்டடம், நகர வங்கிகளுக்கு 50 கட்டடம் என்று கட்டப்பட்டது. தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு 200 கட்டடங்கள் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வாடிக்கையாளர்களுக்கான பாதுகாப்புப் பெட்டக வசதியை தொடர்ந்து மேலும் 30 வங்கிகளுக்கு இந்த ஆண்டு புதியதாக அமைத்துத் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே மருத்துவர்கள், பொறியாளர்கள், சொந்த சேவை மையங்கள் அமைக்கக் கடன் வழங்குவதுபோல கணிப்பொறித் தொழில் புரிவோருக்கும் கடனை அளிக்கலாம் என்ற அந்த அதிகாரத்தையும் தலைவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்படும்.

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வைப்புத் தொகை உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், திருமணக் கூடம் மற்றும் வணிக வளாகக் கூடங்கள் கட்ட 10 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கலாம் என்ற அந்த அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்படும்.

அதேபோல ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வைப்புத் தொகை உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், அவற்றின் உறுப்பினர்கள், மகன், மகள்களின் தொழில் கல்விக்காக ரூ. 50,000 வரை அவர்களுக்குக் கடன் வழங்க அனுமதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளிலும் இந்த ஆண்டு கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்படும்.

தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு உள்ளமைப்பு வசதிகளுக்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. அதுபோன்று, நலிந்த மற்றும் வாழ் திறனற்ற கூட்டுறவு நகர வங்கிகளின் மேம்பாட்டுக்காக நகரக் கூட்டுறவு வளர்ச்சி நிதி தோற்றுவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், சென்னை, சைதாப்பேட்டை பெருமாள் கோவில் தெருவில் ஒரு கூட்டுறவு வளாகம் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருநெல்வேலி மேடைத் தளவாய் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் இந்த ஆண்டு கட்டித் தரப்படும்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடத்தும் தொழில் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் இந்த ஆண்டு கட்டித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளியிலும் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் இந்த ஆண்டு தொடங்கிவைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கா.நா. நேரு] [1999 ஏப்ரல் 15

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக கோயம்பேடு வணிக வளாகத்தில் 750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு புதிய குளிர்பதனக் கிடங்கு 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் 29 மண்டலங்களை 6 பகுதிகளாகப் பிரித்து, கூடுதல் பதிவாளர்கள் பொறுப்பில் பணிகள் மேலாண்மை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்களை ஏலமுறையில் விற்பனை செய்து அவற்றின் கடன் சுமையைக் குறைக்கவும், பங்குத் தொகையை உயர்த்தவும் மாவட்ட அளவில் குழு அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் தலைவர்கள், தாங்களே கடன் அனுமதிக்கும் அதிகார வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்படும்.

அதேபோல, கட்டட வசதியில்லாத மாவட்டக் கூட்டுறவு பண்டகசாலைகள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் ஆகியவற்றுக்குக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமலில் உள்ள மகளிர் சிறு வணிக கடன் திட்டம் ஊரகப் பகுதிகளிலும் அமல்படுத்தப்படும்.

விவசாயிகளுக்காக வங்கிக் கடன் அட்டை (Kissan Credit Card) இந்த ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்களைப் பணியமர்த்தச் செய்யும்போது அந்தந்த— நிறைய கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் சொல்கிறார்கள். எங்களுக்கு ஆட்கள் போதவில்லை. அதனால் உடனடியாக ஆட்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப அந்தந்தப் பகுதியினுடைய விவகார எல்லைக்குள்ளாக, சர்வீஸ் எல்லைக்குள்ளாக கூட்டுறவிலே படித்த இளைஞர்கள்- அவர்கள் பத்தாவது படித்திருந்தாலும் அவர்களைப் பதிவு மூப்பின் அடிப்படையிலே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்ததன் மூப்பு அடிப்படையிலே அத்தனை சங்கங்களுக்கும், அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்வதற்காக



1999 ஏப்ரல் 15] [திரு. கா.நா. நேரு]

அவர்களுக்கு இனி அந்த அதிகாரங்கள் நேரடியாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே சொல்கிறபோது, சொன்னார்கள், புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல, நில வள வங்கி புதிதாக வேண்டுமென்று நம்முடைய பாலசுப்பிரமணியன் போன்றவர்கள், மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட 181 நில வள வங்கிகள் இருக்கின்றன; ஆனால் வட்டங்கள் என்று எடுத்துக்கொண்டால் 220, 230 வட்டங்கள் இருக்கின்றன. அதிலே பெரம்பலூர் மாவட்டத்தில், வேப்பந்தட்டை, குன்னம், செந்துறை போன்ற மூன்று தாலுகாக்களிலும் புதிய நில வள வங்கிகள் அமைக்கப்படும்.

*பிற்பகல் 1-45*

அதுபோல, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டையிலும், தேனி மாவட்டம், தேனி, ஆண்டிப்பட்டியிலும், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் விளாத்திகுளம், சாத்தான்குளம் ஆகிய இடங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு, பெண்ணாகரம், பாப்பிரெட்டிபட்டி, தேன்கனிக்கோட்டை, போச்சம்பள்ளி போன்ற இடங்களிலும், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், செய்யூர் போன்ற இடங்களிலும், வேலூரிலே, வாணியம்பாடி, வாலாஜா நகரங்களிலும், விழுப்புரம், உளுந்தூர்பேட்டையிலும், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி - பண்ருட்டியிலும், திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர், தொட்டியம் - ஸ்ரீரங்கத்திலும், கரூர்- கிருஷ்ணராயபுரத்திலும், திண்டுக்கல்-நிலக்கோட்டை பகுதியை உள்ளடக்கிய வத்தலக்குண்டிலும், விருதுநகரிலே - காரியாபட்டி, சாத்தூர், இராஜபாளையம் போன்ற இடங்களிலும், இராமநாதபுரம் - கடலாடி, சிவகங்கை - தேவகோட்டை, மானாமதுரை, திருநெல்வேலி-செங்கோட்டை, பாளையங்கோட்டை, ஆலங்குளம், வீரகேரளம்புதூர் ஆகிய 39 இடங்களிலேயும இந்த ஆண்டு புதிய நில வள வங்கி தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்கப்பட வேண்டுமானால், 2,000 எக்டேர் நிலம் பயிர் செய்யப்பட வேண்டும். குறுகிய காலக் கடனாக 10 இலட்சம் ரூபாய் வசதி செய்யப்பட வேண்டும். அப்படியிருந்தால், நபார்டு நிறுவனம் புதிய வங்கி

தொடங்குவதற்குரிய அனுமதியைத் தருகிறது. அது எந்த எந்த இடங்களில் புதிதாக பொருந்துகிறதோ, அத்தனை இடங்களிலுமே உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப அந்தப் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கிட்டு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறபோதும், சர்க்கரையையோ, அரிசியையோ பாக்கெட்டில் அடைத்துத் தரவேண்டுமென்று, சொன்னார்கள். கடந்த ஆண்டில் ஒரு முயற்சி செய்தோம். சென்னை மாநகரத்தை முதலிலே எடுத்துக்கொண்டு, சர்க்கரையைப் பாக்கெட்டிலே அடைத்துத் தருகிற முயற்சியைச் செய்தோம். அதிலே வெற்றிபெற முடியவில்லை. ரேஷன் கடைகளிலே ஒரு ரூபாய் விலை ஏற்றினால்கூட, நுகர்வோருக்கு அது போகக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் விரும்புகின்ற காரணத்தினால், இந்த ஆண்டு புதியதொரு முறையை நாங்கள் கடைப்பிடித்து, விளம்பரதாரர்களைப் பிடித்து, அவர்கள் மூலமாக அதே விலைக்கு சர்க்கரையை முதற்கட்டமாக அனைத்துப் பகுதிகளிலும் pack செய்து கொடுக்கும் பணி இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு 11 உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த முறை எங்களால் இயன்றவரை செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, நல்ல முறையிலே மேலும் இந்த இலாகா சிறப்பாகச் செயல்படுவதற்கு நாங்கள் பணியாற்றுவோம் என்று சொல்லி, நீங்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசு கோரிய பணத்தை எங்களுக்கு அளிக்குமாறு கேட்டு, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. பேரவைத் தலைவரின் அனுமதியின்றி தூக்குக் கயிறை திரு. பி.ஆர். சுந்தரம் காட்டியது குறித்து-பேரவைத் தலைவரின் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு பி.ஆர். சுந்தரம் அவர்கள், அவருடைய பேச்சிற்கு இடையிலே ஒரு தூக்குக் கயிறை எடுத்துக் காட்டினார் என்பதை நான் என்னுடைய அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். ஏற்கெனவே கருப்புத் துணி காட்டுவது, பதாகை காட்டுவது போன்ற காரியங்களுக்காக உரிமைக் குழுவிற்கு அவருடைய



பிரச்சினை அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வது முறையற்றது. பேரவைத் தலைவர் அனுமதி வாங்காமல், இப்படிப்பட்ட பொருட்களைக் கொண்டுவரக் கூடாது. ஆனால், இது தொடர்கதையாக நடக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பேரவைத் தலைவர் நான் என்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி,. இப்படிப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் அவர்களைச் சோதனையிட்டுத்தான் உள்ளே விடவேண்டுமென்ற உத்தரவை என்னால் போட முடியும். ஆகவே, இது கடுமையான, கடைசி முறை எச்சரிக்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34—நுகர் பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, சொல்லுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு விஷயத்தை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விளவங்கோடு தாலுகா வழியாக தினந்தோறும், 4,000 மூட்டைக்கும் அதிகமான அரிசி கடத்தப்படுகிறது. இதனால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகள் மாதமொன்றுக்கு நான்கு இலட்சம் ரூபாய் வரை கையூட்டு பெறுகின்றார்கள். இந்த நிலையைத் தடுத்து நிறுத்த, அங்கேயுள்ள சோதனைச் சாவடி வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, அமைச்சரவர்கள் இதை ஒரு கொள்கைப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, சோதனைச் சாவடி, இருக்கின்ற காரணத்தினால் கடத்தல் நடைபெறுகிறது; ஏதோ கொஞ்சம் அதிகாரிகளும், காவல்துறையைச் சேர்ந்தவர்களும் ஒரு வருடத்திற்கு அவர்கள் 48 இலட்சம் ரூபாய் வரை கையூட்டாகப் பெறுகின்றார்கள். எனவே, இதைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 17-க்கும் அதிகமான wholesale கடைகள் இருக்கின்றன. ஒன்றை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையும் பரிசீலனை செய்து, அது வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தத் தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் ஒரு தனிச் சட்டம். 1977 ஆம் ஆண்டிலிருந்து 'Quota Card System' —என்று தினமும் 10 குவிண்டால் அரிசியை 700-க்கும் மேற்பட்டவர்கள் கேரளாவிற்குச் சென்று விற்கலாம்.

*பிற்பகல் 1-50*

கேரளாவிற்கு என்று மட்டும் இல்லை, அருகிலே இருக்கின்ற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லலாம் என்று சொல்லி அன்றைக்குத் தரப்பட்ட அந்த `Quota Card System'— என்பது தொடர்ந்து அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இதில் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இப்போது தடையாணை பெற்றதை மாற்றி, உடனடியாக, அவர்கள்மீது, 200 பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 200 பேர்களுக்கு இயற்கையாகவே அந்த லைசன்ஸ் போய்விட்டது. அதைப்போலவே Wholesale Licence-என்பது கடந்த காலத்திலே, தமிழ்நாடு எல்லையிலே களியக்காவிளை என்ற இடத்திலே இருந்து 4,000 டன், 5,000 டன் என்று அவர்கள் வைத்துக் கொண்டு, வியாபாரம் செய்யக்கூடியவர்கள், Wholesale Licence-ஐ பெற்றிருக்கிறார்கள். அவர்களும் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். எப்போதும்போல ஆய்வு செய்யப்பட்டு, கடந்த வாரம் 4 பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுடைய லைசென்ஸ் நீக்கப்பட்டிருக்கிறது; 11 பேருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அதேபோல, Check Post-களிலே இருக்கின்ற அதிகாரிகளை, திருநெல்வேலி மாவட்டத்திலே இருந்தவரை மாற்றி கன்னியாகுமரிக்கு போட்டோம், கன்னியாகுமரியிலிருந்தவரை திருநெல்வேலிக்குப் போட்டோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். தொடர்ந்து அந்தப் பணிகளை இன்னும் தீவிரப்படுத்தி முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,14,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம, தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 34 — நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34 — நுகர் பொருள் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு.கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.1167,54,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.53 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

137. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 26-5-1998ஆம் நாளிட்ட 91ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

138. 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் இரண்டாவது அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 5-8-1998ஆம் நாளிட்ட 146ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983)180(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

139. 07-04-1998ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட, வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறையின் II(1)/வ.வ.அ.நி/43(டி-4)/98ஆம் எண் அறிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 23-12-1998ஆம் நாளிட்ட 337ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.(1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

140. மீன்பிடி தூண்டில் முள் மற்றும் பிரசர் மண்ணெண்ணெய் ஸ்டவ் விற்பனை குறித்து, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 09-04-1999ஆம் நாளிட்ட 87ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், மற்றும் ஏனைய தாள்கள்

96. மானியக் கோரிக்கை எண் 23-கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

97. மானியக் கோரிக்கை எண். 34-உணவு, நுகர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான, கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

[240 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 23

## கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

### அத்தியாயம்-1

#### முன்னுரை

கூட்டுறவு முயற்சியில் நடவடிக்கைகள் சரியான
முறையில் மேற்கொள்ளப்படுமேயானால்,
எண்ணியது எண்ணியாங்கு எய்த அதைவிட
வேறு சிறந்த சாதனம் எதுவும் இருக்க முடியாது

—கலைஞர்

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய கூட்டுறவு இயக்கம் 'அனைவருக்காகவும் ஒருவர், ஒருவருக்காக அனைவரும்' என்ற உயரிய கோட்பாட்டினை முதன்மையாகக் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. இவ்வியக்கத்தை வழிநடத்திச் செல்லும் இக்கோட்பாடு, நமது நாட்டின் மிகச் சிறந்த குடும்ப பாரம்பரியத்தில் வேரூன்றி நிற்கின்றது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை கூட்டுறவு தத்துவத்தின் சிறந்த வெளிப்பாடு என்றால் அது மிகையாகாது. எனவேதான், இவ்வியக்கம், நமது தேசிய கலாச்சாரத்தில் இரண்டறக் கலந்து இன்று உயர்ந்தோங்கி நிற்கிறது.

கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னோடியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. நமது நாட்டில், தற்போது 4.52 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள், சுமார் 20 கோடி உறுப்பினர்களுடன் ரூ.1,57.477 கோடி நடைமுறை மூலதனத்தோடு செயற்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், நகர மற்றும் கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு போற்றத் தகுந்த பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. 1904ஆம் ஆண்டில் தோன்றிய இவ்வியக்கம், ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி இன்று சுமார் 27,000 கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னகத்தே கொண்டு, இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்து பணி ஆற்றி வருகிறது.

1904ம் ஆண்டில் மத்திய அரசால் இயற்றப்பட்ட "கூட்டுறவுக் கடன் சட்டம்" என்ற சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதே ஆண்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்னும் கிராமத்தில் ஒரு கிராமக் கூட்டுறவு கடன் சங்கமும், பெரிய காஞ்சிபுரத்தில் ஒரு நகரக் கூட்டுறவு வங்கியும், சென்னையில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கமும் தொடங்கப்பெற்றன. 1929ஆம் ஆண்டில் மத்திய நிலவள வங்கி சென்னையில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு "எங்கும் கூட்டுறவு எதிலும் கூட்டுறவு" என்ற உத்வேகத்துடன் இவ்வியக்கம் அனைத்து துறைகளிலும் விரிந்து தழைத்தது.

இம்மாநிலத்தில் இருந்த அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களும் 1955ஆம் ஆண்டு வரை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தன. 1956-57ஆம் ஆண்டு முதல், சிலவகைச் சங்கங்கள் பிற துறைகளுக்கும், சட்டபூர்வமான வாரியங்களுக்கும் படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டன. அத்துறைத் தலைவர்கள் பதிவாளரின் அதிகாரங்களை, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி செயல்படுத்தி, செயல்முறை பதிவாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். தற்போது நமது மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைத் தவிர, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 14 செயல்முறை பதிவாளர்கள் உள்ளனர்:—

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி).
2. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர்.
3. தொழில் மற்றும் வணிகத் துறை, ஆணையாளர்.
4. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்.
5. கைத்தறி மற்றும் துணித் துறை இயக்குநர்.
6. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை வளர்ச்சி ஆணையாளர்.
7. சர்க்கரைத் துறை இயக்குநர்.
8. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்).
9. சமூக நலத்துறை இயக்குநர்.
10. மீன்வளத் துறை இயக்குநர்.



11. வேளாண்மைத் துறை இயக்குநர்.
12. கால்நடைத் துறை இயக்குநர்.
13. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சித் துறை.
14. பட்டுப்பூச்சி வளர்ச்சித் துறை இயக்குநர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கிகளும், சங்கங்களும், பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றன. அவை விவசாயக் கடன் மற்றும் பண்ணைசாராக் கடன், நலிந்த பிரிவினர், மகளிர், சிறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கு நிதியுதவி, வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்தல், சேமிப்பு, பதப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல், நுகர்பொருட்கள் விநியோகம், கூட்டுறவு இயக்கத்தின் கொள்கை பரப்புதலும் பயிற்சியும் ஆகிய பணிகளைச் செம்மையாக செய்வதுடன், அனைத்திற்கும் மேலாக நியாயவிலைக் கடைகள் மூலமாக பொது விநியோகத்தையும் செயல்படுத்தி வருகின்றன.

பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் 31-3-1998 வரையிலான விற்பனை அளவு ரூ.28,749 கோடியாகும். சங்கங்கள் வாரியான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | 31-1-1999 அன்றைய தேதியில் விற்பனை அளவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள் | 6 | 3,505.48 |
| 2 | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 23 | 14,364.47 |
| 3. | மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் | 35 | 971.24 |
| 4. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 1 | 37.42 |
| 5. | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் | 29 | 8.17 |

[1999 ஏப்ரல் 15

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6. | கூட்டுறவு அச்சகங்கள் | 22 | 35.23 |
| 7. | கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் மற்றும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் | 12 | 1.57 |
| 8. | தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 114 | 647.22 |
| 9. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) | 4,582 | 4,366.44 |
| 10. | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 18 | 23.99 |
| 11. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 181 | 528.45 |
| 12. | கூட்டுறவு நகர வங்கிகள் | 126 | 2078.82 |
| 13 | பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (பல மாநில பணியாளர்கள் சங்கங்கள் உள்பட) | 1,894 | 1,839.60 |
| 14 | தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உள்பட) | 3,599 | 287.51 |
| 15. | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 212 | 287.51 |
| 16. | ஊரக மின்சார கூட்டுறவுச் சங்கங்கள் | 3 | 10.22 |
| 17. | இதரவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 221 | [illegible] |
| | | 1,1079 | 28,74,930<br>அல்லது<br>28,749 கோடி |



1999 ஏப்ரல் 15]

31-3-1998 அன்றைய நிலவரப்படி பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்குமூலதனம் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | 31-3-98-ல் நிலுவை (ரூபாயில்) (3) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 13,30,54,238 |
| 2. | தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி | 1,26,00,000 |
| 3. | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | 2,31,46,000 |
| 4. | தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 1,15,35,945 |
| 5. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 10,25,000 |
| 6. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 39,81,77,540 |
| 7. | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | 6,63,36,430 |
| 8. | பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் | 69,12,142 |
| 9. | தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 13,91,514 |
| 10. | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | 47,00,000 |
| 11. | கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,40,000 |
| 12. | பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,68,000 |
| 13. | உப்புத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் | 2,05,846 |
| 14. | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,40,000 |
| 15. | கூட்டுறவு அச்சகங்கள் | 6,53,790 |
| 16. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்பட) | 54,55,04,218 |
| 17. | தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்பட) | 83,70,619 |
| 18. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 12,09,78,070 |
| 19. | நகர கூட்டுறவு வங்கிகள் | 10,75,796 |
| 20. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 12,81,97,771 |
| 21. | விருதுநகர், கடலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் | 20,55,55,625 |
| 22. | கால்நடைத் தீவன கூட்டுறவுச் சங்கம் | 40,000 |
| | | 1,67,03,08,552<br>அல்லது<br>167.03 கோடிகள் |

## 2. பொது முன்னேற்றம்

கூட்டுறவுத் துறையின் முக்கிய நோக்கங்களின்கீழ், வேளாண் கடன், விளைபொருட்களின் விற்பனை, உரம் மற்றும் நுகர்பொருட்களின் விநியோகம் ஆகியவை முதன்மையான பணிகளாகும். இப்பணிகளில் 1998-99ஆம் ஆண்டில், அதாவது 31-1-1999 வரையில் எய்திய முன்னேற்றம் மற்றும் 1999-2000ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகள் குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண். | விவரம். | 1998-99 ஆம் ஆண்டுத் திட்டம். | 1998-99இல் அடைந்த முன்னேற்றம் 1-4-98 முதல் 31-1-1999 வரை. | 1999-2000ஆம் ஆண்டுக்கான உத்தேசத் திட்டம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1. | குறுகிய கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 925.00 | 546.22 | 1050.00 |
| 2 | (அ) நடுத்தரக் கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 100.00 | 56.77 | 100.00 |
| | (ஆ) நகையீட்டுக் கடன் வழங்குதல் | 3400.00 | 2452.53 | 3900.00 |
| | (இ) சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன் வழங்குதல் | 130.00 | 108.57 | 150.00 |
| | (ஈ) வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடன் வழங்குதல் | 70.00 | 12.83 | 80.00 |
| 3 | நீண்ட கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | 248.60 | 105.30 | 273.46 |
| 4. | தொழில் புரிவோர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்கள் | 125.00 | 22.73 | 130.00 |
| 5. | வீடு கட்ட கடன் வழங்குதல் | 105.00 | 87.79 | 110.00 |
| 6. | இரசாயன உரங்கள் வழங்குதல் | 280.00 | 197.22 | 320.00 |
| 7. | வேளாண் விளைபொருட்கள் விற்பனை | 525.00 | 328.08 | 575.00 |
| 8. | நுகர்பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல் | 2040.00 | 1553.37 | 2140.00 |
| 9 | கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சுப்பணி செய்தல் | 23.00 | 15.89 | 24.00 |
| 10 | (அ) விற்பனையுடன் இணைந்த கடன் வசதி | 1.10 | 0.71 | 1.20 |
| | (ஆ) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கடன் வசதி | 0.85 | 4.37 | 5.50 |
| 11 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர்களுக்கு நிதியுதவி அளித்தல் (லாம்ப்ஸ்) | 21.43 | 18.40 | 20.00 |
| | | (இலட்சம் மெ. டன்னில்) | | |
| 12 | கிடங்கு கொள்திறன் வசதியைப் பயன்படுத்துதல் | 5.25 | 5.01 | 5.50 |





## 3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு

கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள், 1998-99 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு, 1998-99ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 1999-2000ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கான விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன:—

| திட்டத்தின் விவரங்கள். | 1997-98ஆம் ஆண்டின் மொத்தச் செலவு. | 1998-99ஆம் ஆண்டின் செலவுத் திட்ட மதிப்பீடு. | 1998-99ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1999-2000ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| அ. மாநிலத் திட்டப் பணிகள் | | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் | 0.0060 | 0.0347 | 0.0609 | 0.0921 |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்பு நிதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களில் முதலீடு உட்பட) | 19.3143 | 24.5837 | 22.5969 | 2.1417 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 1.2713 | 0.5139 | 0.5134 | 0.5331 |
| 4. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | — | 0.0200 | — | — |
| 5. பழங்குடியினர் துணைத் திட்டம் | 0.8464 | 0.9000 | 0.9000 | 0.9000 |
| 6. சிறப்பு கூறுகள் திட்டம் | 0.3051 | 0.2500 | 0.2500 | 0.2500 |
| மொத்தம் | 21.7431 | 26.3023 | 24.3212 | 3.9192 |
| (ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பங்கேற்கும் திட்டங்கள் | 0.1311 | 0.1008 | 0.4430 | 0.1011 |
| (இ) தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங்கள் | 7.1376 | 4.2618 | 9.1092 | 4.8334 |
| (ஈ) திட்டத்தில் சேராதது | 46.2777 | 52.0588 | 45.0304 | 48.0506 |
| பெரு மொத்தம் | 75.2895 | 82.7237 | 78.9038 | 56.9023 |

[1999 ஏப்ரல் 15

## 4. 1999-2000 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள்

### 1. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விளிம்புத் தொகை நிதியுதவி

பொது விநியோகத் திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்திவரும் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் போதுமான உபரி நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால், அவைகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து தேவையான அளவு காசுக்கடன் பெற்று கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையை நடத்த இயலவில்லை. எனவே, அவை காசுக்கடன் பெற ஏதுவாக விளிம்புத்தொகை நிதியுதவி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. 1999-2000ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு ரூ.20.00 இலட்சம் நிதியுதவி அரசால் வழங்கப்படவுள்ளது.

### 2. சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி

நுகர்வோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பண்டகசாலைகள் பொது வியாபாரத்தினை மேற்கொள்ள கூடுதலாக சில்லறை விற்பனை நிலையங்களைப் படிப்படியாக தொடங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1999-2000ஆம் நிதியாண்டில் கஸ்தூரிபாய் பெண்கள் கூட்டுறவுப் பண்டகசாலை (காஞ்சிபுரம் மாவட்டம்), பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை (மதுரை மாவட்டம்), திருவள்ளூர் அரசு ஊழியர் கூட்டுறவுப் பண்டகசாலை (திருவள்ளூர் மாவட்டம்), திருவாரூர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, (திருவாரூர் மாவட்டம்), புள்ளிகார் மில் பணியாளர் கூட்டுறவுப் பண்டகசாலை (நாமக்கல் மாவட்டம்) ஆகிய ஐந்து பண்டகசாலைகளுக்கு தலா ரூ.0.60 இலட்சம் வீதம் ரூ.3.00 இலட்சம், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியாக அளிக்கப்படவுள்ளது.

### 3. நலிவுற்ற தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் புனரமைப்புச் செய்ய நிதியுதவி

நலிவுற்ற தொடக்கக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளைப் படிப்படியாகப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் 1999-2000ஆம் நிதியாண்டில்



1999 ஏப்ரல் 15]

கீழே கண்ட 5 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ. 5.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது:-

(1) தொரப்பாடி-அல்லாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை
(வேலூர் மாவட்டம்)

(2) சத்திரப்பட்டி கூட்டுறவுப் பண்டகசாலை
(விருதுநகர் மாவட்டம்)

(3) மணவாளக்குறிச்சி கூட்டுறவுப் பண்டகசாலை
(கன்னியாகுமரி மாவட்டம்)

(4) அந்தியூர் கூட்டுறவுப் பண்டகசாலை
(ஈரோடு மாவட்டம்)

(5) நிக்கல்சன் கூட்டுறவுப் பண்டகசாலை
(நீலகிரி மாவட்டம்)

### 4. பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி

நுகர்வோருக்கு சிறப்பான முறையில் சேவை செய்வதற்காக பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்களைத் திறக்க நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 1999-2000ஆம் நிதியாண்டில் இரண்டு பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கும் (விழுப்புரம் மாவட்டம்) போடிநாயக்கனூர் கூட்டுறவுப் பண்டகசாலைக்கும் (தேனி மாவட்டம்), ஒவ்வொன்றுக்கும் ரூ.1.35 இலட்சம் வீதம் ரூ.2.70 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

### 5. நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்க நுகர்வோர் கூட்டுறவுகளுக்கான நிதியுதவி

வட்டம்/வட்டாரத் தலைமையிடத்தில் நவீன சில்லறை விற்பனைக் கடைகளை அமைப்பதற்கு தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் நிதியாண்டில் (1) வளவனூர் கூட்டுறவுப் பண்டகசாலை (விழுப்புரம் மாவட்டம்) (2) வந்தவாசி கூட்டுறவுப் பண்டகசாலை (திருவண்ணாமலை மாவட்டம்) (3) மணச்சநல்லூர் கூட்டுறவுப்

பண்டகசாலை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய 3 பண்டக சாலைகளுக்கு ரூ. 2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 6.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

**6. கூட்டுறவு அச்சகங்களுக்கு நவின இயந்திரங்கள் வாங்கிட நிதியுதவி அளித்தல்**

தனியார் அச்சகங்களின் கடும் போட்டியை எதிர்கொண்டு கூட்டுறவு அச்சகங்களின் வியாபாரத்தைப் பெருக்கிட ஏதுவாக, கூட்டுறவு அச்சகங்களைப் படிப்படியாக நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் 1999-2000ஆம் நிதியாண்டில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகத்திற்கும் நீலகிரி கூட்டுறவு அச்சகத்திற்கும் ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.10.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**7. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் அங்கத்தினர்களின் கடன் பெறும் தகுதியை உயர்த்துவதற்காகக் கூடுதல் பங்குத் தொகைக்கான வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள நலிந்த பிரிவினைச் சார்ந்த மகளிர் உறுப்பினர்கள், தாங்கள் கடன்பெற தேவையான பங்கு மூலத்தனத்தை முதலீடு செய்வதற்கே சிரமப்படுகிறார்கள். அவ்வாறு சிரமப்படும் அங்கத்தினர்களின் கடன் வாங்கும் சக்தி, அவர்தம் பங்கு மூலதனத்தைப் பொறுத்தே உள்ளதால், கிராமப் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை உயர்த்தி அவர்களது கடன் வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்காக வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இதன்படி 1999-2000 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 2,500 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ. 250/- வீதம் ரூ.6.25 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படவுள்ளது.

**8. கூட்டுறவு நகர வங்கிகளில் மகளிர் அங்கத்தினர்களின் கடன்பெறும் தகுதியை உயர்த்துவதற்காகக் கூடுதல் பங்குத் தொகைக்கான வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள 1,000 மகளிருக்கு, அவர்களது பங்கு மூலதனத்தை உயர்த்தி, கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 500 வழங்கப்படும். இதன் பொருட்டு 1999-2000ஆம் நிதியாண்டில் ரூ. 5.00 இலட்சம் வழங்கப்படவுள்ளது.



**9. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலுள்ள பெண் உறுப்பினர்களுக்குக் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க பங்குமூலதனத்திற்காக வட்டியில்லாக் கடன் உதவி செய்தல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை உயர்த்துவதற்காக வங்கிகளில் கூடுதலாக, பங்குமூலதனத்தை முதலீடு செய்து அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1999-2000ஆம் நிதியாண்டில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் உள்ள 200 பெண் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.2.00 இலட்சம் நிதியுதவி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கிகளில் இவர்களது பங்கு மூலதனத்தை உயர்த்தி, கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ரூ.1,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

**10. கூட்டுறவு அமைப்புகள் தொடர்பான புள்ளி விவரங்களைக் கணினி மயமாக்குதல்**

தகவல் தொழில் நுட்பத் துறையில் தற்போது ஏற்பட்டுவரும் வேகமான முன்னேற்றத்தின் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கணினி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள கணினியின் செயல்திறன் பணிச்சுமைக்கு ஏற்றதாக இல்லை. எனவே, இக்கணினி அமைப்பினை வலுப்படுத்த இவ்வாண்டில் ரூ.6.11 இலட்சம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

[1999 ஏப்ரல் 15

## அத்தியாயம்-2

### கூட்டுறவுத் தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க, மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப் பெற்று அவற்றின் நிருவாகத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைத்தமை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

**தொடக்கச் சங்கங்கள்**

தேர்தல் அட்டவணையில் சேர்க்கப்பட்ட 7,842 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில், 7,831 சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு, அவற்றின் நிருவாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**மத்தியச் சங்கங்கள்**

121 மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களில் 116 சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு, அவற்றின் நிருவாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தலைமைச் சங்கங்கள்**

தேர்தல் அட்டவணையில் சேர்க்கப்பட்ட 4 தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, அவற்றின் நிருவாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கான தேர்தல் அண்மையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம்-3

### கூட்டுறவுக் கடன்

**(அ) குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்**

**1. கடன் கட்டமைப்பு**

மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை அல்லாத பிற திட்டங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக) கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றது.

**2. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி**

மாவட்ட அளவில் இயங்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905-ஆம் ஆண்டு முதல் அதன் உறுப்பினர் சங்கங்களின் வாயிலாக வேளாண் மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்கி வருகிறது. இது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியை வேளாண்மைக்காக குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக வழங்கி வருவதுடன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அவைகளின் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்குத் தனது சொந்த நிதியிலிருந்து காசுக் கடன் வழங்குகிறது.

இந்த வங்கி, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை/சர்க்கரை ஆலைகளுக்கு காலக் கடன் நிதியுதவியும், ஏனைய தலைமை கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி நிதியுதவியும் அளித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி" ஒன்றினை தலைமை வங்கி, பராமரித்து வருகிறது. 31-1-1999 அன்றைய நிலவரப்படி இந்நிதியில் ரூ. 834.10 இலட்சம் உள்ளது.

31-1-1999 ஆம் தேதியில் தலைமை வங்கியின் பங்குமூலதனம் அரசின் பங்குத் தொகையான ரூ.1.26 கோடியையும் சேர்த்து ரூ. 19.65 கோடியாகவும், ஒதுக்கீடுகள் ரூ.80.62 கோடியாகவும், வங்கியின் வைப்புத் தொகை ரூ.2,235.32 கோடியாகவும் உள்ளது. 1998-99ஆம் ஆண்டில் 31-1-1999 வரை இவ்வங்கி ரூ. 1,212.31 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்களையும் சேர்த்து 31-1-1999 அன்று, மாநில வங்கி, ரூ. 531.91 கோடி அளவிற்குக் கடன்கள் செலுத்த வேண்டியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் மாநில வங்கி ரூ.15.07 கோடி அளவில் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**3. மத்திய கூட்டுறவு வங்கிகள்**

மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கிளைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவை, கூட்டுறவுகளுக்கும் கிராம மக்களுக்கும் பெரும் பணியாற்றி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்தும் கடன் பெற்றும், வேளாண் தேவைகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் வழங்குகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி பெற்று வழங்குகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண் சாரா தொழில்களுக்கு லாரிகள், பேருந்துகள், கணினிகள், மண்வாரும் இயந்திரங்கள் வாங்கவும், வீடு கட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், உறுப்பினர்களின் குழந்தைகள் மருத்துவம், பொறியியல் தொழிற் கல்வி பயிலவும் கடன் உதவி அளித்து வருகிறது.

31-1-1999 ஆம் நாளன்று மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அரசு பங்குத் தொகையான ரூ. 51.56 கோடியையும் சேர்த்து ரூ.234.88 கோடியளவிற்குப் பங்குத் தொகை கொண்டுள்ளன. மேலும் இவ்வங்கிகளில் ஒதுக்கிய நிதிகள் ரூ. 609.53 கோடியாகவும், வைப்புத் தொகைகள்





ரூ. 4,500.22 கோடியாகவும் உள்ளது. இவற்றின் நடைமுறை மூலதனம் ரூ. 6,676.30 கோடி அளவை எட்டியுள்ளது.

**4. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

மாநிலம் தழுவிய அளவில் 4,589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய குறுகிய காலக் கடன்களையும், 3 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் முதலான வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. மத்திய காலக் கடன்களில் ஏறத்தாழ 65 விழுக்காடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகின்றது. 10 ஏக்கர் வரை சொந்த ஜாமீன்பேரில் பதிவு செய்யப்பட்ட கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு கடனளவுகளுக்கு ஏற்ப பயிர்க் கடன் ரூ.45,000/- வரை வழங்கப்படுகிறது. நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், எள், காய்கறி வகைகள், பூச்செடிகள் முதலான இதர பயிர்களுக்கும் நபர் ஜாமீன் பேரில் கடன் வழங்கப்படுகின்றன.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வைப்புத் தொகை திரட்டும் பணியினை முனைப்புடன் மேற்கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 200.43 கோடி அளவிற்கு வைப்புத் தொகை திரட்டியுள்ளன.

இவ்வங்கிகள், வேளாண் தொழில்களுக்கு அல்லாது வேளாண் நிலம் வாங்கவும், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கிறது. இவ்வங்கிகள், நுகர்பொருட்கள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள், இருசக்கர வாகனங்கள், டிரக்குகள், வீட்டுமனைகள் வாங்கவும் வீடுகளைப் பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்குச் சேவை மையங்கள் தொடங்கவும், தமது வைப்புத் தொகைகளை கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

**5. கடன் வழங்கு பணிகள் முன்னேற்றம்**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டு ஜனவரி 1999 வரை

[1999 ஏப்ரல் 15

குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:-

| ஆண்டு | குறுகிய காலப் பயிர்/ சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் மத்திய) |
|---|---|---|---|---|---|
| | திட்டம் | முன்னேற்றம் | திட்டம் | முன்னேற்றம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூ. கோடியில்) | | |
| **எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1992-93 | 300.00 | 340.86 | 55.00 | 45.75 | 386.61 |
| 1993-94 | 350.00 | 439.54 | 50.00 | 52.65 | 492.19 |
| 1994-95 | 450.00 | 561.74 | 55.00 | 61.99 | 623.73 |
| 1995-96 | 560.00 | 561.37 | 60.00 | 65.17 | 626.54 |
| 1996-97 | 680.00 | 592.40 | 65.00 | 66.37 | 658.77 |
| **ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1997-98 | 800.00 | 697.99 | 70.00 | 100.74 | 798.73 |
| 1998-99 | 925.00 | 546.22 (ஜனவரி, '99 வரை) | 100.00 | 56.77 | 602.99 (ஜனவரி '99 வரை) |

மேற்கண்ட ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வந்துள்ள கடன் தொகையின் அளவு சீராக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. வளர்ந்துவரும் வேளாண் கடன் தேவைகளைக் கருத்தில்கொண்டு 1999-2000ஆம் ஆண்டில் ரூ.1,050.00 கோடி அளவிற்கு குறுகிய காலக் கடன்கள் வழங்கவும், ரூ. 100.00 கோடி அளவிற்கு நடுத்தர காலக் கடன்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 15]

இதேபோன்று பண்ணைசாரா நோக்கங்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டு ஜனவரி 1999 வரை வழங்கப்பட்ட கடன் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | பண்ணைசாராக் கடன்கள் வழங்குதல் | |
|---|---|---|
| | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
| | (ரூ. கோடியில்) | |
| 1997-98 | 20.60 | 6.60 |
| 1998-99 (ஜனவரி '99 வரை) | 18.77 | 20.90 |

1999-2000 ஆம் ஆண்டு பண்ணைசாரா செயல்பாடுகளுக்கும் மற்றும் சிறு போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கும் ரூ.70.00 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்**

மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/ பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 67 விழுக்காடு அளவிற்கும் மத்தியக் காலக் கடனில் 95 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டு மற்றும் 1998-99ஆம் ஆண்டில் ஜனவரி 1999 வரை நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட

[1999 ஏப்ரல் 15

குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:

| வஎண் | விவரங்கள் | ஆண்டு | திட்டம் (விழுக்காடு) | சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | | | நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | வழங்கப்பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | குறுகிய காலக் கடன் | 1997-98 | 67 | 429.47 | 61.5 |
| 2 | குறுகிய காலக் கடன் | 1998-99 (ஜனவரி '99 வரை) | 67 | 338.91 | 62.0 |
| 3 | நடுத்தர காலக் கடன் | 1997-98 | 95 | 89.97 | 89.3 |
| 4. | நடுத்தர காலக் கடன் | 1998-99 (ஜனவரி '99 வரை) | 95 | 50.52 | 89.0 |

1998-99 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும், மத்திய காலக் கடனில் 30 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிடத் திட்டமிடப்பட்டது. ஜனவரித் திங்கள் 1999 வரையில் இக்கடன்கள் முறையே 10.3 விழுக்காடு அளவிற்கும் 26.7 விழுக்காடு அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும், மத்திய காலக் கடனில் 30 விழுக்காடும் இப்பிரிவினருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7. ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்

பயிர்ச் சாகுபடிச் செலவிற்கென குறுகிய காலக் கடனும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான மத்திய காலக் கடன் வசதியும் பெற்று தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள, ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டம்



1999 ஏப்ரல் 15]

1981-82 ஆம் ஆண்டிலிருந்தே செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்கு மூலதனம் செலுத்துவதற்காக, ஒவ்வொரு நபருக்கும் அரசு ரூ. 100 மானியமாக வழங்கி வருகிறது. இவ்வாறாக அரசு அளித்து வந்த ரூ.110.00 இலட்சம் அளவிலான மானிய உதவியுடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,10,000 ஆதிதிராவிடர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை 1988-89 முதல் மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1988-89 முதல் 1997-98 வரையில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த 1,15,092 நபர்களுக்கு, ரூ.115.092 இலட்சம் அளவிற்கு மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது. இங்ஙனம், 31-1-1999 வரை மாநில மற்றும் மைய அரசு இத் திட்டங்களின் கீழ் ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த 2,25,092 நபர்களுக்கு உதவி அளித்துள்ளன.

### 8. கூட்டுறவு கடன் அமைப்பினை வலுப்படுத்த வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம்

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்குப் போதிய நிதி உதவி அளிக்கப்பட வேண்டிய உயரிய நோக்கத்தின் அடிப்படையில் குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடன் அமைப்புகளை வலுப்படுத்த வகுக்கப்பட்டுள்ள மைய அரசின் கொள்கை முடிவின்படி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டங்கள் செயல்படுத்துவதற்கென வழிகாட்டி நெறிமுறைகளை தேசிய வங்கி அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் கிராமப்புற அளவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்கள், குறுகிய காலக் கடன் அமைப்பைப் பொறுத்தவரையில், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரையிலும் நீண்டகால கடன் அமைப்பைப் பொறுத்துமட்டில் 1994-95 முதல் 1997-98 ஆம் ஆண்டு வரையிலும் செயல்படுத்தப்படும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி செயல் திட்டங்களை முழு அளவில் செயல்படுத்திடவும், கூட்டுறவுகளுக்கு நிதி மற்றும் பிற ஆதரவுகளைத் தொடர்ந்து அளிப்பதற்கு வகை செய்யவும், மாநில அரசு, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகளுடன் சேர்ந்து, தனித்தனியே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வளர்ச்சி செயல் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அளவில்

[1999 ஏப்ரல் 15

திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. குறுகிய காலக் கடன் அமைப்பைப் பொறுத்தவரை, ஒப்பந்தக் காலம், 31-3-1999 உடன் முடிவடைந்துள்ளதால், அரசின் அறிவுரைகளின்படி தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் தன்னாற்றல் கொண்டவைகளாகச் செய்வதுவே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். இவை தன்னாற்றலுடன் செயல்பட மண்டல இணைப் பதிவாளர்களின் தலைமையில் மாவட்டந்தோறும் சிறப்புப் பணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் மாநில முழுவதும் உள்ள மொத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 118 வங்கிகள் தன்னாற்றல் குன்றியவை என அறுதியிட்டு, அவற்றை பிற வங்கிகளுடன் இணைத்துவிடவோ அல்லது அவற்றைக் கலைத்துவிடவோ பரிந்துரை செய்துள்ளன. இத்தகு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எதிர்கால செயல்பாடு குறித்து முடிவு செய்யும்பொருட்டு, அவை ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செயலிழந்த 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஏற்கெனவே கலைக்கப்பட்டுவிட்டன. ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தன்னாற்றல் பெற்றுவிட்டது. 31-1-1999 அன்றைய தேதியில் 106 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தன்னாற்றல் குன்றியவையாக உள்ளன. இவ்வங்கிகளை வலுப்படுத்த தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1994-95இல் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப்பெற்றபின், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்த அரசு நிதி உதவி அளித்து வருகிறது. தேசிய வங்கியின் நீண்டகால இயக்க நிதியிலிருந்து நிதி உதவி பெற்று,



1999 ஏப்ரல் 15]

பங்குத் தொகையில் முதலீடு செய்யப்பட்ட தொகை குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
| 1994-95 | 8 | 4.71 | 705 | 4.76 | - | - |
| 1995-96 | 5 | 2.65 | 1,640 | 15.25 | 79 | 3.96 |
| 1996-97 | 16 | 8.23 | 851 | 3.27 | 51 | 3.33 |
| 1997-98 | 5 | 3.61 | 922 | 3.52 | 52 | 4.02 |
| 1998-99 | 10 | 7.91 | 973 | 4.27 | 28 | 1.81 |

மேற்கூறிய நிறுவனங்கள் தன்னாற்றல் பெற்று இலாபகரமாக செயல்பட ரூ. 128 கோடி அளவிற்கு அவற்றிற்கு ஒரு முறை நிதி உதவி பெற்றிட மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**9. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைக்கு உத்திரவாதம் அளித்தல்**

மாநிலத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை உத்தரவாதத் திட்டம் ஒன்று 1-4-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைகளுக்கு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உத்திரவாதம் அளிக்கின்றன. தமது வைப்புத் தொகை பாதுகாப்பாக உள்ளது என்ற நம்பிக்கையை வைப்புத் தொகை செலுத்தியவர்களுக்கு ஏற்படுத்தி அதன் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அதிக அளவில் வைப்புத் தொகை திரட்டிட வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வங்கிகளின் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படவும் வைப்புத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகை செய்யவும் இதற்கென ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் உத்திரவாத நிதி

[1999 ஏப்ரல் 15

ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்புத் தொகைக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் உத்திரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்:

அ. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 0.15%

ஆ. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 0.10%

இ. மாநிலக் கூட்டுறவு வங்கி 0.05%

இத்திட்டம் தொடங்கிய நாளான 1-4-1992 முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டுள்ள வைப்புத் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| நாள் | வைப்புத் தொகை அளவு (ரூ. கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 31-3-1993 | 357.09 | 22% |
| 31-3-1994 | 465.69 | 30% |
| 31-3-1995 | 598.60 | 29% |
| 31-3-1996 | 827.84 | 38% |
| 31-3-1997 | 1180.75 | 43% |
| 31-3-1998 | 1645.85 | 39% |
| 31-1-1999 | 2045.47 | 49% |

(ஆண்டுக்கு கணக்கிடப்பட்டுள்ளது)

**10. கடன் வசூல் பணி**

எந்த ஒரு கூட்டுறவுக் கடன் நிறுவனமும், தாம் வழங்கிய கடன்களை தவணைத் தேதிக்குள் வசூல் செய்வதைத் தலையாய கடமையாக கொள்ளவேண்டும். கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் நிதிநிலைத் தன்மை. கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதைப் பொறுத்துத்தான் அமையும். கடன் வழங்கு திட்டங்களில் ஓரளவிற்கு தவணை தவறிய கடன்கள் இருப்பது தவிர்க்க இயலாதது என்ற போதிலும், எந்த ஒரு கடன் வழங்கு நிறுவனமும் அதிக அளவு தவணை தவறிய கடன் நிலுவையை தாங்க இயலாது. தவணை தவறிய கடன் அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதி சுழற்சி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் அவற்றின் செயல்பாடுகள்



1999 ஏப்ரல் 15]

முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக்கூடும். அத்துடன், அவற்றின் வியாபாரத்தை மேம்படுத்த இயலாத நிலையும் ஏற்பட்டுவிடும். தாங்கள் பெற்ற கடனை, தவணைத் தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்படவேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான், அவர்களால் பருவகால வேளாண்மை தேவைகளுக்கு, தொடர்ந்து மேலும், கடன் வசதி பெற இயலும். தேசிய வங்கியிடமிருந்து முழு அளவில் மறுநிதியுதவி பெற ஏதுவாக வசூல் பணியை தீவிரப்படுத்தவும், தவணை தவறிய கடன்களின் அளவைக் குறைப்பதற்கும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் முயற்சி செய்து வருகின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், தவணை தவறிய கடன்களின் நிலுவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு:-

| தேதியன்று | நிலுவைத் தொகை (ரூபாய் கோடியில்) | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அளவில் | |
|---|---|---|---|
| | | தவணை தவறிய நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | கேட்பில் தவணை தவறிய நிலுவையில் சதவீதம் |
| (1) | (2) | (3) | (4) |
| 30-6-1989 | 710.58 | 227.50 | 36.3 |
| 30-6-1990 | 941.31 | 398.34 | 55.6 |
| 30-6-1991 | 1091.85 | 404.63 | 43.7 |
| 30-6-1992 | 1114.32 | 444.06 | 41.4 |
| 30-6-1993 | 1435.79 | 398.71 | 31.8 |
| 30-6-1994 | 1533.63 | 397.62 | 27.5 |
| 30-6-1995 | 1719.94 | 418.80 | 24.8 |
| 30-6-1996 | 2048.95 | 576.30 | 29.8 |
| 30-6-1997 | 2236.74 | 653.69 | 28.7 |
| 30-6-1998 | 2982.01 | 835.83 | 32.4 |

[1999 ஏப்ரல் 15

**11. நகைக் கடன்**

கிராமப் பகுதிகளில் வாழ்ந்துவரும் நலிவுற்ற பிரிவினர் தமது அவசரத் தேவைகளுக்காக அதிக வட்டிக்கு அடகு வணிகர்களிடம் கடன் பெற்று அவதியுறும் நிலையைக் களையும் நோக்கத்தில், அவர்கட்கு, கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. 1998-99ஆம் ஆண்டில் ரூ. 3,400.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு, 31-1-1999 வரை ரூ. 2,452.53 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 நிதியாண்டில் ரூ. 3,900.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**12. மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்
(சேமிப்புடன் இணைந்தது)**

நமது மாநிலத்தில் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கிகளும் மற்றும் பல்வேறு வணிக வங்கிகளும் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் கடன் அளித்து வருகின்றன. ஆயினும், நகர்புறம் மற்றும் கிராமப்புறத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, சிறு வியாபாரம் செய்து அதன் வாயிலாக தமது வருமானத்தைப் பெருக்கிட போதுமான கடன் வசதிகள் இன்னும் முழுமையாக அவர்களைச் சென்றடையவில்லை. அதிக வட்டிக்கு கடன் பெற்று அன்றாடம் வியாபாரம் செய்து தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் இத்தகைய ஏழை எளிய மக்களுக்கு பொருளாதார பாதுகாப்பு என்பது இன்றளவும் கனவாகவே உள்ளது. எனவே, கூட்டுறவு வங்கிகளின் மூலம் இத்தகைய மக்களுக்குக் கடன் வழங்கி உதவிட, அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, சிறு வணிகம் செய்துவரும் மகளிர்தம் பொருளாதார மேம்பாட்டிற்காகவும். அதேநேரத்தில் சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே உருவாக்கிடவும், அரசு இப்புதிய கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டம் 'மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்' (சேமிப்புடன் இணைந்தது) என்று பெயர் விளங்கி வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ், பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியனவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்வோர் மற்றும் பெட்டிக்கடை நடத்தும் மகளிரும், தேவைக்கேற்ப ரூ.100. ரூ.200, ரூ. 500, ரூ. 1,500 என்ற அளவில் அதிகபட்சம் ரு. 5000 வரை கடன் வசதி பெறலாம். பயனாளிகளின் தேவைக்கேற்ப தினசரி காலை அல்லது மாலை நேரத்தில் கடன் வழங்கப்படும். நூறு ரூபாய் கடனுக்கு அவர்கள் தினசரி ஒரு ரூபாய்



1999 ஏப்ரல் 15]

மட்டுமே செலுத்த வேண்டி வரும். இந்த ஒரு ரூபாயிலும் 75 காசுகள் அவர்களது சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். மீதமுள்ள 25 காசுகள் வட்டிக்காகவும், சேவைக் கட்டணத்திற்காகவும் செலுத்தினால் போதும். ஆறு மாதங்களுக்குப் பிறகு பயனாளிகள் அவர்கள் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் ஒருவருக்கொருவர் கடனைத் திருப்பிச் செலுத்த பொறுப்பேற்று பிணை நிற்கலாம். பயனாளிகள் தமது வசதிக்கேற்ப அவர்களே நேரில் வந்து கடன் தொகையை வங்கியில் திருப்பிச் செலுத்தலாம் அல்லது அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திலேயே வங்கி அலுவலரிடம் தொகை செலுத்தலாம்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் இத்திட்டம் 1-1-1999 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது, இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய பிற 5 மாநகராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டம் இதர நகர்ப்பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

**13. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்**

இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளைப் பாதுகாத்திட, விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1985-86 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால், அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில், நெல், கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்புவகைப் பயிர்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்கள் முழுவதும், ஒரு விவசாயிக்கு ரூ. 10,000/-க்கு மிகாமல் ஈட்டுறுதி செய்யப்படுகிறது நெல், கோதுமை மற்றும் சிறுதானியப் பயிர்களுக்கு ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில் இரண்டு சதவிகிதமும் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கு ஒரு சதவிகிதமும் காப்புறுதிக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்தவேண்டிய காப்புறுதிக் கட்டணத் தொகையில் 50 சதவிகிதம் மானியமாக அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. மானியமாக அனுமதிக்கப்படும் இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் சம அளவில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. காப்புறுதிக் கட்டணத்தையும் ஈட்டுறுதிச் செலவினையும் மாநில மற்றும் மைய அரசுகள் 2:1 என்ற

விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. நமது மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள், உளுந்து, கொள்ளு மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. இந்திய பொது காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியினைக் கையாளும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், முறையே மைய அரசு மற்றும் மாநில அரசின் முகவர்களாகச் செயல்படுகின்றனர்.

1998-99 ஆம் ஆண்டில் காரீப் 1998 வரையிலான ஐந்து பயிர்ப் பருவங்களுக்குக் காப்புறுதிக் கட்டண மானியமாக மாநில அரசின் மூன்றில் ஒரு பங்காக ரூ. 18.83 இலட்சம் வழங்கப்பட்டது. இதனால் 76,189 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். மேலும், அதே ஆண்டில் நவரை/கோடை 1997-98 நெல்-3 பயிர் பருவம் உள்ளடக்கிய 12 பயிர்ப் பருவங்களுக்கான ஈட்டுறுதித் தொகையினை 69,770 விவசாயிகள் பெற்று பயனடையும் வகையில் மாநில அரசு தனது பங்காக ரூ. 560.00 இலட்சம் வழங்கியுள்ளது. இனிவரும் பயிர்ப் பருவங்களுக்கான காப்புறுதிக் கட்டண மானியமும் ஈட்டுறுதித் தொகைக்கான மாநில அரசின் பங்குத் தொகையும், மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டவுடன் வழங்கப்படும்.

மேலும், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட்ங்களில் அறிவிக்கப்பட்ட 24 வட்டாரங்களில் 1997-98 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் சோதனை முறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. வங்கிகளில் கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் பங்கு பெற்ற இத்திட்டத்தில், காப்புறுதிக் கட்டணம் 100 விழுக்காடும் மானியமாக அனுமதிக்கப்பட்டது. இம்மானியச் செலவினம் 8:2 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மாநில அரசின் பங்கான ரூ. 58.00 இலட்சம் 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இத்திட்டம் கைவிடப்பட்டு, காரீப் 1999 முதல் திருத்தியமைக்கப்பட்ட விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் மற்றும் சோதனைமுறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டங்களின்கீழ் காப்புறுதிக் கட்டண மானியமாக, மாநில அரசு 1998-99 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 76.83 இலட்சம் வழங்கியுள்ளது.

மத்திய அரசு முன் மொழிந்துள்ள திருத்தியமைக்கப்பட்ட விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் கடன்பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகள் பங்குபெறவும், பிற பயிர்களையும் கூடுதலாக இத்திட்டத்தில்



சேர்க்கவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை இம்மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

### (ஆ) நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பு

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாநில அளவில் தலைமை வங்கியாகவும், 181 கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டம்/வட்டார அளவிலும் செயல்படுகின்றன. இவை தமது உறுப்பினர்களுக்கு வேளாண்மைக் காரியங்களுக்காகவும், சிறு பாசனத் திட்டம், தோட்டப்பயிர் மற்றும் மலைப் பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டி வாங்குதல், பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்ற வேளாண் சார்ந்த காரியங்களுக்காகவும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. மேலும், சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கிணறுகளைப் பழுது பார்த்தல், பாசனத்திற்கு நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் மற்றும் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், கால்நடைத் தொழுவம் மற்றும் பண்ணை வீடு கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் நீண்டகாலக் கடன் வழங்குகின்றன. இத்தகைய கடன்களை திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையாகும்.

#### 1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி திரட்டுகிறது. மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தேசிய ஊரக வளர்ச்சி வங்கி மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன.

1995-96 முதல் ரூ. 10.00 இலட்சங்கள் வரை அனுமதிக்கப்பட்ட மறுநிதி வசதியின் அளவு, அக்டோபர் 1998 முதல் ரூ.15.00 இலட்சங்களாக தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, ரூ. 15.00 இலட்சங்களுக்குமேல் மறுநிதிபெறும் திட்டங்களுக்கும் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் மட்டுமே தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் தேவைப்படும். 1997-98 மற்றும் 1998-99 ஆம் வருடத்தில் அதாவது 31-1-1999 வரை தமிழ்நாடு கூட்டுறவு

[1999 ஏப்ரல் 15

மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:—

| வ.எண் | வருடம் | பரிந்துரைக் கப்பட்ட திட்டங்கள் | வழங்கப் பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | வங்கியால் அனுமதிக்கப் பட்ட திட்டங்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 1997-98 | 6 | 0.83 | 3 | 0.40 |
| 2. | 1998-99 (31-1-1999 வரை) | 8 | 3.41 | 8 | 3.41 |

31-1-1999 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூ. 170.95 கோடி அளவில் இருந்தது. இதன் விவரம் பின்வருமாறு:

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 33.17 |
| 2. | சட்ட ரீதியான காப்பீடு | 2.69 |
| 3. | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்கான காப்பீடு உட்பட) | 135.09 |
| | மொத்தம் | 170.95 |

சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள் முதிர்வடையும்போது, அவற்றை மீட்க ஏதுவாக, இவ்வங்கி 'கடனீட்டுப் பத்திரமீட்பு நிதி' ஒன்றினைப் பராமரித்து வருகிறது. அந்நிதியில் 31-1-1999 அன்றைய தேதியில் ரூ. 16.93 கோடி நிலுவை உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் செயல்படும் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்தும் திட்டங்களினால் விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற்ற பலன்கள் குறித்தும் ஆய்வுசெய்கிறது. 31-1-1999



1999 ஏப்ரல் 15]

தேதியளவில் 439 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

**2. கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ஆதாரத்தைத் தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கிறது.

கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஒன்பதாவது திட்டக் காலத்தில் அளித்துள்ள நீண்டகாலக் கடன்கள் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

| | | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் | 1997-98 | 226.00 | 191.60 |
| | 1998-99 (31-1-1999 வரை) | 248.60 | 105.30 |
| | 1999-2000 (குறியீடு) | 273.46 | - |

நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற துறைகளிலும் கடன் வழங்க தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:

**(ii) பண்ணை சாரா துறையில் நிதி வசதி அளித்தல்**

கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கிராம கைவினைஞர், கைத்தொழில் வல்லுனர்கள் மற்றும் சிறு தொழில் செய்வோருக்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்கும் திட்டம் 1990-91 முதல் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தினால் கிராம மக்கள் வேலைவாய்ப்புப் பெறுவதுடன், தமது வருமானத்தையும் பெருக்கி பயன் பெற முடியும். தொடக்க வேளாண்மை

[1999 ஏப்ரல் 15

மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெறுவதற்கான தகுதிகளைக் கருத்தில் கொள்ளாமல், தேசிய வங்கி 100 சதவீதம் மறு நிதியளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் வரை கூட்டுக் கடனாகவும் ரூ.15.00 இலட்சம் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் கடந்த மூன்று வருடங்களில் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள பண்ணைசாராக் கடன்கள் குறித்த விபரமும், 1999-2000 ஆம் ஆண்டுக்கான குறியீடும் கீழே தரப்பட்டுள்ளன :

| வருடம் | கடன் அளித்த விவரம் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995-96 | 79.92 |
| 1996-97 | 78.11 |
| 1997-98 | 75.54 |
| 1998-99 (31-1-1999 வரை) | 36.54 |
| 1999-2000 (குறியீடு) | 101.00 |

**(ii) கிராமப் புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்**

கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சரக்குப் பேருந்து, வேன், கார், ஆட்டோ ரிக்ஷா முதலான வாகனங்கள் வாங்குவதற்கு பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் வாகன மதிப்பில் 85 சதவீதம் கடன் வழங்கப்படும்.

**3. சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி**

நலிந்த பிரிவினர்களுக்கு 9ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது :



1999 ஏப்ரல் 15]

| வருடம் | வழங்கப்பட்ட மொத்த கடன் | நலிவுற்ற பிரிவனருக்கு வழங்கிய கடன் | வழங்கப்பட்ட மொத்த கடனீட்டுத் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடனின் விழுக்காடு |
|---|---|---|---|
| | (ரூ. கோடியில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1997-98 | 191.60 | 36.83 | 19.22% |
| 1998-99 (31-1-1999 வரை) | 105.30 | 31.32 | 29.74% |

**4. கடன் வசூல்**

கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி அவற்றின் கடன் வசூலைப் பொறுத்தே அமைகின்றது. கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சூன் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்குள், கடன் தவணையில் குறைந்தது 60 விழுக்காட்டிற்கும் குறையாமல் வசூல் செய்யாவிடில் அவை வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும், தேசிய ஊரக வளர்ச்சி வங்கி, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வரையறையற்ற மறுநிதி பெற நிர்ணயித்துள்ள வசூல் சதவீத வரம்பை 70 சதவீதமாக 1998-99 ஆம் ஆண்டும் 75 சதவீதமாக 1999-2000 ஆம் ஆண்டும் உயர்த்தியிருந்தது. எனினும், தேசிய ஊரக வளர்ச்சி வங்கி மேற்கண்ட விதிமுறையினைத் தளர்த்தி, வரையறையற்ற மறுநிதி பெற 1998-99 ஆம் ஆண்டில் 60 சதவீத அளவிற்கான கடன் வசூல் இருக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளது.

அதிக அளவு கடன் வசூல் எய்துவதுவே கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்துடன் இயங்குவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். இருப்பினும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினாலும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கடன் பெற்றவர்கள் முன் வராத காரணத்தாலும் தவணை தவறிய கடன் தொகை அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாகும். எனவே, இவ்வங்கிகள் கடன்தாரர்களை அடிக்கடி நேரில் சந்தித்து அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த ஊக்கப்படுத்தி கடன் வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

[1999 ஏப்ரல் 15

தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மட்டத்தில் 1997-98ஆம் ஆண்டின் கடன் வசூல் 43.5 சதவீதம் ஆகும். கடன் வசூலின் மந்தமான போக்கும், இம்மாநிலத்தில் பெரும்பான்மையான இடங்களில் நிலவிய மோசமான பருவ நிலையும் கடன் வசூலை இவ்வருடம் பாதித்துள்ளது. 1997-98-ம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் நடப்பு கேட்புத் தொகையான ரூ.30.29 கோடி மீதான கடன் தவணைத் தொகையை ஒத்திவைக்க ஒரு முன்மொழிவு தேசிய ஊரக வளர்ச்சி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், தேசிய வங்கி மேற்படி கோரிக்கையை ஏற்கவில்லை. இருப்பினும் தேசிய வங்கியின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மட்டத்தில் 31-1-1999 ஆம் தேதியன்று வசூல் 15.6 சதவீதம் ஆக உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் அளவில் கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:—

| தேதியளவில் | கடன் நிலுவைத் தொகை (ரூ.கோடியில்) | தவணை கடந்த நிலுவைத் தொகை (ரூ. கோடியில்) | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 30-6-1996 | 562.85 | 110.42 | 57.7% |
| 30-6-1997 | 694.43 | 150.51 | 53.0% |
| 30-6-1998 | 786.05 | 201.65 | 56.5% |
| 31-1-1999 | 852.87 | 261.97 | 84.4% |

**5. பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி**

பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதி என்ற திட்டம் 1-7-1986 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வணிக வங்கிகள் மற்றும் ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகட்கும் 100 விழுக்காடு அளவிற்கு இந்நிதியிலிருந்து மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் அசலுக்கான



1999 ஏப்ரல் 15]

மானியம் மாநில மற்றும் மத்திய அரசுகளினால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. வட்டிப் பகுதியைப் பொறுத்தமட்டில் தேசிய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திட்டங்கள் சார்ந்த கடனாக இருந்தால் அவ்வங்கியும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியும், செலவினைச் சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன. இதர சாதாரணத் திட்டம் சார்ந்த கடன்களாக இருந்தால் முழு வட்டித் தொகையையும் சம்பந்தப்பட்ட வங்கிகள் முழு அளவிலும் தள்ளுபடி செய்து தம் சொந்த நிதியிலிருந்து ஏற்றுக்கொள்கின்றன. 1993-94-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான நிதியுதவியினை மத்திய அரசு நிறுத்திவிட்டது. இருந்தபோதிலும் மாநில அரசு தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-1-1999 வரை 271 பொய்த்த கிணறுகளுக்கு ரூ.43.31 இலட்சம் அளவிற்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**(இ) நகர்ப்புறக் கடன்**

தற்போது தமிழகத்தில் 126 நகர கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவ்வங்கிகள் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் தரப்புப் பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகைகளைச் சேகரித்து அவற்றைத் தெரிவு செய்யப்பட்ட காரணங்களுக்குக் கடனாக வழங்கப் பயன்படுத்தி வருகின்றன. நகரப்பகுதிகளைச் சார்ந்த சிறுவியாபாரிகள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும், நடுத்தரப் பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்கும், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் கடன் வழங்கி உதவி வருகின்றன. 1-4-1998 முதல் 31-1-1999 வரையில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்குக் குறுகிய கால மற்றும் மத்தியக்காலக் கடனாக ரூ. 1147.50 கோடி அளவிற்கு கடன்களை இவ்வங்கிகள் வழங்கி உள்ளன. இவ்வங்கிகளின் வைப்புத் தொகை 31-1-1999 அன்றைய நிலவரப்படி ரூ.1834.18 கோடி ஆகும். இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கிட வேண்டும். அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும் இருந்திடல் வேண்டும்.

**2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்**

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன்பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிவு

[1999 ஏப்ரல் 15

செய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 500/- வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 1997-98 ஆம் ஆண்டுவரை நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 13,017 நபர்களுக்கு ரூ. 65 இலட்சம் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது.

அதேபோன்று நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 500/- வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டுகாலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. நகர்ப்புற வங்கிகள் மூலம் வேளாண்மை சார்பற்ற கடன்கள்**

நகர் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மை சாரா பிரிவினைச் சார்ந்த குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் வேளாண்மை சாரா சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ரூ.70.00 கோடி அளவிற்குக் கடன் வழங்க திட்டமிடப்பட்டது. 31-1-1999 வரை ரூ. 68.90 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 46,196 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம்-4

### தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள விவசாயம் மற்றும் அது தொடர்புடைய அனைத்து கூட்டுறவு அமைப்புகளையும் வலுப்படுத்துவதன் மூலம் அம்மாவட்டங்களில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். சங்க முன்னேற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், ஒரு பகுதியின் மொத்த முன்னேற்றத்தையும் காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், கூட்டுறவு வங்கிகளின் உள்ளமைப்பு வசதிகளை உருவாக்கவும், நடைமுறை மூலதனத்தை அதிகரித்து வங்கிகளிலிருந்து நிதி உதவி பெற ஏதுவாக விளிம்புத் தொகை உதவி அளிக்கவும், உறுப்பினர் கல்வி மற்றும் விளம்பரம் செய்தல் போன்ற முக்கிய நோக்கங்களுக்காகவும் நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன.

விருதுநகர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு நிறைவு அடைந்துள்ளன. முதன் முதலில் விருதுநகர் மாவட்டத்தில் ரூ. 861.36 இலட்சம் செலவில் இத்திட்டம் 1989-1995 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது.

இரண்டாவதாக இத்திட்டம் கடலூர் / விழுப்புரம் மாவட்டங்களில் (பிரிக்கப்படாத தென்னாற்காடு மாவட்டத்தில்) ரூ. 1,506.969 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 1992-93, 1996-97 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. கோயமுத்தூர், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இத்திட்டம் முறையே ரூ. 1,081.07 இலட்சம், ரூ. 1,160.25 இலட்சம் மற்றும் ரூ.816.58 இலட்சம் மதிப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ. 1,123.88 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்த 1998 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அரசு ஆணையிட்டுள்ளது. முதலாண்டுத் தொகையான ரூ. 256.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கம் தற்போது தொடங்கியுள்ளது.

[1999 ஏப்ரல் 15

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.983.32 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்த ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்திற்கான முதலாண்டுத் தொகையை வழங்குவது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திருவாரூர், திருச்சிராப்பள்ளி. தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம்-5

### கூட்டுறவின் மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் இதர விவசாய இடுபொருட்களான விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்களை 4,355 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 5,678 சில்லறை உர விற்பனை நிலையங்கள் வழியாக தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்துவருகின்றன. இவ்விடுபொருட்கள் சங்க அங்கத்தினர்கள் பெறும் பயிர்க் கடனில் பொருட்பகுதியாகவும், சங்க அங்கத்தினர் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன.

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் விநியோகம் செய்யப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் மதிப்பு கோடியில்)

| வருடம் | இரசாயன உரங்கள் | விதைகள் | பூச்சிக்கொல்லி மருந்துகள் | விவசாய உபகரணங்கள் |
|---|---|---|---|---|
| 1997-98 | 234.47 | 1.69 | 2.23 | 0.68 |
| 1998-99 (சனவரி 99 வரை) | 197.22 | 2.20 | 2.26 | 0.43 |
| 1999-2000 (குறியீடு) | 320.00 | 3.00 | 8.9[illegible] | 1.10 |

[1999 ஏப்ரல் 15

# அத்தியாயம்-6

## கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

## கூட்டுறவு விற்பனை

தற்போது தமிழ்நாட்டில் 114 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் இயங்கிவரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக சேவை செய்துவருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தேவைகளை திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் நிறைவு செய்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக இரசாயன உரங்கள், மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை விநியோகித்துவருவதால், அவ்விணையம் ஒரு மொத்த விற்பனை அமைப்பாகச் செயல்படுகின்றது. 1970 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்தால் நிறுவப்பட்ட உரக்கலவை ஆலை, நாளொன்றுக்கு 120 டன் என்.ப்பி.கே. உரக்கலவையைத் தயாரித்து வருகிறது. இவ்விணையம் மாநிலத்தில் மேலும் 8 இடங்களில் உரக்கலவை மையங்களை நடத்திவருகிறது. பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும் இவ்விணையம், விளைபொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்கும் வகையில், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. 26,640 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 35 சொந்தக் கிடங்குகளையும், 21,355 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 வாடகைக் கிடங்குகளையும், சென்னையில் பேசின் பிரிட்ஜில் 1,350 மெட்ரிக் டன கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்பதனக் கிடங்கினையும், சென்னை புறநகர் பகுதியிலுள்ள கோயம்பேட்டில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள மற்றொரு குளிர்பதனக் கிடங்கினையும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நடத்திவருகிறது.

1998-99 ஆம் ஆண்டில் சனவரி 1999 வரை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்ற நிறுவனங்களும் விற்பனை செய்த வேளாண் இடுபொருட்களின் விபரம் பின்வருமாறு:—



1999 ஏப்ரல் 15]

| வரிசை எண் | பொருள் | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | | மற்ற நிறுவனம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு மெ. டன் | மதிப்பு | அளவு மெ.டன் | மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | அளவு மெ.டன் | மதிப்பு (ரூ.இலட்சத்தில்) |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (8) (ரூ.இலட்சத்தில்) | | | | | | | |
| 1. | இரசாயன உரங்கள் | 1,46,742 | 1,60,41.03 | 32,244 | 3,680.89 | 1,78,986 | 19,721.92 |
| 2. | பாமணி உர உற்பத்தி | 15,956 | 1139.58 | .. | - | 15,956 | 1139.58 |
| 3. | பாமணி உர விற்பனை | 15,956 | 1139.58 | .. | - | 15,956 | 1139.58 |
| 4. | பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியது | - | 92.19 | - | 134.24 | - | 226.43 |
| 5. | விதைகள் வழங்கியது | - | 26.19 | - | 193.54 | - | 219.73 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது | . | 6.34 | .. | 36.48 | - | 42.82 |

### (அ) வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் அங்கத்தினர்களுக்கு விவசாய விளைபொருட்களைப் பதனிடுதல், சேமித்தல் மற்றும் இடைத்தரகர்களின் தலையீடின்றி நல்ல விலைக்கு அவர்களது வேளாண் விளைபொருட்களை விற்பதற்கும் உதவிபுரிகின்றன. வேளாண் பொருட்களை ஏல விற்பனை மூலம் வியாபாரிகளுக்கு விற்கும் பணியிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியிலும் இச்சங்கங்கள் ஈடுபடுகின்றன. இச்சங்கங்கள் நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையே முகவராகவும் செயல்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விளைபொருட்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமும் இருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அவற்றை விற்பனை செய்வதுடன், சந்தை விலை சாதகமாக அமையும்போது வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வேளாண் விளைபொருட்களைப் பெரிய அளவில் விற்பனை செய்கிறது.

[1999 ஏப்ரல் 15

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு 1998-99 ஆம் ஆண்டில் (தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உட்பட) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடும் மற்றும் சனவரி 1999 வரை எய்திய முன்னேற்றம் பற்றிய விபரங்களும் பின்வருமாறு:-

| வரிசை எண் (1) | பொருள் (2) | 1998-99 ஆம் ஆண்டுக்குறியீடு (3) | சனவரி 1999 முடிய எய்திய முன்னேற்றம் (4) (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நெல் மற்றும் அரிசி | | 1,039.02 |
| 2. | உணவு தானியங்கள் | | 1,615.22 |
| 3. | பருத்தி | | 10,302.43 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | | 2,076.53 |
| 5. | பருப்பு வகைகள் | | 226.06 |
| 6. | மிளகாய் மற்றும் புளி | 32,500.00 | 152.32 |
| 7. | வாசனைப் பொருட்கள் | | 58.52 |
| 8. | காய்கறிகள் | | 1,759.11 |
| 9. | மற்றவை | | 2,575.14 |
| 10. | கரும்பு | 20,000.00 | 13,063.49 |
| | கூடுதல் | 52,500.00 | 32,807.84 |

1999-2000 ஆம் ஆண்டிற்கான வேளாண் விளைபொருள்களின் விற்பனைக் குறியீடு ரூ.575.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்கள் அதிக இலாபம் பெறும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வாறு பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்குச் செலுத்திவிடுகின்றன.





1998-99 ஆம் ஆண்டிற்கு குறியீடு ரூ.110.00 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டதில் சனவரி 1999 முடிய ரூ.71.00 இலட்சம் அளவிற்குக் கடன் தொகைகள் இத்திட்டத்தின் மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளன. 1999-2000-க்கான ஆண்டுக் குறியீடு ரூ.120.00 இலட்சம் அள்வுக்கு நிர்ணயம் செய்யப்பட்டவுள்ளது.

**(இ) நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு**

ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றது.

1998-99 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூ.85.00 இலட்சம் ஆகும். சனவரி 1999 முடிய ரூ.437.87 இலட்சம் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவு மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன. இவ்வினத்தில் 1999-2000 ஆம் ஆண்டுக்கான குறியீடு ரூ.550.00 இலட்சம் என உயர்த்தப்படவுள்ளது.

**(ஈ) விளைபொருட்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்**

சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்துவருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் சனவரி 1999 வரை ரூ.801.72 இலட்சம் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.775.00 இலட்சம் குறியீடாக நிர்ணயிக்கப்பட உள்ளது.

**பதப்படுத்தும் அலகுகள்**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கீழ்க்காணும் பலவகைப்பட்ட 106 பதனிடும் அலகுகள் விவசாயிகளுக்குப் பதனிடும் வசதிகளைக் குறைந்த செலவில் செய்து தருகின்றன. அவைகளுக்குப் பங்குமூலதனமாகவும் கடனாகவும் தேசிய கூட்டுறவு

[1999 ஏப்ரல் 15

வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசும் நிதி உதவி அளித்துவருகிறது.

| வரிசை எண் (1) | பதப்படுத்தும் அலகுகளின் பெயர் (2) | அலகுகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | அரிசி அரைவை ஆலை | 36 |
| 2. | பருத்தி அரைவை ஆலை | 17 |
| 3. | கடலை உடைப்பு இயந்திரங்கள் | 13 |
| 4. | எண்ணெய் தொகுப்பு மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை | 14 |
| 5. | பழம் பதப்படுத்தும் அலகு | 3 |
| 6. | காப்பி அரைவை ஆலை | 3 |
| 7. | காப்பி சுத்தப்படுத்தும் ஆலை | 1 |
| 8. | மரவள்ளிக் கிழங்கு ஆலை | 1 |
| 9. | மஞ்சள் அரைவை ஆலை | 2 |
| 10. | மாவு ஆலை | 4 |
| 11. | பருப்பு ஆலை | 2 |
| 12. | சேமியா அலகு | 2 |
| 13. | குளிர்பதனக் கிடங்கு | 2 |
| 14. | புளி பதப்படுத்தும் அலகு | 1 |
| 15. | சீயக்காய் அரைவை ஆலை | 2 |
| 16. | விதை பதனிடும் அலகு | 2 |
| 17. | சோப்பு உற்பத்தி ஆலை | 1 |
| | மொத்தம் | 106 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆலைகள் 1997-98 ஆம் ஆண்டில் 31,820 மெட்ரிக் டன் பொருட்களையும் 1998-99 ஆம் ஆண்டில் சனவரி 1999 முடிய 38,131 மெட்ரிக் டன் பொருட்களையும் பதப்படுத்தியுள்ளன.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக மேட்டுப்பாளையத்தில் ரூ.87.50 இலட்சம் செலவில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றினையும், தமிழ்நாடு



1999 ஏப்ரல் 15]

கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக கோயம்பேடு வணிக வளாகத்தில் ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் 750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் குளிர்பதனக் கிடங்கு ஒன்றினையும் நிறுவ அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(3) பண்டக சேமிப்பு கிராமிய மற்றும் விற்பனைக் கிடங்குகள்**

30-6-1992 வரை III உலக வங்கியின் கூட்டுறவுப் பண்டக சேமிப்புத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. அத்திட்டம் தொடரப்படாததால் கூட்டுறவுகளுக்கு 1-7-1992 முதல் கிடங்கு கட்ட நிதியுதவி அளிக்கப்படவில்லை.

31-1-1999 ஆம் தேதி நிலவரப்படி உள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும் கொள்ளளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன் இலட்சம்) |
|---|---|---|
| அ) ஊரகக் கிடங்குகள் | 5,055 | 5.75 |
| ஆ) விற்பனைக் கிடங்குகள் | 261 | 1.33 |
| இ) நுகர்வோர் கிடங்குகள் | 50 | 0.31 |
| மொத்தம் | 5,366 | 7.39 |

[1999 ஏப்ரல் 15

## அத்தியாயம் - 7

### நுகர்வோர் கூட்டுறவு

**1. அமைப்பு**

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவுக் கட்டமைப்பானது, தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 35 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் 3,000 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,599 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளையும் கொண்டு இயங்கிவருகிறது.

**2. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையம் இறக்குமதி அல்லது மொத்த கொள்முதல் மூலமாக நுகர்பொருட்களைப் பெற்று, அவற்றைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதையும், மாவட்ட மற்றும் தொடக்க நுகர்வோர் பண்டகசாலைகளின் செயல்பாட்டை ஒருமுகப்படுத்துவதையும் தனது முதன்மையான நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

இவ்விணையம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் கூட்டுவர்த்தக முறையில் சேர்ந்து, 1999 ஆம் ஆண்டில் 450 மெட்ரிக் டன் துவரம் பருப்பினையும், 200 மெட்ரிக் டன் கறுப்பு உளுந்தினையும், அவை உற்பத்தியாகும் இடங்களிலேயே கொள்முதல் செய்து, இம்மாநிலத்தில் விநியோகம் செய்வதன் மூலமாக இவற்றின் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்திட உத்தேசித்துள்ளது. பட்டாசுகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து விழாக் காலங்களில் கூட்டுறவுகள் மூலமாக விற்பனையும் செய்கிறது. கூட்டுறவு அச்சகங்களின் தேவைக்கு காகிதம் வாங்குவதற்கும், கூட்டுறவு அமைப்புகள் மூலமாக மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை விநியோகிப்பதற்கும் இவ்விணையம் ஓர் ஒருமுகப்படுத்தும் முகவராகச் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்**

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவள்ளூர் மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை அமைப்பதற்கு ஆரம்ப நிலைப் பணிகள் முடிக்கப்பட்டு,



1999 ஏப்ரல் 15]

அப்பண்டகசாலைகள் விரைவில் தொடங்கவுள்ளன. நலிவுற்ற மொத்த பண்டகசாலைகளை புனரமைப்பதற்காக, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு செயலரை தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பண்டகசாலைகளுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பங்கு மூலதனக் கடன் வாங்குதல், சலுகை வட்டி விகிதத்தில் நிதிக் கடன் வரையறையை மத்தியக் காலக் கடனாக மாற்றுதல், தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவற்றிடமிருந்து புதிய கடன் பெறுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், புனரமைப்பு நடவடிக்கையாக பண்டகசாலைப் பணியாளர்களுக்கென தன்விருப்ப ஓய்வூதியத் திட்டம் ஒன்று வரையப்பட்டு இதற்காக ரூ. 472.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 291 பணியாளர்கள் பண்டகசாலைகளின் பணியிலிருந்து தாமே ஓய்வு பெற்றுள்ளனர். மேலும், அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் பயன்படும் வகையில் ஒரு 'மென்பொருள்' (கணினி) உருவாக்கிடவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள்**

மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகளின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், மாணவர்கள் கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியத்தைப் புரிந்துகொண்டு அதில் முழு ஈடுபாடு கொள்ள ஏதுவாக, 1999 ஏப்ரல்/மே திங்கள்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட அளவிலான கருத்தரங்குகளை, அம்மாவட்டத்தில் சிறந்த முறையில் இயங்கும் மாணவர் கூட்டுறவு பண்டகசாலையின் வளாகத்தில் நடத்திடவும், அவ்வளாகத்தை மற்ற கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு பயிலிடமாக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) நுகர்பொருள் சில்லறை விற்பனை**

நுகர்பொருட்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வது கூட்டுறவுத் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். 1998-99 ஆம் ஆண்டில் சனவரி 1999 வரை ரூ. 1553.37 கோடி அளவிற்கு நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(iii) சந்தை தலையீடு**

அத்தியாவசியப் பண்டங்களின் பற்றாக்குறை அதிகமாக அதிகமாக, நுகர்வோர் கூட்டுறவுகளின் பணியும் பொறுப்பும் கூடுகிறது. விலை உயரும்

[1999 ஏப்ரல் 15

பொழுதும், பெருமளவு பற்றாக்குறை ஏற்படும்பொழுதும், பொது மக்களும், அரசும், நுகர்வோர் கூட்டுறவுகளையே பாலைவனத்தில் ஓர் சோலையாக நோக்குகின்றனர். சென்ற ஆண்டில் வெங்காயமும், காய்கறிகளும் விலையேறிய சமயத்தில் கூட்டுறவுகள் மூலமாக அப்பொருட்களை கொள்முதல் செய்து பொது மக்களுக்கு அவைகள் உடனடியாகவும் மலிவாகவும் கிடைக்கத் தேவையான உடனடி நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. சில அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலைகளைக் கண்காணித்து விலையேற்றத்தைக் கட்டுப்படுத்திட தேவையான நடவடிக்கைகளை எடுத்திடவும் அத்தியாவசியப் பொருட்களை பொறுத்தமட்டில் ஏற்படும் தேவை மற்றும் அவற்றை கூட்டுறவுகள் மூலமாக விற்பனை செய்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவற்றை வெளிமாநிலங்களில் கொள்முதல் செய்வதற்கு வழிகாட்டி முறைகளை வகுத்திடவும், அரசு தலைமைச் செயலரின் தலைமையில் ஒரு விலை கண்காணிப்பு குழுவினை அமைத்துள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் ஒரு கூட்டு வர்த்தக முறையில் இணைந்து வெளிமாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்திட பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**(iv) மதுபான விற்பனை**

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளாலும் தொடக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளாலும் 539 மதுபான கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இலாபகரமான இந்த வாணிபம், நட்டமடைந்து கொண்டிருந்த சில பண்டகசாலைகள் இலாபம் ஈட்டிட உதவியுள்ளன. “டாஸ்மாக்” நிறுவனம் அளித்திடும் மதுவகைகளை மட்டுமே கூட்டுறவுகள் விற்பனை செய்வதால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையிலேயே அவற்றை வழங்குகின்றன. இதனால் ஆயத்தீர்வை மூலமாக அரசுக்கு வருமானம் தேடித் தருவதுடன், தங்களுக்கும் நல்ல இலாபத்தையும் பெற்றுக் கொள்கின்றன.



1999 ஏப்ரல் 15]

# அத்தியாயம் - 8

## பொது விநியோகத் திட்டம்

பொதுமக்கள் பெரும் அளவில் பயன்படுத்தும் அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் கோதுமை உபபொருட்களான ரவை, மைதா மற்றும் சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை 149 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,732 நகர்புற மற்றும் 16,551 கிராமப்புற நியாயவிலைக் கடைகளின் மூலமாக விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சனவரி 1999 நிலவரப்படி கூட்டுறவுச் சங்கங்களால் 21,283 நியாயவிலைக் கடைகள் நடத்தப்படுகின்றன.

இவற்றுடன் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பெறும் 3,431 பகுதிநேர நியாயவிலைக் கடைகள், வெகுதொலைவில் உள்ள குடும்பங்களுக்கு சேவை செய்கின்றன. மகளிரால் 181 மகளிர் துணை விற்பனை நிலையங்கள் நடத்தப்படுகின்றன. 36 நடமாடும் நியாயவிலைக் கடைகள் மலைப்பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் சேவை புரிகின்றன. குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படுகின்றன. மண்ணெண்ணெய் விநியோகத்தை சீரமைக்க 122 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தற்பொழுது செயல்பட்டுவருகின்றன. நியாயவிலைக் கடைகளை நடத்த தனியார் எவருக்கும் உரிமம் அளிக்கப்படவில்லை என்பது இம்மாநில பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பாகும்.

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள், 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 1,280.91 கோடி மதிப்பிற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்துள்ளன. 1998-99 ஆம் ஆண்டில், ஏப்ரல் 1998 முதல் சனவரி 1999 வரை, இவை ரூ. 1,122.54 கோடி மதிப்புள்ள அத்தியாவசிய பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்வருமாறு விநியோகித்துள்ளன:—

| வஎண் (1) | பொருள் (2) | 1997-98 அளவு மெட்டன்னில் (3) | 1997-98 மதிப்பு (ரூ. கோடியில்) (4) | 1998-99 அளவு மெட்டன்னில் (5) | 1998-99 மதிப்பு (ரூ. கோடியில்) (6) |
|---|---|---|---|---|---|
| 1. | அரிசி | 2061292 | 731.60 | 1494967 | 584.37 |
| 2. | சர்க்கரை | 275070 | 301.51 | 218254 | 274.52 |
| 3. | கோதுமை | 80028 | 42.45 | 113667 | 62.39 |
| 4. | மண்ணெண்ணெய் (கி.லிட்டரில்) | 679673 | 198.25 | 525030 | 162.97 |
| 5. | பாமாயில் | 1410 | 3.95 | 2665 | 9.70 |
| 6 | ரவை | 6883 | 5.19 | 9938 | 9.46 |
| 7. | மைதா | 22261 | 15.94 | 21969 | 19.13 |
| 8. | ஆட்டா | 25 | 0.02 | - | - |
| | | | 1280.91 | | 1122.54 |

**புதிய நியாயவிலைக் கடைகள் திறத்தல்**

புதிய நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கான வழிமுறைகள் மார்ச் 1997-இல் அரசால நிர்ணயிக்கப்பட்டது. இவ்வரண்முறைகள் வழங்கப்பட்ட பிறகு 961 முழுநேர நியாயவிலைக் கடைகளும் 1,164 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் தமிழகம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களால் திறக்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணயித்துள்ள வரண்முறைகள் பூர்த்தியாகும் இனங்களில், புதிய நியாயவிலைக் கடைகளை திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடந்த ஆண்டே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்**

நியாயவிலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கும்போது ஏற்படக்கூடிய அளவு குறைபாடு, குறித்த காலத்தில் வழங்காமை போன்ற குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு மண்ணெண்ணெயை மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் மூலமாக வழங்கும் ஒரு புதிய திட்டத்தை 1997 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையமும், அருகில் உள்ள ஐந்து அல்லது ஆறு நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள சுமார் 5,000-க்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெயினை வழங்கும்



இத்திட்டம் முதலில் சென்னையில் 1997-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நகராட்சி பகுதிகளுக்கும் இத்திட்டம விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 500 விற்பனை நிலையங்களை 2000-ஆவது ஆண்டுக்குள் ஏற்படுத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

# அத்தியாயம் - 9

## தனிவகைச் சங்கங்கள்

**1. கூட்டுறவு அச்சகங்கள் :**

தமிழ்நாட்டில் மொத்தம் 25 கூட்டுறவு அச்சகங்கள் இயங்கிவருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப்பணிகளையும், அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் (ஊராட்சி ஒன்றியம், நகராட்சி முதலியன) ஆகியவற்றின் அச்சுப் பணிகளையும் மேற்கொள்கிறது.

31-3-1998 தேதிய நிலவரப்படி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 10,313 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ. 97.72 இலட்சம் ஆகும். 1997-98 ஆம் ஆண்டில் கூட்டுறவு அச்சகங்களின் மொத்த வியாபாரம் ரூ. 22.55 கோடியாக இருந்தது. 1998-99 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ. 23.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் ஜனவரி 1999 முடிய ரூ. 15.89 கோடி எய்தப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ. 24.00 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது.

கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், அவை நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள வாங்குவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 1996-97 ஆம் ஆண்டில், சென்னை மத்தியக் கூட்டுறவு அச்சகத்திற்கும், கோவை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கும் ரூ. 10.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கும், புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகத்திற்கும் ரூ. 6.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது 1998-99 ஆம் ஆண்டில் தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகங்களுக்கு ரூ. 8.00 இலட்சம், அரசினால் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம் மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு அச்சகம் இவை ஒவ்வொன்றிற்கும் ரூ. 5.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.





**2. உப்பு தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள்:**

உப்பு உற்பத்தியாளர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உன்னத நோக்கத்துடன் "உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்" உருவாக்கப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கிவரும் 15 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 7 சங்கங்கள் பிரத்தியேகமாக ஆதிதிராவிட மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, தையூர் ஆதிதிராவிடர் கூட்டுறவு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தின் மூலமாக "அயோடின்" கலந்த உப்பினை உற்பத்தி செய்ய 'தாட்கோ' திட்டத்தின்கீழ் ரூ. 132.32 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

தற்போது இம்மாநிலத்தில் 212 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 40% அளவிற்கான சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ளன. 40 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக மட்டுமே இயங்கி வருகின்றன. ஒப்பந்த அடிப்படையில், வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை அளித்தல் முதலான பல்வேறு இனங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது

1998-99 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்தில், புதிய தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

**4. இதர தனி வகைச் சங்கங்கள்:**

சமூகத்தில் முடிதிருத்துதல் மற்றும் சலவை தொழில்களை செய்யும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது 12 சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**5. மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு:**

பழங்குடியின மக்களின் நலன் காத்திட தற்போது தமிழ்நாட்டில் 18 "மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்" செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் அப்பகுதிவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த 72,362 நபர்களும், பழங்குடியினரல்லாத 7,044 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பழங்குடியின மக்களின் மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு 'பழங்குடியினர் துணைத்திட்டத்தின்' கீழ் தொடர்ந்து நிதி உதவியினை வழங்கி வருகின்றது. இச்சங்கங்கள் விவசாயம் மற்றும் பிற உற்பத்தி காரியங்களுக்காக வட்டியில்லாக் கடன்களை அளிக்கின்றன. இச்சங்கங்களின் மூலம் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில், இச்சங்க உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பு மானியம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகிறது. இச்சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சில புதிய திட்டங்களுக்கும் அரசு மானிய நிதி உதவி வழங்கி வருகிறது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1996-97 வரை) "பழங்குடியினர் துணைத் திட்ட"த்தின்கீழ் பல்வேறு திட்டங்களுக்கு மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு நிதி உதவியாக ரூ. 415.88 இலட்சம் வழங்கியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முதலாண்டில் (1997-98) ரூ. 84.64 இலட்சமும், இரண்டாம் ஆண்டில் (1998-99) ரூ. 90.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 174.64 இலட்சம் அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.



எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | கடன் வழங்கியது | வேளாண் விளைப் பொருள் கொள்முதல் | வேளாண் இடுபொருள் வழங்கியது | சிறுவனப் பொருள் சேகரம் | நுகர்பொருள் விநியோகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1992-93 | 409.88 | 71.65 | 93.52 | 87.23 | 309.67 |
| 1993-94 | 492.04 | 90.04 | 105.07 | 92.26 | 415.07 |
| 1994-95 | 641.23 | 100.64 | 101.25 | 88.65 | 481.04 |
| 1995-96 | 790.80 | 122.22 | 123.56 | 112.95 | 476.90 |
| 1996-97 | 847.07 | 135.98 | 125.62 | 67.85 | 580.61 |
| 1997-98 | 734.52 | 123.77 | 110.08 | 46.08 | 427.01 |
| 1998-99 (சனவரி '99 வரை) | 802.27 | 55.11 | 86.60 | 37.87 | 858.15 |

# அத்தியாயம் - 10

## கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 1. மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப் பணிகள்

கூட்டுறவு இயக்கம் செம்மையான முறையில் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்காணிக்கவும், பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், அலுவலர் அல்லாதவர்களுக்கும் கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி அளிக்கவும், கூட்டுறவு பற்றிய விளம்பரங்கள் ஆகிய பணிகளைச் செய்திடவும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1914 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டங்களில் உள்ள 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவு கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றில் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் பயிற்சியளிக்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், (1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (2) கூட்டுறவு கல்வி நிதி எனும் இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

அனைத்து மாநில தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக உள்ளன. இவ்வங்கத்தினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கும் தொகையான வருடாந்திர சந்தா, கூட்டுறவு வெளியீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிகளுக்கு பிற சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படும் நிதிகளையும் கொண்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது பல்வேறு திட்டங்களுக்கு தேவையான நிதி ஆதாரத்தை திரட்டுகிறது.

கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயன்கள் குறித்து மக்கள் தெளிவுற அறிந்திட புத்தக வெளியீடுகள், கண்காட்சிகள், விளம்பரச் சுவரொட்டிகள், திரை அரங்குகளில் ஸ்லைடுகள் திரைக் காட்சிகள் முதலான வசதிகளைப் பயன்படுத்தி, கூட்டுறவு கொள்கைகளை பரப்பும் நடவடிக்கைகளை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மேற்கொள்கின்றது. மேலும் உறுப்பினர் கல்வி நிகழ்ச்சிகளையும், மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளையும் கூட்டுறவு ஒன்றியம் வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் வழியாக நடத்தி வருகின்றது.

அனைத்துத் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு கூட்டுறவு கொள்கை மற்றும்





முக்கியத்துவத்தைப் பற்றியும், கூட்டுறவுகளின் செயல்பாடு பற்றியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளில் கூட்டுறவைப் பாடமாகப் படித்து சிறந்து விளங்கும் மாணவ/மாணவியர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கல்லூரி அளவில் கூட்டுறவு கல்வியின் வளர்ச்சியை பெரிதும் ஊக்குவிக்கிறது.

### கூட்டுறவு பயிற்சி

இளநிலை அலுவலர்களுக்கு, கூட்டுறவு பயிற்சி அளிக்க மாநிலத்தில் 10 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றுடன் 1998-99 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் புதிதாக ஒரு கூட்டுறவு மேலாண்மை நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் கூட்டுறவு தொடர்பான பல்வேறு அடிப்படைப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுத் துறையினைச் சார்ந்த பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் கூட்டுறவு பாடத்தில் பட்டயப் பயிற்சியும், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கல்வி மூலம் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திலும், மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 210 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு இவ்விரு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் உயர்நிலை கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னையை அடுத்துள்ள மாதவரத்தில், விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்று தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது. இது கூட்டுறவுக் கடன் சங்க அலுவலர்களுக்குத் தேவையான முழுநேரப் பயிற்சிகளையும், குறுகிய கால கூட்டுறவுப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் முகத்தான் அவர்கள் சுயவேலை வாய்ப்பு தேடிக்கொள்ளும் வகையில்

[1999 ஏப்ரல் 15

ஏற்ற தொழில் பயிற்சியினை அளிக்கும் நோக்கத்துடன் தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொழில் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 1-4-1997 முதல் இத்தொழில் கல்வி மற்றும் தொழில் கூட்டுறவு பயிற்சி சங்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. 1997-98 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் மற்றுமொரு தொழிற் பயிற்சிப் பள்ளி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் தொடங்கப்பட்டு உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடியில் 1999-2000 ஆம் ஆண்டில் பாலிடெக்னிக் ஒன்றை தொடங்குவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.



1999 ஏப்ரல் 15]

# அத்தியாயம் - 11

## 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குத் திருத்தம் வெளியிடுதல்

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 தற்போது இம் மாநிலத்தில் அமலில் உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களை பொருளாதார நோக்குடன் திறம்பட செயல்படச் செய்யும் வகையில், கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைத் தன்மைகளை உள்ளடக்கிய மாதிரி கூட்டுறவுச் சட்ட முன்வடிவு ஒன்றினை இயற்றித் தருவதற்காக திரு. சௌத்திரி பிரஹாம் பிரகாஷ் என்ற சிறந்த கூட்டுறவாளர் தலைமையில் ஒரு குழுவினை மத்திய திட்டக்குழு அமைத்தது. அதன்படி, அக்குழு கூட்டுறவு சட்ட முன்வடிவு ஒன்றினைத் தயாரித்தது. அதன் மீதான மாநில அரசுகளின் கருத்து கோரப்பட்டது. இந்த மாதிரி கூட்டுறவு சட்டத்தைப் பிற மாநிலங்கள் ஏற்று, நடைமுறைப்படுத்துகிறதா என்பது குறித்து அறிய இந்திய தேசிய கூட்டுறவு இணையத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஒரிசா, மத்தியப்பிரதேசம் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் மட்டும் மாதிரி கூட்டுறவுச் சட்டத்திலுள்ள ஒரு சில கூறுகளை மட்டும் உள்ளடக்கி கூட்டுறவுச் சட்டம் இயற்றியுள்ளதாகவும், அவையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் தெரியவந்தது.

தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுச் சட்டத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் தன்னாட்சி சங்கங்களுக்கென தனியே சட்டம் ஒன்றினை இயற்ற இயலுமா என்று பரிசீலிக்கப்பட்டது. இது தொடர்பாக ஆந்திரப்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தியுள்ள 1995 ஆம் ஆண்டின் பரஸ்பர உதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (Mutually Aided Co-operative Societies Act, 1995) பற்றி கூர்ந்தாய்வு செய்யலாம் எனக் கருதப்பட்டது. அதன்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமையில் இத்துறையைச் சேர்ந்த உயர்நிலை அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்று மேற்குறிப்பிட்ட அந்த மாநிலச் சட்டத்தினைப் பற்றியும், அங்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதைப் பற்றியும் ஆராய்ந்தது.

மேலும் ஹைதராபாத்திலுள்ள கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்துடன் (Co-operative Development Foundation) மேற்கோள் சட்டத்தின் (Referential Act) சிறப்பியல்பு குறித்தும் விவாதித்தது. இவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வு மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு தற்சார்புடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கான வரைவு சட்ட முன்வடிவினை (Tamil Nadu Self-Reliant

Co-operative Act) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அனுப்பியுள்ளார்.

இதற்கிடையில், நீதியரசர் திரு. இராமானுஜம் தலைமையில் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் ஊழல் தடுப்புக்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மத்திய திட்டக் குழுவிடமிருந்து பெறப்பட்ட வரைவு மாதிரிச் சட்டம் (Model Act) மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட தமிழ்நாடு தன்னாட்சி சங்கங்களுக்கான சட்டம் (Tamil Nadu Self Reliant Co-operative Act) ஆகியவற்றின் சிறப்புக் கூறுகளைக் கொண்டு, தற்போது நடைமுறையிலுள்ள 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திலேயே தக்க திருத்தங்கள் கொண்டு வரலாம் என அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.






# அத்தியாம் - 12


## நிறைவுரை


அனைத்துப் பிரிவு மக்களின் பொருளாதார மேம்பாட்டினையும் உறுதி செய்யும்பொருட்டு, விவசாயிகளுக்கு வேளாண் கடன் வழங்குதல், இடுபொருட்கள் வழங்குதல் வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல், சந்தை விலைகளை நிலைப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து மாநிலத்தில் கூட்டுறவு அமைப்புகள் ஆற்றி வரும் பணிகள் மகத்தானவை.

கூட்டுறவே நாட்டுயர்வு
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.



படம் -1
குறுகிய காலக் கடன்கள்
720
600
480
360
240
120
0
233.84
243.98
278.52
340.86
439.54
561.74
561.37
592.40
697.99
546.22
1989-90
1990-91
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
ஜனவரி வரை
ஆண்டுகள்





படம் -2
நடுத்தர காலக் கடன்கள்
105
90
75
60
45
30
15
0
40.02
44.71
45.75
52.65
61.99
66.37
100.74
56.77
1989-90
1990-91
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
ஜனவரி வரை
ஆண்டுகள்



படம்-3
நீண்ட காலக் கடன்கள்
25.97
31.31
41.71
64.21
112.85
150.02
188.83
205.55
191.60
105.30
1989-90
1990-91
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
0
50
100
150
200
250
300





1884.51
2143.87
2371.06
2791.17
3344.34
3918.70
4859.36
6295.53
8348.49
10675.19



கூட்டுறவு வங்கி வாரியான வைப்புத் தொகை
படம்-5
மொத்த வைப்புத் தொகை
மத்திய கூட்டுறவு வங்கி
தொ.வே.கூ.வங்கி
கூ. நி. வங்கி





67.6
71.3
70.2
75.2
72.5
68.2
58.6
56.3
44.4
63.7



நீண்ட காலக் கடன்களில் வசூல் தொகையின் சதவீதம்
படம்-7
விழுக்காட்டில்
100
80
60
40
20
0
21.7
11.9
45.2
35.7
60.2
71.3
82.0
42.5
47.0
43.5
88-89
89-90
90-91
91-92
92-93
93-94
94-95
95-96
96-97
97-98
ஆண்டுகள்




வேளாண் விளை பொருட்களின் விற்பனை
படம் -8
ரூபாய் கோடியில்
960
800
640
480
320
160
0
229.57
267.87
325.39
389.48
428.31
610.22
728.98
573.23
410.39
328.08
1989-90
1990-91
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
ஜனவரி வரை


படம்-9
உரங்களின் சில்லறை விற்பனை
86.71
96.20
168.04
194.54
169.63
202.52
206.87
209.29
234.47
197.22
1989-90
1990-91
1991-92
1992-93
1993-94
1994-95
1995-96
1996-97
1997-98
1998-99
0
40
80
120
160
200
240
280




691.84
285.07
845.73
311.07
959.69
307.66
940.25
295.85
1080.83
322.34
1141.12
398.73
1224.87
392.14
1422.68
382.13
1341.97
459.32
1171.66
381.71

[1999 ஏப்ரல் 15

## இணைப்பு - II

*(240 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 34**

**நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-2000**

## அத்தியாயம் - 1

### முகவுரை

*பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை.*

-திருவள்ளுவர்

### பொருளுரை

*இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்து கொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.*

-கலைஞர்

வான்சிறந்து, நல்ல மழை பொழிந்து விளைச்சல் பெருகி வர, மாநிலத்து மக்கள் வளம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் நிறைவு ஆண்டில் அறிவிக்கப்பெறும் இந்த உணவுக் கொள்கை, வருகின்ற பல நூறு ஆண்டுகளிலும் மக்கள் மேன்மேலும் வளம் பெற விழைந்து, உருவாக்கப்பட்டுள்ளது.

பன்னெடுங்காலமாக, தமிழகத்தின் பெரும்பாலான மக்களின் முதன்மை உணவுப்பொருளாக அரிசி விளங்கி வருவதால், மாநிலத்தின் உணவுக் கொள்கையும், அரிசியைச் சார்ந்தே அமைந்து, மக்கள் நல்வாழ்வுடன், குறிப்பாக, ஏழை எளியோரின் வாழ்க்கை நலனுடன் ஒன்றியுள்ளது. எனவே தான், இக்கொள்கை, மாநில அரசின் மக்கள் நலம் சார்ந்த கொள்கைகளிலேயே, முதன்மையாகத் திகழ்கிறது.

உணவுக்கு உத்திரவாதம் (Food Security) என்பது, அனைத்துப் பிரிவு மக்களும் தமது உடல்நலம் காத்து நல்வாழ்வு பெற அவர்களுக்குத் தேவையான அளவுக்கு உணவு தங்கு தடையின்றி கிடைக்கப் பெறுவதை



1999 ஏப்ரல் 15]

வலியுறுத்துகின்றது. எனவே, மக்களின் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதுடன், வறுமையும், பசிப்பிணியும் அறவே களையப்பட, அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாகவும், சிறப்பாகவும் ஏழை எளிய மக்களுக்கு, உணவுக்கு உத்திரவாதம் (Food Security) அளிக்க மைய அரசும், மாநில அரசும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

மாநிலத்தைப் பொறுத்த அளவில், ஒவ்வொரு ஆண்டும் குறுவை, சம்பா, நவரை ஆகிய பருவங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த விளைச்சல் மற்றும் மாதந்தோறும் மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரசி அளவினை கணக்கிற்கொண்டும், பொதுவிநியோகத் திட்டத்தேவைக்கு நெல் கொள்முதல் செய்து, போதிய 'அரிசி கையிருப்பு' வைத்திருக்கவும், விவசாயிகளின் நெல்லுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்யவும், வெளிச்சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும், மேலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி வழங்கப்பட்டு (அதன் வாயிலாக) அனைத்துப் பிரிவு மக்களின், குறிப்பாக, ஏழை எளியோரின் குடும்ப நலன் காக்கவும் ஒவ்வொரு ஆண்டும் உணவுக்கொள்கை உருவாக்கப்படுகிறது.

சுருங்கக்கூறின், உணவுக் கொள்கை கீழ்க்கண்ட மூன்று இன்றியமையாத அடிப்படை செயற் திட்டங்களை உள்ளடக்கியதாகும்:-

1. பசிப்பிணி நீக்கி, ஏழை எளிய மக்களுக்கு பாதுகாப்பளித்தல்.
2. மாநிலத்தில் உணவுப்பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்தல்; மற்றும்
3. பொதுமக்களுக்கு சீரான விலையில் உணவுப்பொருட்கள் கிடைக்க வழிவகை செய்தல்.

இக்கொள்கை இலக்கினை எய்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களைப் பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

[1999 ஏப்ரல் 15

## அத்தியாயம் - 2

### பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள்

**அரிசி:**

தமிழ்நாட்டின் முதன்மை உணவுப் பொருளாக அரிசி அமைந்துள்ளதால், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு இன்றியமையாப் பொருட்களில், அரிசி முதன்மையிடம் வகிக்கிறது. இத்திட்டத்திற்கு கீழ்க்கண்ட முறைகளில் அரிசி பெறப்படுகிறது.

(அ) மைய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசியை பெறுவது.

(ஆ) காவிரிப் பாசன பகுதியில் ஏகபோகக் கொள்முதல் அல்லது இணைக் கொள்முதல் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வது.

(இ) தேவைப்படின் வெளிச் சந்தையிலிருந்து அரிசி கொள்முதல் செய்வது.

(ஈ) அரிசி ஆலைகள் மற்றும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து லெவி மூலம் கொள்முதல் செய்வது.

**(அ) வணிகர் லெவித் திட்டம் மூலம் கொள்முதல்:**

1974 ஆம் ஆண்டு முதல் வணிகர் லெவி திட்டம் நடைமுறையில் இருந்தது. இத்திட்டத்தின்படி, வணிகர்கள் வியாபாரம் செய்வதற்காக வாங்கும் நெல்/அரிசியை அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் அளவுகளில் லெவி செலுத்திய பிறகே வெளிச்சந்தையில் விற்க இயலும். 1991 ஆம் ஆண்டில் அரிசியின் கையிருப்பு மற்றும் நெல் உற்பத்தியைக் கருத்திற் கொண்டு, வணிகர் லெவியை 1992 சனவரி 29 முதல் நிறுத்தி வைத்து அரசு ஆணை பிறப்பித்தது. இதனால், மாநிலம் முழுவதும் நெல் மற்றும் அரிசி தடையின்றி எடுத்துச் செல்லப்பட வழிவகை செய்யப்பட்டது. 1981-ஆம் ஆண்டிலிருந்து 1997 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்முதல் முறைகள் குறித்த தகவல்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) மாநிலத்தை விட்டு வெளியே நெல்/அரிசி கொண்டு செல்ல லெவி:**

29-1-1992-லிருந்து வணிகர் லெவி நிறுத்தி வைக்கப்பட்டதால், மாநிலத்திற்குள்ளும், மாநிலத்திற்கு வெளியேயும் நெல்/அரிசியைக் கொண்டு



1999 ஏப்ரல் 15]

செல்வதற்கு எவ்விதக்கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. இதனால், பிற மாநிலங்களில் பற்றாக்குறையினால் ஏற்பட்ட விலை ஏற்றம் காரணமாக, இம்மாநிலத்திலிருந்து நெல்/அரிசி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் விளைவாக, இம்மாநிலத்தில் வெளிச்சந்தையில் நெல்/அரிசி பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் நிலை உருவாகியது. பெருமளவில் வெளி மாநிலங்களுக்கு நெல்/அரிசி சென்று விடுவதைத் தடுக்க, 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் 4-ஏ பகுதியின்கீழ், லெவி முறையை அரசு அறிமுகப்படுத்தியது. அதன்படி, வெளி மாநிலத்திற்கு நெல்/அரிசி எடுத்துச் செல்ல விரும்பும் வியாபாரிகள், அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைகளில் அவர்கள் எடுத்துச் செல்லும் அளவிற்கு ஈடாக 100 சதவீதம் நெல்/அரிசியை லெவியாக அரசுக்கு கொடுக்க வேண்டும் என ஆணையிடப்பட்டது.

**(இ) காவிரிப் பாசனப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல்:**

காவிரிப் பாசனப் பகுதிகள், தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்பது அனைவரும் அறிந்ததே. 1983 ஆம் ஆண்டு மாநிலத்தில் கடும் வறட்சி நிலவிய காரணத்தால், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் செய்யப்பட, காவிரிப் பாசனப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல் திட்டத்தை அரசு நடைமுறைக்கு கொண்டு வந்தது. இத்திட்டம் 1993 ஆம் ஆண்டுவரை செயற்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் பருவத்தில், தனியார்-வர்த்தகர்கள் எவரும் காவிரிப் பாசனப் பகுதிகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் தங்கள் நெல்லை அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மட்டுமே, அரசு நிர்ணயித்த விலைகளில் விற்கவேண்டும் என்பதால், விவசாயிகள் தங்கள் விருப்பப்படி தனியார் வர்த்தகர்களுக்கு தமக்குக்கட்டுப்படியாகும் விலைக்கு விற்கும் உரிமை இல்லாமல் இருந்தது. எனவே, விவசாயிகளின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, மைய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலைக்கும் மேலாக இவ்வரசு ஊக்கத்தொகை வழங்கியது.

ஏகபோகக் கொள்முதல் திட்டத்திற்கெதிராக, 1985 ஆம் ஆண்டில் பல நீதிப் பேராணை மனுக்கள் தொடரப்பட்டு, முடிவில் உச்சநீதிமன்றம், மாநில அரசு மேற்கொண்ட ஏகபோகக் கொள்முதல் திட்டம் சட்டரீதியாக சரியானதே என தீர்ப்பளித்தது.

[1999 ஏப்ரல் 15

**இணைக் கொள்முதல் திட்டம்:**

காவிரிப் பாசனப் பகுதிகளில் இணைக் கொள்முதல் திட்டம் என்னும் புதிய திட்டம், குறுவை 1993-லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு, தங்களுடைய நெல்லை யாருக்கும், எந்த இடத்திலும், எந்த விலைக்கும் விற்க முழு உரிமை வேண்டும். அதே நேரத்தில் விவசாயிகள் நெல்லை மிகவும் குறைந்த விலைக்கு விற்று, அதனால் நட்டமடைந்து விடாமல் அவர்களைப் பாதுகாக்கும் வகையில், அரசின் 'முகவர்' என்ற முறையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து அரசு நிர்ணயிக்கும் விலைகளில் நெல் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டினால் விவசாயிகள் தங்களது நெல்லை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கோ அல்லது தனியார் வணிகர்களுக்கோ இலாபகரமாக விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டது. இணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ், ஊக்கத் தொகை வழங்குவது அவசியம் இல்லை என அப்போது கருதப்பட்டதால், ஏகபோகக் கொள்முதல் முறை இரத்து செய்யப்பட்டவுடன் ஊக்கத்தொகை வழங்கும்முறையும் கைவிடப்பட்டது.

1985 ஆம் ஆண்டு முதல் சம்பா, குறுவை ஆகிய பருவங்களில், லெவி, ஏகபோக மற்றும் இணைக் கொள்முதல் திட்டங்களின் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டது குறித்த விவரங்கள் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளன. பாதகமான பருவநிலைகள் காரணமாக, 1996 குறுவை பருவத்தில் விளைச்சல் பாதிக்கப்பட்டது. எனவே, பொது விநியோகத் திட்டத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில், குறுவை '96 மற்றும் சம்பா'97 பருவங்களில் ஏகபோகக் கொள்முதல் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. 1997 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் வழக்கத்திற்கு மாறாக நல்ல மழை வரப்பெற்றதால், அதிக அளவில் விளைச்சல் ஏற்பட்டதன் காரணமாக, ஏகபோகக் கொள்முதல் முறை நீக்கப்பட்டு, மீண்டும் 1997 குறுவைப் பருவத்தில் இணைக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டு, 1998 சம்பா பருவத்திலும் தொடரப்பட்டது. இருப்பினும், வெளிச்சந்தையில் நெல் விலை வீழ்ச்சியடைந்த காரணத்தால், விவசாயிகள் தங்கள் நெல்லைக் குறைந்த விலைக்கு விற்று, அதனால் ஏற்படும் நட்டத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க, காவிரிப் பாசனப் பகுதிகளில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைகளுக்கு மேலாக போக்குவரத்துச் செலவுகள் மற்றும் ஏற்றி இறக்கச் செலவினங்களுக்காக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35/- என்ற வீதத்தில்



1999 ஏப்ரல் 15]

இடைநிகழ் செலவாக விவசாயிகளுக்குக் கூடுதல் தொகை வழங்கி நெல் கொள்முதல் செய்யப்பட்டது. காவிரிப் பாசனப் பகுதிகள் நீங்கலாக, மற்ற பகுதிகளிலும் நெல் விலை இறங்குமுகமாக இருந்ததால், மாநில விவசாயிகளின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்க, முதன்முறையாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வட்டக் கிடங்குகளிலும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அப்பகுதியில் நெல் கொண்டுவரும் விவசாயிகளுக்கும் இடைநிகழ் செலவுகளுக்காக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35/- வீதம் வழங்கப்பட்டது. இவ்வகை ஏற்பாடுகளினால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 1997 குறுவைப் பருவத்தில் மட்டும் 7 இலட்சம் டன் அளவுக்கு நெல் கொள்முதல் செய்ததுடன், 1998 சம்பா பருவத்தில், காவிரிப் பாசனப் பகுதிகள் மட்டுமின்றி, ஏனைய மாவட்டங்களிலும், முதன்முறையாக நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, அப்பருவத்தில் 11,36,823 டன்கள் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

1997 குறுவைப் பருவத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால், 25 சதவிகிதம் அளவுக்கு ஈரப்பதம் கொண்ட நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், அதிக ஈரப்பதம் கொண்ட குறுவை நெல்லை அரைத்துக் கொடுக்க அரைவை முகவர்கள் தயக்கம் காட்டி, அரைவைக் கட்டணங்களை உயர்த்தித்தர அரசுக்கு, கோரிக்கை வைத்தனர். இச்சூழ்நிலையில், அவர்களின் கோரிக்கையைப் பரிசீலிக்க, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணை ஆணையரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, விரிவாக ஆய்வு செய்த பின்னர், புழுங்கல் அரிசிக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 20/- எனவும், பச்சரிசிக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 17/– எனவும் இருந்த அரைவைக் கட்டணங்களை முறையே ரூ. 25/- ஆகவும், ரூ. 21/- ஆகவும் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது. இதனால் அதிக எண்ணிக்கையில் அரைவை முகவர்களை அமர்த்தி, அதிக ஈரப்பதம் கொண்ட குறுவை, 1997 நெல்லை அரைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், இப்பருவத்தில் 20 சதவீதத்திற்கு மேல் ஈரப்பதத்துடன் கொள்முதல் செய்யப்பட்ட அனைத்து ரக நெல்லுக்கும், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த கண்டுமுதல் சதவீதத்தில் 1 சதவீதம் குறைத்துக் கொண்டு, அவர்கள் எடுத்த நெல்லுக்கு ஈடான அரிசியை ஒப்படைக்க அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு விவசாயிகளுக்கு, நல்ல விலைப் பாதுகாப்பு அளித்தும், மழையில் நனைந்த குறுவை நெல் கொள்முதலில் ஏற்பட இருந்த பெரும் இழப்பினைத் தவிர்த்தும், குறுவையிலும் சம்பாவிலும் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 18 இலட்சம் டன்கள் நெல் தொகுப்பினை உரிய காலத்தில் அரைத்து முடித்தது அரசின்

அளப்பரிய சாதனையாகும். 1998-ல் சம்பா மற்றும் குறுவைப் பருவத்தில் மீண்டும் இணைக் கொள்முதல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், போக்குவரத்து மற்றும் ஏற்றி-இறக்கம் உள்ளிட்ட இடைநிகழ் செலவுக்கென குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35/- வீதம் கொள்முதல் விலைக்கு மேல் வழங்கப்பட்டது.

இவ்வாறு கடந்த ஆண்டு, அரசின் சார்பில் அதிக அளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டதன் காரணமாக, வெளிச்சந்தைத் தேவைக்கு தனியார் வர்த்தகர்கள் அதிக அளவில் நெல் வாங்க முன்வந்தனர். இதனால், கடந்த குறுவைப் பருவத்தில் 44,550 டன்கள் அளவிற்கே கொள்முதல் செய்யப்பட்டது. எனவே, பொதுவிநியோகத் திட்டத் தேவையை நிறைவு செய்து, போதிய கையிருப்பும் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் நடப்பு சம்பா பருவத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளில் மீண்டும் ஏகபோகக் கொள்முதல் முறையை நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டது. இவ்வாண்டும் விவசாயிகளின் நலன் கருதி இப்பகுதிகளில் மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்குமேல் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50/- ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது. மேலும், காவிரிப் பாசனப் பகுதிகள் தவிர பிற மாவட்டங்களிலுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வட்டக் கிடங்குகளிலும், சில பகுதிகளில் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்தும் அரசு நிர்ணயித்துள்ள விலைககுமேல் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15/- வீதம் போக்குவரத்துச் செலவுக்கென வழங்கி நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நடப்பு சம்பா '99 பருவத்தில் இதுவரை 10 இலட்சம் டன்கள் அளவுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

காவிரிப் பாசனப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல் திட்டம் செயற்படுத்தப்படுவதை எதிர்த்து, ஒரு சில வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் மீண்டும் நீதிப் பேராணை மனுக்களை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்தனர். வழக்குகள் முடிவுற்று, அரசின் ஏகபோகக் கொள்முதல் கொள்கையை ஏற்று அண்மையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

**நெல்லுக்கான ஆதரவு விலைகள்:**

வேளாண் விளைபொருள் உற்பத்திச் செலவுகள் மற்றும் விலைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நெல் கொள்முதலுக்கான ஆதரவு விலையை ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு நிர்ணயம் செய்கிறது. விதை, உரங்கள் முதலான வேளாண் இடுபொருட்களின் விலைகளையும், மாநில அரசின் பரிந்துரைகளையும்





கருத்திற்கொண்டு, மைய அரசு நெல்லுக்கான ஆதரவு விலையை நிர்ணயம் செய்கிறது. மைய அரசின் இந்த விலையை மாநில அரசு நடைமுறைப்படுத்துகிறது. 1998-99 ஆம் ஆண்டுக்கு சன்ன ரகத்திற்கும் மிகச் சன்ன ரகத்திற்கும், குவிண்டால் ஒன்றுக்கு முறையே ரூ. 440/-, ரூ. 470/- என மைய அரசு ஆதரவு விலையை நிர்ணயித்துள்ளது.

விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் பேணவும், அதே சமயத்தில் போதிய அளவுக்கு நெல் கொள்முதல் செய்யவும், மைய அரசு அறிவித்துள்ள ஆதரவு விலையுடன், மாநில அரசு ஊக்கத்தொகை/இடைநிகழ் செலவுக்காகக் கூடுதல் தொகை அளித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மாநில அரசு அளித்த ஊக்கத்தொகை மற்றும் இடைநிகழ் செலவுகள் குறித்த விவரங்கள் அட்டவணை-10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**கொள்முதல் குறித்த விவரங்கள்:**

1976-77 முதல் 1998-99 வரையில் வழங்கப்பட்ட நெல் கொள்முதல் விலை, மத்தியத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியின் விலை, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலை ஆகியவற்றைக் காட்டும் விவரங்கள் அட்டவணை-3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**மத்தியத் தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கான அரிசி ஒதுக்கீடு:**

பொது விநியோகத் தேவைக்கு ஒவ்வொரு மாதமும் மைய அரசு, மையத் தொகுப்பிலிருந்து மாநில அரசுக்கு அரிசி ஒதுக்கீடு செய்து வருகிறது.

1997 சனவரி முதல் மே மாதம் வரையில் மைய அரசு மாதமொன்றுக்கு 1,65,000 டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்தது. ஆனால், 1997 ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து, புதிய பொது விநியோகத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதற்குப் பிறகு, இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியின் அளவினை மாதமொன்றுக்கு 84,230 டன்களாக மைய அரசு குறைத்துவிட்டது. வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கும் அரிசி ஒதுக்கீடு செய்யப்படும் அளவு பின்வருமாறு:—

| வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு (டன்னில்) | வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு (டன்னில்) | மொத்தம் (டன்னில்) |
|---|---|---|
| 45,790 | 38,440 | 84,230 |

மேற்காணும் ரகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த விலைகள் வருமாறு:—

| | சாதா ரகம் | சன்ன ரகம் | மிகச்சன்ன ரகம் |
|---|---|---|---|
| | (ரூபாய் | குவிண்டால் | ஒன்றுக்கு) |
| வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு | .. | 650 | 750 |
| வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு | 350 | 350 | .. |

மைய அரசு, 1997 ஜுலை வரையில் இந்த ஒதுக்கீட்டை வழங்கியது. கூடுதல் ஒதுக்கீடு பெற தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தி வந்ததன் காரணமாக, 1997 ஆகஸ்ட் மாதம் முதற்கொண்டு, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் விலை வீதத்தில், கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 15,000 டன் அரிசியை மைய அரசு ஒதுக்கீடு செய்தது. மாநில அரசு மீண்டும் வலியுறுத்தியதன் அடிப்படையில், கூடுதலாக டிசம்பர் 1997 முதல் மேலும் 10,000 டன்கள் ஒதுக்கீடு செய்தது தொடர்ந்து வருகின்றது. நவம்பர் 1998 மற்றும் டிசம்பர் 1998 மாதங்களுக்கு மட்டும் கூடுதலாக 20,000 டன்கள் ஒதுக்கீடு செய்தது. மொத்தத்தில் 1998 ஆம் ஆண்டு மைய அரசு 12,60,760 டன்கள் அரிசி வழங்கியுள்ளது.

இதற்கிடையில், அரிசியின் மூன்று ரகங்களை, இரண்டு ரகங்களாக அதாவது, சாதா ரகம் மற்றும் 'ஏ' ரகமென இருவகைப்படுத்தி, மைய அரசு, 1-12-1997 முதல் விற்பனை விலையைப் பின்வருமாறு நிர்ணயித்தது:—

| | சாதா ரகம் | 'ஏ' ரகம் |
|---|---|---|
| | (ரூபாய் குவிண்டால் | ஒன்றுக்கு) |
| வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு | 350 | 350 |
| வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு | .. | 700 |



அடுத்து, 29-1-1999 முதல், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.350/-லிருந்து ரூ.450/-ஆகவும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 700/-லிருந்து ரூ. 905/- ஆகவும் உயர்த்தி மைய அரசு ஆணை பிறப்பித்தது.

நமது மாநிலமும், பிற மாநில அரசுகளும் வற்புறுத்தியதின் அடிப்படையில், 15-2-1999 முதல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை உயர்வை திரும்பப் பெற்றுக்கொண்டு, மீண்டும் பழைய விலையை அறிவித்தபோதிலும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளோருக்காக வழங்கப்படும் அரிசியின் விலை உயர்வைக் குறைக்க மறுத்து விட்டது. இதனால், பொதுவிநியோகத் திட்டச் செயலாக்கத்தில் மாநில அரசுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்பட்டது.

கடந்த 17 ஆண்டுகளில், மத்தியத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவு பின்வருமாறு:-

| ஆண்டு | ஒதுக்கீடு (டன்களில்) |
|---|---|
| 1982 | 70,000 |
| 1983 | 3,55,000 |
| 1984 | 3,00,000 |
| 1985 | 5,25,000 |
| 1986 | 7,05,000 |
| 1987 | 6,30,000 |
| 1988 | 7,30,000 |
| 1989 | 6,00,000 |
| 1990 | 7,36,80[illegible] |
| 1991 | 9,20,000 |
| 1992 | 8,28,810 |
| 1993 | 8,49,660 |
| 1994 | 11,41,600 |
| 1995 | 14,55,000 |
| 1996 | 18,13,500 |
| 1997 | 14,29,610 |
| 1998 | 12,60,760 |

[1999 ஏப்ரல் 15

**வழங்கப்படும் அரிசியின் அளவு:**

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவு, மாதமொன்றுக்குக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அளவைப் பொறுத்தே அமைகிறது. குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவுகள் அவ்வப்போது வேறுபட்டு வந்துள்ளன. 1976-77 முதல் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட அரிசியின் அளவுகள் குறித்த விவரங்கள் அட்டவணை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்போது குடும்ப அட்டை ஒன்றுக்கு, பெரியவர்களுக்கு தலா 4 கிலோ, சிறியவர்களுக்கு தலா 2 கிலோ என்ற வீதத்தில் அதிகபட்சமாக 20 கிலோ அளவுக்கு அரிசி மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதில், கிலோ ரூ.2/- வீதம் 3 கிலோ சாதா ரக அரிசியும், கிலோ ரூ.3.75 வீதம் எஞ்சியுள்ள 17 கிலோ கிரேடு 'ஏ' ரக அரிசியும் வழங்கப்படுகிறது. அரிசி இருப்பைப் பொறுத்து, குடும்ப அட்டைக்கு வழங்கவேண்டிய அரிசியின் ஒரு பகுதி, புழுங்கல் அரிசியாகவும், எஞ்சியுள்ள பகுதி பச்சரிசியாகவும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஏறத்தாழ 25,000 டன் அளவுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் நடத்திவரும் மாணவர் இல்லங்களுக்கும் பொதுவிநியோகத் திட்ட விலைகளில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலை:**

**பொது விநியோகத் திட்டத்தின் அரிசி தேவை**

(1) காவிரிப் பாசனப் பகுதிகளிலும், மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளிலும் (இணைக் கொள்முதல் அல்லது ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின்படி) நெல் கொள்முதல் செய்தும்;

(2) மையத் தொகுப்பிலிருந்து வழங்கப்பெறும் அரிசி ஒதுக்கீட்டைப் பெற்றும்;

(3) தேவைக்கேற்ப ஏனைய மாநிலங்களிலிருந்தும் மற்றும் இந்திய உணவுக் கழகத்தின் வெளிச் சந்தை விற்பனையில் அரிசி பெற்றும்;

நிறைவு செய்யப்படுகிறது. முதல் இரண்டு முறைகளில் தேவையான அளவுக்கு அரிசி பெறமுடியாத போது மட்டுமே, மூன்றாவது வழிமுறையில்



1999 ஏப்ரல் 15]

அரிசி பெறப்படுகிறது. இம்மூன்று வழிமுறைகளிலும் அரிசி வெவ்வேறு விலைகளில் பெறப்படினும், பொது விநியோகத் திட்டத்தில் ஒரே விலையில்தான் அரிசி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் நெல், கழகத்திற்குச் சொந்தமான அரிசி ஆலைகளிலும், அரைவை முகவர்களின் ஆலைகளிலும் அரைக்கப்படுகிறது. அரைத்துப் பெறப்பட்ட அரிசி நியாயவிலைக் கடைகளின் வாயிலாக மக்களுக்கு வழங்கப்பட மாநிலம் முழுவதிலுமுள்ள கழகத்தின் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

மத்தியத் தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசி, இம்மாநிலத்தில் அமைந்துள்ள இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து எடுக்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு, மாத ஒதுக்கீட்டின்படி விநியோகத்திற்கு கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. போக்குவரத்து, சேமிப்புக் கட்டணம், வட்டி ஆகியவற்றைக் கணக்கிட்டால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இந்த அரிசியின் அடக்க விலை சாதா ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.397/- மற்றும் கிரேடு 'ஏ' ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.991/- ஆகிறது. மாநில அரசால் பொது விநியோகத் திட்டத்திற்காக மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்படும் அரிசியின் அடக்க விலை, சாதா ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.981/- மற்றும் கிரேடு 'ஏ' ரகத்திற்கு ரூ.1,034/-ம் ஆகும்.

சில்லறை விற்பனைக்கு, குவிண்டால் ஒன்றுக்கு விளிம்புத் தொகையாக ரூ.20/- அனுமதிக்கப்படுகிறது. அரிசி விநியோகத்தில் அரசுக்குக் கிடைக்கும் தொகை பின்வருமாறு:-

| | சாதா ரகம் | கிரேடு 'ஏ' ரகம் |
|---|---|---|
| | (ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு) | |
| பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நிகரத் தொகை | 180 | 355 |

**அரிசி விநியோகத்திற்கான மானியம்:**

பொது விநியோகத் திட்டச் செயலாக்கத்தில் அரிசிக்கு வழங்கப்படும் மானியத்தின் அளவு, அரிசியின் ரகத்தைப் பொறுத்தும், அதைப்பெறும் வழிமுறைகளைப் பொறுத்தும், மேலும் பொது விநியோகத் திட்டத்தில் அரிசி நுகர்வைப் பொறுத்தும் அமைகிறது.

எடுத்துக்காட்டாக, 1978 முதல் 1980 வரை ஆண்டு சராசரி நுகர்வு 1.25 இலட்சம் டன் அளவில் இருந்த நிலைமாறி, 1991-ல் மாத நுகர்வு 1.44 இலட்சம் டன்கள் அளவை எட்டியது. 1992-இல் மாத நுகர்வளவு சுமார் 1.22 இலட்சம் டன் அளவுக்குக் குறைந்து, 1995-இல் 1.25 இலட்சம் டன்களாகி, 1996-ல் 2.01 இலட்சம் டன்களாக உயர்ந்து, 1997-இல் 2.20 இலட்சம் டன்களாக மேலும் உயர்ந்தது.

குடும்ப அட்டைகளுக்கு அதிகபட்சம் 20 கிலோ அளவுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் நிலையிலும், புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக, 1998-ல் அரிசியின் சராசரி மாத நுகர்வு 1.78 இலட்சம் டன்கள் அளவுக்குக் கொண்டு வரப்பட்டது, இத் துறையின் பெருமைப்படத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.

1978 முதல் ஆண்டு வாரியாக அரிசியின் நுகர்வளவு பின்வருமாறு:

| ஆண்டு | நுகர்வு | மாத சராசரி நுகர்வு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (டன்களில்) | |
| 1978 | 93,000 | 7,750 |
| 1979 | 1,49,173 | 12,431 |
| 1980 | 1,35,231 | 11,252 |
| 1981 | 6,71,320 | 55,941 |
| 1982 | 6,29,002 | 52,416 |
| 1983 | 6,75,027 | 56,252 |
| 1984 | 6,98,655 | 58,221 |
| 1985 | 11,04,777 | 92,064 |
| 1986 | 9,24,336 | 75,361 |
| 1987 | 11,87,276 | 98,939 |
| 1988 | 13,03,540 | 1,08,711 |
| 1989 | 14,56,849 | 1,21,404 |
| 1990 | 12,33,261 | 1,02,771 |
| 1991 | 17,31,657 | 1,44,304 |
| 1992 | 14,70,319 | 1,22,526 |
| 1993 | 14,30,075 | 1,19,173 |
| 1994 | 12,80,492 | 1,06,707 |
| 1995 | 15,03,944 | 1,25,329 |
| 1996 | 24,12,966 | 2,01,080 |
| 1997 | 26,40,000 | 2,20,000 |
| 1998 | 21,47,779 | 1,78,981 |





மானிய விலையில் அரிசி வழங்கப்படுவதால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட, நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு வழங்கும் உதவித்தொகை கடந்த பல ஆண்டுகளாக உயர்ந்த வண்ணமுள்ளது. 1980-81-இல் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை ரூ.181 கோடி மட்டுமே ஆகும். ஆனால், 1991-92-இல் இது ரூ 332.24 கோடியாகவும், 1992-93-இல் ரூ.351.68 கோடியாகவும் உயர்ந்தது. 1-4-1995 முதல் அனைத்து ரக அரிசிக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1/- குறைக்கப்பட்டதாலும், 1-7-1995 முதல் சாதா ரக அரிசியின் விலை கிலோ ரூ.2.50-லிருந்து கிலோ ரூ.2 ஆகக் குறைக்கப்பட்டதாலும், 1-1-1996 முதல் குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்பட்ட அதிக பட்ச அரிசி அளவு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தப்பட்டதாலும், 1995-96-ம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ.800 கோடி என்ற அளவை எட்டி, 1996-97 மற்றும் 1997-98-லும் ரூ.1,000 கோடி அளவுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியம் வழங்க வேண்டியதாயிற்று. 1998-99-ம் ஆண்டிற்கும், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூ. 1,000 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வங்கியிலிருந்து போதிய கடன் உதவி பெற முடிந்ததால், மானிய ஒதுக்கீட்டில் ரூ. 500 கோடி அளவிற்கே பெற்றுக் கொண்டது.

**பொது விநியோகத் திட்டத்தில் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுவதன் பொருளாதார விளைவுகள்:**

அரிசிக்காக வழங்கப்படும் மானியம், விற்பனை விலை மற்றும் நுகர்வு அளவையும் பொறுத்தது என முன்னரே கண்டோம். கடந்த 3 மாதங்களில் அரிசியின் சராசரி நுகர்வளவு சுமார் 1.80 இலட்சம் டன்களாகும்.

நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் விவசாய இடுபொருட்களான உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விதை போன்ற பல்வேறு வேளாண் இடுபொருட்களின் விலை உயர்வை ஈடுகட்டவும் ஆண்டுதோறும் நியாயமான கொள்முதல் விலையை நிர்ணயித்து விவசாயிகளை ஊக்குவிப்பது அவசியமாகும். மைய அரசு, நெல்லுக்கான கொள்முதல் விலையை 1976-77 ஆம் ஆண்டு முதல் 1987-88 வரை சிறிய அளவிலேயே உயர்த்தி வந்தது. ஆனால், 1988-89 ஆம் ஆண்டு முதல்

[1999 ஏப்ரல் 15

ஒவ்வொரு ஆண்டும் அதிக விலை நிர்ணயிக்கப்பட்டது. 1978-79 முதல் 1987-88 வரையிலான 10 ஆண்டுகளில் சாதா ரக நெல்லின் கொள்முதல் விலை உயர்வு, குவிண்டாலுக்கு ரூ. 65/- மட்டுமே ஆகும். ஆனால், 1990-91 முதல் 1992-1993 ஆம் வரையிலான 3 ஆண்டுகளில் மட்டுமே, சாதா ரக நெல்லுக்குக கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ. 65/- வரை உயர்ந்தது. இதே ரகத்திற்கு 1993-94-இல் குவிண்டாலுக்கு ரூ. 40/-ம், 1994-95-ல் குவிண்டாலுக்கு ரூ.30/-ம், 1995-96 மற்றும் 1996-97-இல் குவிண்டாலுக்கு ரூ.20/-ம்– 1997-98-இல் குவிண்டாலுக்கு ரூ.30/-ம்– 1998-99-இல் குவிண்டாலுக்கு ரூ.35/-ம் இவ்வாறு கொள்முதல் விலை ஆண்டுக்காண்டு உயர்ந்து வந்துள்ளது.

மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் அரிசியின் விலையும் கடந்த பல ஆண்டுகளில், அட்டவணை 3-இல் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்து வந்துள்ளது. 1977 முதல் 1987 வரையிலான 10 ஆண்டு காலத்தில், மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் சாதா ரக அரிசியின் விற்பனை விலை, கிலோவுக்கு 89 காசுகள் அளவில்தான் உயர்ந்தது. ஆனால், 1991ஆம் ஆண்டில் மட்டுமே கிலோவுக்கு 88 காசுகள் உயர்ந்தது. மீண்டும், 1993 ஆம் ஆண்டில் 11-1-1993 முதல், இதன் விலை கிலோ ஒன்றுக்கு 60 காசுகளும், 1994 ஆம் ஆண்டு 1-2-1994 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 1/- முதல் 1.30 வரையிலும் உயர்த்தப்பட்டது. 29-1-1999 முதல் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்காக வழங்கப்படும் அரிசி விலையில் மாற்றம் ஏதுமில்லை என்றாலும், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளோருக்காக வழங்கப்படும் அரிசியின் விலையில் குவிண்டாலுக்கு ரூ. 205/- உயர்த்தப்பட்டது.

இவ்வாறு மைய அரசு அவ்வப்போது அரிசியின் விலையை உயர்த்திய போதும், கடந்த 1995 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டிலிருந்து, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் சாதா ரக அரிசியின் விலைக்கும், வெளிச் சந்தையில் விற்கப்படும் சாதா ரக அரிசியின் விலைக்கும் உள்ள வேறுபாடு கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 15]

| ஆண்டு | வெளிச்சந்தை விலை (புழுங்கல் அரிசி சாதா ரகம்) | பொது விநியோகத் திட்டத்தின் விலை | வேறுபாடு |
|---|---|---|---|
| | (ஒரு கிலோவிற்கு ரூபாய்) | | |
| 1978 | 1.60 | 1.60 | ... |
| 1979 | 1.65 | 1.60 | 0.05 |
| 1980 | 2.00 | 1.60 | 0.40 |
| 1981 | 2.90 | 1.75 | 1.15 |
| 1982 | 2.71 | 1.75 | 0.96 |
| 1983 | 3.71 | 1.75 | 1.96 |
| 1984 | 3.12 | 1.75 | 1.37 |
| 1985 | 3.38 | 1.75 | 1.63 |
| 1986 | 3.52 | 1.75 | 1.77 |
| 1987 | 3.75 | 1.74 | 2.00 |
| 1988 | 4.17 | 1.75 | 2.42 |
| 1989 | 5.54 | 2.00 | 3.54 |
| 1990 | 4.37 | 2.00 | 2.37 |
| 1991 | 4.90 | 2.00 | 2.90 |
| 1992 | 5.67 | 2.00 | 3.67 |
| 1993 | 6.81 | 2.50 | 4.31 |
| 1994 | 6.85 | 3.50 | 3.34 |
| 1995 | 8.35 | 2.00 | 6.35 |
| 1996 | 9.15 | 2.00 | 7.15 |
| 1997 | 8.35 | 2.00 | 6.35 |
| 1998 | 9.14 | 2.00 | 7.14 |
| 1999 (மார்ச் மாதம் வரை) | 8.80 | 2.00 | 6.80 |

**உணவுப் பொருள் கடன்:**

மைய அரசு நிர்ணயிக்கும் விலையில் ஒவ்வொரு பருவத்திலும் நெல்/ அரிசி கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்க, சென்னையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் ரொக்கப்பற்று வைத்துக் கொள்ள மாநில அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக, இவ்வரசு பாரத ஸ்டேட் வங்கியுடன் ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது. உணவுப்பொருள் கடன், தமிழ்நாடு அரசின்

சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது, உணவுப் பொருள் கடன், மூன்று கணக்குத் தலைப்புகளின் கீழ் இயக்கப்பட்டு வருகிறது. உணவு தானியக் கணக்கு எண் I என்பது மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்த அரிசியை எடுப்பதற்காகவும், உணவு தானியக் கணக்கு எண் II என்பது வெளிச் சந்தையில் அரிசி கொள்முதல் செய்வதற்காகவும், உணவு தானியக் கணக்கு எண் III என்பது ஏகபோக/இணைக் கொள்முதல் திட்டத்தில் நெல் கொள்முதல் செய்வதற்காகவும் இயக்கப்படுகிறது. 1-6-1998 முதல் கணக்கு எண் I மற்றும் III ஆகியவற்றிற்கான வட்டி வீதம் 13.27 ஆகும். ஆனால, கணக்கு எண் II-க்கான வட்டி வீதம 16.83 ஆகும்.

**கோதுமை:**

தமிழகத்தைப் பொறுத்தவரை மக்களின் உணவுப் பழக்க வழக்கத்தில் கோதுமையின் நுகர்வளவு அரிசியைவிடக் குறைவானதேயாகும். தற்காலத்தில் மாறிவரும் உணவுப் பழக்கத்தினால், கோதுமைப் பொருட்களை உணவாகப பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும், கோதுமைப் பொருட்கள் மாற்று உணவாகப் பயன்படுத்தப்பட மாநில அரசு தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பலனாக, ரவை, மைதா, மற்றும் ஆட்டா போன்ற கோதுமைப் பொருட்களின் பயன்பாடு நாளுக்கு நாள் மக்களிடையே அதிகரித்து வருகின்றது.

மைய அரசு, மாதந்தோறும் பொது விநியோகத்தின்கீழ் வழங்குவதற்கு 30,000 டன் கோதுமையை, வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் விலையில் வழங்கி வருகின்றது.

தற்போது பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கோதுமையின் அளவு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| (அ) | சென்னை மாநகர் மற்றும் அதன் புறநகர்ப் பகுதி மற்றும் மாவட்டத் தலைமை இடங்கள் | - மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு - 10 கிலோ |
| (ஆ) | மற்ற இடங்கள் | - மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு - 5 கிலோ |





மாதந்தோறும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 30,000 டன் கோதுமையில், 15,000 டன் கோதுமையை முழுக் கோதுமையாகவும் மீதமுள்ள 15,000 டன் கோதுமையை உருளை மாவு ஆலைகளில் அரைவை செய்து, கோதுமைப் பொருட்களாகப் பெற்றும் விநியோகிக்கப்படுகின்றது.

1-1-1998 முதல் கீழ்க்கண்ட விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கோதுமைப் பொருட்கள் விற்கப்பட்டு வந்தன:-

| | | |
|---|---|---|
| கோதுமை (கிலோ ஒன்றுக்கு) | .. | ரூ. 5.00 |
| ரவை " | .. | ரூ. 8.50 |
| மைதா " | .. | ரூ. 8.00 |

பொது விநியோகத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த கோதுமையின் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 450-லிருந்து ரூ. 650-க்கு மைய அரசு 29-1-1999 முதல் உயர்த்தியதால், மாநில அரசு 16-2-1999 முதல் கீழ்க்கண்டவாறு விலை நிர்ணயம் செய்துள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1. | கோதுமை (கிலோ ஒன்றுக்கு) | | ரூ. 7.00 |
| 2. | ரவை | " | ரூ. 10.50 |
| 3. | மைதா | " | ரூ. 10.00 |

மைய அரசு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் கோதுமையின் விலையை 1-4-1999 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 650-லிருந்து ரூ. 682-ஆக மீண்டும் உயர்த்தி உள்ளது. ஆகவே, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் விற்பனை விலையில் உரிய மாற்றம் செய்ய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கூலி அரைவைத் திட்டத்தில் தற்பொழுது கோதுமையிலிருந்து கோதுமைப் பொருட்களைப் பெறுவதற்குக் கீழ்க்கண்ட சதவீத அளவு வரையறுக்கப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| ரவை | .. | 15 சதவீதம் |
| மைதா | .. | 53 " |
| ஆட்டா | .. | 6 " |
| தவிடு | .. | 24 " |
| நொய் | .. | 2 " |

ரவையும், மைதாவும் தற்போது பொது விநியோகத்திற்காக எடுக்கப்படுகின்றன. எடுத்ததுபோக, எஞ்சியுள்ள கோதுமைப் பொருட்கள், உணவுத் துறை சிறப்பு ஆணையாளர் நிர்ணயிக்கும் விலையில், உருளை மாவு ஆலைகளுக்கே வெளி அங்காடி விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

வெளிச்சந்தையில் கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுக்குள் கொணர, மைய அரசு, இம்மாநிலத்திற்கு 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு 30,000 டன் வெளிச்சந்தை கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 716 வீதமும், 1999 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் 40,000 டன் கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 724 வீதமும் வழங்கியது.

மைய அரசால் வழங்கப்படும் வெளிச்சந்தை கோதுமையை மாநில அரசின் கூட்டுறவு அமைப்புகள், மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கும் தேவையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யலாம் என மைய அரசு அறிவுரை வழங்கியுள்ளது. மாநில அரசு, அந்நிறுவனங்களின் தேவைக்கேற்ப, ஒதுக்கீடு செய்வதற்கு உரிய அறிவுரையை உணவுத் துறை சிறப்பு ஆணையாளருக்கு வழங்கியுள்ளது.

வெளிச்சந்தை கோதுமை விற்பனை சம்பந்தமாக, மைய அரசு முன்பு விதித்திருந்த சில கட்டுப்பாடுகளைத் தற்போது தளர்த்தியுள்ளது. அதாவது, மாநிலத்திற்குள் மட்டுமே வெளிச்சந்தை கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்பதைத் தளர்த்தியும், அதிக பட்ச விற்பனை விலையை மாநில அரசு தற்பொழுது நிர்ணயம் செய்யத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

கோதுமையை ரவையாகவும், மைதாவாகவும் மாற்ற, தனியார் உருளை மாவு ஆலைகளையே நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலையுள்ளது. உருளை மாவு ஆலைகள் சங்கம் அரைவைக் கூலி உயர்வு உள்ளிட்ட பிற கோரிக்கைகளை விடுத்துள்ளது. இவர்களது கோரிக்கைகளைப் பரிசீலித்து தக்க முடிவு எடுக்க, உணவுப் பொருள் வழங்கு துறை சிறப்பு ஆணையாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை பெறப்பட்டு, விரைவில் தக்க ஆணைகள் வெளியிடப்படும்.



**சர்க்கரை:**

பொது விநியோகத் திட்டத்தில் இதரப் பொருட்களுடன் சர்க்கரையும் வழங்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 425 கிராம் வீதம் 23,752 டன் லெவி சர்க்கரையை மைய அரசு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால், மாநில அரசு, ஒரு நபருக்கு 500 கிராம் என்ற அளவில் குடும்பங்களுக்கு உயரளவாக மாதம் ஒன்றுக்கு 2 கிலோ சர்க்கரை வீதம் வழங்கி வருகின்றது. தற்போது அரிசிக்குப் பதிலாகக் கூடுதலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் பெற விருப்பம் தெரிவித்துள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, மாதந்தோறும் கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரை அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

**மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவு:**

| | | |
|---|---|---|
| ஒரு நபருக்கு | .. | 500 கிராம் |
| இரண்டு நபருக்கு | .. | 1 கிலோ |
| மூன்று நபருக்கு | .. | 1.5 கிலோ |
| நான்கு நபர்களுக்கு மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களுக்கு | .. | 2 கிலோ |

அத்துடன், ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகைக்கென கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் உணவு பொருள் வழங்கல் துறை அவர்களால் மாவட்டங்களுக்கு மாதந்தோறும் ஒதுக்கப்படும் சர்க்கரையின் அளவு 28,309 டன்கள் ஆகும். அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் முழுமையாக 100 சதவீதம் சர்க்கரை வழங்க வேண்டியுள்ளதால் ஏற்படும் பற்றாக்குறையைச் சமாளிக்க, தேவைக்கேற்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், வெளிச்சந்தை சர்க்கரையை வாங்கி நிறைவு செய்து வருகின்றது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சர்க்கரையின் சில்லறை விற்பனை விலை 1-10-1997 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 11.40 என இருந்ததை 15-02-1999 முதல் மைய அரசு உயர்த்தியுள்ளதால் தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 12.00 என்ற விலையில் விற்கப்படுகின்றது.

[1999 ஏப்ரல் 15

**மண்ணெண்ணெய்:**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சுமார் 149 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் குடும்பத்திற்கு 10 லிட்டரும், நகராட்சிப் பகுதிகளில் 6 லிட்டரும், நகரியம் மற்றும் பேரூராட்சிகளில் 5 லிட்டரும், கிராமப்புறங்களில் 3 லிட்டரும் வழங்கப்பட்டு வருகிறது. அந்தந்த எண்ணெய் முனையங்களிலிருந்து (Oil Terminals) நியாயவிலைக் கடைகள் அமைந்துள்ள தொலைவினைப் பொறுத்து, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 2.80 முதல் ரூ. 3.10 விலையில் விற்கப்படுகின்றது. சமையல் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தும் குடும்பங்களுக்கு, மண்ணெண்ணெயின் அளவு, சிலிண்டர் எண்ணிக்கையைப் பொறுத்துக் குறைக்கப்படுகிறது. அத்துடன், பொதுமக்களின் கூடுதல் தேவையை நிறைவு செய்ய, 2,972 கைவண்டிக்காரர்களுக்கும், சில்லறை விற்பனையாளர்களுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இரண்டு சமையல் எரிவாயு இணைப்பு வைத்திருக்கும் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டரும், ஒரு இணைப்பு மட்டும் வைத்திருக்கும் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 லிட்டரும் வழங்கப்படுகிறது.

புதிய குடும்ப அட்டைகளின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக கூடுதலாக 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியிருப்பதால், தற்போது பொது விநியோகத் திட்டத்தின் மொத்த மண்ணெண்ணெய் தேவை மாதம் ஒன்றுக்கு 82,000 கிலோ லிட்டராகும்.

31-03-1999 வரை மத்திய அரசு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு 76,761 கிலோ லிட்டர் அளவுக்குத்தான் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வந்தது. 1-4-1999 முதல் 77,108 கிலோ லிட்டராக உயர்த்தியுள்ளது. மாதத் தேவையான 82,000 கிலோ லிட்டா அளவுக்கு மண்ணெண்ணெய வழங்க மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்:**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் சீராக வழங்கப்பெற, மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் முன்னோடித் திட்டத்தை நமது அரசு அறிமுகப்படுத்தி, செயற்படுத்தி வருகின்றது என்பது தெரிந்ததே.



1999 ஏப்ரல் 15]

பெட்ரோல் மற்றும் டீசல் பங்க்குகளைப் போல், பங்க் வசதிகள் அமைத்து பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் சரியான அளவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவதற்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்துடன் 2 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள 8,000 முதல் 10,000 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, மாதமொன்றுக்கு சுமார் 50 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வரை வழங்கப்படுகிறது. இந்நிலையத்தில் 15 கிலோ லிட்டர் (அல்லது) 20 கிலோ லிட்டர் கொள்ளளவுள்ள சேமிப்புத் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில், 20 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட சேமிப்புத் தொட்டிகள் உள்ளன. இதனால், குடும்ப அட்டைதாரர்கள் அவரவர்களின் வசதிக்கேற்ப அனைத்து வேலை நாட்களிலும் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல், சரியான அளவில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க ரூ.4.50 இலட்சம் செலவாகிறது. இத்திட்டத்தில் கூட்டுறவு அமைப்புகள் ஊக்கத்துடன் பங்கு பெறுவதற்காக, மொத்தச் செலவில் 50 சதவீதத்தை மானியமாக அரசு வழங்குகிறது. இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுவருவதால் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை மாநிலம் முழுவதும படிப்படியாக அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 10 நிலையங்களும், கூட்டுறவு அமைப்புகளின் சார்பில் 15 நிலையங்களும் இயங்கி வருகின்றன. திருச்சி, மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளிலும், பிற மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளிலும் பங்க்குகள் அமைக்கப்பட்டு மாநில அளவில் 6-4-1999 தேதி நிலவரப்படி, மொத்தம் 135 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 31 நிலையங்கள் துவக்கப்படும் நிலையிலும், 28 இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டில் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டதில், இதுவரை 144 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டம், பொது விநியோகத் திட்டத்தில் ஒரு புதிய சிந்தனை ஆக்கம் என்பதால், இதை மத்திய அரசு சார்ந்த திட்டத்தின் கீழ் சேர்க்கவும்,

[1999 ஏப்ரல் 15

50 சதவீதம் மானிய நிதி உதவி வழங்கவும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**பாமாலின்:**

மைய அரசு, இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் எண்ணெயை மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை மாதமொன்றுக்கு 1,000 டன்கள் வீதம் மைய அரசு ஒதுக்கீடு செய்தது. இதில் 500 டன்கள், இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகிய நிறுவனங்களின் வாயிலாக, ஒரு லிட்டர் அளவு பாமாலினை உறைகளில் அடைத்து சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள மற்றும் நீலகிரி மாவட்டப் பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 500 டன்கள், உதிரியாக மற்ற மாவட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.

மைய அரசு பாமாலின் விலையை டன் ஒன்றுக்கு ரூ.26,000/-லிருந்து ரூ.30,000/- ஆக உயர்த்தியதன் காரணமாக, மாநில அரசும் சில்லறை விலையை மாற்றியமைத்தது. அதன்படி ஒரு லிட்டர் உறையிலிட்ட பாமாலின் ரூ.34.50-க்கும், ஒரு லிட்டர் உதிரி பாமாலின் எண்ணெய் ரூ.31.50-க்கும் விற்கப்படுகிறது. பாமாலின் எண்ணெய் பொது விநியோகத் திட்டத்தில் விநியோகிக்க வேண்டி, மாதம் ஒன்றுக்கு 500 டன்கள் வீதம் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசிடம் கேட்கப்பட்டது. அதன்படி இந்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு 500 டன்கள் வீதம், நமது மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம் - 3

## பொது விநியோகத் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின் வெற்றியே ஒரு மாநிலத்தின் வெற்றிக்கு அளவுகோல் என்றால், அது மிகையாகாது. பொது மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள இத்திட்டத்தின்கீழ், இன்றியமையாப் பொருட்கள் நியாயமான விலையில் மக்களுக்குத் தடையின்றி கிடைக்கப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் வெற்றி, நான்கு அடிப்படைத் தன்மைகளைப் பொறுத்தே அமைகிறது. தேவைக்கேற்ப பொருட்கள் கிடைத்தல், அவற்றை எளிதில் பெறமுடிதல், பொருட்கள் தரமுடையதாக இருத்தல் மற்றும் அப்பொருட்களை ஏழை எளிய மக்களும் பெற முடிகிற விலை வரம்பிற்குள் அமைத்தல் ஆகிய நான்கும் இழையோடி இணைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். இன்றியமையாப் பொருட்களின் விலை ஏற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கப் பெரிதும் துணை புரிவதால், இத்திட்டம் பொது மக்களின், குறிப்பாக, ஏழை எளிய மக்களின், சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவேதான், இன்றியமையாப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்து, குறிப்பாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் இன்னல்களைப் போக்க பொது விநியோகத் திட்டத்தைத் திறம்படவும், செம்மையாகவும் செயற்படுத்துவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கிறது.

தேசிய செயல்முறை பொருளாதார ஆய்வுக்குழு, தேசிய அளவில், 36 சதவிகித மக்கள் தொகையே கிராமப் புறங்களில் பொது விநியோகத் திட்டத்தில் பயனடைகிறார்கள் என்று தெரிவித்துள்ளது. ஆனால், தமிழ்நாட்டு கிராமப் புறங்களிலுள்ள மக்களில் 83 சதவீத அளவிற்கு இத்திட்டத்தில் பயனடைகிறார்கள் என இக்குழு மதிப்பிட்டுள்ளது. இம்மாநிலத்தில், பொது விநியோகத் திட்டம் பரந்து விரிந்து, மக்கள் பெரும்பான்மையான மக்களுக்குப் பயனளித்து வருகிறது என்பதற்கு இதுவே நற்சான்றாகும். மாநிலம் தழுவிய அளவில் நியாயவிலைக் கடைகள் பரந்துபட்டு அமைந்துள்ளமை நமது பொது விநியோகத் திட்டத்தின் தனிச் சிறப்பாகும். தற்போது மாநிலம் முழுவதும் 26,157 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. மொத்த எண்ணிக்கையில் 24,714 நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களும் 1,095 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. ஒவ்வொரு வருவாய்

கிராமத்திலும் குறைந்தது ஒரு நியாயவிலைக் கடையாவது இயங்கி வருகிறது. தற்போது நிலவி வரும் இலாப விளிம்புகளின் அடிப்படையில், ஒரு நியாயவிலைக் கடை இழப்படையாமல் இலாபகரமாக தனித்தியங்க வேண்டுமெனில், அக்கடை குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகளையாவது கொண்டிருக்க வேண்டும். ஆயினும், கடைகளிலிருந்து அதிக தொலைவிலுள்ள குக்கிராமங்கள் அல்லது கடைக்கு எளிதில் வந்து போவதற்கு பாதை வசதியில்லாத பகுதிகளில் குறிப்பாக மலைப் பகுதிகளில் வசித்து வரும் குடும்ப அட்டைதாரர்களின் நலனை முன்னிட்டு, சற்றே 15,000-க்கும் மேற்பட்ட கடைகள் 800-க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் இழப்பினை அரசும், தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

நியாயவிலைக் கடைகள் தொடங்கப்பெற வழிகாட்டி நெறிமுறைகள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன:

1. தற்போது இயங்கிவரும் நியாயவிலைக் கடைகள் எவையும் மூடப்படக்கூடாது.
2. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்கும் வண்ணம் கடைகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் போது தற்போது இயங்கிவரும் கடைகள் மூடப்படக் கூடாது. மேலும், ஒவ்வொரு வார்டிலும் குறைந்தது ஒரு நியாயவிலைக் கடையாவது இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
3. ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்படும் போது, 500-க்கும் குறையாமலும் 800-க்கு மிகாமலும் அந்தந்தக் கடைகளுடன் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். இவ்வாறு மாற்றி அமைக்கும் போது தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடைகள் எவையும் மூடப்படக்கூடாது.
4. மேற்கண்டவாறு கடைகள் அமைக்கப்படும்போது, எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் நியாயவிலைக் கடையைச் சென்றடைய 2 கிலோ மீட்டருக்கு மேல் நடக்க/கடக்க நேராவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.





5. மேலே கண்ட நெறிமுறைகளுக்குட்பட்டு புதிய நியாயவிலைக் கடைகளைத் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் புதிதாக திறக்கப்பட்ட கடைகள் குறித்த விவரங்களை அவர்கள் உணவுப் பொருள் வழங்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையருக்கு தெரிவிக்க வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை நிறைவு செய்ய முடியாமலும், ஆனால் நியாயவிலைக் கடைகள் திறப்பது மிகவும் அவசியம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதுவார்களேயானால் அவ்விடங்களில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அல்லது உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளரின் முன்னனுமதி பெற்று கடைகளைத் திறக்கலாம்.
6. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில், சட்டம்-ஒழுங்கு நிலைமையையொட்டி புதிய கடைகள் திறப்பதற்கு அவசியம் ஏற்படுமேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர்களே தல நிலைமைகளைப் பொறுத்து புதிய நியாயவிலைக் கடைகளைத் திறக்க உத்தரவிடலாம்.

1998-இல் இம்மாநிலத்தில் 25,005 நியாயவிலைக் கடைகள் இயங்கி வந்தன. மேற்சொன்ன நெறிமுறைகளை அரசு நிர்ணயித்த பின்னர், மாவட்ட ஆட்சியர்கள் மொத்தம் 1,152 நியாயவிலைக் கடைகளை புதியதாக திறக்க ஆணை வழங்கியுள்ளனர். தற்போது 26,157 நியாயவிலைக் கடைகளும், மகளிர் அமைப்புகளால் நடத்தப்படும் 181 துணை விற்பனைக் கடைகளும் (அட்டவணை-8) 36 நடமாடும் நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன (அட்டவணை-11).

நியாய விலைக்கடைகள் அனைத்து வேலை நாட்களிலும் திறக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், உணவு தானியங்கள் மக்களுக்கு, ஒவ்வொரு மாதமும் அனைத்து வேலை நாட்களிலும் வழங்கப்பட வேண்டுமென்றும் ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரிசியைப் பொறுத்தவரை ஒரே தவணையிலோ அல்லது குடும்ப அட்டைதாரர்கள் தாங்கள் விரும்புகின்ற அளவிலோ பெற்றுக் கொள்ளலாம். நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்கள், அவற்றின் வழங்கப்படும் அளவு, விலை ஆகிய விவரங்கள் அட்டவணை-1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகக் கட்டமைப்பில் பொருட்கள் உரிய அளவில் நியாயவிலைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யவும், அவற்றை கிடங்குகளிலிருந்து எடுத்து கடைகளுக்கு அனுப்பி வைக்கவும், மாதத்தின் முதல் வாரத்தில் மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையிலும், சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையர்களின் தலைமையிலும் ஒதுக்கீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடின்றி பொது மக்களுக்குக் கிடைக்கும் வகையில் மாத நுகர்வினை கணக்கிட்டு அதில் 60 சதவீதம் வரை பொருட்களை கடைகளுக்கு முன்கூட்டியே அனுப்பப்படுகிறது. இதில் ஏதேனும் இடர்பாடுகள் இருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டும் வாராந்திரக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு உரிய தீர்வு காணப்படுகிறது.

**நியாயவிலைக் கடைகள் ஆய்வு செய்தல்:**

நியாயவிலைக் கடைகளில் ஆய்வு செய்வதற்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகள் செயல்பாட்டில் ஏதேனும் புகார்கள் பெறப்படின் அவற்றைக் களையும் பொருட்டு, தணிக்கை மற்றும் ஆய்வு அறிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் கூர்மையாக ஆராய்ந்து, பொது விநியோக திட்டச் செயலாக்கத்தினை சீரமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

முழுநேர மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கான நெறிமுறைகள் குறித்து ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளது. இந்நெறிமுறைகளை முழுமையாகக் கடைபிடிக்கும் படியும், அதேநேரத்தில் புதியதாகப் பகுதிநேரக் கடைகளை திறக்கும்போது, தாய் கடைகளின் செயல்பாடு மற்றும் நிதி ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு, இரண்டுமே பகுதிநேரக் கடைகளாக செயல்படும் நிலை ஏற்பட்டுவிடுமாகையால் மக்களின் வசதியை முன்னிட்டு, மிகவும் அவசியம் என்று கருதப்படும் பகுதிகளில் மட்டுமே பகுதிநேரக் கடைகளை திறக்க தங்களது விருப்பதிகாரத்தைப் பயன்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**குடும்ப அட்டைகள்:**

25-3-1999 நிலவரப்படி, இதுவரை 149 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின்படி





மாநிலத்தில், தற்போது 146 இலட்சம் குடும்பங்கள் இருக்கக் கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அனைத்து தகுதியான குடும்பங்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி நிறைவடைந்துள்ள நிலையில் போலி குடும்ப அட்டைகளைக் களையத் தேவையான தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அதே நேரத்தில், தகுதி வாய்ந்த குடும்பங்கள் விடுபட்டிருப்பின், அவர்களுக்குக் கண்டிப்பாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நியாயவிலைக் கடைகளில் அயோடின் கலந்த உப்பு விற்பனை:**

கழுத்துக் கழலை நோய் போன்ற அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் உத்தேசத்துடன் உறையில் அடைக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பினை, கிலோ ஒன்றுக்கு ரூ. 2.50 வீதம் நியாயவிலைக் கடைகள் வாயிலாக நுகர்வோர்களின் தேவைக்கேற்ப, விற்பனை செய்யும் திட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தினை, நீலகிரி, கோயம்புத்தூர், கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தகவல் சேகரிப்பு மையம்:**

குடும்பத் தலைவரின் புகைப்படத்துடன், கணினியில் பதிவு செய்யப்பட்ட 149 இலட்சம் குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள் வழங்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சிறப்பு ஆணையாளரின் அலுவலகத்திலுள்ள கணினி மையத்தை நவீனமயமாக்கிய பின்னர், பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைப் பணி மையத்தின் உதவியுடன் அங்கு ஒரு தகவல் சேகரித்து வைக்கும் மையத்தினை அமைத்து, அம்மையத்தின் மூலமாக புதிய குடும்ப அட்டைகளை அச்சடித்து, வழங்கப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சிறப்பு ஆணையாளரின் அலுவலகத்திலுள்ள கணினி மையத்தை நவீனப்படுத்துவதற்காக, அரசு 1999-2000 ஆம் ஆண்டிற்கான, பகுதி-2 திட்டத்தில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

[1999 ஏப்ரல் 15

## அத்தியாயம் - 4

### கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்துதல்

பொது மக்களுக்கு நியாய விலைகளில் இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கவும், பதுக்கல், கள்ளச் சந்தை ஆகியவற்றை தடுக்கவும் மத்திய அரசு 1955 ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது.

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள உணவுத் துறை தொடர்பான கட்டுப்பாடு ஆணைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
2. 1977 ஆம் ஆண்டு பயிறுவகைகள், சமையல் எண்ணெய் வித்துக்கள் சமையல் எண்ணெய் (சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணை.
3. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தலும் மற்றும் கணக்குகளை பாராமரித்தலும்) ஆணை.
4. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை.
5. 1980 ஆம் ஆண்டு மோட்டார், ஸ்பிரிட் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தில் முறைகேடுகளைத் தவிர்த்தல்) ஆணை.
6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்துதல) ஆணை.
7. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நெல் (எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.
8. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.



1999 ஏப்ரல் 15]

9. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நெல், அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.
10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
11. 1993 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை மற்றும்
12. 1993 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்சவிலை நிர்ணயம்) ஆணை.

கட்டுப்பாட்டு ஆணைகளை, காவல் துறையின் நுகர்பொருள் வழங்கு தொடர்பான குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன், உணவுப் பொருள் வழங்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் செயல்படுத்தி வருகின்றார். இக்குற்றப் புலனாய்வுப் பிரிவு, கட்டுப்பாடு ஆணைகள் மீறப்படும்போது இன்றியமையாப் பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்வது, கலப்படம் செய்ததைக் கண்டுபிடித்தல், மாநில எல்லைப் பகுதிகளில் மீறி பொருட்களைக் கடத்தல், பதுக்கல், கள்ளச்சந்தை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் முதலான பணிகளை மேற்கொண்டுள்ளது. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம், கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் கீழ், 1998 ஆம் ஆண்டில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு கைப்பற்றிய பொருட்களின் அளவு குறித்த விவர அறிக்கை அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 5

### நுகர்வோர் பாதுகாப்பு

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு (மத்திய சட்டம் 68/1986) சட்டம் நுகர்வோர் நலனைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சமுதாய பொருளாதார சட்டமாகும்.

2. நுகர்வோர் குறைகளை, எளிதாகவும் விரைவாகவும அதிக செலவின்றியும் தீர்த்துக் கொள்ள வகை செய்வதே இச்சட்டத்தின் நோக்கமாகும். குறைபாடுள்ள பொருட்கள் விற்பனை செய்தல், பணிக் குறைபாடுகள் குறித்து கொடுக்கப்படும் மனு அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறு, கொடுமை, மன உளைச்சல், வியாபார இழப்பு மற்றும் பிற இழப்புகளுக்குத் தகுந்த இழப்பீட்டுத் தொகை பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது. நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் புகார்களைப் பதிவு செய்யக் கட்டணம் ஏதுமின்றி, வழக்குரைஞர் உதவியில்லாமல் வழக்குகள் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேசிய, மாநில, மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் விவரம் பின்வருமாறு :

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுடில்லி;
2. மாநில் நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை; மற்றும்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்.

**1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுடில்லி:**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் புதுடில்லியில் இயங்கி வருகிறது. ரூபாய் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட இழப்பீடு கோரி பதிவாகும் வழக்குகளை இவ்வாணையம் எடுத்துக்கொள்ளும். இந்த ஆணையம் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின்பேரில், மேல்முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

**2. மாநில, நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை:**

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், ரூ.5 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூ.20 இலட்சத்திற்கு குறைவாகவும் இழப்பீட்டுத் தொகை கோரப்படும் இனங்களில் வழக்கு பதிவு செய்யலாம். மாநில ஆணையம், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்டு இரண்டு





உறுப்பினர்களுடன் இயங்குகிறது. இதில் ஒரு மகளிர் உறுப்பினர் இடம் பெற்றிருப்பார். நிர்வாகப் பொறுப்பில் உள்ள பதிவாளர், மாநில ஆணையம் மற்றும் மாவட்ட அமைப்புகளின் நிர்வாகப் பணிகளை ஒருங்கிணைக்கும் துறைத் தலைவர் ஆவார். 1998 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு, முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகள்:**

மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் முறையீடு செய்யலாம். கோரப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சத்திற்கு மேற்படாதிருக்கும் இனங்களில், இவ்வமைப்புகளில் புகார் தாக்கல் செய்யலாம். ஒவ்வொரு மாவட்ட அமைப்பிலும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தலைவராக இருப்பார். இரண்டு உறுப்பினர்களுள் ஒருவர் மகளிர் உறுப்பினர் ஆவார்.

இம்மாநிலத்தில் தற்போது 24 மாவட்ட நுகர்வோர் அமைப்புகள் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட திருவள்ளூர், திருவாரூர், பெரம்பலூர், கரூர், தேனி, நாமக்கல் ஆகிய ஆறு மாவட்டங்களுக்கும் தனித்தனியே ஒரு மாவட்ட குறைதீர் மன்றம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டில் மாவட்ட குறைதீர் அமைப்புகளில் தாக்கல் செய்யப்பட்டு முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் அட்டவணை-7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**நிதியுதவி:**

நுகர்வோர் நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல், அறைக்கலன்கள், சாதனங்கள் முதலான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காக மத்திய அரசு ஓர் முறை (ONE TIME) நிதி உதவி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு, நான்கு சம தவணைகளில் மொத்தம் ரூ.270 இலட்சம் வழங்கியுள்ளது. இந்தத் தொகையிலிருந்து மாநில அரசு, இதுவரை ரூ.130.60 இலட்சம், நுகர்வோர் மன்றங்களுக்கு வழங்கியுள்ளது. முதல் தவணைத் தொகையான ரூ.67.50 இலட்சத்தை தட்டச்சு இயந்திரங்கள், ஜெராக்ஸ் இயந்திரங்கள், சட்டப் புத்தகங்கள் முதலான அடிப்படை வசதிகளுக்காக மாநில ஆணையம் மற்றும் மாவட்ட அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நுகர்வோர் மன்றங்களுக்கென சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக இடங்களைத் தேர்வு செய்யும் பணி குறித்து அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

[1999 ஏப்ரல் 15

**ஏனைய நடவடிக்கைகள்:**

இன்று நுகர்வோர் இயக்கம் வேகமாக வளர்ந்து வருகிறது. பொது மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், நுகர்வோர் பாதுகாப்பு கோரும் பொதுமக்கள் இவ்வியக்கத்தில் அதிக அளவில் பயன்பெற அரசு போதிய ஊக்கமளித்து வருகிறது. நுகர்வோர் இயக்கம் கிராம அளவில் வளர, சற்றேறக்குறைய 170 தன்னார்வ நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள் மாநிலத்தில் செயற்பட்டு வருகின்றன. நுகர்வோர் உரிமைகள் குறித்து, தேசிய பணித் திட்டத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், சிறு கையேடுகள் அச்சிடவும், நுகர்வோர் கல்வி பெருக மாநில அளவில் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இவ்வியக்கத்தில் சீரிய பணியாற்றுவோருக்கு அரசு மாநில விருதுகளை வழங்கி வருகிறது. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ள நடப்பாண்டில் ரூ. 10 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 ஆம் நாள் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு நுகர்வோர் தினம் வேலூர் நகரில் கருத்தரங்குடன் கொண்டாடப்பட்டது. இதற்கு மத்திய அரசு ரூ. 1.50 இலட்சம் வழங்கியது. இந்த ஆண்டு மார்ச் 15 ஆம் நாள் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் திருச்சியில் தன்னார்வ நுகர்வோர் பாதுகாப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடலுடன் நடத்தப்பட்டது. இதற்கு மைய அரசு கடந்த ஆண்டு போன்று நிதி அளிக்காததால் மாநில அரசு இதற்கான செலவினை ஏற்றுக் கொண்டது.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம் - 6

### விலைவாசி நிலவரம்

கடந்த ஆண்டில் பருவநிலை பாதிக்கப்பட்டதனால் உணவுப் பொருட்களின் உற்பத்தி கணிசமாக குறைந்தது. அதன் விளைவாக, நாடு முழுவதுமே இன்றியமையாப் பொருட்களின் விலைவாசிகள் மிகவும் உயர்ந்து காணப்பட்டன. இதனால் பொதுமக்கள்-குறிப்பாக ஏழை எளிய மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள் குறிப்பாக வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் மிகவும் அதிக அளவில் நிலவி வந்தன.

மாநிலத்தில், இன்றியமையாப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில், நிதிச் செயலர், உணவுப் பொருள் வழங்கல் சிறப்பு ஆணையர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், ஆகியோர் அடங்கிய விலைவாசி கண்காணிப்புக் குழுவினை அரசு அமைத்துள்ளது. வேளாண்மைத் துறைச் செயலர், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்களின் இணையத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் இயக்குநர், உணவுத் துறை, காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோரும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, வாரம் ஒரு முறை கூடி, அந்தந்த வாரத்தின் விலைவாசி விவரங்களை முந்தைய வார, மாத விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளை கட்டுக்குள் கொண்டுவர அரசும் பல்வேறு அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்து வருகிறது. மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் செயற் திட்டங்களை கூர்ந்தாய்வு செய்ததனை தொடர்ந்து, தற்போது அனைத்து இன்றியமையாப் பொருட்களின் விலைகளும் கட்டுக்குள் உள்ளன. மேலும், இனி வருங்காலங்களில், பொருட்களின் விலைகள் ஏறாமல் தடுக்க கூறை அளவில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிக அளவில் விளையும்போது, அவைகளை சேமித்து வைத்து பதப்படுத்த வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம் போன்ற இடங்களில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கும், திருச்சியில்

[1999 ஏப்ரல் 15

(வாழைப்பழம்), தேனியில் (திராட்சை) மற்றும் தருமபுரியில் (மாம்பழம்) பழ வகைகளுக்கென குளிர் சாதன வசதிகளுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

துவரம் பருப்பு அதிகம் விளையும் கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் பருப்பு கொள்முதல் செய்து அவற்றை கூட்டுறவு அமைப்புகளின் வாயிலாக பொதுமக்களுக்கு நியாயவிலையில் விற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடத்தல் மற்றும் பதுக்கல்காரர்களின் செயல்பாட்டினை கூர்மையாகக் கண்காணித்து பதுக்கலைத் தடுக்கவும், தேவைப்பட்டால், அத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது இன்றியமையா பொருட்களின் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், வெளி மாநிலங்களுக்கு உணவுப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க, எல்லையோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறையும் மாநில எல்லைகளைக் கண்காணித்து கடத்தலை தடுத்து வருகின்றது. இதனால் கடத்தலும் பதுக்கலும் பெருமளவு குறைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளினால், மாநிலத்தில் இன்றியமையாப் பொருட்களின் விலைகள் சீராக உள்ளன.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம் - 7

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு சொந்தமான ஒரு தனி நிறுவனமாக 24-4-1972-ல் ஏற்படுத்தப்பட்டது. நாட்டிலேயே, இது பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனத்தின் நோக்கம், இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்து, கிடங்குகளில் பாதுகாத்து நியாயவிலைக் கடைகளுக்கு பொருட்கள் வழங்குவதாகும்.

**நிர்வாகம்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், முதுநிலை அரசு அலுவலர்களைக் கொண்ட ஓர் இயக்குநர் குழுவால் திறமையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு தலைவரும், மேலாண்மை இயக்குநரும் அரசால் நியமிக்கப்படுகின்றனர். நிர்வாக வசதிக்காக, இக்கழகத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மண்டலம் வீதம் 29 மண்டல அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் தலைமையில் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 11,171 நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். இது தவிர, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை நெல் கொள்முதல் செய்வதற்காக நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 3,671 தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில், கொள்முதல், வாணிபம், விற்பனை, கணக்கியல், தரக்கட்டுப்பாடு, போக்குவரத்து, பொறியியல் (நவீன அரிசி ஆலைகள்) கட்டுமானம் மற்றும் விழிப்புப் பணி என பல பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகள் கழகத்தின் செயல்பாட்டிற்கு உதவி செய்கின்றன.

**நிதி நிலைமை:**

இந்நிறுவனம், 1972-73-இல் தொடங்கப்பட்டபோது, இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடி மட்டுமே. இது நாளுக்கு நாள் வளர்ந்து, தற்போது ரூ. 35 கோடியை எட்டியுள்ளது. 31-3-1999 அன்றுள்ளபடி, இந்நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.31.32 கோடியாகும்

இந்நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள், இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளின் பேரில் பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெற்று நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசிடம் இருந்து அவ்வப்போது பெறப்படும் வழிவகை முன்பணமும் இக்கழகத்தின் வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும், அரிசியைத் தவிர, மற்ற அனைத்து பொருட்களும் அடக்க விலைக்கு சிறிது அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அரிசி, அடக்க விலையைவிட குறைவாக விற்பனை செய்யப்படுவதால் ஏற்படும், விலை வித்தியாசத்திற்காக, அரசு மானியம் வழங்குகிறது.

*1975-76* இல் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.73 இலட்சம் ஆகும். கடந்த ஆண்டுகளில் இது மேன்மேலும் வளர்ந்து நடப்பு ஆண்டில் (1999-2000) இது ரூ. 1,040 கோடி அளவினை எட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. *1972-73* ஆம் ஆண்டில் ரூ.12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வியாபார அளவு, *1998-99* இல் ரூ.2,400 கோடியாக உயர்ந்துள்ளது.

**கொள்முதல்:**

காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்ட அரசு நிறுவனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமே ஆகும். ஒவ்வொரு ஆண்டும் அரசின் முடிவுகளுக்கு உட்பட்டு, ஏகபோக கொள்முதல் அல்லது இணைக் கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராம அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. மைய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலையுடன், மாநில அரசு விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் கூடுதலாக இடைநிகழ்ச் செலவு/ஊக்கத் தொகைகளையும் அளித்து வருகிறது. நெல்லின் தரத்தை உறுதி செய்ய தரக்கட்டுப்பாடு மற்றும் ஈரத்தன்மை 18 சதவீதத்திற்கும் அதிகமானால், ஈரத்தன்மை கட்டுப்பாடும் விதிக்கப்படுகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல், நவீன அரிசி ஆலை, கிடங்குகள் மற்றும் திறந்த வெளிக் கிடங்குகள் ஆகியவற்றிற்கு கொண்டு செல்லப்படுகின்றன.



ஒவ்வொரு மாவட்டத்திலும் நெல் அரைக்கப்பட, நவீன அரிசி ஆலைகள்/ தனியார் அரிசி ஆலைகளுக்கு இரயில் அல்லது சாலை வழியாக நெல் கொண்டு செல்லப்படுகிறது. *1998-99* ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் தொகுப்பு அளவு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| குறுவை '98 | .. | 44,550 டன்கள் |
| சம்பா | .. | 9,91,276 டன்கள் |

**நெல் அரைவை:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல், இக்கழகத்தின் நவீன அரிசி ஆலைகளிலும் மற்றும் தனியார் அரைவை முகவர்களுக்குச் சொந்தமான அரிசி ஆலைகளிலும் அரிசியாக மாற்றப்படுகிறது. இத்தனியார் அரைவை முகவர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கழகத்தால் நியமிக்கப்படுகின்றனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 23 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இவைகளின் சராசரி நெல் அரைவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 43,600 டன்களாகும். கள்ளக்குறிச்சி, ஆக்கூர், திருவாரூர் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலைகளை சூடான திரவ சுழற்சி முறை (**Thermic Fluid System**) மூலம் 278 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுப்புறச்சூழலில் ஏற்படும் மாசினைத் தடுப்பதற்கு ஏதுவாக, மேலும் நவீனமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பூனக்குளம் என்னுமிடத்திலும் பெரம்பலூர் மாவட்டத்தில் திருமானூரிலும் நவீன அரிசி ஆலைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

243 நிரந்தர தனியார் அரைவை முகவர்களும் 195 கூலி அரைவை முகவர்களும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். மாதம் ஒன்றுக்கு இவர்களின் நெல் அரைவைத் திறன் 144 இலட்சம் டன்கள் ஆகும்.

**நியாயவிலைக் கடைகள்:**

பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்வதிலும், விநியோகம் செய்வதிலும் மொத்த வணிகராக செயல்படுவதோடு, குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1,095 நியாயவிலைக் கடைகளும் இந்நிறுவனத்தால் நடத்தப்படுகின்றன.

**நலத் திட்டங்கள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கீழ்க்காணும் நலத் திட்டங்களுக்கான இன்றியமையாப் பொருட்களை வழங்குகிறது :

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

(ஆ) வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம்.

(இ) காவல் துறை/தீயணைப்புத் துறை/சிறைத் துறை பணியாளர்களுக்கு பொருட்கள் வழங்குதல்.

(ஈ) இலங்கை அகதிகளுக்கு உணவுப் பொருள் வழங்குத்ல்.

(உ) ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ விடுதிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்.

நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டங்களுக்காக வழங்கப்பட வேண்டிய பொருட்களின் அளவு பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| அரிசி | : | 1,84,000 டன்கள் |
| பருப்பு | : | 24,000 டன்கள் |
| பாமாலின் | : | 2,000 டன்கள் |

**அமுதம் பல்பொருள் அங்காடி:**

வெளி அங்காடி விலைகளைக் காட்டிலும் குறைவான விலையில் மளிகைச் சாமான்கள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அமுதம் பல்பொருள் அங்காடிகளை ஏற்படுத்தி உள்ளது. இக்கழகம் சென்னை, கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 37 பல்பொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு ரூ. 11.04 கோடியாக இருந்த இவ்வங்காடிகளின் வியாபார அளவு, 1998-99ஆம் ஆண்டு ரூ. 14.57 கோடி அளவில் உயர்ந்துள்ளது. ஒரு பல்பொருள் அங்காடியின் சாரசரி வியாபார அளவு மாதம் ஒன்றுக்கு ரூ. 3.3 இலட்சம் ஆகும்.

**கட்டுமானம்:**

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுமானப் பிரிவு ஒரு கட்டுமானப் பொறியாளரின் தலைமையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.



இவருக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுப்பணித் துறை மற்றும் மின்சார வாரியத்தின் சார்நிலைப் பணியாளர்கள் உதவி செய்கிறார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 133 வட்டங்களில் 6,17,900 டன்கள் கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதிகளைப் பெற்றுள்ளது. மேலும் 1 கிடங்கினை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இது தவிர தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றிற்குச் சொந்தமான கிடங்குகளை 22 வட்டங்களில் வாடகைக்கு எடுத்தும் பயன்படுத்தி வருகிறது. அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமாக கிடங்குகள் இல்லாத 40 வட்டங்களில் சொந்தக் கிடங்குகளை கட்டுவதற்கு இக்கழகமும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் உத்தேசித்துள்ளன.

காவிரி பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 175 நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டியுள்ளது. இந்நிலையங்கள் ஒவ்வொன்றும் 100 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்கு, நெல் உலர்த்தும் இடம், கோணிகள் வைக்க அறை, அலுவலக அறை போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளை உள்ளடக்கியுள்ளன. மேலும் 20 நிலையங்களின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. நெல் கொள்முதல் அதிகமாக உள்ள மாதங்களில், ஏறத்தாழ 950 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்:**

பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படும்போது ஏற்படக்கூடிய அளவுக் குறைவு போன்ற பல்வேறு குறைபாடுகளை நீக்கும்முகத்தான், கைப்பம்புகள் வாயிலாக மண்ணெண்ணெய் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், 22 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 8 நிலையங்கள் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காகும் செலவில் 50 சதவீதத்தை அரசு மானியமாக அளித்துள்ளது. 5 அல்லது 6 நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள மொத்த குடும்ப அட்டைகளும் ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்துடன் இணைக்கப்பட்டு, மண்ணெண்ணெய் வழங்குதல் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பொது மக்களின் நலனுக்காக 4,500 டன் கொள்ளளவுள்ள சமையல் எண்ணெய்

[1999 ஏப்ரல் 15

கிடங்குகளும் 4 இடங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் நிலையங்களும், சமையல் எரிவாயு நிலையங்கள் 5 இடங்களிலும் இந்நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**ஊதியக்கொடை:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் 'சி' மற்றும் 'டி' வகை பணியாளர்களுக்கு 1997-98 ஆம் ஆண்டு ஊதியக் கொடையாக 8.33 சதவீதமும் அன்பளிப்புத் தொகையாக 11.67 சதவீதமும் வழங்கப்பட்டது. 'ஏ' மற்றும் 'பி' வகை பணியாளர்களுக்குச் சிறப்பு தற்காலிக ஊதியக் கொடையாக ரூ.925-ம், பண்டிகை முன்பணமாக ரூ.1,575-ம் வழங்கப்பட்டது. மேற்சொன்ன தொகை 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ.8.87 கோடி ஆகும்.

**விழிப்புப் பணிக் குழு:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 4 விழிப்புப் பணிக்குழுக்கள், விழிப்புப்பணி அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவ்விழிப்புப் பணிக்குழுக்கள் திடீர், சோதனைகளை மேற்கொண்டும், முறைகேடுகள் நடைபெறுவது குறித்து தகவல் வரப்பெறும்போது கிடங்குகள், நியாயவிலைக் கடைகள், நவீன அரிசி ஆலைகள், கொள்முதல் மையங்கள், அங்காடி மையங்கள் முதலான இடங்களில் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன. தவறிழைக்கும் பணியாளர்கள் மீது ஒழுங்குமுறை நடவடிக்கைகள், வசூல் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதோடு அவற்றிற்கான தொடர் நடவடிக்கைகளையும், விழிப்புப் பணிக் குழு கூர்ந்து கண்காணித்து வருகிறது.



1999 ஏப்ரல் 15]

## அத்தியாயம் 8

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

**முன்னுரை:**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவப்பட்டு, 2-5-1958-லிருந்து அதன் செயல்பாடுகளைத் தொடங்கியது. 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 18(1)-ன்கீழ் இந்நிறுவனம் முறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. வேளாண் பொருட்கள் மற்றும் அறிவிக்கையிடப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை அறிவியல் முறையில் சேமித்து வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்நிறுவனத்தின் கிடங்குகளில் உற்பத்திப் பொருட்களை சேமித்து வைப்பவர்களுக்கு, குறிப்பாக தொடக்க உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் சேமித்துவைக்கும் பொருட்களின் பேரில் வங்கிகளிலிருந்து கடன் வசதிகள் பெற்றுத் தருவதற்கும் இந்நிறுவனம் உதவிசெய்கிறது. 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, வேளாண் பொருட்கள் மற்றும் அறிவிக்கையிடப்பட்ட பொருட்களை சேமித்து விநியோகிக்கும் நோக்கத்திற்காக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மாநில அரசின் ஒப்புதல் பெற்று தக்க இடங்களில் கிடங்குகளைக் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது.

**நிதிநிலை செயலாக்கம்:**

31-03-1999 அன்று நிலவரப்படி, இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 761 இலட்சமாகும். இதில் மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் முறையே செலுத்திய பங்குத் தொகை ரூ. 380.50 இலட்சமாகும்.

1996-97-ல் ரூ. 839.66 இலட்சமாக இருந்த தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த வருமானம், 1997-98-ல் ரூ.990.86 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1997-98-ல் இந்நிறுவனத்தின் வியாபாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டைக் கணக்கிடும்போது 1997-98ஆம் ஆண்டின் வருமானம் ரூ. 151 இலட்சம் அதிகரித்து உள்ளது. ஆனால் 1996-97ஆம் ஆண்டில் ரூ. 147.71 இலட்சமாக இருந்த இலாபம், 1997-98 இல் ரூ. 82.41 இலட்சமாக குறைந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 6 ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி

[1999 ஏப்ரல் 15

நிறுவன ஊழியர்களுக்கு ஊதிய நிலுவைகளை அளித்ததே இதற்குக் காரணம். எனவே, பங்குதாரர்களுக்கு 1997-98 ஆம் ஆண்டிற்கு ஒரு விழுக்காடு ஈவுத்தொகையே அறிவிக்கப்பட்டது.

**கட்டுமானப் பணி விவரங்கள்:**

8 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்நிறுவனம் கூடுதலாக 53,000 டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்ட உத்தேசித்தது. இதில், 50,800 டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 34,000 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16,800 டன்கள் கொள்ளளவுக்கு, 1999-2000 ஆண்டில் கிடங்குகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வணிகம்:**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், 64 இடங்களில் சேமிப்புக் கிடங்குகளை வைத்துள்ளது. 53 இடங்களில் 246 சொந்த சேமிப்புக் கிடங்குகளும், 11 இடங்களில் வாடகை சேமிப்புக் கிடங்குகளும், இந்நிறுவனத்திடம் உள்ளன. நிறுவனத்தில் மொத்த சேமிப்பு அளவு பின்வருமாறு

| | |
|---|---|
| சேமிப்புக் கொள்ளளவு (சொந்தக் கிடங்குகள்) | 5,98,210 மெட்ரிக் டன்கள் (53 இடங்கள்) |
| சேமிப்புக் கொள்ளளவு (வாடகைக் கிடங்குகள்) | 24,290 மெட்ரிக் டன்கள் (11 இடங்கள்) |

சேமிப்புக் கிடங்குகளின் பயன்பாடளவு, 1997-98-ஆம் ஆண்டில் 5.46 இலட்சம் டன்களும் (88 சதவீதம்), 1998-99 ஆம் ஆண்டில் சுமார் 5 இலட்சம் டன்களும் (80 சதவீதம்) ஆகும். இந்நிறுவனத்திடம் உள்ள சேமிப்பு வசதியை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் ஆகிய மாநில அரசு நிறுவனங்களும், இந்திய உணவுக் கழகம் முதலான மைய அரசு நிறுவனமும் பயன்படுத்திக்கொள்கின்றன. இந்நிறுவனம் எடுத்த சீரிய முயற்சியால் 1998-99ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகளின் பயன்பாடளவு 80 சதவீதம் ஆயிற்று. இறக்குமதியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தூத்துக்குடி துறைமுகத்தில் ஒரு சுங்கப்பிணை சேமிப்புக் கிடங்கு (Custom Bonded Ware House) செயல்பட்டுவருகிறது. அறிவியல் சேமிப்பு



1999 ஏப்ரல் 15]

முறையில் கடந்த 30 ஆண்டுகளாக பெறப்பட்ட அனுபவத்தாலும் மற்றும் தற்போதைய தொழில் நுட்ப அணுகுமுறையாலும் பொருட்களை சேமித்து வைப்பதில் ஏற்படும் இழப்பினை, பெருமளவு தற்போது தவிர்க்க முடிகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

**பூச்சி தொற்றுதலைத் தடுத்தல்:**

எலி, கொசு மற்றும் புழு பூச்சி ஆகியவற்றால் ஏற்படும் தொற்றுதலைத் தடுத்து மருந்து தெளிக்கும் பணியில், பூச்சித் தடுப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம், கூட்டுறவு வங்கிகள், அரசு மருத்துவமனைகள், எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம், போக்குவரத்துக் கழகங்கள், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் 50 அரசு நிறுவனங்கள் இப்பிரிவின் பணியினை பயன்படுத்திக் கொள்கின்றன. 1998-99ஆம் ஆண்டில் இப்பிரிவு மூலம் கிடைத்த நிகர வருமானம், சுமார் 4 இலட்சம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், வைப்பீடுதாரர்களின் தேவையினை, குறிப்பாக, தொடக்க நிலை உற்பத்தியாளர்களின் தேவையினை நிறைவேற்றி. கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து இலாபத்திலேயே இயங்கி வருகிறது

[1999 ஏப்ரல் 15

## அத்தியாயம்-9

### முனைப்பான திட்டங்கள்

உணவுத் துறையில் அரசு மேற்கொண்டு வரும் சில முனைப்பான திட்டங்களை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும். 1972-ல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாநிலத்தின் அனைத்து வட்டங்களிலும், கிடங்கு வசதிகள் பெற்று, இன்று பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் நல்ல கட்டமைப்புடன் இயங்கி வருகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு, கொள்முதல் நிலையங்கள் அமைத்து, அதை உரியமுறையில் பாதுகாத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 23 அரவை ஆலைகள் மற்றும் அரைவை முகவர்களின் ஆலைகளிலும் நெல் அரைக்கப்பட்டு பொது விநியோகத்திறகுத் தேவையான அரிசியைப்பெற இப்பணிகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட காரணத்தினால், கடந்த ஆண்டு சம்பாவிலும் குறுவையிலும் கொள்முதல் செய்யப்பட்ட 18 இலட்சம் டன்கள் அளவுக்கும் அதிகமான நெல் தொகுப்பும் 9 மாதங்களிலேயே அரைத்து முடிக்கப்பட்டு, இத்தகைய சாதனை படைக்க முடிந்தது. வாணிபக் கழகம் முனைப்புடன் செயலாற்றியதன் காரணமாக மாதம் 2 இலட்சம் டன் அளவுக்கு அரிசியும், 30,000 டன் அளவுக்கு கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களையும், 28,000 டன் அளவுக்கு சர்க்கரையும் மாநிலத்திலுள்ள சுமார் 26,000 நியாய விலைக் கடைகளுக்கும் தங்குதடையின்றி அனுப்பி வைக்க முடிந்தது. சுமார் 1.5 கோடி குடும்பங்களுக்கு அப்பொருட்களை சீராக வழங்கப்பட ஏதுவாகிறது. ஒட்டுமொத்தமாக நோக்கின், பொது விநியோகத்தில் குறைபாடுகள் களையப்பட்டு, துறையின் பணிகள் சிறப்புற்று வருகின்றன.

கணினி மயமாக்கப்பட்ட புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி நிறைவுற்று தகுதியுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கி இத்துறை சாதனை புரிந்துள்ளது. கிடங்குகளிலுள்ள இருப்பு, ஒவ்வொரு மாவட்டத்திற்கான ஒதுக்கீடுகள், நியாயவிலைக் கடைகளுக்கு பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதில் ஏற்படும் முன்னேற்றம், இவைகளையெல்லாம் கணினி வசதி கொண்டு ஆய்வு செய்து இப்பணிகளில் எங்காவது தொய்வு ஏற்படின் அதை உடனுக்குடன் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு போதிய கணினி வசதிகளை உருவாக்க இத்துறையால் திட்டமிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 15]

பொது மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுவரும் 'மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்' அமைக்கும் பணியினை, மாநிலம் தழுவிய அளவில் இத்துறை நிறைவேற்றி வருகிறது. மாத ஒதுக்கீடான, 76,000 கிலோ லிட்டர் அளவில், நகர்ப்புறங்களில் மட்டுமே சற்றேறக்குறைய 40 சதவீத அளவிற்கு விநியோகிக்கப்படுகிறது. இப்புது வசதி முதற்கட்டமாக, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாவட்ட தலைநகரங்களிலும் படிப்படியாக, வட்டம் மற்றும் ஒன்றிய தலைமையிடங்களிலும் அமைக்கப்பெற்று இலட்சோப இலட்ச குடும்பங்கள் அனைத்து வேலை நாட்களிலும் மண்ணெண்ணெய் பெற்று பயன்பெற நடப்பு ஆண்டில் முழு வீச்சில் இப்பணி விரிவுபடுத்தப்பட உள்ளது.

மத்திய அரசின் ஒதுக்கீடுகளை முழுமையாகப் பெறவும், பொது விநியோகத் தேவைக்கு நெல் கொள்முதல் செய்வதற்கும், கொள்முதல் செய்த நெல்லை விரைவாக அரைத்தும், அரைத்துப் பெற்ற அரிசியை நன்முறையில் காத்தும், தரமான பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கியும், அவ்வாறு வழங்கும் முறையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை உடனுக்குடன் களையவும், தொடர்ந்து இத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

துறையின் அனைத்துப் பணிகளையும் ஒருமுனைப்படுத்தி, துறையின் செயலாக்கத் திட்டத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்துறை நன்றி பாராட்டி, என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.

இத்துறையின் பணிகள் மேலும் சிறப்புற பொது மக்களின் நல்லாதரவு வேண்டப்படுகிறது.

[1999 ஏப்ரல் 15

## அட்டவணை-1

## இன்றியமையாப் பொருட்களின் தற்போதைய விநியோக அளவுகள் பொதுவிநியோக முறை

| பண்டங்களின் பெயர் | விலை கிலோ/ லிட்டருக்கு (ரூ. பை) | விநியோக அளவுகள் | கால அளவு |
|---|---|---|---|
| அரிசி வகை 'அ' சாதாரண ரகம் | 3.75 2.00 | மாதம் ஒன்றுக்கு பெரியவர் ஒருவருக்கு தலா 4 கிலோ மற்றும் சிறுவருக்கு தலா 2 கிலோ என்ற அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு உயரளவு 20 கிலோ அரிசி குறைந்த பட்சம் 12 கிலோ (1-6-1997லிருந்து) | ஒரே தவணையில் அல்லது குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |
| கோதுமை | 7.00 | குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் 10 கிலோ இதரப் பகுதிகளில் 5 கிலோ | ஒரே தவணையில் |
| சர்க்கரை | 12.00 | தலா 500 கிராம் என்ற விகிதத்தில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோவுக்கு மிகாமல் | ஒரே தவணையில் |
| பாமாலின் எண்ணெய் 1 லிட்டர் | 34.50 | | ஒரே தவணையில் |



1999 ஏப்ரல் 15]

| பண்டங்களின் பெயர் | விலை கிலோ/ லிட்டருக்கு (ரூ. பை) | விநியோக அளவுகள் | கால அளவு |
|---|---|---|---|
| ரவை | 10.50 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 2 கிலோ | ஒரே தவணையில் |
| மைதா | 10.00 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 5 கிலோ | ஒரே தவணையில் |
| மண்ணெண்ணெய் (சமையல் எரிவாயு இணைப்பின் அடிப் படையில்) | லிட்டர் ஒன்றுக்கு விலை ரூ. 2.80 லிருந்து ரூ. 3.10 வரை (எண்ணெய் எடுக்கப்பட வேண்டிய இடத்தி லிருந்து உள்ள தூரத்தைப் பொறுத்து) | | இரு தவணைகளில் வழங்கப்படு கிறது. |

53-87-18

### 1-10-1993 முதல் அமலில் உள்ள மாற்றியமைக்கப்பட்ட மண்ணெண்ணெய் விநியோக அளவுகள் சமையல் எரிவாயு உள்ளவர்களுக்கு

| இடம் | சமையல் எரிவாயு வைத்திருக்காத குடும்ப அட்டை தாரர்கள் | ஒரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டை தாரர்கள் | இரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டை தாரர்கள் |
|---|---|---|---|
| | | (லிட்டர்கள்) | |
| சென்னை மாநகர் மற்றும் மாவட்ட தலைநகரங்கள் | 10 | 5 | 3 |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 5 | 3 |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 5 | 3 |
| ஊரகப் பகுதிகள் | 3 | 3 | 3 |
| **நீலகிரி மாவட்டம்** | | | |
| தலைநகரம் / நகராட்சிகள் | 15 | 10 | 8 |
| பேரூராட்சிகள் | 10 | 5 | 3 |
| கிராம பஞ்சாயத்துகள் | 5 | 5 | 5 |
| **கொடைக்கானல் மற்றும் ஏற்காடு வட்டங்கள்** | | | |
| பேரூராட்சிகள் மற்றும் நகரியங்கள் | 10 | 5 | 3 |
| கிராம பஞ்சாயத்துகள் | 5 | 5 | 5 |
| சிறப்பு நகராட்சி பகுதிகள் | 10 | 5 | 3 |





## அட்டவணை-2

### 1981 முதல் கடைப்பிடிக்கப்பட்ட கொள்முதல் முறை பற்றிய விவரங்கள்

| வ.எண் | காலம் | நெல் / அரிசி கொள்முதல் முறை |
|---|---|---|
| 1. | 20-01-1981 முதல் 30-09-1981 வரை | 40% வர்த்தக லெவி மாநிலம் முழுவதும் |
| 2. | 01-10-1981 முதல் 21-01-1983 வரை | 50% வர்த்தக லெவி மாநிலம் முழுவதும் |
| 3. | 22-01-1983 முதல் 31-03-1984 வரை | 1. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் மற்றும் தென்னாற்காடு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சில வட்டங்களில் ஏகபோக கொள்முதல்<br>2. ஏகபோக கொள்முதல் பகுதி தவிர பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| 4. | 01-04-1984 முதல் 31-10-1985 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி |
| 5. | 01-11-1985 முதல் 30-04-1987 வரை | 1. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் 6 வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 வட்டங்கள் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் 2 வட்டங்களில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிற பகுதிகள்/ வட்டங்களில் 50% வர்த்தக லெவி |
| 6. | 01-05-1987 முதல் 15-09-1987 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி |
| 7. | 16-09-1987 முதல் 31-07-1988 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிறபகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| 8. | 01-08-1988 முதல் 14-09-1988 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி |
| 9. | 15-09-1988 முதல் 30-06-1989 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |

[1999 ஏப்ரல் 15

| வ.எண் | காலம் | நெல் /அரிசி கொள்முதல் முறை |
|---|---|---|
| 10. | 01-07-1989 முதல் 31-08-1989 வரை | மாநிலம் முழுவதும் 50% வாத்தக லெவி |
| 11. | 01-09-1989 முதல் 15-12-1989 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி<br>3. 30% வர்த்தக லெவி (8-10-1989 முதல் 15-12-1989 வரை) |
| 12. | 16-12-1989 முதல் 30-06-1991 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 30% லெவி (16-12-1989 முதல் 7-2-1990 வரை)<br>3. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி (8-2-1990 முதல் 30-6-1991 வரை) |
| 13. | 01-07-1991 முதல் 14-09-1991 வரை | மாநிலம் முழுவதும் 50% வாத்தக லெவி |
| 14. | 15-09-1991 முதல் 30-04-1993 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்<br>2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி<br>3. 29-01-1992 முதல் 50% வர்த்தக லெவி நிறுத்தி வைக்கப்பட்டது<br>4. 1-5-1993 முதல் ஏகபோக கொள்முதல் முறை கைவிடப்பட்டது<br>5. 18-8-1992 முதல் தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை 198[illegible] ன் 4ஏ பகுதியின்படி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் நெல்/அரிசிக்கு 100% லெவி அமல்படுத்தப்பட்டது. |
| 15. | 01-09-1993 முதல் 14-09-1996 வரை | இணைக் கொள்முதல் முறை |
| 16. | 15-09-1996 முதல் 30-04-1997 வரை | காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| 17. | 01-09-1997 முதல் 20-12-1998 வரை | இணைக் கொள்முதல் |
| 18. | 21-12-1998 முதல் 30-6-1999 வரை | ஏகபோகக் கொள்முதல் |



1999 ஏப்ரல் 15]

| பண்டங்களின் பெயர் | விலை கிலோ/ லிட்டருக்கு (ரூ. பை) | விநியோக அளவுகள் | கால அளவு |
|---|---|---|---|
| ரவை | 10.50 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 2 கிலோ | ஒரே தவணையில் |
| மைதா | 10.00 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 5 கிலோ | ஒரே தவணையில் |
| மண்ணெண் ணெய் (சமையல் எரிவாயு இணைப்பின் அடிப் படையில்) | லிட்டர் ஒன்றுக்கு விலை ரூ. 2.80 லிருந்து ரூ. 3.10 வரை (எண்ணெய் எடுக்கப்பட வேண்டிய இடத்தி லிருந்து உள்ள தூரத்தைப் பொறுத்து) | | இரு தவணைகளில் வழங்கப்படு கிறது. |

# அட்டவணை - 3

## 1976 - 77 ஆம் ஆண்டு முதல் 1998 - 99 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் நெல்லின் கொள்முதல் விலை, மையத் தொகுப்பு அரிசியின் விற்பனை விலை, பொது விநியோகத் திட்டத்தில் அரிசியின் விற்பனை விலை, விநியோக அளவு, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை, வருடாந்திர அரிசி எடுப்பு மற்றும் வழங்கப்பட்ட மானியம்

| ஆண்டு | மைய அரசின் நெல் கொள்முதல் விலை (குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய்) | | | | மையத் தொகுப்பு அரிசியின் விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய்) | | | பொது விநியோக திட்டத்தில் அரிசியின் விற்பனை விலை (கிலோ ஒன்றுக்கு ரூபாய்) | | | விநியோக அளவு மாதம் ஒன்றுக்கு | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 1976 முதல் தொடங்கி காலண்டர் வருடத்திற்கு பொது விநியோகத் திட்டத்தில் அரிசியின் எடுப்பு (இலட்சம் டன்னில்) | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப்பட்ட மொத்த மானியத் தொகை (கோடி ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டா ரகம் | நடுத்தரம் | சன்னம் | மிகச் சன்னம் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் | | | | |
| 1976-77 | 74 | 78 | 83 | 86 | 150 | 162 | 172 | 1.60 (11-3-1976 முதல் அமலில் உள்ளது) | 1.85* (15-10-1976 முதல் அமலில் உள்ளது) | 2.00 (11-3-1976 முதல் அமலில் உள்ளது). | மாத வருமானம் ரூ. 500-க்கு குறைவானவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு பெரியவர் 3 கிலோ, சிறியவர் 2 கிலோ, மாத வருமானம் ரூ. 500-க்கு அதிகம் 20 கிலோ (1-1-1976 - 31-1-1976) | - | 6.23 | மானியம் வழங்கப்படவில்லை (வழிவகை முன்பணம் மட்டுமே வழங்கப்பட்டது). |
| 1977-78 | 77 | 81 | 86 | 89 | 150 | 162 | 172 | 1.60 | 1.85 | 2.00 | மாத வருமானம் ரூ. 500-க்கு மேல் 30 கிலோ (1-2-1976 முதல் 31-7-1978) சென்னை 30 கிலோ, கோயம்புத்தூர் 24 கிலோ, கன்னியாகுமரி 25 கிலோ (1-8-1978 - 30-4-1980) | - | 4.28 | - |
| 1978-79 | 85 | 89 | 94 | 97 | 150 | 162 | 172 | 1.60 | 1.85 | 2.00 | மாத வருமானம் ரூ. 500-க்கு குறைவாக உள்ளவர்களுக்குச் சென்னை 30 கிலோ, கோயம்புத்தூர் 30 கிலோ, கன்னியாகுமரி 30 கிலோ, நீலகிரி 24 கிலோ மற்ற மாவட்டங்கள் 24 கிலோ | - | 0.93 | 4.20 |
| | சாதாரணம் | | | | | | | | | | மாத வருமானம் ரூ. 500-க்கு மேல் சென்னை 30 கிலோ, கோயம்புத்தூர் 24 கிலோ மற்ற மாவட்டங்களில் 24 கிலோ (1-5-1980 முதல்) | | | |
| 1979-80 | 95 | - | 99 | 103 | 150 | 162 | 172 | 1.60 | 1.85 | 2.00 | 20 கிலோ | 106.00 | 1.49 | 3.95 |
| 1980-81 | 105 | - | 109 | 113 | 165 (1-1-1981 முதல்) | 177 | 192 | 1.75 (1-2-1981 முதல்) | 2.00 | 2.15 | 20 கிலோ | 108.98 | 1.35 | 1.81 |
| 1981-82 | 115 | - | 119 | 123 | 175 (1-10-1981 முதல்) | 187 | 202 | ” | ” | ” | 20 கிலோ | 108.98 | 6.71 | 23.99 |
| 1982-83 | 122 | - | 126 | 130 | 188 (1-10-1982 முதல்) | 200 | 215 | ” | ” | ” | 20 கிலோ (31-1-1983 வரை) | 118.88 | 6.29 | 51.68 |
| 1983-84 | 132 | - | 136 | 140 | 208 (16-1-1984 முதல்) | 220 | 235 | ” | ” | ” | 20 கிலோ ரூ. 1000 மற்றும் அதற்குக் குறைவான மாத வருமானம் (1-2-1983 முதல் 31-5-1983 வரை) சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை 12 கிலோ மற்ற இடங்களில் 6 கிலோ (1-6-1983 முதல் 14-9-1984 வரை) | 119.10 | 6.75 | 79.00 |
| 1984-85 | 137 | - | 141 | 145 | ” | ” | ” | ” | ” | ” | 20 கிலோ + 1 கிலோ இலவச அரிசி (15-9-1984 முதல் 31-10-1985 வரை) | 119.44 | 6.98 | 83.90 |
| 1985-86 ** | 142 | - | 146 | 150 | 217 (10-10-1985 முதல்) | 229 | 244 | 1.75 (1-11-1985 முதல்) | 2.25 | 2.50 | 12 கிலோ (1-11-85 முதல் 24-8-1986 வரை) | 119.66 | 11.04 | 79.00 |
| 1986-87 | 146 | - | 150 | 154 | 231 (1-2-1986 முதல்) | 243 | 253 | ” | ” | ” | 12 கிலோ + 3 கிலோ பச்சரிசி மாத வருமானம் ரூ. 1,000 மற்றும் அதற்குக் கீழே | 128.00 | 9.24 | 65.00 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1986-87 | 146 | - | 150 | 154 | 239 (1-10-1986 முதல்) | 251 | 266 | ,, | ,, | ,, | மாத வருமானம் ரூ. 1,000-க்கு மேல் 12 கிலோ (25-8-1986 முதல் 31-12-1989 வரை) | | | |
| 1987-88 | 150 | - | 154 | 154 | 239 (1-10-1987 முதல்) | 264 | 279 | ,, | ,, | ,, | அனைவருக்கும் 12 கிலோ | 120.00 | 11.87 | 117.61 |
| 1988-89 | 160 | - | 170 | 180 | 244 (25-1-1989 முதல்) | 309 | 325 | - | - | - | அனைவருக்கும் 12 கிலோ | 128.57 | 13.03 | 184.53 |
| 1989-90*** | 185 | - | 195 | 205 | 289 (25-6-1990 முதல்) | 349 | 370 | 2.00 (1-3-1990 முதல்) | 3.00 | 3.50 | அனைவருக்கும் 12 கிலோ (1-1-1990 முதல் 31-7-1990 வரை) | 126.71 | 14.57 | 208.79 |
| 1990-91 | 205 | - | 215 | 225 | - | - | - | 2.00 | 2.75 (1-10-1990 முதல்) | 3.25 | 12 கிலோ+5 கிலோ பச்சரிசி (விரும்பியவர்க்கு) (1-8-1990 முதல் 31-10-1990 வரை)<br>12 கிலோ+8 கிலோ பச்சரிசி (விரும்பியவர்க்கு) (1-11-1990 முதல் 28-2-1992 வரை) | 123.42 | 12.33 | 219.31 |
| | | | | | | | | 2.00 (1-12-1990 முதல்) | 2.50 | 2.50 | | | | |
| 1991-92 | 230 | - | 240 | 250 | 377 (28-12-1991 முதல்) | 437 | 458 | 2.00 (25-1-1992 முதல்) | 3.50 | 3.50 | அனைவருக்கும் 12 கிலோ (1-3-1992 முதல்) | 123.42 | 17.31 | 332.24 |
| 1992-93 | 270 | - | 280 | 290 | 437 (11-1-1993 முதல்) | 497 | 518 | 2.00 (1-5-1992 முதல்) | 3.00 | 3.00 | 12 கிலோ அனைவருக்கும் +3 கிலோ கூடுதலாக பொங்கல் 1993-க்கு மட்டும் | 123.42 | 14.70 | 351.68 |
| | | | | | | | | 2.75 (1-2-1993 முதல் 28-2-1993 வரை) | 3.75 | 3.75 | | | | |
| | | | | | | | | 2.50 (1-3-1993 முதல்) | 3.50 | 3.50 | | | | |
| 1993-94 | 310 | - | 330 | 350 | 537 (1-2-1994 முதல்) | 617 | 648 | 3.50 (1-2-1994 முதல்) | 4.75 | 4.75 | 12 கிலோ அனைவருக்கும் + 3 கிலோ கூடுதலாக பொங்கல் 1994-க்கு மட்டும் | 150.00 | 14.30 | 400.00 |
| 1994-95 | 340 | - | 360 | 380 | 537 | 617 | 648 | 3.50 (31-3-1995 வரை) | 4.75 | 4.75 | 12 கிலோ அனைவருக்கும் | 150.00 | 12.80 | 440.00 |
| | | | | | | | | 2.50 (1-4-1995 முதல்) | 3.75 | 3.75 | | | | |
| 995-96 | 360 | - | 375 | 395 | 537 | 617 | 648 | 2.00 (1-7-1995 முதல்) | 3.75 | 3.75 | மாதமொன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ சிறியவர்களுக்கு 2 கிலோ உச்சவரம்பாக குடும்ப அட்டை ஒன்றுக்கு 12 கிலோ- 8 கிலோ அனைவருக்கும் (1-1-1996 முதல்) | 150.00 | 15.04 | 800.00 |
| 996-97 | 380 | - | 395 | 415 | 537 | 617 | 648 | 2.00 | 3.75 | 3.75 | மாதமொன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ சிறியவர்களுக்கு 2 கிலோ உச்சவரம்பாக குடும்ப அட்டை ஒன்றுக்கு 20 கிலோ | 150.00 | 24.13 | 1,000.00 |
| 997-98 | 415 | - | 445 வகை 'அ' | - | வ.கோ.கீழ் 350 | - | வ.கோ.கீழ் 350 | 2.00 | வகை 'அ' 3.75 | - | மாதமொன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ சிறியவர்களுக்கு 2 கிலோ உயரளவாக 20 கிலோ | 150.00 | 22.19 | 1,000.00 |
| | | | | | வ.கோ.மே. - | | வ.கோ.மே. 700 | | | | | | | |
| 1998-99 | 440 | - | 470 | - | வ.கோ.கீழ் 350 | | வ.கோ.கீழ் 350 | 2.00 | 3.75 | - | மாதமொன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ சிறியவர்களுக்கு 2 கிலோ உயரளவாக 20 கிலோ | 149.00 | 21.48 | 1,000.00 |
| | | | | | வ.கோ.மே. - | | வ.கோ.மே. 905 | | | | | | | |

றிப்பு: * 17-10-1977 முதல் சென்னை நகரத்தில் ஆந்திர மாநில சன்ன அரிசி இந்த விலையில் விற்கப்பட்டது.

** 1-10-1985 முதல் மாநில அரசு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 வீதம் வழங்கியது.

*** விலைகள் முதலில் 1-10-1989-ல் ரூ. 175 ரூ. 185 மற்றும் ரூ. 195-க்கு உயர்த்தப்பட்டன. பிறகு 16-12-1989-ல் தற்பொழுதுள்ள நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

(சன்ன ரகங்கள் ஐ.ஆர்.20, ஏ.டி.39, கோ.43, ஏ.டி.டி.38, ஐ.இ.டி.1444, கோ.44, மிகச் சன்ன ரகங்கள் ஐ.ஆர்.50, வெள்ளைப் பொன்னி ஐ.ஆர்.60, பவானி சாதாரன ரகங்கள்: ஏனைய எல்லா வகைகளும்.

[1999 ஏப்ரல் 15

| வ.எண் | காலம் | நெல் /அரிசி கொள்முதல் முறை |
|---|---|---|
| 10. | 01-07-1989 முதல் 31-08-1989 வரை | மாநிலம் முழுவதும் 50% வாத்தக லெவி |
| 11. | 01-09-1989 முதல் 15-12-1989 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| | | 2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| | | 3. 30% வர்த்தக லெவி (8-10-1989 முதல் 15-12-1989 வரை) |
| 12. | 16-12-1989 முதல் 30-06-1991 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| | | 2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 30% லெவி (16-12-1989 முதல் 7-2-1990 வரை) |
| | | 3. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி (8-2-1990 முதல் 30-6-1991 வரை) |
| 13. | 01-07-1991 முதல் 14-09-1991 வரை | மாநிலம் முழுவதும் 50% வாத்தக லெவி |
| 14. | 15-09-1991 முதல் 30-04-1993 வரை | 1. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| | | 2. மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| | | 3. 29-01-1992 முதல் 50% வர்த்தக லெவி நிறுத்தி வைக்கப்பட்டது |
| | | 4. 1-5-1993 முதல் ஏகபோக கொள்முதல் முறை கைவிடப்பட்டது |
| | | 5. 18-8-1992 முதல் தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை 1984-ன் 4ஏ பகுதியின்படி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் நெல்/அரிசிக்கு 100% லெவி அமல்படுத்தப்பட்டது. |
| 15. | 01-09-1993 முதல் 14-09-1996 வரை | இணைக் கொள்முதல் முறை |
| 16. | 15-09-1996 முதல் 30-04-1997 வரை | காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| 17. | 01-01-1997 முதல் 20-12-1998 வரை | இணைக் கொள்முதல் |
| 18. | 21-12-1998 முதல் 30-6-1999 வரை | ஏகபோகக் கொள்முதல் |



## அட்டவணை–4

**1998ஆம் ஆண்டில், 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டை செயல்படுத்தும் ஆணைகளின்கீழ் நுகர்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவர அறிக்கை**

| 1998 மாதம் | பொதுவிநியோக அரிசி | | சாதாரண அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | மற்றவை | மொத்த மதிப்பு | கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு | | | |
| | குவி. | ரூ. | குவி. | ரூ. | குவி. | ரூ. | லிட். | ரூ. | ரூ. | ரூ. | |
| சனவரி | 2,108 | 21,44,465 | 136 | 1,62,836 | 473 | 2,39,400 | 5,530 | 57,120 | 8,20,424 | 34,24,245 | 85 |
| பிப்ரவரி | 2,999 | 30,32,730 | 241 | 2,60,200 | 577 | 2,83,340 | 10,655 | 1,32,840 | 2,90,017 | 39,99,127 | 87 |
| மார்ச் | 2,923 | 29,57,570 | 254 | 2,65,400 | 280 | 1,33,760 | 10,890 | 1,16,785 | 7,51,330 | 42,24,845 | 78 |
| ஏப்ரல் | 2,259 | 23,02,575 | 332 | 3,38,600 | 704 | 2,81,275 | 6,670 | 73,955 | 13,67,614 | 43,64,019 | 88 |
| மே | 2,919 | 29,60,385 | 258 | 2,88,210 | 285 | 2,06,000 | 8,960 | 97,765 | 8,78,496 | 44,30,856 | 95 |
| ஜூன் | 1,990 | 20,73,523 | 245 | 2,67,352 | 46 | 23,200 | 13,513 | 1,59,585 | 13,72,803 | 38,96,463 | 103 |
| ஜூலை | 2,819 | 29,46,650 | 254 | 2,77,750 | 655 | 4,86,480 | 13,205 | 1,64,745 | 6,58,740 | 45,34,365 | 88 |
| ஆகஸ்ட் | 1,862 | 19,04,125 | 387 | 4,37,500 | 2,375 | 62,500 | 8,375 | 1,05,460 | 19,85,255 | 44,94,840 | 80 |
| செப்டம்பர் | 1,792 | 18,45,840 | 132 | 1,45,700 | 833 | 6,06,220 | 23,480 | 2,60,630 | 16,85,280 | 45,43,670 | 63 |
| அக்டோபர் | 1,184 | 13,44,150 | 499 | 7,13,850 | 480 | 4,16,200 | 14,990 | 1,74,850 | 17,11,025 | 43,60,[illegible]75 | 56 |
| நவம்பர் | 1,822 | 21,70,390 | 630 | 10,16,250 | 439 | 3,90,725 | 6,200 | 66,700 | 22,75,260 | 59,19,325 | 69 |
| டிசம்பர் | 2,064 | 26,16,965 | 743 | 10,61,250 | 493 | 3,99,000 | 8,425 | 90,875 | 16,47,495 | 58,15,585 | 84 |
| **மொத்தம் ..** | **26,741** | **2,82,99,368** | **4,111** | **52,34,898** | **7,640** | **35,28,100** | **1,30,893** | **15,01,310** | **1,54,43,739** | **5,40,07,415** | **976** |

## அட்டவணை-5

### 1998ஆம் ஆண்டில் நுகர்வு செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விவரங்கள் (டன்களில்)

| வ. எண் மாதம் | அரிசி 1997 | அரிசி 1998 | கோதுமை 1997 | கோதுமை 1998 | சர்க்கரை 1997 | சர்க்கரை 1998 | பாமாலின் 1997 | பாமாலின் 1998 | மண்ணெண்ணெய் 1997 | மண்ணெண்ணெய் 1998 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சனவரி | 1,93,141 | 1,91,701 | 10,526 | 8,321 | 23,608 | 23,844 | 257 | 342 | 70,691 | 71,671 |
| 2. பிப்ரவரி | 1,77,652 | 1,84,491 | 11,774 | 12,437 | 23,158 | 23,857 | 198 | 698 | 70,238 | 71,129 |
| 3. மார்ச் | 1,59,004 | 1,72,913 | 11,107 | 12,072 | 23,172 | 24,144 | 176 | 612 | 72,142 | 71,726 |
| 4. ஏப்ரல் | 1,64,956 | 1,58,723 | 9,831 | 11,072 | 24,019 | 23,686 | 148 | 514 | 72,498 | 67,591 |
| 5. மே | 1,66,299 | 1,55,416 | 11,339 | 11,223 | 24,569 | 22,920 | 98 | 59 | 72,384 | 68,517 |
| 6. ஜூன் | 1,85,665 | 1,62,081 | 10,483 | 12,174 | 24,798 | 24,059 | 54 | 76 | 71,940 | 72,509 |
| 7. ஜூலை | 1,94,641 | 1,79,738 | 3,943 | 13,953 | 24,848 | 25,039 | 38 | 30 | 71,463 | 74,483 |
| 8. ஆகஸ்ட் | 1,92,818 | 1,83,567 | 4,762 | 14,364 | 24,119 | 25,511 | 8 | - | 71,691 | 73,847 |
| 9. செப்டம்பர் | 1,92,880 | 1,85,133 | 3,634 | 15,888 | 23,786 | 26,064 | 4 | - | 70,942 | 76,319 |
| 10. அக்டோபர் | 1,94,226 | 1,92,290 | 4,882 | 14,683 | 33,921 | 28,141 | 62 | 726 | 71,422 | 75,360 |
| 11. நவம்பர் | 1,93,541 | 1,89,449 | 4,583 | 15,590 | 22,936 | 24,977 | 192 | 716 | 71,729 | 75,292 |
| 12. டிசம்பர் | 2,05,633 | 1,92,231 | 6,909 | 15,860 | 23,471 | 25,475 | 126 | 457 | 71,686 | 77,137 |
| மொத்தம் .. | 22,20,456 | 21,47,783 | 93,773 | 1,57,737 | 2,96,405 | 2,97,717 | 1,367 | 4,230 | 8,58,826 | 8,75,572 |



## அட்டவணை-6

### 1998 ஜனவரி முதல் 1998 டிசம்பர் வரையில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை காட்டும் விவர அறிக்கை

| 1998 மாதம் | மேல்முறையீடு மனு: தாக்கல் செய்யப் பட்டவை | மேல்முறையீடு மனு: முந்தைய ஆண்டு நிலுவை உட்பட தீர்ப்பு வழங்கப் பட்டவை | மேல்முறையீடு மனு: நுகர் வோருக்கு சாதகமாக | மேல்முறையீடு மனு: நுகர் வோருக்கு எதிராக | மூலமனு அல்லது அசல் மனு: தாக்கல் செய்யப் பட்டவை | மூலமனு அல்லது அசல் மனு: முந்தைய ஆண்டு நிலுவை உட்பட தீர்ப்பு வழங்கப் பட்டவை | மூலமனு அல்லது அசல் மனு: நுகர் வோருக்கு சாதகமாக | மூலமனு அல்லது அசல் மனு: நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| சனவரி | 40 | 77 | 40 | 37 | 30 | 9 | 3 | 6 |
| பிப்ரவரி | 75 | 63 | 35 | 18 | 21 | 8 | 2 | 6 |
| மார்ச் | 63 | 75 | 35 | 40 | 21 | 9 | 3 | 6 |
| ஏப்ரல் | 70 | 62 | 10 | 40 | 15 | 6 | 3 | 3 |
| மே | 40 | 34 | 10 | 24 | 16 | 5 | 2 | 3 |
| ஜூன் | 50 | 62 | 30 | 32 | 10 | 12 | 3 | 9 |
| ஜூலை | 60 | 103 | 22 | 81 | 20 | 12 | 4 | 8 |
| ஆகஸ்ட் | 70 | 68 | 29 | 39 | 15 | 15 | 6 | 9 |
| செப்டம்பர் | 70 | 70 | 29 | 39 | 15 | 15 | 6 | 9 |
| அக்டோபர் | 60 | 52 | 22 | 30 | 19 | 13 | 3 | 10 |
| நவம்பர் | 170 | 70 | 40 | 30 | 40 | 18 | 8 | 7 |
| டிசம்பர் | 103 | 94 | 20 | 34 | 48 | 10 | 3 | 5 |
| மொத்தம் .. | 871 | 830 | 322* | 444 | 270 | 132* | 46 | 81 |

*சட்டக்குறைபாடுகள் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளும் இதில் அடங்கும்.

## அட்டவணை-7

**1998 ஜனவரி முதல் 1998 டிசம்பர் வரையில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் தாக்கல் செய்யப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை**

| மாதம் | தொடக்கத்தில் நிலுவையாக உள்ளவை | தாக்கல் செய்யப் பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்டவை | எஞ்சியுள் ளவை | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| ஜனவரி | 5570 | 310 | 5880 | 213 | 5667 | 101 | 68 |
| பிப்ரவரி | 5667 | 417 | 6084 | 322 | 5762 | 162 | 72 |
| மார்ச் | 5762 | 495 | 6257 | 368 | 5889 | 170 | 66 |
| ஏப்ரல் | 5889 | 540 | 6429 | 390 | 6039 | 149 | 169 |
| மே | 6039 | 415 | 6454 | 369 | 6085 | 185 | 105 |
| ஜூன் | 6085 | 557 | 6642 | 557 | 6085 | 237 | 183 |
| ஜூலை | 6085 | 561 | 6646 | 554 | 6092 | 206 | 260 |
| ஆகஸ்ட் | 6092 | 427 | 6519 | 465 | 6054 | 136 | 249 |
| செப்டம்பர் | 6054 | 470 | 6524 | 419 | 6105 | 151 | 199 |
| அக்டோபர் | 6105 | 558 | 6663 | 383 | 6280 | 163 | 196 |
| நவம்பர் | 6280 | 438 | 6718 | 416 | 6302 | 178 | 196 |
| டிசம்பர் | 6302 | 602 | 6904 | 581 | 6323 | 312 | 156 |
| **மொத்தம்** | **71930** | **5790** | **77720** | **5037*** | **72683** | **2150** | **1919** |

*அஜராகாததாலும் சட்ட குறைபாடுகள் காரணமாகவும் தள்ளுபடி செய்யப்பட்டவையும் இதில் அடங்கும்.





## அட்டவணை-8

**மகளிரால் நடத்தப்படும் சில்லறை துணை விற்பனைக் கடைகள்**

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | துணை சில்லறை விற்பனைக் கடைகள் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் (ம) திருவள்ளூர் (இணைந்தது) | 7 |
| 2. | தூத்துக்குடி | 4 |
| 3. | கோயம்புத்தூர் | 8 |
| 4. | தர்மபுரி | 15 |
| 5. | விருதுநகர் | 3 |
| 6. | கன்னியாகுமரி | 20 |
| 7. | கரூர் | 2 |
| 8. | மதுரை (ம) தேனி (இணைந்தது) | 21 |
| 9. | நாகப்பட்டினம் | 13 |
| 10. | நீலகிரி | 4 |
| 11. | வேலூர் | 14 |
| 12. | சிவகங்கை | 4 |
| 13. | பெரம்பலூர் | 1 |
| 14. | ஈரோடு | 1 |
| 15. | புதுக்கோட்டை | 4 |
| 16. | ராமநாதபுரம் | 7 |
| 17. | சேலம் (ம) நாமக்கல் (இணைந்தது) | 8 |
| 18. | கடலூர் | 5 |
| 19. | திருவண்ணாமலை | 10 |
| 20. | திருச்சிராப்பள்ளி | 5 |
| 21. | திருநெல்வேலி | 16 |
| 22. | விழுப்புரம் | 9 |
| | **மொத்தம்** | **181** |

## அட்டவணை-9

**1985 முதல் சம்பா மற்றும் குறுவை காலங்களில் ஏகபோக/இணைக் கொள்முதல்/லெவி முறைகளின் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன (கொள்முதல் செய்த அளவு டன்களில்)**

| ஆண்டு | சம்பா | | | குறுவை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நேரடி கொள்முதல் நிலையம் | லெவி | மொத்தம் | நேரடி கொள்முதல் நிலையம் | லெவி | மொத்தம் | பெருந் மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1985 | 3,30,026 | 2,80,631 | 6,10,557 | 3,39,669 | 85,484 | 4,25,123 | 10,35,780 |
| 1986 | 6,68,428 | 3,27,112 | 9,95,540 | 1,19,953 | 26,237 | 1,46,190 | 11,41,730 |
| 1987 | 9,27,979 | 1,58,685 | 10,86,664 | 75,884 | 8,288 | 84,172 | 11,70,836 |
| 1988 | 6,07,735 | 1,50,890 | 7,58,625 | 1,64,756 | 26,644 | 1,91,400 | 9,50,025 |
| 1989 | 8,53,470 | 65,415 | 9,18,885 | 1,20,328 | 29,913 | 1,50,241 | 10,69,126 |
| 1990 | 11,14,786 | 1,02,478 | 12,17,264 | 1,01,051 | 67,756 | 1,68,807 | 13,86,071 |
| 1991 | 10,50,117 | 1,05,198 | 11,55,315 | 1,99,019 | 17,791 | 2,16,810 | 13,72,125 |
| 1992 | 12,45,000 | 5,000 | 12,50,000 | 5,85,010 | - | 5,85,010 | 18,35,010 |
| 1993 | 12,26,572 | - | 12,26,572 | 3,21,820 | - | 3,21,820 | 15,48,392 |
| 1994 | 5,41,691 | - | 5,41,691 | 97,132 | - | 97,132 | 6,38,823 |
| 1995 | 3,30,658 | - | 3,30,658 | 8,730 | - | 8,730 | 3,39,388 |
| 1996 | 1,34,000 | - | 1,34,000 | 1,11,366 | - | 1,11,366 | 2,45,366 |
| 1997 | 9,77,426 | - | 9,77,426 | 7,00,659 | - | 7,00,659 | 16,78,085 |
| 1998 | 11,36,823 | - | 11,36,823 | 44,550 | - | 44,550 | 11,81,373 |



## அட்டவணை-10

**ஊக்கத் தொகை / இடைநிகழ் செலவு (குவிண்டாலுக்கு)**

| | | | |
|---|---|---|---|
| 1991 முதல் 30-4-1993 முடிய | ரூ.35 | - | (ஏகபோக கொள்முதல்) ஊக்கத்தொகை |
| 1995 சம்பா | ரூ.5 | - | (இணைக் கொள்முதல்) வட்ட கிடங்குகளுக்கு கொண்டு செல்ல போக்குவரத்து மற்றும் ஏற்றுதல் இறக்குதல் செலவு |
| 1996 சம்பா | ரூ.10 | - | (இணைக் கொள்முதல்) வட்டக் கிடங்கு கொள்முதலுக்கு |
| (6-1-1996 முதல் 14-9-1996 முடிய) | ரூ.5 | - | (இணைக் கொள்முதல்) நேரடி கொளமுதல் நிலைய கொள்முதலுக்கு |
| 1996 குறுவை (15-9-1996 முதல் 15-12-1996 முடிய) | ரூ.40 | - | (ஏகபோகக் கொள்முதல்) ஊக்கத் தொகை |
| 1997 சம்பா (16-12-1996 முதல் 30-4-1997 முடிய) | ரூ.50 | - | (ஏகபோகக் கொள்முதல்) ஊக்கத் தொகை |
| (18-8-1997 முதல் 30-8-1997 முடிய) | ரூ.25 | - | (இணைக் கொள்முதல்) இடைநிகழ் செலவு |
| (1-9-1997 முதல் 20-12-1998 முடிய) | ரூ.35 | - | (இணைக் கொள்முதல்) இடைநிகழ் செலவு |
| (21-12-1998 முதல் நாளது முடிய) (காவிரி பாசனப்பகுதிகளில்) | ரூ.50 | - | (ஏகபோகக் கொள்முதல்) ஊக்கத் தொகை |
| (காவிரி பாசனப்பகுதி அல்லாத பகுதிகளில்) | ரூ.15 | - | போக்குவரத்துச் செலவு. |


1999 ஏப்ரல்


## அட்டவணை-11

### நடமாடும் நியாயவிலைக் கடைகளின் விவரம்


| மாவட்டத்தின் பெயர் | | நடமாடும் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 3 |
| 2. | திண்டுக்கல் | 2 |
| 3. | வேலூர் | 3 |
| 4. | ஈரோடு | 2 |
| 5. | நீலகிரி | 8 |
| 6. | திருச்சிராப்பள்ளி | 1 |
| 7. | சேலம் | 5 |
| 8. | தருமபுரி | 1 |
| 9. | கோயம்புத்தூர் | 5 |
| 10. | திருவண்ணாமலை | 1 |
| 11. | விழுப்புரம் | 3 |
| 12. | இராமநாதபுரம் | 2 |
| | மொத்தம் | 36 |








COMPARISON OF GOVT. OF INDIA ISSUE
PRICE AND STATE PDS PRICE
(PRICE IN RS. PER QUINTAL)
BOILED RICE (COMMON)
படம்-3
FIG-3
P.D.S Price
Govt. of India Price





COMPARISON OF GOVT. OF INDIA ISSUE
PRICE AND STATE PDS PRICE
(PRICE IN RS. PER QUINTAL)
BOILED RICE (FINE)
படம்-4
FIG-4
P.D.S. Price
Govt. of India Price


COMPARISON OF GOVT. OF INDIA ISSUE
PRICE AND STATE PDS PRICE
(PRICE IN RS. PER QUINTAL)
BOILED RICE (SUPER FINE)
800
700
600
500
400
300
200
100
1984-85
85-86
86-87
87-88
88-89
89-90
90-91
91-92
92-93
93-94
94-95
95-96
96-97
97-98
98-99
215
244
235
250
266
279
325
370
458
518
648
648
648
648
700
700
250
250
250
350
325
350
475
375
375
375
375
P.D.S. Price
Govt. of India Price
படம்-5
FIG-5





TOTAL SUBSIDY RELEASED BY GOVERNMENT
OF TAMIL NADU TO T.N.C.S.C. LTD. TOWARDS
LOSS INCURRED IN SUBSIDISED DISTRIBUTION
OF RICE THROUGH PDS
RUPEES IN CRORES
1400
1200
1000
800
600
400
200
0
1985-86
86-87
87-88
88-89
89-90
90-91
91-92
92-93
93-94
94-95
95-96
96-97
97-98
98-99
79.00
65.00
117.61
184.53
208.79
219.31
332.24
351.68
400.00
440.00
800.00
1000.00
1000.00
படம்-6
FIG-6




படம்-7
FIG-7

அரசு மையம் அச்சகம், சென்னை-600 079.


வரைபடம் FLOW CHART
பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள்
WORKING OF PUBLIC DISTRIBUTION SYSTEM
அரிசி RICE
கோதுமை WHEAT
சர்க்கரை SUGAR
உணவு எண்ணெய் EDIBLE OIL
மண்ணெண்ணெய் KEROSENE
இந்திய உணவுக் கழகம் F.C.I
இந்திய உணவுக் கழகம் F.C.I
சர்க்கரை ஆலைகள் SUGAR MILLS
மத்திய வர்த்தக கழகம் S.T.C
எண்ணெய் நிறுவனங்கள் OIL COMPANIES
இணை கொள்முதல் PARALLEL PROCUREMENT
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளியீட்டுக் கிடங்குகள் TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION ISSUE GODOWNS 222
தனியார் மொத்த வணிகர்கள் PRIVATE WHOLESALERS 513
முதன்மை சங்கங்கள் LEAD SOCIETIES 75
வணிகர் லெவி பிற மாநிலங்களுக்கு நடமாட்டம் TRADERS LEVY FOR MOVEMENT TO OTHER STATES
சான்றிதழ் பெற்ற சிறு வணிகர்கள் R R C HOLDERS 1810
கைவண்டிக்காரர்கள் HAND CARTMEN 2949
இணைச் சங்கங்கள் LINK SOCIETIES 4915
வெளிச் சந்தை கொள்முதல் OPEN MARKET PURCHASE
நியாய விலைக் கடைகள் த.நா.நு.பொ.வா.க. FAIR PRICE SHOPS (TNCSC) 1095
நியாய விலைக் கடைகள் (கூட்டுறவு) FAIR PRICE SHOPS (CO-OPERATIVES) 24716
இதர கூட்டுறவு FAIR PRICE SHOPS (OTHER) 348
வாடிக்கையாளர்கள் CUSTOMERS
குடும்ப அட்டைதாரர்கள் 149 இலட்சம் CARD HOLDERS 149 LAKHS
படம்-1 FIG-1